தம் வாழ்வில் ஆயிரம் பிறைகளைக்கண்டு 80 வயதை பூர்த்தி செய்த

## பிரம்மஸ்ரீ நடராஜக்குருக்கள் இராமகிருஷ்ணசர்மா
## ஸ்ரீமதி ஜெகதீஸ்வரி தம்பதிகளின்

சதாபிஷேகத்தை (முத்துவிழாவை) முன்னிட்டு மலரும்




# முத்து மலர்

12.10.2014 ஞாயிற்றுக்கிழமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரம்மஸ்ரீ ந. இராமகிருஷ்ண சர்மா
ஸ்ரீமதி ஜெகதீஸ்வரி தம்பதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

## "சிவாகமவித்வான்" டாக்டர் நா. சோமஸ்கந்தக்குருக்கள்"

(டைரக்டர், மொடேர்ண் சர்வதேச இந்து ஆகமகலை கலாச்சார நிறுவனம்)

"இலட்சியத் தம்பதிகள்" நடராஜா இராமகிருஷ்ண சர்மா ஜெகதீஸ்வரி" ஆகியோருக்கு அவர்தம் அன்புச் செல்வங்களாகிய மக்கள் மருமக்கள் பேரப்பிள்ளைகள் சகோதரர்கள் சம்பந்திமார் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழும் முத்துவிழா வைபவத்தின் போது வெளிவரும் முத்துவிழா மலருக்காக கட்டுரை வழங்குவதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன். சுளிபுரம் "குடியிருப்பு வைரவர் கோவில்" என அழைக்கப்படும் ஸ்ரீ வாலாம்பிகா வைத்தீஸ்வர சுவாமியை யந்திர வடிவில் ஸ்தாபனம் செய்து தமது குலதெய்வமாகப் போற்றி வந்த சுளிபுரம் சோமாஸ்கந்த நடராஜக் குருக்களும் அவர்தம் துணைவியார் யோகாம்பாள் அம்மையாரும் இல்லறமாம் நல்லறத்தை "பிருந்தாவனம்" என்னும் இல்லத்தில் இன்பமாக நடாத்தியதன் பயனாக இரண்டாவது புத்திரனாக உதித்தவரே இராமகிருஷ்ணன் ஆவார். இவரை செல்லமாக "இராசு" என்றே அனைவரும் அழைப்பர். அப்பா அம்மா அண்ணன் சோமாஸ்கந்தக் குருக்கள் ஆகியோருக்கும் அன்பினால் கட்டுப்பட்டவராகவும் சகோதர்களாகிய ஆனந்தம் ஜெயா காஞ்சனா வித்தியா வடிவு பாலா கண்ணன் மோகன் ஆகிய தம்பி தங்கை குடும்பத்தவர்களுக்கு பாசம் மிக்க அண்ணனாகவும் விளங்கிவருபவர். இவர் சுளிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் கல்வி பயின்று "வியாகரண சிரோன்மனி" தி. கி. சீதாராம சாஸ்திரிகளிடம் சமஸ்கிரதமும் கற்று வந்தார். ஆரம்ப காலத்தில் தமது தந்தையாருடன் பொன்னாலை ஸ்ரீ வரதராஜப்பெருமாள் கோவிலிலும், பின்னர் தந்தையார் சுருவில் ஐயனார் கோவிலுக்கு குடும்பத்துடன் சென்று பொறுப்பேற்று நடாத்தும் காலத்தில் அங்கு அவருக்கு உதவியாக ஆலயப்பணியாற்றியும் வரும் போது அங்குள்ள வர்த்தகப் பெருமக்களின் அறிமுகத் தொடர்பினால் கொழும்பு சென்று பிரபல வர்த்தக நிலையத்தில் உதவிப் பொறுப்பாளராகப் பணிபுரிந்தார். இவ்வேளையில் திருமணப் பருவம் வந்தெய்தியதினால் இவரது தந்தையாரின் சகோதரி சாரதாவும் அவரது கணவர் காரைநகர் சிவசர்மாவும் பெற்றெடுத்த புதல்வியும் முறைப்பெண்ணுமாகிய ஜெகதீஸ்வரியை பெற்றோர் பெரியோர் ஆசியுடன் திருமணம் செய்து வைத்தனர். இவ்விடத்தில், தனது தந்தையார் சண்டிருப்பாய் ஐயனார்கோவிலடி நாகேஸ்வர சர்மாவும் சிவசர்மாவும் கல்லூரித் தோழர்கள். இருவரும் "லண்டன் மெற்றிகுலேஷன்" வரை ஒன்றாகப் படித்து சித்திபெற்ற நண்பர்கள் ஆவர். மேலும் சமகாலத்தில் திருமணம் செய்து சமகாலத்தில் முதற் பெண் குழந்தையைப் பெற்று தமது குழந்தைகளுக்கு ராஜேஸ்வரி ஜெகதீஸ்வரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என இருவருக்கும் பெயர் சூட்டி மகிழ்ந்தனர். துரதிர்ஷ்டவசமாக எனது சகோதரி சிறுவயதிலேயே மறைந்ததினால் எனக்கும் உடன்பிறவாத மூத்தசகோதரியாக ஜெகதீஸ்வரியே திகழுகின்றார் என்பதைக் குறிப்பிடுவது சாலவும் பொருந்தும். வர்த்தக அனுபவம் வாய்ந்த இராமகிருஷ்ண சர்மாவுக்கு "நொதேர்ண் இன்டஸ்றீஸ்" என்னும் டயர் றீவில் கம்பனியில் முகாமையாளராக பதவி கிடைத்து சகலவளங்களுடன் அனைவரின் அன்புக்கும் நன்மதிப்புக்கும் உரியவர்களாகத் தம்பதிகள் இருவரும் வாழ்ந்தனர். Modern International Hindu Agama Cultural.org என்னும் ஸ்தாபனத்தை நான் ஸ்தாபித்த காலம் முதல் ஆலோசகராகவும் திகழுகின்றார். ரமா, சசி, முரளி, ரேகா ஆகிய தமது புத்திரச் செல்வங்களுக்கு கல்வியூட்டி திருமணம் செய்து வைத்து பேரப்பிள்ளைகளைக் கொஞ்சி மகிழ்ந்து 25, 50, 60, 70 ஆகிய அகவைகளில் முறையே வெள்ளி விழா பொன்விழா மணிவிழா பவள விழக்களைக் கண்டு களித்து தற்போது "ஆயிரம் பிறைகண்ட அந்தணசிரேஷ்டராக:" ஜேர்மனியில் வாழ்ந்து வருகின்றனர்.

இவ்வேளையில் இவர்களுக்கு சதாபிஷேகம் செய்து வைத்து அவர்களின் ஆசியைப் பெற விழையும் அவர்களின் பிள்ளைகள் நிகழும் மங்களகரமான 2014 அக்டோபர் மாதம் 12-ம் நாள் ஞாயிற்றுக்கிழமையன்று "சதாபிஷேக வைபவத்தை பூஜை ஹோமம், சோபன நாந்தி, சுமங்கலிப் பிரார்த்தனை, தசதானங்கள், விப்ரபோஜனம் ஆகியவற்றுடன் விமரிசையாகச் செய்வதுடன், தமது பெற்றோர்களின் சதாபிஷேக விழாவினையொட்டி இந்துசமய விளக்கங்கள் பலவற்றை உள்ளடக்கிய அருமையான நூலினை வெளியிட முன்வந்துள்ள இராம சசிதரக் குருக்களின் சமய சமூக சேவையை முதற்கண் பாராட்டவேண்டியது நம் அனைவரதும் கடமையாகும். இந்த நூலில் சிறுவர்கள் மட்டுமல்லாது பெரியவர்களும் அறிந்துகொள்ளக் கூடிய பல கருத்துக்கள் ஆதாரபூர்வமாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளது மிகவும் வரவேற்கத்தக்கதாகும். இந்த நூலாசிரியர் முன்னரும் பல வெளியீடுகளைச் செய்து அனைவரது பாராட்டுதலையும் நல்லாசியையும் பெற்றுள்ளவராவார். இவர் நமது சமய வைபவங்களையும் வாழ்வியலில் நம் முன்னோர்கள் கடைப்பிடித்து வந்த சமயச் சடங்குகள் விழாக்கள் பற்றிய நூலினை அழகிய படங்களுடன் சுவிஸ் நாட்டவரும் வாசிக்கக் கூடிய மொழியில் வெளியிட்டு பல ஸ்தாபனங்களின் பாராட்டுதலையும் விருதுகளையும் பெற்று தமது தாய் தந்தையருக்கும் தீட்சாகுருவாகிய எனக்கும் மிகுந்த பெருமை சேர்ந்துள்ளவரென்பது குறிப்பிடவேண்டியதொன்றாகும். முத்துவிழாத் தம்பதிகளின் பாதம் பணிந்து ஆசிபெறுவதுடன் சசிதரக் குருக்களின் நற்பணி மேலும் வளர்ச்சியடைய சுன்னாகம் கதிரமலை ஸ்ரீ பொன்னம்பலவாணப் பெருமான் நல்லருள்பாலிக்கப் பிரார்த்தித்து வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

வாழ்க பல்லாண்டு! வளர்க அவர்தம் சமயப்பணி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



பிரம்மஸ்ரீ இராம கிருஷ்ணசர்மா அவர்கள் சதாபிஷேகம் கொண்டாட இருப்பது அறிந்து பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இவர் புகழ்பூத்த சிவாசாரிய திலகமான சோ. நடராஜக் குருக்களின் இரண்டாவது மகனாவார்.

பிரம்மஸ்ரீ இராமகிருஷ்ணன் எனது அத்தியந்த நண்பர். யாழ்ப்பாணத்தில் எமது இரு குடும்பங்களும் வாழ்ந்த காலங்களில் இராமகிருஷ்ணன் எனக்கு வலது கரமாக விளங்கினார். இவர் ஒரு பரோபகாரி. அந்தக் காலத்தில் எனக்கு என்ன பிரச்சினை ஏற்பட்டாலும் அவரைக் கலந்து தீர்வு தேடுவது எனது வழக்கம். இராமகிருஷ்ணன் அவர்கள் என்னுடைய வாழ்க்கையில் நான் சந்தித்த மிகச்சிறந்த மனிதராவார்.

இவருடைய மனைவி மக்கள் யாவரும் நலமே வாழ வாழ்த்துகிறேன்.

இவர் இன்னும் பல்லாண்டு வாழ்ந்து இறைபணியாற்றி நலன்கள் பல பெற்று நல்லாரோக்கியத்துடன் வாழ இறைவனை வேண்டி நிற்கிறோம்.

**நீர்வேலி தி. நடனசபாபதி ந. கிரிஜாம்பிகை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

**ஸ்ரீ பஞ்சாக்ஷா வித்தியானந்த சர்மா**
ப்ரஹ்ம ஸமூஹ ஸேவா விபூஷணர்

ப்ரஹ்மஸ்ரீ நடராஜ இராமகிருஷ்ண சர்மா அவர்களின் சதாபிஷேக வைபவம் 2014 அக்டோபர் 12ம் திகதி - ஜய வருஷம் புரட்டாதி மாதம் 26ம் நாள் - சுவிற்சர்லாந்தில் நடைபெற உள்ளது குறித்து மிகுந்த சந்தோஷத்துடன் அந்த ஆசியுரையை பகவானுக்கு அர்ப்பணமாக எழுதுகிறேன்.

அந்தணர் என்பர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டொழுகலால். என்பது வள்ளுவர்வாக்கு. இதற்கோர் உதாரண புருஷர் ஸ்ரீ இராமகிருஷ்ண சர்மா. சதாபிஷேகம் என்பதில் சத என்பது நூறு. ஸ்ரீ இராமகிருஷ்ண சர்மா. நூறு ஆண்டு வாழ்ந்து சேவையாற்ற வேண்டும் என்று ஹோமங்கள் வழிபாடுகள் இறைவனைவேண்டி நிகழ்த்தப்படுவது சதாபிஷேகம், உலக மக்கள் யாவரும் "லோகா ஸமஸ்தா ஸுகினோ பவந்து" என்னும் வாக்கியப்படி நலமாக வாழ இறைவன் திருவருள் வேண்டி தமிழ்மக்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்து ஜேர்மனி சுவிற்சர்லாந்து உட்பட எல்லா இடங்களிலும் ஆலயங்கள் செயற்படுகின்றன. இவ்வாலயங்களில் ஸ்ரீ இராமகிருஷ்ண சர்மா சேவையாற்றியுள்ளார். ஒழுக்க சீலத்துடன் வாழும் இவர் மேலும் பலகாலம் சேவையாற்ற எல்லோரும் பிரார்த்தனை செய்வதவசியம். இக்காரணத்தாலேயே "வாழ்க அந்தணர்" - என ஞானசம்பந்தர் தேவாரம் பாடினார். ஸ்ரீ இராமகிருஷ்ண சர்மா குடும்பத்துடன் புலம்பெயர்ந்து வந்தபின்னும் நியமம் தவறாது வாழ்ந்து மற்றவர்களுக்கு ஒரு வழிகாட்டியாக உள்ளது மாத்திரமல்ல, தனது சொந்த நாட்டிலே (ஸ்ரீ லங்கா) இருந்த போதும் மிகச்சிறந்த சேவை ஆற்றியுள்ளார். இவருடைய தகப்பனார் ப்ரஹ்மதேஜஸ், வேதாகம ஞானபாண்டித்யம் உள்ள அமரர் ஸ்ரீ நடராஜக் குருக்கள். அதேபோல பேராற்றல் உள்ள அமரர் ஸ்ரீ சோமாஸ்கந்தக் குருக்கள் இவரது தமையன். இவரது மைத்துனராகவும் அகில உலகில் அவுஸ்திரேலிய, ஆசிய, ஐரோப்பிய, அமெரிக்க கண்டங்களில் மிகத்திறம்படச் சிவாசாரியராகச் செயலாற்றிவருபவரும், இச்சதாபிஷேக வைபவ ஆசார்யராகச் செயற்படவுள்ளவரும் (கனடாவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாடேர்ண் ஹிந்துகலாசார மின்னலை ஸ்தாபன காரணகர்த்தா), ஆகிய டாக்டர் ஸ்ரீ ஸோமாஸ்கந்த குருக்கள், சதாபிஷேக வைபவ விழா நாயகர் ஸ்ரீ இராமகிருஷ்ண சர்மா அவர்களின் மைத்துனரான வேதகமபண்டித சிவாசார்ய சிரோன்மணி ஆவார்.

இவை மாத்திரமன்றி, ஸ்ரீ இராமகிருஷ்ண சர்மா அவர்களின் ஜன்மபூமியில், சைவத் தமிழ்மக்கள் வாழும் பிரதேச தலை நகரில், இப்போதும் அரசாங்க நிதி உதவி ஆசிரியர் வேதனமாக அமையும் படி இயங்கும் - வேதாகம குருமார் பயிற்சிப்பாடசாலையை அன்பளிப்பாகப் பெறப்பட்ட நிலத்தில் சொந்தமான கட்டட அமைப்பு ஏற்படுத்தி நிறுவிய பணியில் ஆரம்பகாலத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ண சர்மா அவர்கள் பெரிதும் உதவினார்கள்.

ஸ்ரீ இராமகிருஷ்ண சர்மா அவர்கள் தேகாராக்கியத்துடனும் மனையாட்டி, புத்திர புத்திரிகள், பௌத்திர பௌத்திரிகள், பந்து மித்திரர்கள் யாவருடனும் நலம் மிக, கொள்ளுப்பேர வளமும் கண்டு வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பணிந்து அமைகிறேன்.

**சிவஸ்ரீ இரத்தின. சபாரத்தினக்குருக்கள்**

(கொழும்பு, இலங்கை)

**பிரம்மஸ்ரீ பா. கிருபாசாகரன்**

(திருச்சி, இந்தியா)

**ஸ்ரீமதி பத்மாவதி சுப்பிரமணியக்குருக்கள்**

(இலங்கை)

**ஆகிய அனைத்து சம்பந்திமார் சார்பாக**
**ஸ்ரீ பஞ்சாக்ஷர வித்தியானந்த சர்மா**

(ஜேர்மனி)

செப்டம்பர் 10, 2014


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் ஸ்ரீ சாயிராம்"



# ஆயிரம் பிறைகண்ட எங்கள் முதல்வர்!

அன்போடும், பண்போடும் எம்மை இல்லறமாகிய நல்லறத்தில் பந்தத்தோடும் பாசத்தோடும் பிணைந்து, வாழ்த்தி வழி காட்டி உளமார ஆசீர்வதித்து ஆயிரம் பிறை கண்ட எங்களில் மூத்தவரான பிரம்மஸ்ரீ நடராஜ இராமகிருஷ்ண சர்மா தன் பத்தினியுடன் பார்வதி பரமேஸ்வரனாக லக்ஷ்மி நாராயணனாக எம்மை என்றும் ஆசீர்வதிக்கப் பல்லாண்டு பல்லாண்டு காலம் வாழ்ந்து என்றும் சிறப்புற வேண்டும் என்று காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகரையும் மணற்காட்டு கும்பநாயகி அம்மனையும் பிரார்த்தித்து தம்பதிகளின் பாதங்களைப் பணிகின்றோம்.

**பிரம்மஸ்ரீ சிவசர்மா பாலச்சந்திர சர்மா + பிரபா**

(மலேசியா)

**பிரம்மஸ்ரீ சந்திரா ஸ்ரீபதிக்குருக்கள் + சிவனேஸ்வரி**

(யாழ்ப்பாணம் இலங்கை)

**பிரம்மஸ்ரீ சிவசர்மா கமலநாதன் + ஹேமா**

(யாழ்ப்பாணம், இலங்கை)

**சிவஸ்ரீ பால. சபாரட்ண குருக்கள் + லலிதாம்பாள்**

(காரைநகர், இலங்கை)

**ஆகிய சகோதர சகோதரிகள் சார்பாக வாழ்த்துச் செய்தியை வழங்கியவர் சிவஸ்ரீ சந்திரா ஸ்ரீபதிக்குருக்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நலம் பல பெருகி வளமுடன் வாழ்க

நடராஜக் குருக்கள் - யோகாம்பாள் தம்பதியரின் இரண்டாவது நற்புதல்வனான எனது மதிப்பிற்கும் பேரன்பிற்கும் உரிய இராசண்ணா என அன்பாக அழைக்கப்படும் இராமகிருஷ்ணசர்மா அவர்கள் இன்று (12.10.2014) தனது இனிய இல்லாள் ஜெகதீஸ்வரியுடன் சதாபிஷேகம் காணும் இந் நன்னாளில் அவருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஒவ்வொரு இந்துவும் சமய அனுஷ்டானங்களை விதிப்படி கடைப்பிடிக்க வேண்டும் என்பது நம் முன்னோர் வாக்காகும். அதற்கேற்ப பாரம்பரிய சிவாச்சாரியார் குலத் திலகமாகத் திகழ்ந்து அமரத்துவம் அடைந்த எமது தந்தையார் சிவஸ்ரீ சோ. நடராஜக் குருக்கள் அன்னை யோகாம்பாள் செய்த நற்றவத்தின் பேறாக இன்று ஆயிரம் பிறை கண்ட பெருந்தகையாக எமது அண்ணா திகழ்வதில் நாம் பெருமையடைகின்றோம். அவருக்கேற்ற நற்றுணையாக அமரத்துவம் அடைந்த பிரம்மஸ்ரீ சிவசர்மா சாரதாதேவி தம்பதியரின் மூத்த புதல்வியான எமது பாசமிகு அண்ணி அவர்கள் திகழ்வதுடன் எமது குடும்பத்தின் குலவிளக்காக நல்லன்னையாக எமக்கு வழிகாட்டுகிறார்.

ஒவ்வொரு மனிதனும் தான் பிறந்த கணநேரத்தில் இருந்து லக்ன, ராசி, நட்சத்திர கிரக அடிப்படையில் காலச்சக்கரம் ஒருமுறை சுழன்று வரும்போது ஆரம்பித்த அதே இடத்திற்கு மீண்டும் அந்த கிரகங்கள் வந்து சேரும் அறுபதாவது வருடமே மணிவிழா என்று அழைப்பர். அப்போது அவர் உலக பந்தங்களை கொஞ்சம் கொஞ்சமாக விட்டு வாழ்வதாக எடுத்துக் காட்டப்படுகிறது. அதன் பின்னர் இத் தம்பதியினர் மீண்டும் எழுபத்தைந்தாவது வயதில் பவளவிழாவையும் கொண்டாடி மனமுதிர்ச்சி பெற்று ரிஷிகள் போல பக்குவநிலை பெற்று வாழ்கிறார்கள். தொடர்ந்து ஆயிரம் பிறை கண்டவர்கள் என சொல்லப்படும் எழுபத்தைந்தாவது வயதில் குல தெய்வ ஆசி வேண்டியவர்கள் இப்போது சதாபிஷேகம் என்ற எண்பதாவது வயது பூர்த்தியடைந்த தம்பதிகள் திக்பாவர்களின் பெரு ஆசி வேண்டி இந்த அபிஷேகம் செய்வதால் இவர்கள் அறுபது, எழுபத்தைந்து, எண்பதாவது வயது என்ற படிநிலைகளைக் கடந்து முறையே நீண்ட ஆயுள் ஆரோக்கியம் பெற்று, உலக பந்தங்களில் இருந்து விடுபட்டு விசேடமாக க்ஷம்ருத்யுஞ்ச ஹோமம்; ஜெபமும் கலக அபிஷேகமும் செய்யப்பெற்று, பின் குலத் தெய்வ வழிபாடுகளும் கண்டு மகிழ்ந்தனர். இன்று அட்டதிக்குப் பாலகர்களின் ஆசி வேண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும் அபிஷேகத்தால் எல்லாத் திக்குகளிலும் சகல வெற்றிகளும் சிறப்புற உயர்வும் கண்டு நீண்டகாலம் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுடன் வாழ எல்லாம் வல்ல எமது குல தெய்வமாகிய வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரப் பெருமான், சுருவில் பூர்ணா புட்கலா சமேத ஐயனார் அருள் வேண்டுகின்றோம்.

மேலும் தொன்னூறு வயதில் கிரகங்களில் பேரருளைப் பெற்றும் நூறாவது வயதில் ஐம்புலன்களையும் ஒருநிலைப்படுத்தி இறையருள் பெற்றும் நலம் பல பெருகி வளமுடன் வாழ எம் குலதெய்வங்களைப் பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர்

**ஸ்ரீமதி சோ. வத்சலா (காஞ்சனா)**

(கனடா)

**பிரம்மஸ்ரீ ந. பிரகதீஸ்வரசர்மா**

(இலங்கை)

**ஸ்ரீமதி ச. வித்தியாதேவி**

(இலங்கை)

**ஸ்ரீமதி ச. வடிவாம்பிகை**

(இலங்கை)

**ஸ்ரீமதி சி. பாலாம்பிகை**

(இலங்கை)

**சிவஸ்ரீ ந. யோகானந்தக்குருக்கள்**

(லண்டன்)

**பிரம்மஸ்ரீ சோமாஸ்கந்த குருக்கள் ஜெயகுமார சர்மா**

(பிரான்ஸ்)

**மைதிலி சபேசன்**

(சுவிஸ்)

**ஆகிய சகோதர சகோதரிகள் குடும்பம் சார்பாக**
**பிரம்மஸ்ரீ ந. பத்மநாபசர்மா விமலா தம்பதிகள்**

(இலங்கை)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



எம் அன்பிற்கும் மதிப்புக்கும் உரிய பிரம்மஸ்ரீ ந. இராமகிருஷ்ண சர்மா (ராசு மாமா) அவர்களுக்கு சதாபிஷேகம் நடைபெறுவதையிட்டு நாம் பெருமகிழ்வு அடைகின்றோம். ஓதுதல், ஓதுவித்தல், யாகம் செய்தல், செய்வித்தல், தானம் வழங்கல், தானம் ஏற்றல் என்பன எல்லா பிராம்மணருக்கு உரிய கடமைகளாக குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட தர்மங்களை தவறாது கடைப்பிடித்து வாழ்ந்த மதிப்பிற்குரிய சுளிபுரம் ஸ்ரீவத்ஸ கோத்ரோத்பவர், சிவஸ்ரீ சோ நடராஜக்குருக்கள் (சுருவில்) மகனாக அவதரித்த மாமா அவர்கள் யாழ் நொதேர்ன் இன்டஸ்ரீஸ் நிறுவனத்தில் முகாமையாளர் ஆக பணிபுரிந்து பலருக்கும் நல்லுதவி செய்தவர். எம் சிறுபிராயம் முதல் அன்பு செலுத்தி எம்மை நல்வழிப் படுத்தி இன்றும் அதே அன்போடு வாழ்கின்றார். நாம் யாழ் சென்றால் அவர் வீடு போய் உணவருந்தி வருவோம். அத்தை அவர்கள் விருந்தோம்பல் பண்பு கொண்டவர். அன்பாக விருந்துபசாரம் செய்வார். அதில் அன்பு, பாசம் கலந்து இருந்ததினால் இன்றும் அது எமக்கு ருஷியாக உள்ளது. மாமா அவர்கள் பலரையும் அரவணைத்து நடக்கும் பண்பு கொண்டவர். எம்குலத்து திருமணங்கள் பல இவரால் முன்நின்று நடாத்தி வைக்கப்பட்டவையாகும். இப்படியான பல நற்சிறப்பு குணங்கள் மிக்க மாமா, அத்தை இருவரும் ஆயிரம் பிறைகண்டு சதாபிஷேக விழா கொண்டாடி மகிழ்ந்து, மேலும் கனகாபிசேகம், பூர்ணாபிசேகம் போன்ற விழாக்களையும் கொண்டாடி மகிழ்ந்து நோய் நொடி இன்றி சிறப்புடன் வாழ எம் குல தெய்வம் பறாளை முருகப் பெருமானை வேண்டி வணங்கி விழாத் தம்பதியினரிடம் ஆசி வேண்டுகின்றோம்.

இவ்வண்ணம்

**பா. கோபாலகிருஷ்ண சர்மா**

(இலண்டன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் அறிந்த ஐயர் ஐயா



அகவை 80யை அடைந்து முத்துவிழா காணும் பிரம்மஸ்ரீ நடராஜ இராமகிருஷ்ண சர்மா ஸ்ரீமதி ஜெகதீஸ்வரி தம்பதிகளுக்கு, சிவநெறி புரவலர் அமரர் தம்பியப்பா சண்முகலிங்கம் குடும்பம் சார்பாக வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

எண்பது வயதைத் தாண்டி வாழ்பவரைப் பற்றி சிவஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக்குருக்கள் கூறியதாவது. "ஒரு மனிதன் எண்பது வயது வாழ்ந்தால் அவர் நூறு வயது வாழ்ந்த புண்ணியத்தைப் பெறுவர்" என்று ஸ்திருதிகள் சாஸ்திரம் கூறுகின்றது. 80 ஆவது வயது ஆயிரம் பிறை கண்டது என்பது சாஸ்திரோக்தம் புண்யப்பேறு என்பதாம்."

பிரம்மஸ்ரீ இராமகிருஷ்ண சர்மா அவர்கள் எமது தந்தையார் 1963 ஆம் ஆண்டில் ஆரம்பித்து நொர்தேன் இன்டஸ்ரீஸ் ஸ்தாபனத்தில் பணியாற்றத் தொடங்கி, 1991 ஆம் ஆண்டு வெளிநாடு செல்லும் வரையில் எமது தந்தையாருடன் பணியாற்றினார். ஸ்தானபத்தின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றியவர்.

நாம் பிறக்கும் முன்னரே எமது தந்தையாருடன் இணைந்திருந்தாலும் எமக்கு அறிவு தெரிந்த காலங்களில் அவரை நன்றாகவே அறிய வாய்ப்புக் கிடைத்தது. நாங்கள் அவரை செல்லமாக ஐயர் ஐயா என்றே அழைத்து வந்தோம்.

இத் தம்பதிகளின் புத்திரர்களாகிய சசிகலா (ரமா) சசிதரக் குருக்கள், முரளீதர சர்மா, சசிரேகா ஆகியோரை சிறுவயதிலிருந்தே நன்றாக அறிவோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயாவின் தகப்பனார் பிரம்மஶ்ரீ நடராஜ குருக்கள் எமது தாய், தந்தையரின் ஊரான சுருவில் என்னுமிடத்தில் உள்ள கரிகர புத்திர ஐயனார் ஆலயத்தில் பிரதம குருவாக இருந்தமையினால், ஐயாவின் அனைத்து குடும்ப அங்கத்தவர்களும் எமக்கு பரீட்சையமானவர்கள்.

ஐயர் ஐயா ஓர் ஒழுக்கப் பண்பாளர். கடமை கண்ணியம் கட்டுப்பாடுகளுடன் வாழ்பவர். எமது தந்தையாருடன் பணியாற்றிய போது தந்தையாருக்கு வலது கையாக விளங்கினார்.

ஐயாவின் கடமை காலை 6.30 மணிக்குத் தொடங்கும், தொழிற்சாலைக்குச் சென்று பின் வியாபார நிலையம் சென்று மாலை 6.00 மணிக்கு எமது வீட்டிற்கு வருகை தந்து தனது கடமைகளை முடித்துக் கொள்வார்.

இந்த வேலைச் சக்கரத்தை தினமும் சலிக்காமல் கடைப்பிடித்தார். கடிகாரத்தில் நேரம் பிழைக்கலாம் ஆனால் ஐயாவின் நேரம் தப்பியதே இல்லை.

ஐயர் ஐயா எப்போதுமே புன்னகை முகத்துடன் வலம் வருவார். அவரின் முகத்தில் எப்போதுமே ஒரு ஒளி பிரகாசிக்கும். எப்போதும் எல்லோருடனும் அன்புடனே பழகுவார். வாடிக்கையாளர்களை கையாளும் ஐயாவின் திறமை தனித்துவம் வாய்ந்தது. இத்திறமை கொண்டவர்களை காண்பது மிகவும் அரிது. ஐயாவைப் போன்றே அம்மாவும் அவர் தம் பிள்ளைகளும் எல்லோருடனும் அன்புடன் பழகுவார்கள்.

வெளிநாட்டில் குடியேறி இருந்தாலும் எப்போதுமே எமது குடும்பத்துடன் நெருங்கிய தொடர்பை பேணுகின்றார்கள். ஐயாவை எமது குடும்பத்தில் ஒருவராகவே நாங்கள் கருதுகின்றோம்.

ஐயர் ஐயாவையும், அம்மாவையும் சதாபிஷேக திருநாளில் திருக்கடையூர் ஶ்ரீ அபிராமி அம்மாள் ஸமேதர ஶ்ரீ அமிர்த கடேஸ்வரஸ்வாமி அருளுடன் நீடூழி வாழ எமது குடும்பம் சார்பாக வாழ்த்துகின்றோம்.

**சண்முகலிங்கம் சுபேந்திரன்**

(இலண்டன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசி வேண்டி நிற்கின்றோம்....
# வாழ்த்துங்கள் எம்மை

அம்மா என்றால் அன்பு

பத்து மாதம் சுமந்து பத்தியம் இருந்து...
உள்ளிருந்து உதைத்த உதைகளை
வெளியில் சொல்லி
மகிழ்ந்தவளே.... மனம் குளிர்ந்தவளே....

கருவறையில் இருந்தபோதே
தலைகோதி விளையாடியவளே
வலிகளை வரமெனப் பொறுத்து
உதைகளைப் பரிசெனப் பகிர்ந்தாயே
ஊரார் கழுகுக் கண்கள் கொத்திச் செல்லாமல்
உள்ளே அணைத்துக் காத்தவளே
தோள் மீது தூங்கவைத்துத் தோழியாகிறாய்
தஞ்சமெனப் புகும் போது தாயாகிறாய்
கேளாமலேயே வரம் தந்து கடவுளாகிறாய்

மலம் அள்ளி மடி மீது கிடத்தி
மார்பிலே அணைத்த கரங்கள்
முடிகோதி முகம் துடைத்து
குளிக்க வைத்த கரங்கள்

வாழ்க்கைப் பாதையில்....
படிக் கல்லாகி படிந்து
ஏற வைத்த ஏற்றி விட்ட
நான் ஏறி வந்த படிக் கட்டுக்கள்!

யார் சொன்னது...?
கூப்பிட்ட குரலுக்கு....
கடவுள் வராது என்று.....?
கூப்பிட்டு பார் உன்
அம்மாவை..... !!!

துன்பம் வரும் போது
இறைவனை நாடுகிறோம்
அழைக்கிறோம்...... !!!
சிறு முள்ளு குற்றிய.....
நொடியில் அழைக்கிறோம்
அம்மாவையே.... !!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பா.... என்றால் அறிவு

ஒரு மனிதன், பின்னாளில் தனக்கு சொந்தமாக்கி வைத்திருக்கிற துணிச்சலும், திடமும் அப்பா என்கிற அடிவேரிலிருந்து கிடைத்தது தான். ஒரு குழந்தையின் நடத்தை, பழக்க வழக்கம், பண்பு எல்லாவற்றுக்கும் முன்னுதாரணமான வழிகாட்டி தந்தையே.

கடவுள் மனித உயிர்களுக்கு அளித்த மிகப் பெரிய வெகுமதி தந்தை. ஒரு நல்ல தந்தை ஆயிரம் ஆசிரியர்களுக்கு சமமாக இருப்பார். எப்போதும் எங்களோடு கூட இருந்து வழிகாட்டுகிற இந்த அகல்விளக்கின் தியாகம் அளப்பரியது.

தன் குழந்தையை வளர்த்து ஆளாக்க பொருளாதார ரீதியாக தந்தைமார் சுமக்கிற சுமைகள் கனதியானவை. அதற்காக அவர்கள் படுகிற பாடுகள் வலிமிகுந்தவை.

ஒரு நல்ல தகப்பனுக்கு தன் குழந்தைகளின் வளர்ச்சி மீது இருக்கிற அக்கறையினதும், அங்கலாய்ப்பினதும தீவிரம் வேறெந்த உறவுகளிடமும் இருக்காது. தம் குழந்தைகளின் எதிர்காலம் பற்றியே சதா சிந்திக்கும் அப்பாக்கள் அவர்களுக்காகவே தம் வாழ்க்கை முழுவதையும் தியாகம் செய்து விடுகின்றனர்.

அம்மா என்றால் அன்பு என்கின்றோம். ஆனால் வெளிக்காட்டிக் கொள்ளாத அப்பாக்களின் அன்பும் மிகுந்த ஆழமானதுதான். அவர்களின் பாசமும் ஈரமானது தான்.

தம் பிள்ளைகளை நல்வழிப்படுத்தி கூட்டிச் செல்வதற்கு அவர்களுக்கு கண்டிப்பு அவசியமாகிறது. அதனாலென்னவோ பல அப்பாக்கள் தம் பிள்ளைகள் மீது கொண்டிருக்கின்ற தாய்க்கு நிகரான நேசத்தை மிகவும் இரகசியமாகவே வைத்திருக்கிறார்கள்.

தந்தை என்கிற சூரியனின் வெளிச்சம் நன்றாக கிடைத்துவிட்டால், பிள்ளைத் தாவரங்கள் இயல்பாகவே செழித்து வளர்ந்து விடும். வாழ்வின் அனுபவப் பாடங்கள் அனைத்தினதும் மிகச் சிறந்த ஆசானாக ஒவ்வொரு இளைஞனுக்கும் யுவதிக்கும் அவரவர் அப்பாக்களே இருக்கிறார்கள்.

நாம் வாழும் சமூகத்திற்கு ஒரு நல்ல மனிதன் கிடைத்திருக்கிறான் என்றால் அவனுக்கு பின்னால் ஒரு பொறுப்பு மிக்க தந்தையின் கடும் உழைப்பும் தியாகமும் இருந்திருக்கிறதென்றே அர்த்தம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானையின் பலம் தும்பிக்கையிலே என்பது எவ்வளவு தூரம் உண்மையானதோ.... அதைவிட உண்மையானது ஒரு மனிதனின் பலம் நம்பிக்கையிலே என்பது. ஒவ்வொரு மனித மனசுக்குள்ளும் ஓடிக் கொண்டிருக்கும் அந்த நம்பிக்கை நதியின் நதிமூலம் அவரவர் அப்பாக்களே!

ஒரு குழந்தை அப்பாவின் கைப்பிடித்துக் கொண்டு எடுத்து வைக்கிற முதல் அடியே நம்பிக்கை விதையின் பதியமிடல் நிகழ்வு.

விழவும், எழவும் வலிகளையும் வடுக்களையும் தாங்கிக் கொண்டு நடக்கவும் ஒரு அப்பாவிடமிருந்து குழந்தை பெறுகிற பயிற்சி அவசியமானது.

இருகைகள் கட்டி எழும் ஓசை போல அம்மா அப்பா என்கிற இரு உறவுகளின் ஆரோக்கியமான இணைப்பும் பிணைப்பும் இல்லாமல் ஒரு நல்ல மனிதனை இந்த சமூகம் பெற முடியாது.

ஒரு தாய் தன் குழந்தை தன்னுடனேயே இருக்க வேண்டுமென்கிற அன்பின் உச்சத்தில் அதனை இடுப்பில் கெட்டியாக சுமக்கிறாள்.

தந்தையோ தன் குழந்தை தன்னைவிட உயர்ந்த நிலைக்கு சென்றுவிட வேண்டுமென்ற துடிப்போடு தன் தோள்களில் தூக்கி சுமக்கிறார்.

ஒவ்வொரு அப்பாக்களும் பிள்ளைகளுக்காக, அவர்களுக்கு கடைசிவரை தெரியாமலேயே இருந்துவிடுகிற எத்தனை துயரங்களை சந்தித்திருப்பார்கள்?

பிள்ளைகளின் நல்வாழ்வுக்காக எத்தனை பேரிடம் உதவி கேட்டு நடந்திருப்பார்கள்?

எத்தனை பேரிடம் கடன் வாங்கியிருப்பார்கள்?
அதை கட்டிமுடிக்க எவ்வளவு போராடியிருப்பார்கள்?

எத்தனை இரவுகள் தூங்காது இருந்திருப்பார்கள்?
எத்தனை பாரங்களை மனசில் சுமந்திருப்பார்கள்?
முடியுதிர்ந்த மண்டையின் வெளிகளில்....


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெடிப்பு விழுந்திருக்கும் பாதங்களில்.......
நரம்பு தெரியும் கைகளில்....
நரை விழுந்த மீசைகளில்....

அப்பாக்களின் உழைப்பின் வரலாறு அமைதியாய் குடி கொண்டிருக்கிறது.

தன் பிள்ளைகள் தான் படும் துயரம் கண்டு வருந்திவிடக் கூடாதென்று அவர்களுக்கு முன்னால் தம் வலிகளை எப்படி மறைத்திருப்பார்கள்?

ஆசைப்பட்டு பிள்ளைகள் கேட்கிற பொருட்களுக்காக எத்தனை மணி நேரங்கள் கூடுதலாக தம் வியர்வை சிந்தியிருப்பார்கள்?

ஒரு தந்தையாவது மிகவும் இலகுவானது. ஆனால்
ஒரு தந்தையாக இருப்பது மிகவும் கடினமானது.

**ஸ்ரீமதி கி. சசிகலா**
(சுவிஸ்)
**பிரம்மஸ்ரீ இராம. முரளிதரசர்மா**
(ஜேர்மனி)
**ஸ்ரீமதி கி. சசிரேகா**
(ஜேர்மனி)

**ஆகிய பிள்ளைகள் சார்பாக ஆசிவேண்டி நிற்கிறோம்**
**என்ற செய்தியைத் தருபவர்**
**சிவஸ்ரீ இராம. சசிதரக்குருக்கள்**
(சுவிஸ்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசி வேண்டி நிற்கின்றோம்....
# வாழ்த்துங்கள் எம்மை

மறக்க முடியவில்லை.... மறக்க முடியவில்லை.....!
மறக்க முடியவில்லை....!
அன்பில் அமுதசுரபியாய்
நீங்கள் காட்டும் பாசம்
மறக்க முடியவில்லை....

வீதியில் உள்ளங்கள்
விரல்பிடித்து நடப்பது
மறக்க முடியவில்லை...

ஆசை ஆசையாய்
நீங்கள் உரித்து கொடுக்கும்
வேர்க்கடலையும்
இன்றுவரை இனிக்கும் மிட்டாயும்
மறக்க முடியவில்லை.

மடியமர்த்தி நீங்கள் சொல்லும்
மகாபாரத இராமாயண
மகத்துவங்கள்
மறக்க முடியவில்லை.

நிலா முற்றத்தில்
நகைச்சுவை பொங்க
நீங்கள் சொல்லும் கதைகள்
மறக்க முடியவில்லை.

தள்ளாத வயதிலும்
தளராமல் உழைக்கும்
உங்கள் சுறுசுறுப்பை
மறக்க முடியவில்லை.

உங்கள் அன்புப் பேரப்பிள்ளைகள்
**பிறம்மஸ்ரீ தேவப்பிரகாஷ், அருண்பிரசாத்** (சுவிஸ்)
**சபரிஹா, சபரீசன், சபரிகிரீஷன்** (சுவிஸ்)
**ஜெய்ராம், ஜெய்ஷிகா** (ஜேர்மனி)
**சாய்ராம், சாய்மீரா** (ஜேர்மனி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி
Amman Hindu Temple Luzern
லூட்சேர்ன் துர்க்கை அம்மன் ஆலயம்
Tamilische Hindu Kultur-Gemeinschaft Luzern



Bahnhofstr. 19A
Postfach 216
6037 Root
Tel: 041 450 02 84
E-Mail: info@ammantemple.ch

Web:www.ammantemple.ch

Postkonto Nr: 12-387604-7
Tamilische Hindu Kultur-
Gemeinschaft Luzern

# வாழ்த்துச் செய்தி

ஆதி பராசக்தியின் அம்சமாகிய துர்க்கை அம்மனின் அருட் கடாட்சத்தினால் சதாபிஷேக விழாவை காண இருக்கும் பிரம்மஸ்ரீ நடராசக் குருக்கள் இராமகிருஷ்ண சர்மா தம்பதிகளின் வாழ்க்கை ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி மகிழ்ச்சி உணர்ச்சி பொங்கிப் பொலிவுற்று இருக்கிறார்கள். எவருக்கும் இலகுவாக அன்பு காட்டுவார். எங்கள் ஆலயத்தில் கடந்த 10, 12 வருஷங்களாக நடக்கின்ற விழாக்களில் தொண்டுகள் பல செய்து அவருடைய புதல்வன் சசிதரக் குருக்களுடன் வயது மூப்பையும் பொருட்படுத்தாது ஒத்துழைப்பு நல்கி. விழாக்களிற்கு சிறப்பு சேர்த்தார். அவருடைய சேவையினை பாராட்டி மகிழ்கின்றோம். அவருடைய வாழ்க்கையில் அவரின் பாரியாரான ஜெகதீஸ்வரி அம்மாவும் அவருக்கேற்ப அன்பு பாராட்டி அவர் பணிவிடை செய்து வாழ்கிறார். சசிதரக்குருக்கள் முரளிதரசர்மா அந்தண சமூகத்திற்குரிய முப்போதும் திருமேனி திரண்டு வா என்ற வாக்கியத்திற்கேற்ப பலரும் போற்றும்படி வாழ்கின்றார்கள்.

*"தந்தை மகற்காற்றும் நன்றி அவயத்து*
*முந்தி இருப்பச் செயல்"*

என்று வள்ளுவர் கூறும் வாக்குக்கிணங்க செயற்படும் தந்தையையும்

*"மகன் தந்தைக்காற்றும் உதவி இவன்*
*தந்தை என்நோற்றான் கொல் எனும் சொல்"*

என்று வள்ளுவர் கூறும் வாக்குக்கிணங்க செயற்படும் தந்தையையும் பாராட்டுகின்றோம். சதாபிஷேகம் என்பது இவர்கள் வாழ்நாளில் 1000 பிறைகளைக் கண்டவர்கள் என்பதாகும். இந்த விழா நடப்பது என்பதை நாம் அரிதாகவே காண்கிறோம். இப்படியான இவ்விழாவில் நாமும் கலந்து கொள்வதையிட்டு நாம் மகிழ்கிறோம்.

இவ்வேளையில் ஆலய பரிபாலனசபை சதாபிஷேக விழாவினைப் பாராட்டி வாழ்த்தி அவர் குடும்பத்தினர் அனைவருக்கும் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு வாழ வேண்டும் என அம்பாளின் பொற்பாதம் பணிந்து அம்பாளின் ஆசியுடன் அம்பாளின் அடியவர்கள் சார்பாகவும் ஆலய பரிபாலன சபை சார்பாகவும் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வாழ்க பல்லாண்டு, வாழிய நூறாண்டு.

இவ்வண்ணம்
**லூட்சேர்ன் துர்க்கை அம்மன் ஆலய பரிபாலன சபை**
**அம்பாள் அடியார்கள்** (சுவிஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசி வேண்டி நிற்கின்றோம்....
# வாழ்த்துங்கள் எம்மை

அன்பு நிலைபெற
ஆசை நிறைவேற
இன்பம் நிறைந்திட
ஈடில்லா இந்நாளில்
உள்ளத்தில் குழந்தையாய்
ஊக்கத்தில் வாலிபராய்
எண்ணத்தில் இனிமையாய்
ஏற்றத்தில் பெருமையாய்
ஐயம் நீங்கி
ஒற்றுமை காத்து
ஒரு நூற்றாண்டு
ஔடதம் இன்றி
நீங்கள் வாழிய வாழியவே.....

வாழக்கிடைத்த பயன்
நாம் வாழ நான் வாழ
சுற்றமே வாழ வேண்டும்.

நீவீர் சிரித்து
இன் நிலத்தைச் சிரிக்கவைத்து
நீர் வாழும் வாழ்வை
நினைத்துப் பார்க்கின்றேன்
இதுதான் வாழ்க்கை.

இன்னுமோர் ஆண்டு
இனிதாய் மலர்ந்திருக்கு
புதிதாய் பெரிதாய்
நிறைவாய் உயர்வாய்
வாழ இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று மலர்ந்த
கோடான கோடி மலர்கள்
தூவி உங்களை வணங்குகின்றோம்.

உங்கள் மருமக்கள்
**பிரம்மஸ்ரீ வி. கிரிதரசர்மா** (சுவிஸ்)
**ஸ்ரீமதி ச. பானுஷைலஜா** (சுவிஸ்)
**ஸ்ரீமதி மு. கவிதா** (ஜேர்மனி)
**பிரம்மஸ்ரீ சு. கிருபாகரசர்மா** (ஜேர்மனி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

முத்துவிழா கொண்டாடும் முத்தான அன்பு உள்ளம் கொண்ட அன்புத் தம்பதிகளான பிரம்மஸ்ரீ நடராஜக்குருக்கள் இராமகிருஷ்ண சர்மா, ஜெகதீஸ்வரி தம்பதிகள் எங்கள் எல்லோருக்கும் ஓர் முன் உதாரணமான அன்புத் தம்பதிகள். அத்துடன் அன்பாகவும், இனிமையாகவும் பழகக்கூடிய தம்பதிகள். எமக்கு உரிமையோடும் அன்போடும் பல நல்லவிடயங்களைச் சொல்லக்கூடிய மூத்த தம்பதிகள் இவர்கள் சதாபிஷேகம் செய்வது என்பது எல்லோருக்கும் பல காரணங்களால் வாய்ப்பது அரிது. இவர்கள் உண்மையில் தெய்வ ஆசி, அருள் பெற்ற தம்பதிகள் என்பதில் எள் அளவும் ஐயமில்லை. நாம் வாழும் இந்த சுவிஸ் மண்ணில் அரிதாக நடைபெறும். இந்த விழா நடைபெறுவதையிட்டு நாம் இதில் கலந்து கொள்வதையிட்டும் மகிழ்கிறோம். அவர்கள் பாதம் வணங்குகிறோம்.

என்றும் நோய் நொடியின்றி ஆரோக்கியமாகவும், நிம்மதியாக வாழ அந்த சக்தியின் பலத்தை அந்த மகா சக்தி வழங்க வேண்டுமென வணங்குகின்றோம். தம் வாழ்வில் ஆயிரம் பிறைகள் கண்டவர் பாதம் வணங்கி பேரன், கொள்ளுப் பேரனுடன் கொஞ்சிக் குலாவி நலமுடன் வாழ்க பல்லாண்டு.

என்றும் உங்கள் அன்பு
**சுவிஸ் வாழ் அந்தணர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



உயர் அந்தணர் மரபில் ஸ்ரீ வத்ச கோத்திர வழித்தோன்றலானவரும், சுளிபுரம் - குடியிருப்பு ஸ்ரீ பாலாம்பிகாதேவி சமேத வைத்தீஸ்வரப் பெருமாள். பொன்னாலை வரதராஜப் பெருமாள் தேவஸ்தானங்களின் குரு பரம்பரையில் வந்தவருமான வேதாகம விற்பன்னர் கிரியாகலாப முக்தாமணி சிவஸ்ரீ சோமாஸ்கந்த நடராஜக் குருக்கள். அவர் தம் பத்தினியார் திருமதி யோகாம்பாள் ஆகியோரது தவப்புதல்வன் பிரம்மஸ்ரீ இராமகிருஷ்ண சர்மா, திருமதி ஜெகதீஸ்வரி தம்பதிகளின் சதாபிஷேக நிகழ்வினை அறிந்து, அளப்பரிய ஆனந்தம் அடைந்துள்ளேன்.

“ஆயிரம் பிறை கண்ட அந்தணர்” என்னும் பெரும் பேறு பெற்று, பெருமைக்குரியவராக விளங்கும் பிரம்மஸ்ரீ இராமகிருஷ்ண சர்மா அவர்கள் என் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய எனது பெரிய தந்தையாரின் மைந்தன் என்பதில் நான் பெருமை கொள்கிறேன். இராமகிருஷ்ணர் என்றும் விவேகானந்தர் என்றும் இருவரையும் அண்ணன் தம்பிக்கும் அப்பால் குரு சிஷ்யனாக நாங்கள் என்றென்றும் விளங்க வேண்டுமென்பதற்காகவன்றோ. நம் பெற்றோர் அன்றே எங்களுக்கு நாமம் சூட்டினார்கள் போலும்! இளமைக் காலத்தில் நாங்கள் இருவரும் ஒன்றாக இணைந்து ஓடித் திரிந்து குறும்புகள் செய்து குதூகலித்த நாட்களெல்லாம் இன்று என் கண்முன் தோற்றுகின்றன.

“ராசு” என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பெறும் என் அண்ணர் இராமகிருஷ்ணர் அவர்கள் இளமையிலிருந்தே ஆழமான அறிவாற்றலுடன், ஒழுக்கம் கடைப்பிடித்து தெய்வீக அழகுடன் நற்குணங்களும் இணையப் பெற்றவராய். இன்சொல் கூறி எல்லோராலும் கவரப்பட்டவராய் அனைவரும் வியக்கும் வண்ணம் சாமர்த்தியசாலியாகவும் முயற்சியாளனாகவும் விளங்குகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர் நல்லவராய், வல்லவராய், நகைச்சுவையின் சொல்லோனாய் எல்லோர்க்கும் இனியனாய், சிறு பிள்ளையுடன் கூட அன்புடன் பழகும் பண்பினனாய் ஆழ்ந்த அனுபவத்தில் முதிர்ந்தவராய், இன்று எங்களுக்கெல்லாம் தலைவராய் வேண்டிய போதெல்லாம் ஆலோசனைகள் வழங்கி, எங்களுக்கெல்லாம் வழிகாட்டியாக, கலங்கரை விளக்காக விளங்குகிறார்.

இவர் சுழிபுரத்தில் மட்டுமல்லாது சுருவில் யாழ்ப்பாணம், கொழும்பு போன்ற சென்ற இடங்கள் எங்கும் நற்பெயர் பெற்று அனைவருடனும் அன்பாகப் பழகி, உதவிகள் பல புரிந்து எல்லோர் உள்ளங்களிலும் நீங்கா இடம் பெற்று, இன்று புலம் பெயர்ந்து வந்தபோதும் தன் புனிதத் தன்மை மாறாது புதுப்பொலிவுடன் வாழ்கிறார்.

அண்ணர் அவர்கள் என்றென்றும் சீர் சிறப்புடன் சகல சௌபாக்கியங்களும் பெற்று மங்கள நிறைவுடன் மனைவி, மக்கள், சுற்றம் சூழ, இன்றுபோல் என்றும் இனிதே நீடுழி காலம் வாழ்ந்திட வேண்டுமென எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறேன். அத்துடன் அண்ணர் அவர்களின் சிறிய தந்தை, தாயாரது பிள்ளைகள் அனைவரது வணக்கங்களையும் தெரிவித்து, அவர்கள் சார்பாகவும் நான் அண்ணர் அண்ணிமார் ஆகிய இருவரினதும் பாதங்கள் தொழுது, அவர்களது நல் ஆசீர்வாதங்கள் வேண்டிக் கொள்ளுகிறோம்.

சுபம்.

**விஸ்வநாத விவேகானந்த சர்மா**

(நியூசலாந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை



மக்களது வாழ்வு வளம் பெறவும் பல்வேறு தோஷ நிவர்த்திக்காகவும் ஆயுள் விருத்திக்காகவும் வாழ்க்கையின் ஒவ்வொரு காலப்பகுதிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய கிரியைகள் பற்றி சாத்திரங்கள் வகுத்துக் கூறுகின்றன. அவ்வகையில் 60வது அகவையில் சஷ்டியப்த பூர்த்தியும் 70வது அகவையில் பீமரசாந்தயும் 75வது அகவையில் விஜயரத சாந்தியும் 80வது அகவையில் சதாபிஷேகமும் சிறப்புப் பெறுகின்றன.

ஒருவர் 80 ஆண்டு காலம் வாழ்ந்த நிலையில் 100 ஆண்டு காலம் வாழ்ந்த சிறப்பையும் பக்குவத்தையும் பெறுகின்றார். வைதீக மரபின் படி ஒருவரை வாழ்த்தும் பொழுது "ஜீவ சரதாம் சத" என மன நிறைவாக வாழ்த்தும் மரபு உள்ளது. 100 சரத் காலம் இனிதே வாழ்வீராக என்பதே அதன் பொருள். அவ்வகையில் எமது அன்பிற்குரிய பிரம்மஸ்ரீ இராமகிருஷ்ண சர்மா அவர்கள் தமது துணைவியார் சகிதம் 80வது அகவையில் வைபவ ரீதியாக எதிர்வரும் 12.10.2014 அன்று சுவிஸ் நாட்டிலே கொண்டாடவிருப்பது எமக்கு மிக்க மகிழ்ச்சியை தருகின்றது. அத்தம்பதிகளுடைய பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் மற்றும் சுற்றத்தவர்கள் ஒன்றிணைந்து வையத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து மகிழ்வுறும் வண்ணம் சதாபிஷேக வைபவத்தை நிகழ்த்தி ஆனந்தமடைவதோடு அவர்களது ஆசியையும் பெற்று தாமும் மங்களகரமான வாழ்வு வாழும் வாய்ப்பினைப் பெறவுள்ளமை இறைவன் திருவருளே அன்றி வேறில்லை.

சதாபிஷேகத்தை ஒருவரது வாழ்வில் காண்பது அவருக்கு கிடைக்கும் அரிய பேறாகும். அவ்வாய்ப்பினை பிரம்மஸ்ரீ இராமகிருஷ்ண சர்மா தம்பதிகள் பெறுகின்றார்கள். அவர்கள் தற்சமயம் ஐரோப்பிய நாடொன்றில் வாழ்ந்தாலும் எமது பண்பாட்டின் பாரம்பரியத்தினை போற்றும் வகையில் சதாபிஷேகத்தை மிகுந்த சிரத்தையோடு கொண்டாடுவது எமக்கு மகிழ்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிக்கின்றது. பிரம்மஶ்ரீ இராமகிருஷ்ண சர்மா சிறந்த சிவாச்சாரிய மரபினை சார்ந்த சுருவில் சிவஶ்ரீ நடராஜகுருக்கள் தம்பதிகளின் இரண்டாவது புதல்வராவார். அவர் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் எம்முடன் அன்புடனும் பண்புடனும் பழகியவர். பிற நாடு சென்றாலும் தம்மைச் சார்ந்த அன்பு மிக்கவர்களை மறக்காது நினைவில் கொண்டு தொடர்பு கொள்வதில் இன்பம் காண்பவர். அவ்வகையில் தமது சதாபிஷேக வைபவம் சிறக்க எம்முடன் தொடர்பு கொண்டு வாழ்த்தும் படி அன்புரிமையுடன் வேண்டிக் கொண்டமைக்கு அமைவாக அவருக்கு நல் வாழ்த்தினை தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறோம்.

மேலும் எமது துணைவியாராகிய உஷாவின் சகோதரராகிய பிரம்மஶ்ரீ கோபிரமணாவின் துணைவியார் ஶ்ரீமதி சத்தியதேவியின் மாமனார் என்ற வகையில் இங்கிருக்கும் அனைவருக்கும் மிக்க மகிழ்ச்சியாக அமைவதோடு எம் அனைவரது வாழ்த்துக்களும் உரித்தாகுக. சதாபிஷேகம் காணும் பிரம்மஶ்ரீ இராமகிருஷ்ண சர்மா தம்பதிகள் சகல நலன்களும் பெற்று சிறந்த உடல் நலத்துடன் பல்லாண்டு காலம் மங்களகரமாக சுற்றம் சூழ இனிதே வாழ தில்லை நடராஜப் பெருமானின் திருவருள் பொலிவதாகுக என வாழ்த்துகின்றோம்.

**பேராசிரியர் இலக்கிய கலாநிதி ப. கோபாலகிருஷ்ண ஐயர்**
வாழ்நாள் பேராசிரியர்,
யாழ்ப்பாண பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
இலங்கை.
16.09.2014


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சக்தி

**ஸ்ரீமுத்துமாரி அம்மன் ஆலயம் ஹனோவர்**

**Sri Muthumariamman Tempel Hannover,**

Carl-Buderus Str. 3a, D-30455 Hannover, Tel: +49 511 47 11 49

# எண்பதாவது பிறந்த நாளைக் கொண்டாடும் பெரியையாவுக்கு ஆசியுரை

கனோபர் அம்மன் ஆலயத்தின் ஆரம்ப கால பூமி பூஜை நடாத்தியவரின் தந்தை அம்மன் ஆலயத்தின் வளர்ச்சியில் அக்கறை கொண்டு தன் உறவுகளை கொண்டே பல வருடங்கள் வழி நடாத்தியவர் தன் பங்கும் இவ்வாலயத்திற்கு தேவையென தளராத வயதிலும் கூப்பிடும் நேரமெல்லாம் எமக்கு இரு கரம் கொடுத்து உதவியவர் தன் வேலைகளை தன் கடமையென தன் நலம் பாராமல் நேரத்தை பொன்னென போற்றுபவர்.

எங்கள் ஊரின் இன்னுமொரு இன்ரநெட் கூகில் பெரியையா தான் இவர் தற்போதும் நாம் குரல் கொடுத்ததும் அடையாளம் கண்டு தன் ஞாபக பெட்டகத்தில் இருந்து பெயரை எடுத்து அன்பாய் அழைக்கும் உள்ளம் கொண்டவர்.

இன்றைய நாளில் சதாபிசேகத்தை கொண்டாடும் பிரம ஶ்ரீ நடராஜ இராமகிருஷ்ண சர்மா அவர்கள் தம்பதி சமேதராய் பேரப்பிள்ளைகளைப் போல பூட்டப் பிள்ளைகளையும் கண்டு எமக்கும் இன்னும் நல் வழிகளையும் காட்டி ஆசிகளையும் தந்து ஆசிவேண்டுகின்றோம்.

**கனோவர் முத்துமாரியம்மன் ஆலய**
**நிர்வாகசபையினர் ஆலோசனைக் குழுவினர்**
**(கனோவர் வாழ்மக்கள்)**

ஆலயம் திறந்திருக்கும் நேரம்


தினமும் 11.00 முதல் 13.00 வரை
16.00 முதல் 20.00 வரை

Bank verbindung:
Hannoverscher Tamilischer Hindu-Kulturverein e.V.
Stadtsparkasse Hannover
BLZ:25050180 • Kontonummer : 580481

Amtsgericht Hannover – Eingetragen in das Vereinsregister unter Nr. 6748



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிரம்மஸ்ரீ ந. இராமகிருஷ்ண சர்மா

ஸ்ரீமதி ஜெகதீஸ்வரி தம்பதிகளின்

முத்து விழாவை முன்னிட்டு

# "முத்து மலர்"

என்ற நூலை வெளியிடுபவர்கள்

சிவஸ்ரீ இராம. சசிதரக்குருக்கள் (லுட்சேர்ன், சுவிஸ்)

பிரம்மஸ்ரீ இராம. முரளிதரசர்மா (ஜெர்மனி)

இம் முத்து மலருக்கு "இந்து மக்களுக்கு ஒரு கையேடு" மலரின்
உள்ளீடுகளை பதிப்பீடு செய்ய அனுமதி அளித்த
அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு எமது நன்றிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


இயல் ஒன்று

**வழிபாட்டியல்** 01

1. விநாயகர் வணக்கம் ........ 03
2. கடவுள் ........ 08
3. கடவுள் வழிபாடு ........ 11
4. சிவமூர்த்தங்கள் ........ 14
5. கோயில் அமைப்பு ........ 24
6. ஆலய வழிபாடு ........ 30
7. தீப வழிபாடு ........ 45

இயல் இரண்டு

**வாழ்வியல்** 51

8. சைவ வாழ்க்கை ........ 53
9. சைவ ஒழுக்கங்கள் ........ 55
10. சமய சின்னங்கள் ........ 59
11. ஆசார முறைகள் ........ 64
12. நாளாந்த வழிபாடு ........ 67

இயல் மூன்று

**கிரியையியல்** 73

13. நித்திய கருமங்கள் ........ 75
14. கிரியைகள் ........ 82
15. ஆலயக் கிரியைகள் ........ 86
16. வீட்டுக் கிரியைகள் ........ 100
17. திருமணக் கிரியைகள் ........ 104
18. ஏனைய கிரியைகள் ........ 116

இயல் நான்கு

**விரதவியல்** 127

19. முக்கிய விரதங்கள் ........ 129
20. பண்டிகைகள் ........ 142
21. பஞ்சாங்கம் ........ 144



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் ஐந்து

சிராத்தவியல் 149

22. அபரக் கிரியைகள் ........ 151

23. சிராத்தக் கிரியை ........ 158

இயல் ஆறு

ஆசௌசவியல் 167

24. இந்துக்களின் வாழ்க்கையில் ஏற்படும் பிறப்பு மரண ஆசௌச காலங்கள் ........ 169

25. ஆசௌச விபரங்கள் ........ 172

26. ஆசௌச விளக்கங்கள் ........ 176

27. சில கேள்வி பதில்கள் ........ 182

இயல் ஏழு

தத்துவ இயல் 185

28. சைவ சித்தாந்தம் ........ 187

29. சைவ சித்தாந்தம் அடிப்படை அம்சங்கள் – விழுமியங்கள் 193

இயல் எட்டு


திருமுறையியல் 229

30. பன்னிரு திருமுறைகள் ........ 231

31. சமய குரவர் சுருக்க வரலாறு ........ 239


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## இயல் ஒன்று

# வழிபாட்டியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1. விநாயகர் வணக்கம்

**வி**நாயகர் என்ற சொல் சிறப்பான தலைவன் அல்லது தலைவர்களுக்கெல்லாம் தலைவன் எனப்பொருள்படும். எந்தக்கடவுளை வழிபட்டாலும் முதலிலே வழிபடப்படும் தெய்வம் விநாயகக் கடவுள் ஆகும். விநாயகரின் தோற்றம் பற்றி சம்பந்தரின் பின்வரும் தேவாரம் விளக்கி நிற்கின்றது.

*" பிடியதன் உருஉமை கொளமிகு கரியது*
*வடிகொடு தனதடி வழிபடுமவர் இடர்*
*கடிகண பதிவர அருளினன் மிகுகொடை*
*வடிவினர் பயில்வலி வலமுறை இறையே "*

"உமை பெண் யானையின் உருவெடுத்தாள், சிவன் ஆண் யானையின் வடிவெடுத்தான். இருவரும் இணைந்தனர். தன்னை வழிபடுகின்றவர்களது துன்பங்களை நீக்குகின்ற கணபதி பிறக்குமாறு சிவன் இவ்வாறு அருள் செய்தார்" என்பது அப்பாட்டின் பொருள் ஆகும்.

நாம் எழுதத்தொடங்கும் முன் "உ" எனும் பிள்ளையார் சுழி போட்டே எழுதத் தொடங்குவது வழமை. விநாயகர் ஓங்கார வடிவினர். அ+உ+ம் எனும் மூன்றெழுத்துக்களின் கூட்டொலியே ஓம். அதன் நடு எழுத்தான உகர வடிவமே பிள்ளையார் சுழி.

மஞ்சள், சாணம், சந்தனம் முதலியவற்றால் பிள்ளையாரைப் பிடித்து வைத்தால் அவர் அனைவருக்கும் அருள்பாலிக்க எழுந்தருளுவார். விநாயகருக்குரிய மலர்களாக அறுகு, எருக்கம்பூ, வெள்ளெருக்கம்பூ, சூரியகாந்தி, அலரி, மருது, மாதுளை, செண்பகம், பாதிரி என்பன கூறப்படும். பத்திரங்களாக வன்னி, வில்வம், ஊமத்தை, நொச்சி, நாயுருவி, கத்தரி என்பன கூறப்படும். துளசி விநாயகருக்கு ஆகாது.

## விநாயகருக்குரிய விரதங்கள்

### சுக்ல சதுர்த்தி

ஒருமுறை தேவர்கள் மகிழ விநாயகர் கைலாயத்தில் நடனமாடினார். விநாயகரின் நடனத்தைக் கண்டு சந்திரன் எள்ளி நகையாடினார். அதனால் கோப மடைந்த விநாயகர், சந்திரனைப் பார்க்கும் யாவரும் துன்பம் அடைவர் எனச் சபித்தார். தன்னிலை உணர்ந்த சந்திரன் மன்னிப்பு வேண்டினான். விநாயகரும் மனமிரங்கி சுக்ல சதுர்த்தியில் சந்திரனைக் காண்பவர்கள் பெரும் துன்பம் அடைவர் என்றும், ஆனால் ஆவணித்திங்கள் சுக்ல சதுர்த்தியில் தன்னை வணங்கினால் துன்பம் நீங்கி இன்பம் பெறுவர் என்றும் அருளினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகையால் ஆவணிமாத வளர்பிறை நான்காம் நாளில் (சுக்ல சதுர்த்தி) விநாயகரை வணங்குவோர் தொல்லை நீங்கி நலம் பெறுவர். **ஆதலால் இஃது விசேடமான நாளாகும்.** விநாயகரின் (ஜன்ம) நாளாகவும் போற்றப்படுகிறது. இதனால் நினைத்த காரியம் கைகூடும்.

ஒவ்வொரு மாதமும் வரும் தேய்பிறை நான்காம் நாள், வளர்பிறை நான்காம் நாள் என்பன முறையே சங்கடஹர சதுர்த்தி விரதமாகவும் சதுர்த்தி விரதமாகவும் அனுஷ்டிக்கப்படும். இவ்விரதங்களால் தீராத துன்பங்கள், கூன் குருடு, செவிடு முதலியன நீங்கும், செல்வம் பெருகும், கல்வி சிறக்கும்.

## விநாயகர் ஷஷ்டி விரதம்

கார்த்திகை மாத தேய்பிறை பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை ஷஷ்டி வரையிலான இருபத்தொரு நாட்கள் கொண்ட விரதமாகும். இவ்விரதத்தால் கஷ்டங்கள் விலகி மங்கலம் உண்டாகும்.

வெள்ளிக்கிழமை விரதமும் விநாயகருக்குரிய விரத நாளாகும்.

கணபதியை முழுமுதற்கடவுளாக வழிபடுவோர் காணாபத்யர் என்றழைக்கப்படுவர்.

விநாயகரின் ஐந்து கரங்களும் ஐந்து தொழில்களைக் குறிக்கிறது.

| | | |
|---|---|---|
| அங்குசம் | - | அழித்தல் |
| பாசம் | - | படைத்தல் |
| மோதகம் | - | அருளல் |
| எழுத்தாணி | - | காத்தல் |
| தும்பிக்கை | - | மறைத்தல் |

விநாயகரை வணங்க மூன்றுமுறை நெற்றியிலே குட்டிக்கும்பிடுவது வழமை. அறிவைத்தருபவர் ஞானவிநாயகன் எனப்படுவார். தெளிவான அறிவைத்தரவும் இறை ஞானத்தை ஏற்படுத்தவும் குட்டிக் குப்பிடப்படும்.

தோப்புக்கரணம் போட்டு வழிபடுவதும் மிக முக்கியமாகும். "த்வாப்யாம் கர்ண" என்பது தோப்புக் கரணம் என மருவி வழங்கி வருகிறது. இரண்டு காதுகளையும், வலது கை இடது காதையும், இடது கை வலது காதையும் மாறிப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்தும் எழுந்தும் செய்யும் வணக்கம் தோப்புக் கரணமாகும். இது மூன்றுமுறை செய்யப்பட வேண்டும்.

விநாயகரின் திருமேனிகள் 32 எனவும் 16 எனவும் புராணங்கள் விவரிக்கின்றன.

## விநாயகருக்கு பிடித்தவையும் - பலன்களும்

| | | |
|---|---|---|
| கரும்பு | - | பித்தத்தை அகற்றும் |
| எள்ளு | - | இரும்புச்சத்து தரும் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| அவல் | - | சத்துணவு |
| பொரி | - | தாகம் தணிக்கும் |
| தேங்காய் | - | இரத்தசுத்தம், மூளை வளர்ச்சி |
| மாதுளை | - | பித்தநீக்கம், வயிற்றுக் கோளாறு நீக்கம் |
| விளாம்பழம் | - | பித்த நீக்கம், இரத்தசுத்தி, மூளைவிருத்தி |
| நாவற்பழம் | - | குளிர்ச்சி தரும், கண் எரிச்சல் நீக்கம் |
| மோதகம் | - | புரதம் |

விநாயகருக்குச் சிதறு தேங்காய் உடைப்பது வழமை. இது நம்மிடம் உள்ள தீய வினைகள் சிதறி அனைத்துத் துன்பங்களும் சிதறி நொறுங்கி இறுதியில் தூய பக்தி எனும் அமுதநீர் வெளிவருவது போல் விநாயகரின் அருள் எமக்குக் கிடைக்கும் என்பதைக் குறிக்கும்.

**விநாயகருக்குப் பிடித்தமான உணவுப்பண்டங்கள்**

| | | | |
|---|---|---|---|
| கரும்பு | அவரை | பழவகை | சர்க்கரை |
| பருப்பு | நெய் | எள் | பொரி |
| அவல் | பச்சையரிசி | வெள்ளரிப்பழம் | மோதகம் |
| கிழங்கு | கடலை | அன்னவகை | |

**விநாயகரூபங்களும் - பலன்களும்**

| | | |
|---|---|---|
| ஏகாக்ஷரகணபதி | - | கணபதி அருள் கிடைக்க |
| மகாகணபதி | - | பரிபூரண சித்தி |
| த்ரைலோக்கிய மோஹனகரகணபதி | - | எல்லா உலகத்தையும் காப்பாற்ற |
| ருணகரகணபதி | - | கடன் நீங்க |
| மகா வித்தியாகணபதி | - | தேவி அனுக்கிரகம் பெற |
| ஹரித்ரா கணபதி | - | உலக வசியம் பெற |
| வக்ரதுண்டகணபதி | - | அதிர்ஷ்ட லாபம் |
| நிதிகணபதி | - | நிதி வளம் கிடைக்க |
| பாலகணபதி | - | சந்தோஷம் |
| சக்திகணபதி | - | சர்வ காரியமும் வெற்றி பெற |
| க்ஷிப்ர ப்ரஸாதகணபதி | - | துரித பலன் பெற |
| ஹேரம்பகணபதி | - | மனச்சாந்தி |
| உச்சிஷ்ட கணபதி | - | திரிகால தரிசனம் |
| வீரகணபதி | - | தைரியம் பெற |
| ஸங்கடஹரகணபதி | - | துன்பம் நீங்க |
| துர்க்காகணபதி | - | துக்க நிவாரணம் |
| யோககணபதி | - | பயம் போக |
| நிருத்தகணபதி | - | கலை வளர்ச்சி |
| சித்திகணபதி | - | எல்லா காரியமும் வெற்றி பெற |
| புத்திகணபதி | - | அறிவு வளர்ச்சி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகருக்கு விருப்பமான சில பொருட்களும் தத்துவங்களும்

**விளாம்பழம்**

விளாம்பழத்தின் புறஓடும் உள்ளீடான பழமும் தொடர்பில்லாமல் வெவ் வேறாக இருக்கின்றன. இரண்டிற்கும் தொடர்பற்ற இந்நிலை பழம் பழுத்த பிறகு அமைகின்றது. உடலும் உள்ளமும் பக்தியில் ஈடுபடும் போது அவைகளுக்கு எந்த பந்த பாசமும் தொடர்பும், கட்டும், பற்றும் இருக்க கூடாது. இந்த பற்றற்ற நிலையை உணர்த்துவது விளாம்பழம்.

**மோதகம்**



இதனை எருக்கலாம் கொழுக்கட்டை என்று கூறுவது வழக்கம். விநாயகருக்கு மிகவும் பிடித்தமானது. கொழுக்கட்டை மாவுக்குள் பூரணம் வைத்து மடித்து செய்யப்படுவது [முதம் -ஆனந்தம், சுவைத்து உண்ணும் போது ஆனந்தத்தைத் தருவது மோதகம்]

மாவு - உடல், பூரணம் - உயிர் பூரணம் பக்குவத்துடன் செய்யப்படுகின்ற உணவுக் கலவை அவித்த பயற்றம் பருப்பு + சர்க்கரை + தேங்காய்த் துருவல் இவற்றின் கலவை பூரணமான நிறைவான உயிர்முத்தி பெறக்கூடிய முழுத்தகுதியை பெறுகின்றது. இது மோதகம் உணர்த்தும் உட்கருத்து. மோதகம் இனிமையாகவும், சுவையாகவும் எல்லோரும் விரும்பும் பொருளாக இருப்பது போல விநாயகரும் உயிர்களுக்கு இனியவராக இருக்கின்ற இன்னொரு தத்துவத்தையும் விளக்குகின்றது.

**தேங்காய்**



வழிபாட்டில் உடைக்கப்படுகின்ற தேங்காய் சில கருத்துக்களைத் தெரிவிக்கின்றது. தேங்காயில் மட்டை, நார், ஒட்டுப் பகுதிகள் என்ற மூன்றும் மும்மலங்களைக் குறிக்கும். இவை நீக்கப்பட்டவுடன் நீர் - உயிர் - இறைவனது திருமுன் அர்ப்பணிக்கப்படுகின்றது. இது ஒரு கருத்து.

தேங்காயின் வெண்மை சத்துவக் குணத்தையும் மூன்றாம் கண் ஞானக் கண்ணையும் தெரிவிக்கின்றன. அதாவது சத்துவக்குணத்துடன் பக்தியுடன் சஞ்சலம் இல்லாமல் ஞானக் கண்ணால் இறைவனை தரிசிக்க வேண்டும் என்ற வழிபாட்டு முறையை இது தெரிவிக்கின்றது. இது மற்றொரு கருத்து.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிதறுதேங்காய்

நேர்த்தியின் பொருட்டுத் தேங்காய்களைச் சிதறுகாய் அடிப்பது (சூரைக்காய் அடிப்பது) விநாயகருக்கு மட்டும் உரியது. சிதறுகாய் அகங்காரத்தின் முடிவைக் குறிக்கின்றது. சிதறுகாயைச் சிறுவர்கள் எடுப்பார்கள். இது உடைப்பவர் மறைமுகமாகச் செய்யும் தர்மமாகும். எனவே விநாயகருக்கு முன் அகங்கார மண்டை ஓடு சிதற வேண்டும். அமுதமயமான அறிவு நீரை அர்ப்பணிக்க வேண்டும் என்பன சிதறுதேங்காயின் உட்கருத்தாகும்.

### வெள்ளரிப்பழம்

தோலில் வெள்ளையான வரிகளைக் கொண்ட பழம் இது. நன்றாகப் பழுத்த உடன் காம்பிலிருந்து கழன்று தரையில் விழுகின்றது. அதுபோல பற்றற்ற ஆன்மா உலகப் பிடியிலிருந்து விடுபட்டு முத்தியடைகின்றது.

### அறுகம்புல்

ஆறு இடங்களில் வேர்களை ஊன்றி ஒரு கொடி போல வளர்வது அறுகு அல்லது அறுகம் புல் ஆகும்.

இது குளிர்மையானது. கோடை காலத்திலும் வாடாது. இது அரிய மூலிகையாகவும் பயன்படுத்தப்படுகின்றது. அறுகம்புல்லை நீரில் இட்டுக் காய்ச்சிக் குடித்தால் காய்ச்சல் தணியும். அறுகம்புல் உடலின் எடையையும், கொழுப்பையும் குறைக்கும். நரம்பு தளர்ச்சியை நீக்கும், இரத்தப்புற்று நோயைத் தணிக்கும், நஞ்சினை முறிக்கும். இரத்தச் சிவப்பணுக்களைப் பெருக்கும், இருமல், இதயக் கோளாறு, இரத்தச் சோகை முதலிய நோய்களுக்கு சிறந்த மூலிகையாகும். "ஆல் போல் தழைத்து அறுகு போல் வேர் ஓடி" என்பது போல் உலகம் செழித்து வாழ வேண்டும் என்பதை குறிக்க அறுகம்புல் சிறந்த வழிபாட்டுப் பொருளாக விளங்குகின்றது.

*நல்ல சொற் பொருணாளும்நடாத்தவும்*
*எல்லை காணரும் பேரின்பம் எய்தவும்*
*வெல்லும் யானை முகத்தினை மேவிவாழ்*
*வல்லபைக்குரியானை வாழ்த்துவாம்.*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. கடவுள்



*அண்டப் பகுதி யினுண்டைப் பிறக்கம்*
*அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி*
*ஒன்றனுக் கொன்றுநின் றெழில் பகரின்*
*நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன*
*இன்னுழை கதிரின் துன்னணுப் புரையச்*
*சிறிய வாகப் பெரியோன் தெரியின்.* -திருவண்டப்பகுதி

ஆகாயத்தை இராக்காலத்திலே அண்ணாந்து பார்த்தால் அதிலே எண்ணில்லாத நட்சத்திரங்கள் மின்னி விளங்குவதைக் காணலாம். இந்த நட்சத்திரங்கள் வெகு தூரத்திலே இருத்தலாற் சிறியவைகளாகத் தோன்று கின்றன. அவைகள் உள்ளபடி மிகப் பெரியவைகளேயாம். சூரியன் பூமியிலும் பதின்மூன்று லட்சம் மடங்கு பெரியது. எல்லா நட்சத்திரங்களும் சூரியனிலும் பெரியவைகளே. ஆதலால், இந்தப் பூமியையும், சூரியனையும், எண்ணில்லாத நட்சத்திரங்களையும் மாயையிலிருந்து உண்டாக்கிய கடவுளுடைய பெருமையை யார்தான் சொல்ல வல்லவர்!

இந்த அளவில்லாத பெருமையை உடைய கடவுள் அன்பையே வடிவமாக உடையவர்.

*"அன்பும்சிவமும் இரண்டென்பர் அறிவிலார்*
*அன்பே சிவமாவ தாருமறிகிலார்*
*அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்*
*அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே."*

ஆதலால், அவர் நம்மிடத்திற் கொண்ட அன்பும் அளவில்லாததாகவே இருக்கும். பெற்ற தாயானவள் குழந்தையிடத்தே எவ்வளவு அன்புடை யவளாய் இருக்கிறாள். கடவுளுடைய அன்பு தாயினுடைய அன்பிலும கோடானு கோடி மடங்கு அதிகமாய் இருக்குமல்லவா? தாயைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணும்போது குழந்தை எவ்வளவு ஆனந்தம் அடைகிறது. ஆதலால், தாயினும் பார்க்க அதிகமான அன்பையுடைய கடவுளை நினைக்கும் போதும், அவரைக் கோயிலிலே காணும்போதும் நாம் எல்லையில்லாத ஆனந்தம் அடைய வேண்டும்; நமது மனம் கரைந்து உருகுதல் வேண்டும்.

*மெய்தா னரும்பி விதிர்விதிர்த்*
*துன்விரை யார்கழற்கென்*
*கைதான் றலைவைத்துக் கண்ணீர்*
*ததும்பி வெதும்பியுள்ளம்*
*பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி*
*சயசய போற்றியென்னும்*
*கைதா னெகிழ விடேனுடை*
*யாயென்னைக் கண்டுகொள்ளே.*

தாய் தந்தையர் குழந்தைக்கு வேண்டிய ஊண் உடை முதலியவற்றை, அக் குழந்தை கேளாமலிருக்கவே கொடுத்து விடுகிறார்கள். குழந்தைக்கு வேண்டியவற்றுட் சிலவற்றை அவர்கள் அறியமாட்டார்கள். அவற்றைக் குழந்தை அவர்களுக்குச் சொல்லியபின்பு அவர்கள் கொடுக்கிறார்கள். கடவுள் எல்லாம் அறிபவர் ஆதலால், நமக்கு வேண்டிய யாவற்றையும் அவர் தாமாகவே தருவர். நாம் அவரை ஒன்றுங் கேட்க வேண்டியதில்லை. அவரை வணங்குதலும், துதித்தலும், நினைத்தலும் பூசித்தலுமே நாம் செய்ய வேண்டியவை.

*"பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்*
*பரிந்து நீ பாவி யேனுடைய*
*ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி*
*உலப்பிலா ஆனந்த மாய*
*தேனினைச் சொரிந்து புறம்புறம் திரிந்த*
*செல்வமே சிவபெரு மானே*
*யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்*
*எங்கெழுந் தருளுவ தினியே."*

இந்த உடம்பு நம்மோடு எப்போதும் இருப்பதன்று. ஒரு நாளைக்கு நாம் இதை விட்டு விலக வேண்டிவரும். அப்போது நமது தாய் தந்தையாரும் சுற்றத்தவரும் நண்பரும் நம்மை விட்டுப் பிரிந்து விடுவார்கள். நமது பொருள் விட்டுப் பிரிந்து விடும். நமது பொருள் பண்டங்களும் தொடர்பற்றுப்போம். கடவுள் ஒருவரே எக்காலத்திலும் எல்லையில்லாத அன்பைச் சொரிந்து கொண்டு நம்மோடு துணையாய் நிற்கும் மெய்ப்பொருள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஈன்றாளு மாய்எனக் கெந்தையு
மாயுடன் தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்துகந்
தான்மனத் துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க் கன்பன்
திருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன்
தன்னடி யோங்களுக்கே."

ஆதலால், நம்முடைய மனம் அவரையே நாடுதல் வேண்டும். நமது சீவனத்துக்கு வேண்டிய தொழில்களை நாம் செய்யும்போது நமது மனம் அவற்றிலே செல்லுமாயினும் அதன் நாட்டம் எப்போதும் கடவுளிடத் திலேயே இருத்தல் வேண்டும்.

"நாடகத்தா லுன்னடியார் போனடித்து நானடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்
ஆடகச்சீர் மணிக்குன்றே யிடையறா அன்புனக்கென்
ஊடகத்தே நின்றுருகத் தந்தருளெம் முடையானே'

(திருவாசகம்)

'இரவும் பகலும் துதிசெய் திருதாள்
பரவும் பரிசே பரிசென் றருள்வாய்
கரவுண் டெழுசூர் களையக் கதிர்போல்
விரவுஞ் சுடர்வேல் விடுசே வகனே'

(கந்தரநுபூதி)

**ஆக்கம் : சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3. கடவுள் வழிபாடு

கடவுளுடைய திருவடிகளை அடைதற்காகவே பிறவி எடுத்தோமாதலால், அத்திருவடிகளைச் சிந்தித்தலும், துதித்தலும், வணங்குதலுமே நமது முக்கியமான கடமையாகும். உடம்பு நயப்படுதற்கு உணவும், மனம் நயப்படுதற்குக் கல்வியும் வேண்டப் படுதல் போல ஆன்மா நயப்படுதற்குக் கடவுள் வழி பாடு வேண்டப்படும். உடம்பும் மனமும் ஆன்மாவின் கருவிகள்; உடம்பு தொழில் செய்தற்கும், மனம் ஆராய்வதற்கும் கருவியாயுள்ளவை. கருவிகளினும் பார்க்கக் கருவிகளை யுடையவன் மேலானவன். ஆதலால், உடம்பினும் மனத்தினும் மேலானதே ஆன்மா. ஆகவே உடம்பை நயப்படுத்துதற்கு வேண்டிய உணவினும், மனத்தை நயப்படுத்துதற்கு வேண்டிய கல்வியினும் மேலானது ஆன்மாவை நயப்படுத்துவதாகிய கடவுள் வழிபாடு. அன்றியும், இவைகள் ஆன்மாவுக்குக் கருவியாயிருத்தலால், இவற்றின் முக்கியமான தொழில் ஆன்மாவுக்கு வேண்டிய கடவுள் வழிபாட்டில் ஈடுபடுதலேயாம். 'திருக்கோயிலை வலம் வந்து சுவாமிக்குப் பூவைச் சாத்தித் தோத்திரம் செய்யாத உடம்பினாற் பயனில்லை' என்றார் திருநாவுக்கரசு நாயனார். 'கடவுளுடைய திருவடிகளைத் தொழுதற்குத் துணையாய் நில்லாத கல்வியினாற் பயனில்லை' என்றார் திருவள்ளுவ நாயனார்.

*"ஆக்கையாற் பயனென் - அரன்*
*கோயில் வலம்வந்து*
*பூக்கையாலட்டிப் போற்றி என்னாதவிவ்*
*வாக்கையாற் பயனென்.'* - திருநாவுக்கரசுநாயனார்.

*"கற்றதனா லாயபயன் என்கொல் வாலறிவன்*
*நற்றாள் தொழா அர் எனின்."* - திருவள்ளுவர்.

கடவுள் வழிபாட்டிற்கு உரிய நேரங்கள் காலையும் மாலையுமாம். இவ்வழிபாடு பலவாறாகச் செய்யப்படுகின்றது. சிலர் தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களைப் பாடிக் கடவுளைத் தோத்திரம் செய்து தியானித்துச் சிந்தித்து வணங்குவர். வேறு சிலர் இவற்றோடு திருஐந்தெழுத்தை ஓதுவர். சுப்பிரமணியர் தொண்டர் திருப்புகழ் முதலிய அருட்பாக்களையும் திரு ஆறெழுத்தையும் ஓதுவர். வேறு சிலர் சுப்பிரமணியர் முதலிய மூர்த்திகளுள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றுக்குப் பூசை செய்வர். மற்றுஞ்சில ர் சிவலிங்க பூசை செய்வர். இன்னுஞ் சிலர் கோயிலுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்து வழிபடுவர்.

கடவுளை நாம் தரிசிக்கும்போதும் பூசிக்கும் போதும்"எங்கும் வியாபகமாயுள்ள இறைவனே! சிறியேனுடைய வழிபாட்டிற்காக இங்கு எழுந் தருளி யிருக்கும் இப்பெருங் கருணையை நான் எவ்வாறுதான் துதிப்பேன்!! உன்னுடைய திருமுன்னிலையில் நின்று உன்னுடைய கருணையைப் பருகும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததே! உன்னை நான் மறந்து விடுகிறேனே!!!"

*பனைக்கை மும்மத வேழ முரித்தவன்*
*நினைப்ப வர்மனங் கோயிலாக் கொண்டவன்*
*அனைத்தும் வேடமா மம்பலக் கூத்தனைத்*
*தினைத்த னைப்போ தும்மறந் துய்வனோ.*

*புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா*
*உன்னடி யென்மனத்தே*
*வழுவா திருக்க வரந்தர*
*வேண்டுமிவ் வையகத்தே*
*தொழுவார்க் கிரங்கி யிருந்தருள்*
*செய்பா திரிப்புலியூர்ச்*
*செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை*
*மேல்வைத்த தீவண்ணனே.* (தேவாரம்)

என்று அந்த நேரம் மனதிலே வருவனவற்றைச் சொல்லி ஆனந்திப் போம். கடவுள் வழிபாடு இவ்வளவோடு நில்லாமல் நமது பிற செயல்களிலும் செறிந்திருக்கின்றது. நித்திரை விட்டெழும்பும் போது 'சிவ சிவ' என்று சொல்லி எழுந்திருக்கின்றோம். உடனே கை வாய் கழுவி 'சிவ சிவ' என்று சொல்லி திருநீறு பூசுகிறோம். குளிக்கும்போது கடவுளைச் சிந்திக்கின்றோம். சாப்பிடும் போது கடவுளுக்கு நிவேதித்துச் சாப்பிடுகிறோம். சாப்பாடு முடிந்தவுடனே 'சிவ சிவ' என்று சொல்லித் திருநீறு பூசுகிறோம். வெளியே போகும்போதும் அப்படியே செய்கிறோம். நித்திரைக்குச் செல்லும் போது சிவபிரானைத் தோத்திரித்து திருஐந்தெழுத்தை ஓதிக் கொண்டு உறங்குகிறோம்.

கடவுள் வழிபாடு நமது ஒழுக்கத்தையும் சீர்படுத்தக்கூடியது. தீய ஆசைகளேனும் தீய எண்ணங்களேனும் எழும்போது சிவசிந்தனை செய்தால், அச்சிந்தனை இவற்றைச் சுருக்கி மீள விடாமல் அழித்து விடும். அது மனத்தைத் தூயதாக்கி இறைவன் எழுந்தருளியிருத்தற்கு தகுதிவாய்ந்த இடமாக்கும். இவ்வுண்மையை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*'தேடிக் கண்டுகொண்டேன் - திரு*
*மாலொடு நான்முகனுந்*
*தேடித்தே டொணாத் தேவனை யென்னுளே*
*தேடிக் கண்டுகொண்டேன்*
*நாடி நாராயண னான்முக னென்றிவர்*
*தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ*
*மாட மாளிகை சூழ்தில்லை யம்பலத்*
*தாடிய பாதமென் னெஞ்சு ளிருக்கவே.'*

என்னும் திருநாவுக்கரசு நாயனார் திருவாக்குகளிற் காண்க.

நாம் எதை அதிகமாக சிந்திக்கிறோமோ அதனிடத்தில் நமக்கு உறுதியான பற்று உண்டாகின்றது. கள்ளை அதிகமாக நினைக்கிறவனுக்குக் கள்ளுண்ணல் ஒரு பைத்தியமாகின்றது. அறிவிலே அதிகமான விசாரமுள்ளவனுடைய மனம் கல்வியிலன்றி வேறொன்றிலும் செல்லாது. சங்கீதத்தை அதிகமாகச் சிந்திப்பவன் சங்கீதமயமாகின்றான். கடவுளிடத்திலே சிந்தனையைச் செலுத்துபவன் கடவுளின் அருள்மயமாகின்றான்.

*"நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா*
*நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்*
*புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்*
*பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்*
*தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்*
*சங்கரா சயபோற்றி போற்றி என்றும்*
*அலைபுனல்சேர் செஞ்சடை யெம் மாதீயென்றும்*
*ஆரூரா என்றென்றே அலறா நில்லே."* *(தேவாரம்)*

ஆக்கம் : சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4. சிவமூர்த்தங்கள்



"சிவனொடு ஒக்கும் தெய்வம் தேடினும் இல்லை
அவனோடு ஒப்பார் இங்கு யாவரும் இல்லை"

"தன்னை ஒப்பாய் ஒன்றும் இல்லாத் தலைமகன்"

எனும் திருமந்திரமொழி இறைவனின் உயர்ந்த தன்மையை எடுத்துக் காட்டுகின்றது.

சைவ மக்கள் சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வழிபடுகின்றனர். "இறைவன் ஒன்றே (பிரம்மம்) அதை அறிஞர்கள் பலவாறு கூறுகின்றனர்" எனும் வேதவாக்கு (ஏகம் ஸத் விப்ரா பகுதா வதந்தி) பரம் பொருள் ஒன்றே என்ற நிலையில் எடுத்துக் காட்டுகின்றது. நாயன்மார்கள் இறைவனை தங்கள் உணர்விலும், உறவிலும் கண்டார்கள்,

*"அப்பன் நீ அம்மை நீ ஐயனும் நீ*
*அன்புடைய மாமனும் மாமியும் நீ*
*ஒப்புடைய மாதரும் ஒண் பொருளும் நீ*
*ஒரு குலமும் சுற்றமும் நீ"*

எனும் அப்பரின் தேவாரமும்,

"ஒருநாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம்
திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ" எனும் மணிவாசகர் வாக்கும் திருமூலரின் "ஒருவனே தேவன்" என்ற நிலையை பிரதி பலிக்கின்றது. இந்துமதத்தில் பலகடவுள் கொள்கைகள் இருந்தாலும் அவை யாவும் ஒன்று என்ற உண்மையை ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

"யாதொரு தெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவார்" என்று சிவஞானசித்தியார் கூறுவதில் இருந்து தெளியலாம். பல்வேறு நதிகளும் பல்வேறுப்பட்ட மூலங்களில் இருந்து உருவாகி பல கிளைகளாகப் பரவி ஒன்றாகி இறுதியில் கடலுடன் போய்ச் சேருகின்றது. இது போன்று பல திருவுருவங்களால் வழிப்படப்படும் வழிபாடு இறுதியில் ஒரு தெய்வ வழிபாட்டையே (சிவனையே) குறிக்கின்றது. அவனே எல்லாவற்றையும் அறிபவனாக சிவஞான சித்தியாரில் அருணந்தி சிவாச்சாரியார் குறிப்பிடுகின்றார்.

"அறிதரு சிவனே எல்லாம் அறிந்து அறிவித்து நிற்பவன்"

இறைவன் உருவம் ஒன்றின்றி எங்குமாய் எல்லாமாய் நிற்கும் சிவத்திற்கு சிவாலயங்களில் முதல் உருவாகச் சிவலிங்கத்தையும் வழியுருவங்களாகத் தாண்டவர் (நடராஜர்), தட்சணாமூர்த்தி ஆகியோரையும் சார்புருவங்களாக விநாயகர், சுப்பிரமணியர், வைரவர் போன்ற மூர்த்திகளையும் வகுத்துக் கூறுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவபெருமானின் மூர்த்தி பேதங்கள் 64 ஆகும். சிவாலயங்களில் பல உருவத்திருமேனிகள் உள. அவை உட்கருத்துக்களுடையதாயும், புராணக் கதைகளை ஒட்டியும் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றில் 25 வடிவங்கள் ஆகமங்கள் புராணங்களிற் கூறப்பட்டிருக்கின்றன. இவை மகேஸ்வர மூர்த்தங்கள் எனப்படும். அவையாவன,

**1. லிங்கோற்பவமூர்த்தி**

பிரமாவும், விஷ்ணுவும் நல்லறிவு ஏற்பட, சோதிவடிவாய் நின்ற சிவபெருமான் லிங்கரூபமாய்த் தோன்றியதே லிங்கோற்பவ மூர்த்தியாகும். இவரை வழிபடுவோருக்கு சரீர பலன் கிடைக்கும்.





**2. சுகாசனமூர்த்தி**

உமாதேவியாருக்கு வேதசிவாகமங்களின் உண்மையை சுகாசனத்தில் இருந்து உபதேசித்த மூர்த்தி, இவரை வழிபடின் துக்கம் நீங்கும.

**3. சக்திமூர்த்தி**

பிரமா, விஷ்ணு இருவரின் தொழில் நடைபெறத் தமது வாமபாகத்தில் இருந்து உமாதேவியாரைத் தோற்றுவித்த மூர்த்தி, இவரை வழிபடச்செல்வம் பெருகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 4. கல்யாண சுந்தரமூர்த்தி



உமாதேவியார் சிவபெருமானை நோக்கி, தமக்குள்ள தாட்சாயினி என்னும் பெயரை மாற்ற வேண்டி, மலையரசன் மகளாய்த் தோன்றி பார்வதி என்னும் நாமத்துடன், மேனைபால் வளர்ந்து வருங்காலத்தில் சிவபெருமான் திருமணக்கோலம் கொண்டு எழுந்தருளிய மூர்த்தம். இம்மூர்த்தியை உபாசிப்போர் சதா மங்களகரமாய் இருப்பர்.



### 5. அர்த்தநாரீசுவரர் மூர்த்தி

இடப்பாதி பார்வதிதேவியாரும்,வலப்பாதி சிவபெருமானுமாக உள்ள திருக்கோலம். இம்மூர்த்தியை உபாசிப்போர் உலக இன்பத்தை அடைவர்.



### 6. சோமாஸ்கந்தமூர்த்தி

உமையொடும், கந்தனுடனும் கூடியிருக்கும் மூர்த்தி. இதனை உபாசிப்போருக்குப் புத்திரப்பேறு உண்டாகும்.



### 7. சக்கரவரதர்

திருமாலுக்குச் சக்கரம் அளித்த மூர்த்தி. இவர் போகங்களை அளிப்பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. திருமூர்த்தி

பிரம்மா, விஷ்ணு, உருத்திரர் ஆகியோர் தத்தம் தொழில்களை ஆற்றச்செய்த மூர்த்தி. கஷ்டங்களை குறைப்பவர்.

## 9. ஹரியத்தர்

ஈச்வரியின் வடிவம் பெற்ற விஷ்ணுவை இடப்பாகம் கொண்ட திருக்கோலம். புண்ணிய பாவங்களை சமனாய்ச்செய்து அருள் கொடுப்பவர்.





## 10. தட்சணாமூர்த்தி

தெற்குத்திசை நோக்கி குருவாகி நால்வருக்கு உபதேசம் செய்தவர். யோக முறைமையைக் காட்டியவர். யோக தட்சிணா மூர்த்தி என்றும், தும்புருவர், நாரதர், சுகர் முதலியோருக்கு வீணையின் இலக்கணத்தை உணர்த்தி அதனை வாசித்துக்காட்டியமையால் வீணாதட்சிணா மூர்த்தி என்றும் பெயர் பெறுவர். பிறவித்துன்பத்தை நீக்குபவர்.



## 11. பிட்சாடனர்

தாருகாவனத்து முனிவர்களுக்குச் சிவபக்தியின் பெருமையை உணர்த்தியவர். ஆசையை நீக்குபவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. சரபமூர்த்தி

இரணியனைச் சங்கரித்த நரசிங்கத்தின் அகந்தையை வதம் செய்தவர். பிறவிப் பிணியைக் குறைப்பவர்.





13. நீலகண்டமூர்த்தி

திருப்பாற்கடலைக் கடையுமிடத்துத் தோன்றிய நஞ்சை கண்டத்தில் அடக்கியவர். ஆணவத்தை அடக்குபவர்.

14. திரிபாத மூர்த்தி

பிரளயத்தின் முடிவில் பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் மகேஸ்வரனிடத்தின் ஒன்றாதல். சரியை,கிரியை,யோகம் ஆகிய சாதனங்களினால் கிடைக்கும் பலனைப் பெறச்செய்பவர்.

15. ஏகபாதமூர்த்தி

சர்வசங்கார காலத்தில் எல்லாம் லயமடைய ஏகபாத மூர்த்தியாய் விளங்கியவர். ஞான அறிவு ஏற்படுத்துபவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 16. பைரவர்

இரணியட்சன் குமரனாகிய அந்தகாசுரசங்காரத்தின் பொருட்டு எழுந்தருளிய வடிவம். எல்லா சுகங்களும் தருபவர்.





## 17. இடபாரூட மூர்த்தி

திரிபுர தகன காலத்து விஷ்ணு, சிவபெருமானுக்குத் தருமதேவகை விடையாய் இருப்பதை அறிந்து தான் அந்த விடை போலாகி சிவபெருமானைத் தாங்கினார். திருமால் விடையின் பேரில் ஆரோகணித்த மூர்த்தம். தரும சிந்தனையை ஏற்படுத்துபவர்.

## 18. கங்காள மூர்த்தி

விஷ்ணு வாமன அவதாரத்தில் ஓரடியாற் பூமியையும் ஓரடியாற் தேவலோகத்தையும், அளந்து மற்றோரடி வைக்க இடமின்றித் தவித்து அகந்தை கொண்டு உலகை அழிக்க முயலுகையில் முதுகெலும்பைக் கொண்டு அருளிய வடிவம். வைராக்யம் பெறுவர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 19. காமாரி (காமனை எரித்தவர்)



அம்மையாரைப் பிரிந்து அண்ணலார் பதார்தத்திரய போதம் நால்வருக்கு உபதேசித்து நிட்டையில் இருந்தார். இதனால் உலகம் நடைபெறாது இருத்தலைத் தேவர்கள் கண்டு மதனையேவி புஷ்பபாணத்தை அண்ணலாருக்குப் பிரயோகிக்க அதனைத் தீயாக்கிய வடிவம். மன்மத ஆசையை நீக்குபவர்.



## 20. காலசம்காரமூர்த்தி

மார்கண்டேயருக்கு என்றும் பதினாறு அருளி யமனைச் சாய்த்தமூர்த்தி. காலாரி எனவும் பெயர் பெறுவர். மரண பயத்தை போக்குபவர்.



## 21. சலந்தராரி

உருத்திரமூர்த்தியின் வியர்வையிலே தோன்றி சமுத்திரராசனால் வளர்க்கப்பட்டு பிருந்தையை மணந்து பிரமனால் சலந்தரன் என அழைக்கப் பட்டு, தேவர்களைத் துன்புறுத்தி வந்த அசுரன். சிவபெருமான் பாதத்தால் கீறிய சக்கரம் ஒன்றினை எடுக்க அதுவே அவனைச் சங்கரித்தது. அவ்வாறு வதம் செய்வித்த மூர்த்தியே சலந்தராரியெனப் பெயர் பெறுவார். கோபத்தை நீக்குபவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22. திரிபுராரி

பொன், வெள்ளி, இரும்பு ஆகிய மூன்று கோட்டைகளை எரித்து வானவர் துயர் நீக்க எடுத்த வடிவம். ஆசையை அடக்குபவர்.

## 23. சந்திரசேகரர்

பிறைச்சந்திரனைச்சூடிய வடிவம். கஷ்டங்களைக் களைப்பவர்.





## 24. நடராஜர்

பஞ்ச கிருத்திய தாண்டவம் செய்த மூர்த்தி. சிவானந்தத்தை அருளுபவர்.

## 25. கங்காதர மூர்த்தி

கங்கையைச்சடையில் அணிந்த வடிவம். முக்திப்பேறு அளிப்பவர்.



இவைகள் சிவபெருமானது மகேஸ்வர மூர்த்தங்கள் எனப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உருவ வழிபாடு- சிறு விளக்கம்

இந்து சமயத்தின் எல்லாப் பிரிவுகளும் ஒப்பப்போற்றும் ஒரு கோட்பாடு உருவ வழிபாடாகும்.

மூலப்பரம்பொருளை நிர்க்குணப்பிரம்மம் என்றும் சகுணப் பிரம்மம் என்றும் இரண்டாகப் பிரித்து வழிபடும் வழக்கம் உண்டு. இவற்றை முறையே சொரூபநிலை, தடத்தநிலை எனவும் வழங்குவர்.

நிர்க்குணப் பிரமத்தை அதன் சொரூபநிலையில் ஞானத்தால் வணங்குவர் ஞானியர். ஏனையோர் அந்தநிர்க்குணப் பிரமத்தையே தம் அனுபவத்திற்கேற்பச் சகுணப் பிரம்மமாகிய தடத்தநிலையில் பல உருவங்களாக வணங்குவர்.

மூலப்பரம்பொருளைச் சகுணப் பிரம்மமாகிய தடத்தநிலையில் பல உருவங்களாக வைத்து வழிபடுவதையே இந்து சமயம் உருவ வழிபாடு எனக் கூறுகின்றது. சகுணப்பிரம்மாகிய தடத்தநிலையை வேதாந்தம் ஈசுவரன் என அழைக்கின்றது. ஈசுவரனும், பிரம்மமும் ஒன்றென்னும் வேதாந்தம் உருவநிலை கொண்டுள்ள ஈசுவரனுக்கு இரண்டாம் இடத்தையே கொடுக்கின்றது. ஆனால் ஈசுவரன் என்ற சொல்லால் மூலப்பரம்பொருளையே சைவ சித்தாந்தம் குறிப்பிடுகின்றது.

உருவ வழிபாட்டுக் கொள்கை என்னும் கண்டனம் ஒலிக்கும் இவ்வுலகில் இந்துசமயம் தத்துவம், கலைவளர்ச்சி முதலிய எல்லாவற்றிற்கும் மூலமாக இருப்பது உருவ வழிபாடேயாகும். பேராயிரமும் பேருருப் பல்லாயிரமும் உடைய பெருமானைப்பாடி வணங்கியதால் எழுந்தனவே பக்தி இலக்கியங்களாகும். அதனாலேயே தமிழ்மொழி, பக்தி மொழி எனப் பிறராலும் பாராட்டப் பெற்றது.

"குனித்த புருவமும்" எனத் தொடங்கும் தேவாரத் தேனில் நடராசப் பெருமானின் திருவுருவை அழகொழுகப் பாடிய நாவரசர் "இனித்தமுடன் எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் மனிதப் பிறவியும் வேண்டுவதே இம்மானிலத்தே" என உருவ வழிபாட்டைச் சிறப்பிக்கின்றார். இளைமைக் குணங்களை முற்றுமுழுதாக யாரும் இயம்பியதில்லை. இயம்பவும் முடியாது.

சொல்லுவதறியேன் வாழி என்றும், எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ என்றும், வேதங்கள் ஐயா என ஓங்கி சொல்ல முடியாது ஆழ்ந்து அகன்று நுண்ணியனாய் இறைவன் உள்ளான் என்றும், உரை கடந்த ஒன்றை இப்படியன், இந்நிறத்தன் இவன் இறைவன் என எழுதிக் காட்டொணாத இறையை ஓர் உருவத்தில் எங்ஙனம் வடிக்க முடியும். எனவே அவனது பேரருளை, பேராற்றலை விளக்கும் உருவங்கள் இன்றியமையாதனவாயின. இவையே தெய்வ உருவங்கள் தோன்றியமைக்கும், அவை பலவாயமைந்தமைக்கும் காரணங்களாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவவழிபாட்டினால் இமயம் முதல் கன்னியாகுமரி வரையும் அதனையும் தாண்டி ஈழம் வரை பல திருத்தலங்கள் தோன்றியுள்ளன. திருக்கோயில்களை மையமாக வைத்தே குடிமனைகள் அமைத்து மக்கள் வாழ்ந்தார்கள். கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. உருவ வழிபாட்டினது சமய, தத்துவச் சிறப்புக்களை விளக்கும் பல நூல்கள் உள்ளன. இவற்றுள் கலாயோகி ஆனந்தகுமாரசாமி அவர்கள் எழுதிய சிவநடனம் குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றுள்ள எல்லாத் திருவுருவங்களுள்ளும் இலிங்க உருவம் மிகப் பழமையானதாகவும் தத்துவச் சிறப்புடையதாகவும் கருதப்படுகிறது.

நினைப்பு மறப்பற்ற இராப்பகலற்ற தில்லை வெளியிலே கண்ட திருநடனத்தை நிலம் முதலிய அட்டமூர்த்தங்களாகக் கண்ட ஞானியர், காரைக்காலம்மையார், நால்வர் ஆகியோரின் படிமங்கள் இலங்கையிலுள்ளவை. தரத்தால் உயர்ந்தவை.

*ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி*
*நீரிரை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி*
*தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி*
*வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி*
*வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி*

என வணங்கி அவற்றை லிங்கத்தில் அமைத்தனர். இதனைத் திருமூலர்,

*குரைக்கின்ற வாரிக் குவலய நீராகவும்*
*பார்க்கின்ற காற்றாகவும் பயில்கின்ற தீயாகவும்*
*நீண்டு அகன்றவை*
வரைத்து வலம் செய்யுமாறு அறியேனே

என்று கூறி,

வரைத்து (வரிவடிவு செய்து) வலம் செய்யுமாறு குறிப்பிடுகிறார்.
*மலர்ந்த அயன்மால் உருத்திரன் மகேசன்*
*பலந்தரு ஐம்முகன் பரவிந்து நாதம்*
*நலந்தரு சக்திசிவன் வடிவாகிப்*
*பலந்தரு லிங்கம் பராநந்தியாமே* எனவும்.

அயன் முதலிய நவந்திருபேதமாயுள்ள பரம்பொருளை லிங்கம் எனப்படும் பராநந்தி (சிவலிங்கம்) யாக வழிபடுவதே சிறந்தது எனவும் கூறியுள்ளார். அணுக முடியாத அக்கினி தத்துவம் விளக்கில் சுடராகியும் பெருகிவரும் கங்கை நீர் அள்ளிப் பருக நீராகவும், வீசும் புயல், மூச்சுக்கள் வேறாகியும் நின்று பயன்தருவது போல மூலப் பரம்பொருள் அடியார்கள் வழிபடும் திருவுருவில் அடங்கி நின்று அருளுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 5. கோயில் அமைப்பு

ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெரும் ஜோதி வடிவான இறைவன் ஆன்மாக்களின் அருளுக்காக உருவம் கொண்டு இருக்கும் இடமே திருக் கோயிலாகும்.

கோ என்றால் அரசன், பதி, நாயகன், தலைவன் எனப் பொருள்படும். கோமான் என்றால் அரசனையே குறிக்கும்.

இல் என்றால் வசிக்குமிடம் எனப்பொருள். பலர் கூடிவசிக்கின்ற படியால் வீட்டிற்கு இல்லம் என்று பெயருண்டு. கோயில் என்றால் பெயரளவில் "அரசன் இருக்கும் இடம்" என்றுதான் பொருள்படுகிறது. ஆனால் சிறப்பாக நோக்கு மிடத்து இறைவனுக்கு உரிய உபசாரங்கள் வாழ்த்துக்கள், கட்டியங்கள் எல்லாம் ஒரு வகையாக அரசனுக்கும் செய்யப்படுகிறது. ஒரு சிறு நிலப்பகுதியை ஆளும் மன்னனுக்கே அரண்மனை, அலங்காரம், பரிவாரம் எல்லாம் இருக்கிற போது உலகனைத்தையும் காத்து அருளும் விண்ணக இறைவன் ஏன் மன்னுயிர்களுக்கு அரசனாக நின்று துன்பங்களை போக்கக்கூடாது?

இறைவன் இருக்கும் தெய்வத்தன்மை பொருந்திய உயர்ந்த இடமே கோயிலாகும். கோயில் என்றால் சிறப்பாகச் சிதம்பரத்தையே குறிக்கும். கோயிலைக் குறிக்க விமானம், பிராசாதம், சைத்யம், தேவகிருகம், அர்ச்சா கிருஹம், தேவாலயம், தேவஸ்தானம், தேவகுலம், தேவமந்திரம், தேவபவனம் என்பன வேறுபெயர்களாகும்.

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய முதல் நிகண்டாகிய திவா கரத்தில் கோயிலைக்குறிக்க 14 பெயர்கள் பின்வருமாறு காணப்படுகின்றன.

*"சினகரம் சேதிமம் தேவராலயம்*
*நிலயம் பாழி பள்ளி நிகேதனம்*
*மந்திரம் ஆலயம் தேவகுலம் கோட்டம்*
*நகர்தளி வானவருறையுள் கோயில்"*

ஆதி காலத்திலே கோயில் என்பது மிக முக்கிய இடமாகக் கருதப்பட்டது.

*"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"*
*"கோயில் இல்லா ஊர் அடவி காடே"*
*"ஆலயம் தொழுவது சாலவும் நன்று"*

எனும் முதுமொழிகள் அதன் முக்கியத்தை தெளிவுபடுத்துகின்றன.

ஆலய அமைப்பை எமது உடல் அமைப்போடு தொடர்புபடுத்தி தெய்வீக உணர்வைக் காட்டி நிற்கின்றது. திருமூலரின் திருமந்திரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*உள்ளம் பெருங் கோயில் ஊனுடம் பாலயம்*
*வள்ளர் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்*
*தெள்ளத்தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்*
*கள்ளப்புலனைந்தும் காளா மணிவிளக்கே* என விளக்குகின்றது

*"காயமே கோயிலாக கடிமனம் அடிமையாக*
*வாய்மையே தூய்மையாக மன மணிலிங்கமாக*
*நேயமே நெய்யும் பாலா நிறைய நீரமையஆட்டிப்*
*பூசனையீசனார்க்கு போற்றுவிக் காட்டினோமே"*
என அப்பர் விளக்குவார். இதையே ஆகமங்கள் "க்ஷேத்திரம் சரீரப்பிரஸ்தரம்" என்றும்

*"தேஹோ தேவாலய ; ப்ரோக்தோ*
*ஜீவோ தேவ: ஸநாதன:*
*த்யஜேத் அஞ்ஞான நிர்மால்யம்*
*சோஹம் பாவேன பூஜ்யதே"* எனவும் கூறுகின்றன.

அவற்றைப் பின்வருமாறு குறிக்கலாம்.

| | | |
|---|---|---|
| கர்ப்பக்கிரகம் | - தலை | - மூலாதாரம். |
| அர்த்தமண்டபம் | - முகம் | - சுவாதிஷ்டானம் |
| மகாமண்டபம் | - மார்பு | - மணிபூரகம். |
| ஸ்நபனமண்டபம் | - வயிறு | - அநாகதம் |
| அலங்கார மண்டபம் | - தொடை | - விசுக்தி |
| சபாமண்டபம் | - முழங்கால் | - ஆக்ஞை |

| | |
|---|---|
| புருவநடு | - மகாலிங்கம் |
| தலையுச்சி | - விமானம் |
| தலை | - கருவறை |
| நரம்புகள் | - தூண்கள் |
| எலும்புகள் | - கற்கள் |
| காதுகள் | - பலகணிகள் |
| வலக்காது | - தட்சணாமூர்த்தி |
| இடக்காது | - துர்க்கை சன்னிதி |
| மூக்கு | - கருவறையின் முன்னுள்ள இருநிலைத் தூண்களில் மேலுள்ள கல் |
| கண்கள் | - கருவறையின் முன்னுள்ள இருநிலைத் தூண்கள் |
| வாய் | - கருவறையின் வாசல் |
| கழுத்து | - வாகன நந்தி |
| கைகள் | - வெளிப்பிரகாரங்கள் |
| தோள்கள் | - உட்பிரகாரங்கள் |
| முதுகுத்தண்டு | - கொடிமரம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொப்பூழ் - பலிபீடம்
பாதம் - கோபுரம்

என்பவை குறிப்பிடப்பட்டுள்ளன. கோயில் அமைப்புகள் மூன்று வகைப்படும். இறைவனுக்குரிய சந்நிதானம் மட்டும் நிர்மாணிப்பது கேவலாலயம் என்றும் இறைவன் இறைவி சேர்ந்த சந்நிதானம் மிஸ்ராலயம் என்றும் இறைவன் இறைவி, பரிவாரங்களுடன் இருக்கும் ஆலயம் சங்கீர்ணாலயம் என்றும் அழைக்கப்படும். சங்கீர்ணாலயம் தென்னாட்டிலும் இலங்கையிலும் அதிகம் காணப்படுகின்றன.

## ராஜ கோபுரம்



"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்", "கோபுர தரிசனம் பாப விமோசனம்" என்பன ஆன்றோர்வாக்கு. கோயிலிலே மிக உயர்ந்த அமைப்புடன் விளங்குவது ராஜ கோபுரமாகும். இதற்கு தூல லிங்கம் என்பது பெயர், (தூலம் - கண்ணால் பார்க்கக்கூடியது) யோகிகள். "பிரமரந்திர மத்ய கபாலத்வாரம்", என கோபுரத்தை குறிப்பிடுவர்.

*சுப்பிர பேதாகமத்தில்*
*"தூரஸ்ய சிகரே த்ருஷ்ட்வா யாவத் கைலாச பூதலம்"*

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது கோபுரத்தில் சிகரத்தை எவ்வளவு தூரத்தில் இருந்து பார்க்கத் தெரியுமோ அவ்வளவு தூரஇடமும் பூலோகக் கைலாசம் என்று அழைக்கப்படும்.

கோபுரம் மூன்று அடுக்குகள் கொண்டும் அமைந்துள்ளது. இது - ஜாக்ரம், சொப்னம், சுசுப்தி எனும் மூன்றைக் குறிக்கும். அதுபோல்

ஐந்து அடுக்கு - ஐம்பொறிகளைக் குறிக்கும்.
ஏழு - ஐம்பொறிகளுடன் மனம், புத்தி என்பவையைக் குறிக்கும்.
ஒன்பது - ஐம்பொறிகளுடன் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவற்றைக் குறிக்கும்.

## கொடி மரம்



இராஜ கோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும் கொடிமரம் காணப்படும். கொடிமரம் சூக்குமலிங்கம் எனப்படும். இதன் அடிப்பாகம் சதுரமாக இருக்கும். இது இறைவனின் படைப்பை உணர்த்தும் பிரமபாகமாகும். அதன் மேலுள்ளது எண் கோண வடிவமாகும். இது காத்தலைச் செய்யும் விஷ்ணு பாகமாகும். அதன் மேலே உருண்டு நீண்டபாகம் அழித்தல் தொழிலைச் செய்யும் உருத்திர பாகமாகும். ஆதலால் கொடிமரம் மும்மூர்த்திகளையும் முத்தொழில்களையும் உணர்த்தி நிற்கிறது. இதையே வடமொழியில் "த்வஜஸ் தம்பம்" என்று கூறுவர். அசுரர்களை அகற்றவும் சிவகணங்களையும் தேவர்களையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைக்கவும் ஆலயத்தைக் காக்கவும் அடியார்களைப் பாதுகாக்கவும் கொடி மரம் வைக்கப்படுகின்றது. சிவன் கோயிலில் கொடிச் சீலையின் மேற்பகுதியில் நந்தியையும், தேவி ஆலயமாயின் சிங்கத்தையும், விநாயகர் எனின் எலியையும் (மூஷிகம்), முருகன் எனின் மயிலையும் வரையவேண்டும்.

மனித குண்டலினிச் சக்தி உறங்கிக் கிடக்கும் மூலாதாரம் கொடி மரமாகவும், கொடி மரத்திலுள்ள 32 வளையங்களும், முள்ளந்தண்டிலுள்ள 32 எலும்பு களையும், கொடிக் கயிறுகள் இடகலை, பிங்கலை எனும் நாடிகளையும் குறிக்கின்றன. இவற்றின் வழியே யோகம் பயிலும் போது ஆன்மா பேரானந்தத்தை எய்துகிறது என்பது இந்துக்களின் நம்பிக்கை.

மேலும் சிந்தாந்திகள்,

கொடித்தம்பம் - பதி எனவும்
கொடிக்கயிறு - பாசம் எனவும்
கொடிச்சீலை - பசு எனவும்கூறுவர்.

உயிர் எவ்வாறு பாசத்துடன் இணைந்திருந்து பதியாகிய இறைவனை அடைகிறது எனும் தத்துவமே கொடியேற்றம் என சித்தாந்திகள் செப்புகின்றனர்.

## பலிபீடம்



பலிபீடம் ஆன்மாக்களின் ஆணவ மலங்களை அழித்துக் பக்குவப்படுத்தி புனிதப்படுத்துகிறது. பத்திரப்படுத்துவதால் அதற்கு பத்திரலிங்கம் என்று பெயர்.

சிவாலயங்களில் நந்தி தேவருக்கு பின்னுள்ள பலிபீடம் பிரதான பலிபீட மாகும். இவை பொதுவாக ஆலயத்தின் பிரதான மூர்த்தியின் பாதங்களைத் தாங்கியதாக தாமரை வடிவில் இருக்கும். பலிபீடத்தின் அருகே சென்று நம்மிடமுள்ள காம, குரோத, லோப, மோக, மத, மாத்சர்யங்களைப் பலி கொடுத்ததாக உறுதி செய்து கொள்ள வேண்டும். அஹங்காரம், மமகாரம் பலியிடப்பட்ட பின்னரே தெய்வ தரிசனத்தைப் பெற வேண்டும் என்ற உயர்ந்த தத்துவத்தை இது சுட்டிக் காட்டுகிறது.

சைவ சித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசத்தில் பலிபீடம் பாசத்தை உணர்த்து கிறது. மிகப் பெரிய சிவாலயங்களிலே எட்டுத்திக்கிற்கும் பலிபீடம் அமைத்து வழிபடுவதை இன்றும் காணலாம்.

## நந்தி வழிபாடு

பலிபீடத்திற்கு முன்பாக மூலஸ்தானத்தை நோக்கியவாறு எந்தெந்த மூலவர் உண்டோ அந்தஅந்த மூலவரின் வாகனங்கள் இங்கு காணப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| சிவனுக்கு | நந்தி (இடபம்) |
| விநாயகருக்கு | எலி (மூஷிகம்) |
| உமை | சிங்கம் |
| முருகன் | மயில் |
| வைரவர் | நாய் |



"நந்தி" என்றால் எப்போதும் ஆனந்த நிலையில் இருப்பவர் என்று பொருள். நந்தியின் திருவுருவம் சமம், விசாரம், ஸந்தோஷம், ஸாது ஸங்கம் ஆகிய நான்கு ஆத்ம குணங்களை உணர்த்தும்.

மேற்குறிப்பிட்ட நான்கு ஆத்ம குணங்களும் ஒருவனுக்கு ஏற்பட்டால் தான் கடவுளை உணரமுடியும். நந்தியின் அனுமதி பெற்ற பின்பே சிவதரிசனம் செய்ய வேண்டும். ஈசனையும் நந்தி தேவரையும் பிரதோஷ காலத்தில் தரிசித்து துதிப்பது ஆயிரம் அஸ்வ மேத யாகம் செய்த பலன் அளிக்கிறது. நந்தியை சைவசித்தாந்திகள் முப்பொருட்களில் பசு என விளங்குவார்கள்.

## கோயில் கட்டிட அமைப்பு

கோயில் கட்டிட அமைப்பை மூன்று பிரிவுகளாக வகுக்கலாம் அவை கட்டிட அமைப்பில் அடியிலிருந்து உச்சிவரை நாற்சதுரமாக இருக்கும் கோவில் நாகர அமைப்பை ஒத்தவை. இவை வடஇந்தியாவில் காணப் படுகின்றன. நில அமைப்பிலும் விமான அமைப்பிலும் கட்டிடத்தை பொறுத்தளவில் வட்ட வடிவமாக அமைப்பது வேசரம் எனப்படும். மூன்றாவது தென்னாடு முதல் கன்னியாகுமரிவரை காணப்படும். திராவிடப் பாணி தென்னிலங்கைக் கோயில்கள் யாவும் இவ்வகையமைப்பைச் சார்ந்ததாகும்.

திருக்கோயில்களின் பெயர்கள் விமானங்களின் அமைப்பைக் கொண்டு அமையும். இவை கரக்கோயில், ஞாழக் கோயில், கொகுடிக் கோயில், இளங் கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் எனப்பெயர் பெறும் இவற்றை அப்பர்

*பெருக்காறு சடைக்கணிந்த பெருமான் சேரும்*
*பெருங்கோயில் எழுபதினோடெட்டும் மற்றும்*
*கரக்கோயில் கடிபொழில் சூழ் ஞாழற் கோயில்*
*கருப்பறியற் பொருப்பனைய கொகுடிக்கோயில்*

*இருக்கோதி மறையவர்கள் வழிபட் டேத்தும்*
*இளங்கோயில் மணிக்கோயில் ஆலக்கோயில்*
*திருக்கோயில் சிவனுறையும் கோயில் சூழ்ந்து*
*தாழ்த்திறைஞ்சத்தீவினைகள் தீருமன்றே*" என விவரிக்கின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் அமைப்புப் பற்றி அறிய ஆகமச் சிற்ப நூல்கள் துணை புரிகின்றன. இவற்றுள் மயமதம், மானசாரம், காசியப சில்பசாஸ்திரம் குறிப்பிடத் தக்கன, அவற்றில் கோயில்கள், விஜயம், ஸ்ரீபோகம், ஸ்ரீவிலாசம், ஸ்கந்த காந்தம், ஸ்ரீகரம், ஹஸ்தி பிருஷ்டம், கேசரம் என ஏழுவிதமான கோயில் களைக் குறிப்பிடுகின்றன.

திருக்கோயில்களில் பல பிரகாரங்கள் காணப்படும். அவை உணர்த்தும் பொருள் பின் வருமாறு அமையும்.

| | | | |
|---|---|---|---|
| 3 பிரகாரங்கள் | - | அன்னமய கோசம்<br>பிராணமய கோசம்<br>மனோமய கோசம் | உணர்த்தும் |
| 5 பிரகாரங்கள் | - | (மேற்கூறிய மூன்றும் )<br>விஞ்ஞானமயம்<br>ஆனந்தமயம் | உணர்த்தும் |
| 7 பிரகாரங்கள் | - | (மேற்கூறிய ஐந்தும் )<br>ஸ்தூல<br>சூட்சுமங்களை | உணர்த்தல் |

திருக்கோயில்கள் உட்பிரகாரத்தில் தெற்குப்பக்கத்தில் சமய குரவர்கள் விக்கிரகங்கள் அமைந்திருக்கும். தென் மேற்கில் பிள்ளையார் கோயிலும், மேற்குப் பக்கம் சோமாஸ்கந்தர், தண்டாயுதபாணி, பஞ்சலிங்கம், மகாலக்ஷ்மி, முருகன் முதலிய மூர்த்திகளும், வடக்கில் நடேசரும், கிழக்கில் வைரவரும், கருவறையின் வடக்கே தெற்குநோக்கி சண்டேஸ்வர கோயிலும், கொடி மரத்தின் வடக்கே நவக்கிரகமும், வடக்கில் பள்ளியறை, வசந்தமண்டபம், கோபுரத்தின் உட்புறத்தின் இருமருங்கிலும் மூலவிக்கிரகத்தை நோக்கி சூரிய, சந்திரர்களும் அமைக்கப்படும். இவ்வாறு கோயில்கள் அமைக்கப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 6. ஆலய வழிபாடு

முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானை வழிபடுஞ் சமயம் சைவ சமயம் எனப்படும். சிவபெருமானை வழிபடுபவர்கள் சைவ சமயிகள் எனப்படுவர். சைவ சமயிகளுக்கு ஆலய வழிபாடு மிகவும் இன்றியமையாதது. சிவபெருமான் எழுந்தருளி அருள் புரியும் இடம் கோயில் எனப்படும்.

இத்தகைய கோயில்களுக்கு நாள்தோறுஞ் சென்று முறைப்படி வழிபாடு செய்தல் வேண்டும். நாள்தோறுஞ் செல்ல முடியாதவர்கள் வெள்ளிக் கிழமைகளில், வேறு விரதநாட்களிலுமாவது தவறாது சென்று தரிசனஞ் செய்தல் வேண்டும். திங்கட்கிழமை, செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமை, பிரதோஷம், பூரணை, அமாவாசை, திருவாதிரை, கார்த்திகை, மாசப்பிறப்பு, சூரியகிரகணம், சந்திர கிரகணம், சிவராத்திரி, நவராத்திரி, விநாயகர்சதுர்த்தி, கந்தசஷ்டி என்பன சிவாலய தரிசனத்திற்குரிய சிறப்பான புண்ணிய காலங்களாகும்.

**கோயில் பரிசுத்தமான இடம் :** ஆதலால் அங்கு செல்வோர் தம் உடலையும், உள்ளத்தையும் தூய்மையாக வைத்திருத்தல் வேண்டும். உடலிலுள்ள அழுக்கு உள்ளத்தையும் அழுக்காக்குவதோடு ஆலயத்தின் புனிதத்தையுங் கெடுக்கும். ஆசௌசம் உடையவரும், அசுத்தமான பொருளை தீண்டியவரும், நீராடாதவரும், ஆசாரமில்லாதவர்களாவர். ஆகையால் இவர்கள் கோயிலுக்குள்ளே செல்லுதல் ஆகாது.

**திருக்கோயில் வழிபாட்டுமுறை :** கோயிலுக்குச் செல்வோர் உணவு கொள்ளுமுன்னரே நீராடி, தோய்த்து உலர்ந்த ஆடைகளைத் தரித்து, விபூதியும் உருத்திராக்கமும் அணிந்து, சந்தியாவந்தனம் முதலியன முடித்துச் சிவநாமங் களை உச்சரித்துக்கொண்டு மெல்லமெல்ல நடந்து செல்ல வேண்டும்.

திருக்கோயிலைச் சமீபித்ததும் கை கால் கழுவி, ஆசமனம் பண்ணி தூலலிங்கமாகிய கோபுரத்தை தரிசித்து வணங்கி, சிவநாமங்களை உச்சரித்துக் கொண்டு உள்ளே செல்லுதல் வேண்டும். அங்கே கொடித் தம்பத்தையும் பலிபீடத்தையும் நந்திதேவரையும் வணங்கிக் கொடித் தம்பத்திற்கு இப்பால் ஆண்கள் அட்டாங்க வணக்கமும், பெண்கள் பஞ்சாங்க வணக்கமும் செய்தல் வேண்டும். அட்டாங்க வணக்கமாவது தலை, கையிரண்டு, செவியிரண்டு, மோவாய், புயங்களிரண்டு என்னும் எட்டு உறுப்புக்களும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதலாகும். இங்ஙனம் வணங்கும்போது பூமியிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரசை வைத்து மார்பு பூமியிற்படும்படி வலக் கையை முன்னும், இடக் கையைப் பின்னும் நேரே நீட்டிபின் அம்முறையே மடக்கி, வலப்புயமும் இடப்புயமும் மண்ணிலே பொருந்தும்படி கைகளை அரையை நோக்கி நீட்டி, வலக்காதை முன்னும், இடக்காதைப் பின்னும் பொருந்தச் செய்தல் வேண்டும். பஞ்சாங்க வணக்கமாவது தலை, கையிரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து உறுப்புகளும் நிலத்திலே பொருந்தும்படி வணங்குதலாகும். இவை தவிர, திரியாங்க வணக்கமும் செய்யப்படுதல் உண்டு. திரியாங்க வணக்கமாவது சிரசிலே இரண்டு கைகளையும் குவித்துவணங்குதலாம். இது ஆண் பெண் இருபாலாருக்கும் உரியது. இவ்வணக்கங்களும், வீதி வலம் வருதலும் ஒருதரமேனும், இருதரமேனும் செய்தல் குற்றமாம். மூன்றுதரமாயினும் ஐந்துதரமாயினும் ஏழுதரமாயினும் ஒன்பது தரமாயினும் பன்னிரண்டு தரமாயினும் செய்தல் வேண்டும்.

கொடித்தம்பத்திற்கு இப்பால் வணங்கிய பின் இரண்டு கைகளையும் குவித்துத் திருவைந்தெழுத்தை உச்சரித்துக் கொண்டு, கால்களை மெல்ல மெல்ல வைத்துக் குறைந்தது மூன்றுதரமாயினும், கூடியது இருபத்தொருதர மாயினும் வீதிவலம் வருதல் வேண்டும். அங்ஙனம் வந்து மீண்டும் சந்நிதி யிலே வணங்குதல் வேண்டும். ஆலயத்திலுள்ள மூர்த்திகளை வணங்குங்கால் முன்பு துவாரபாலகரை வணங்கிப் பின்பு திருநந்திதேவரை வணங்கி, "பகவானே உம்முடைய திருவடிகளை அடைந்து அடியேன் உள்ளே புகுந்து சிவபெருமானைத் தரிசித்துப் பயன்பெறும் பொருட்டு அனுமதி தந்தருளும்" என்று பிரார்த்தித்துக் கொண்டு உள்ளே போய், முன் விக்கினேசுவரரைத் தரிசித்தல் வேண்டும். பின் சிவலிங்கப்பெருமான் சந்நிதியையும் உமாதேவியார் சந்நிதியையும் அடைந்து அர்ச்சனை செய்வித்து விபூதி வாங்கித் தரித்துக் கொள்ள வேண்டும். அதன்பின் முறையே சபாபதி (நடராசர்), தட்சணாமூர்த்தி, சோமாஸ்கந்தர், சந்திரசேகரர், சுப்பிரமணியர் முதலியோரையும் சமயகுரவர் நால்வரையும் வணங்குதல் வேண்டும். வணங்கும்போது இரண்டு கைகளையும் மார்பிலேனும், சிரசிலேனும் குவித்துக் கொண்டு தேவார திருவாசகம் போன்ற திருமுறைகளை மனங்கசிந்துருகி ஓதுதல் வேண்டும். விக்கினேசுவரரைத் தரிசிக்கும் போது முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளி னாலும் நெற்றியிலே மூன்றுமுறை குட்டி, வலக்காதை இடக்கையினாலும், இடக்காதை வலக்கையினாலும் பிடித்துக் கொண்டு மூன்றுமுறை தாழ்ந்து எழுந்து கும்பிடுதல் வேண்டும். இப்படிக் குட்டுவதனால் அவ்விடங்களிலுள்ள நரம்புகளில் அமிர்தம் சுரப்பதாகவும், தாழ்ந்தெழுவதினால் அவ்வமிர்தம் உடல் முழுவதும் செல்வதாகவும் பெரியோர் கூறுவர். இவ்வணக்கம் தோப்புக் கர்ணம் அல்லது தோப்புக்கரணம் என வழங்கும்.

இறுதியாகச் சண்டேசுரரைத் தரிசித்துக் கும்பிட்டுத் தோத்திரஞ் செய்து மூன்றுமுறை கைகொட்டிச் சிவதரிசன பலனைத் தந்தருளுமாறு பிரார்த்தித்து,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலப்பக்கமாக வந்து சிவசந்நிதியை அடைந்து, இடப தேவருடைய கொம்பின் நடுவாகச் சிவலிங்கப்பெருமானைத் தரிசித்துப் பலி பீடத்திற்கு இப்பால் மும்முறை வணக்கஞ் செய்து எழுந்து, அமைதியான ஓரிடத்தில் இருந்து திருவைந்தெழுத்தை இயன்றமட்டும் உருச்செபித்துக் கொண்டு சிவ சிந்தனையோடு அமைதியாக வீட்டிற்குச் செல்லுதல் வேண்டும்.



## வணக்க முறைகள்



வணங்குதல் வடமொழியில் நமஸ்காரம் என்று அழைக் கப்படும். ஒருவருக்கு மரியாதை செலுத்துவதற்கு, பணிவைக் காட்டுவதற்கு வணங்குதல் மிக முக்கிய மாகும். இறைவன் சந்நிதானத்தில் கொடித் தம்பத்திற்கு முன்பாக விழுந்து வணங்குதல் வேண்டும், இது ஐந்து வகைப்படும்.

**ஏகாங்கம்** - தலையை மட்டும் தாழ்ந்து பணிந்து வணங்குதல், பெரியவர் களைக் கண்டால் இவ் ஏகாங்க வணக்கமே செய்ய வேண்டும்.

**துவியாங்கம்** - சிரசில் (தலையில்) வலக்கையை மட்டும் வைத்து வணங்குதல் (இது காவல் துறையின் சலூட் அடிப்பதை குறிக்கும்)

**திரியாங்கம்** - சிரசில் இருகைகளையும்குவித்து வணங்குதல், கோபுரத்தைக் கண்டதும் இவ்வணக்கம் செய்ய வேண்டும் (இம் மூன்றும் இருபாலரும் செய்யலாம்)



**பஞ்சாங்கம்** - தலை, இருகை, இரு முழந்தாள் எனும் ஐந்து உறுப்புகள் நிலத்தில் பொருந்த வணங்குதல் (இது பெண்கள் மட்டும் செய்ய வேண்டும்)



**அஷ்டாங்கம்** - தலை, இருகை, இருசெவி, இருபுயம், மோவாய் எனும் எட்டு அங்கங்கள் பொருந்த வணங்குதல் (இது ஆண்களுக்கு மட்டும் உரியது.)



இவற்றில் பஞ்சாங்க வணக்கமும், அட்டாங்க வணக்கமும், விரும்பத்தக்கது.

வணங்கும் போது மேற்கு அல்லது தெற்கில் கால்களை நீட்ட வேண்டும். சங்கிராந்தி, பிற்பகல், சூரிய கிரகண நாளில் மேற்கில் கால்களை நீட்டுதல் கூடாது. கொடி மரத்தை கடந்து உள்ளே சென்றதும் எந்த இடத்திலும் விழுந்து வணங்குதல் கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும்மூர்த்திகளுக்கு சிரசின் மேல் 12 அங்குலம் உயர்த்தியும், ஏனைய தெய்வங்களுக்கு சிரசின்மேல் கூப்பியும் வணங்குதல் வேண்டும்.

பகல் 12 மணிக்கு மேல் சூரியன் மறைவதற்கு முன் அஷ்டாங்க நமஸ்காரம் செய்யலாகாது.

## பிரதட்சணபலன்

பிரதக்ஷிணம் இறைவனை வலம் வருதல் எனப் பொருள்படும். கர்ப்பக்கிரகம் திறந்துள்ள போதே பிரதட்சணம் செய்யப்படல் வேண்டும். உட்பிரகாரப் பிரதட்சணத்தைவிட, வெளிப்பிரகாரப் பிரதட்சணம் மும்மடங்கு நன்மையைத் தரும்.

## பிரதட்சணமும் எண்ணிக்கையும்

| | |
|---|---|
| விநாயகருக்கு | - ஒரு முறை |
| சிவனுக்கு | - மூன்று முறை |
| அம்மாள் | - நான்கு முறை |
| ஏனைய தெய்வங்களுக்கு | - மூன்று முறை |

## ஆலயத்தை வலம் வருவதால் ஏற்படும் பலன்கள்

| | |
|---|---|
| மூன்றுமுறை | - விரும்பிய காரியம் நடைபெறும் |
| ஐந்து முறை | - காரிய வெற்றி |
| ஏழு முறை | - நல்லகுணம், எண்ணம், அமைதி |
| ஒன்பது முறை | - ஆயுள் விருத்தி உண்டாகும் |
| பன்னிரண்டு முறை | - உடல் வலிமை |

ஆண்கள் அங்கப்பிரதட்சணம் செய்யலாம். பெண்கள் அடிமேல் அடிவைத்து அடிப்பிரதட்சணம் செய்யலாம். பெண்கள் அங்கப்பிரதட்சணம் செய்யக் கூடாது. ஆண்கள் முட்டுக்காலில் நின்று வணங்குதல் கூடாது.

| | |
|---|---|
| காலையில் வலம் வருதல் | - நோய் நீக்கம் (முற்பிறவியில் செய்த பாவம் நீங்கும்.) |
| பகல் | - வேண்டிய வரம், தனம் பெருகும் (இருபிறவிகளில் செய்த பாவம் நீங்கும் |
| மாலை | - பாவ நீக்கம் (இப்பிறவியில் செய்த பாவம்) |
| அர்த்த சாமம் | - மோட்சம், வீடு பேறு என்பவற்றைத் தரும். |

## ஆறுகாலப்பூசைகளும் பலன்களும்

| | |
|---|---|
| உஷத்காலம் (அதிகாலை) | - ஆண், பெண், பிள்ளைகள் இவர்களுக்கு நன்மை |
| பிராதக்காலம் (காலை) | - சுப, ஹோமாதி விருத்தி |
| மாத்யான்னிகம் (உச்சி) | - அரசன், நாடு வளர்ச்சி. |
| சாயங்காலம் (மாலை) | - பயிர்த் தொழிலின் அபிவிருத்தி |
| பிற்பகல் | - அரக்கர்கள் அழிவு |
| அர்த்த சாமம் (இரவு) | - கால் நடைகளின் அபிவிருத்தி |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபிஷேக பலன்

| | | |
|---|---|---|
| தைலாபிஷேகம் (எண்ணை) | - | சுகம் கொடுக்கும் |
| மாப்பொடி | - | கடனைப் போக்கும் |
| நெல்லி முள்ளிப்பொடி | - | வியாதியைப் போக்கும் |
| மஞ்சள் பொடி | - | வசீகரணம் உண்டாகும் |
| ஜலதிரவியம் | - | சௌபாக்கியம் தரும் |
| பஞ்சகவ்யம் | - | தூய்மை உண்டாக்கும் |
| பஞ்சாமிர்தம் | - | புஷ்டி அளிக்கும் |
| நெய் | - | வெற்றியைத் தரும், மோட்சம் கிடைக்கும் |
| பால் | - | ஆயுள் பெருகும் |
| தயிர் | - | மக்கட் பேறு அளிக்கும் |
| தேன் | - | சுகமளிக்கும் |
| கரும்புச்சாறு | - | பிணி நீங்கும் |
| சர்க்கரை | - | பகையை அழிக்கும் |
| வாழைப்பழம் | - | பயிரை வளர்க்கும் |
| மாம்பழம் | - | சந்தானத்தை அளிக்கும் |
| மாதுளை | - | கோபத்தை நீக்கும் |
| நாரத்தை | - | நேர்மை அளிக்கும் |
| எலுமிச்சை | - | யமபயத்தை அழிக்கும் |
| அன்னம் | - | சாம்ராஜ்யம் தரும் |
| இளநீர் | - | போகம் அளிக்கும் |
| அன்னாபிஷேகம் | - | சாம்ராஜ்ய மளிக்கும் |
| சந்தனம் | - | செல்வத்தை அளிக்கும் |
| கும்பம் | - | மோட்சம் |
| பத்ரோதகம் | - | பயத்தை நீக்கும் |
| சங்குஜலம் | - | வெற்றி |
| சஹஸ்ரதாரை | - | செழிப்பு |

## ஷோடசோப சாரம் பலன்கள்

| | | |
|---|---|---|
| ஆவாஹனம் | - | இறைவனை அழைத்தல் |
| ஆசனம் | - | இருக்கை கொடுத்தல் |
| பாத்யம் | - | திருவடிகளைக்கழுவ நீர் கொடுத்தல் |
| அர்க்யம் | - | மரியாதையைக் காட்ட நீர் கொடுத்தல் |
| ஆசமனம் | - | அருந்த நீர் கொடுத்தல் |
| மதுவர்க்கம் | - | பால் பழம் கொடுத்தல் |
| ஸ்நானம் | - | நீராடல் (அபிஷேகம்) |
| வஸ்திரம் | - | உடைகொடுத்தல் |
| யஞ்ஞோபவீதம் | - | பூனூல் போடுதல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| கந்தம் | - | வாசனைத் திரவிய மளித்தல் |
| புஷ்பம் | - | மலர் தூர்த்துதல் |
| தூபம் | - | சாம்பராணி காட்டுதல். |
| தீபம் | - | விளக்கு ஒளி காட்டுதல் |
| நைவேத்யம் | - | நிவேதனம் |
| தாம்பூலம் | - | வெற்றிலை பாக்கு தருதல் |
| நீராஞ்சனம் | - | கற்பூரம் காட்டுதல் |

## நைவேத்தியங்களும் பலன்களும்

| | | |
|---|---|---|
| சர்க்கரைப் பொங்கல் | - | செல்வம் பெருகும் |
| பருப்புப் பொங்கல் | - | காரியசித்தி |
| புளி அன்னம் | - | வியாதி நிவர்த்தி |
| தேங்காய் அன்னம் | - | லக்ஷ்மீ கரம் (செல்வம் பெருகும்) |
| எலுமிச்சம்பழம் அன்னம் | - | ரோகநாசம் (துன்பம் போகும்) |
| மிளகுச்சம்பா | - | வியாதி நிவர்த்தி (நோய் நீக்கம்) |
| கற்கண்டு அன்னம் | - | மங்களம் உண்டாகும் |
| பாயாசம் | - | தான்ய விருத்தி (பயிர் செழிப்பு) |
| வடை | - | ஆரோக்யம், சரீரபலம் |
| தயிர் அன்னம் | - | வியாதி நீக்கம் |
| பக்ஷணங்கள் | - | துன்பம் போகும் |
| பானகம் | - | காரியசித்தி |
| பால்அன்னம் | - | ராஜபோகம் |

## தீபஷோடசோபசாரமும் பலன்களும்

| | | |
|---|---|---|
| தூபம் | - | உற்சாகத்தை தரும் |
| ஏகதீபம் | - | விழிப்பைத் தரும் |
| அலங்காரதீபம் | - | சாம்ராஜ்யத்தைத் தரும் |
| நாகதீபம் | - | லோகாதிபத்யம் தரும் |
| விருஷபதீபம் | - | அரசை அளிக்கும் |
| புருஷாமிருகதீபம் | - | அரச சித்திகள் |
| சூலதீபம் | - | வயிற்றுவலி நீங்கும் |
| ஆமைதீபம் | - | நீர்க்கண்டத்தைத் தடுக்கும் |
| கஜதீபம் | - | ஐஸ்வர்யத்தைக் கொடுக்கும் |
| சிம்மதீபம் | - | ஆயுளைக் கொடுக்கும் |
| வியாக்ரதீபம் (புலி) | - | விலங்குகளிடத்தில் பயத்தைப் போக்கும். |
| கொடித்தீபம் | - | மங்கலத்தை தரும் |
| மயூரதீபம் (மயில்) | - | புத்திரப் பேறு அளிக்கும் |
| பஞ்ச தட்டுடன் பூர்ணகும்பம் | - | சாம்ராஜ்ய மளிக்கும் |
| நக்ஷத்திர தீபம் | - | பாதுகாப்பு ஆதிபத்தியம் அளிக்கும் |
| மேருதீபம் | - | எல்லா நாட்டிலும் செல்வாக்களிக்கும் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபாராதனை இறைவனின் திருவடி முதல் நெற்றிவரை, திருக்கண்வரை நாடிவரை, என வலமாக மூன்று முறை காட்டப்படவேண்டும்

| | | |
|---|---|---|
| முதலாவது சுற்று | - | உலக நன்மைக்காகவும் |
| இரண்டாவது சுற்று | - | கிராம நன்மைக்காகவும் |
| மூன்றாவது சுற்று | - | வீட்டு நன்மைக்காகவும் காட்டப்படும். |

இவற்றைத் தரிசிப்பதால் மனிதர்களுக்கு ஆயுள், செல்வம், மக்கட்பேறு உண்டாகின்றன.

## ஹோமப்பொருட்களும் பலன்களும்

| | | |
|---|---|---|
| பலாசு | - | மக்கள் விருத்தி |
| கருங்காலி | - | வெற்றி |
| அரசு | - | செல்வம் |
| அத்தி | - | இன்பம் |
| சந்தனக்கட்டை | - | அமைதி |
| எள் | - | முத்தி |
| உழுந்து | - | பசுவிருத்தி |
| நெற்பொறி | - | சௌபாக்கியம் |
| பயறு | - | ஆயுள் விருத்தி |
| நெல் | - | ராஜவசியம் |
| வன்னி | - | வசியம் |
| ஆல் | - | ஆரோக்கியம் |
| வில்வம் | - | ஆரோக்கியம் |
| நாயுருவி | - | வீரலட்சுமி |
| தர்ப்பை | - | மோட்சம் |
| வெள்ளெருக்கு | - | துன்பம் போகும் |
| தேங்காய் | - | சர்வசித்தி |
| மா | - | ஐஸ்வர்யம் |
| நெய் | - | துன்பம் போகும் |
| எருக்கு | - | சௌபாக்கியம் |
| அறுகு | - | வீரம் |
| முருக்கு | - | கடாட்சம் |

| நவக்கிரகங்கள் | - | நிவேதனம் | - | தானியம் | - | நிறம் |
|---|---|---|---|---|---|---|
| சூரியன் | - | சர்க்கரைப்பொங்கல் | - | கோதுமை | - | சிவப்பு |
| சந்திரன் | - | பால்பாயாசம் | - | நெல் | - | வெள்ளை |
| செவ்வாய் | - | பொங்கல் | - | துவரை | - | சிவப்பு |
| புதன் | - | புளியோதரை | - | பயறு | - | பச்சை |
| வியாழன் | - | தயிர்சாதம் | - | கடலை | - | மஞ்சள் |
| வெள்ளி | - | நெய்ப்பொங்கல் | - | மொச்சை | - | வெள்ளை |
| சனி | - | எள்ளுச்சாதம் | - | எள் | - | கறுப்பு |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| ராகு | - உழுந்துச்சாதம் | - உழுந்து | - நீலம் |
| கேது | - சித்ரான்னம் | - கொள்ளு | - பலவர்ணம் |

**கடவுள் பூசைக்குரிய பூக்கள்**

விநாயகர் - அறுகு, சண்பகம், பாதிரி, சூரியகாந்தி, வன்னி

சிவன் - கொன்றை, வில்வம், தும்பை, சங்குப்பூ, செம்பருத்தி

விஷ்ணு - துளசி, மாதவி, குருந்து, வாகை, மத்யாணி, கருங்கால் கொன்றை, முருக்கு, அலரி, செம்பரத்தை, செந்திலகம், மருக்கொழுந்து

பிரமன் - அலரி

முருகன் - வெட்சி, கடம்பு, முல்லை, குறிஞ்சி, மல்லிகை, காந்தள்

சூரியன் - தாமரை

உமா - நீலோத்பலம், தாமரை, சூரியகாந்தி, செம்பவளமல்லி, நந்தியாவர்த்தை

இலக்குமி - நெய்தல், செந்தாமரை

சரஸ்வதி - வெண்தாமரை

வரலட்சுமி - ஐந்துமடல் கொண்ட தாழம்பூ

துர்க்கை - செவ்வெருக்கு சிவப்பு, அரலி, கொன்றைமலர்

அக்னி - வன்னி

**நவக்கிரகங்கள் - பூசைக்குரிய பூக்கள்**

| | | | |
|---|---|---|---|
| சூரியன் | - செந்தாமரை | சந்திரன் | - வெள்ளரலி |
| செவ்வாய் | - செண்பகம் | புதன் | - வெண்காந்தள் |
| வியாழன் | - முல்லை | வெள்ளி | - வெண்தாமரை |
| சனி | - கருங்குவளை | ராகு | - மந்தாரை |
| கேது | - செவ்வல்லி | | |

**கடவுளுக்கு ஆகாதபூக்கள்**

விநாயகர் - துளசி

சிவன் - தாழம்பூ

விஷ்ணு - அட்சதை (எருக்கம்பூ, ஊமத்தம்பூ)

வைரவர் - நந்தியாவர்த்தம், மல்லிகை

சூரியன் - வில்வம்

உமா - நெல்லி

துர்க்கை - அறுகு

இலட்சுமி - தும்பைப்பூ

சரஸ்வதி - பவளம்

எல்லாத் தெய்வங்களுக்கும் மல்லிகை, முல்லை, கருங்குவளை முதலிய பூக்களையும் உக்கிரமான தெய்வங்களுக்கு செந்நிறப் பூக்களையும் வழிபாட்டில் பயன்படுத்தலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கடவுள் வழிபாடும் | | பலன்களும் |
|---|---|---|
| விநாயகர் | - | தடைகள் நீங்க |
| மகா இலட்சுமி<br>வர இலட்சுமி | } | செல்வம் சேர |
| தட்சணா மூர்த்தி | - | நோய் தீர |
| சுப்பிரமணியர்<br>செவ்வாய்க் கிரகம் | } | வீடு, நிலம் பெற |
| உருத்திரன் | - | ஆயுள் ஆரோக்கியம் பெற |
| ஸ்ரீ ராஜராஜேஸ்வரி | - | மனவலிமை, உடல் வலிமை பெற |
| சந்தானஇலட்சுமி<br>சந்தான கிருஷ்ணர் | } | புத்திர பக்தியம் பெற |
| ஸ்ரீ சரஸ்வதி தேவி | - | கல்வி சிறக்க |
| ஸ்ரீ கஜஇலட்சுமி | - | புதிய தொழில் தொடங்க |
| தான்யஇலட்சுமி | - | விவசாயம் தழைக்க |
| ஸ்ரீ அன்னபூரணி | - | உணவு கஷ்டம் நீங்க |
| திருச்செந்தூர் முருகன் | - | பகைவர் தொல்லை நீங்க |
| ஸ்ரீ முத்துமாரி | - | திருஷ்டி விலக |

## கும்ப தத்துவம்



| | | |
|---|---|---|
| குடம் | - | தசை |
| அதனுள் உள்ள நீர் | - | குருதி |
| அதனுள் உள்ள இரத்தினங்கள் | - | எலும்புகள் |
| குடத்தை சுற்றியுள்ள நூல் | - | நாடிகள் |
| செபிக்கப்படும் மந்திரம் | - | உயிர் |
| கூர்ச்சம் | - | தலைமுடி |
| மாவிலை | - | சடை |
| தேங்காய் | - | தலை |
| வஸ்திரம் | - | தோல் என்பவற்றைக் குறிக்கும் |

## கற்பூர ஆராத்தியின் தத்துவம்

பூஜை முடிவில் கற்பூர தீபம் காட்டுவது வழக்கம். இறைவனுக்கு கற்பூர ஆராத்தி எடுக்கும் போது கற்பூரம் எரிந்த பின்பு சாம்பலோ, தூசியோ வேறு எதுவுமே மிச்சம் இருப்பதில்லை. கற்பூரம் தன் வாசனையை ஞானத் தீயில் இட்டு எதுவும மீதம் இல்லாத நிலையில் தெய்வத்தை அடைகின்றது. கற்பூர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீபம் ஏற்றிக் காட்டுகையில் இறையருள் உலகத்தில் இருக்கும். அது எரிந்து சாம்பலாவது போல ஆண்டவனுடைய ஜோதியில் ஆன்மா கரைந்து ஒன்று பட வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.




## மணி அடிப்பதன் தத்துவம்

ஆலயத்தில் பூஜையின் போது வெளிப் பிரகாரத்தில் பெரிய மணி (கண்டா மணி) ஒலிக்கும். பூஜை நடைபெறும் போதும் சிவாச்சாரியாரின் இடது கையில் உள்ள மணி ஒலிக்கும். இவை அசுரர்களை நீக்கி தேவர்களை அழைப்பதற்காகவே அடிக்கப்படுக்கின்றன.




| | | |
|---|---|---|
| கைமணியின் மேற் பகுதியில் | - | இடபம் |
| நாக்கு | - | சரஸ்வதி |
| தண்டு | - | சூரியன் |
| நாதம் | - | ஈஸ்வரன் |
| மணியின் அதிதேவதை | - | வாசு தேவன் |
| நான்கு கால்கள் (பக்கங்கள்) | - | இருக்கு, யசூர், சாமம், அதர்வம் |



## நைவேத்திய தத்துவம்

இறைவன் அருளால் கிடைத்த உணவுப்பொருட்களை இறைவனுக்கு படைத்து பின் பிரசாதமாக அனைவருக்கும் வழங்குவதே வழமை. “நிவேதயாமி” என்றால் அறிவிக்கின்றேன் என்று பொருள். “உன்கருணையால் இந்த உணவு கிடைத்திருக்கிறது”என்று நன்றியை அறிவித்து உண்பதுதான் இதன் பொருள். அதாவது நாம் உண்ணும் உணவு நம் உழைப்பால் கிடைத்தாலும் அதற்கு வேண்டியதை அளிப்பவன் இறைவனே. அவனுக்கு அதை வைத்து அவன் அனுமதியுடன் உண்பதுதான் நைவேத்தியமாகும்

## அங்கப்பிரதட்சிண தத்துவம்



அங்கப்பிரதட்சிணம் ஆண்கள் மட்டுமே செய்ய வேண்டும். ஆலயங்களிலே பெரிய பெரிய மகான்கள், யோகிகள்,தேவர்கள் வந்து வழிபட்ட இடம் கோயிலாகும். பல தேவர்கள் கோயிலுக்கு வந்து வழிபட்டுச் சாப


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமோசனம் பெற்றுள்ளனர்.எனவே இவர்களின் திருவடி பட்ட அந்த இடத்தில் நம்முடைய தலை முதல் கால் வரை உள்ள அங்கங்கள் படும்படியாக அங்கப் பிரதட்சணம் செய்யும் போது அவர்களுடைய பாதம்பட்ட இடத்தின் புனிதத் தன்மையால் பாவங்கள் அகலுகின்றன. இதனால் நற்பயன் கிடைக்கின்றது.



## சக்தி வழிபாடு

உலக நாயகியான சக்தி பல திருவுருவங்களாக காட்சி தருகிறாள். ஐந்தொழில் இயக்கத்தை ஏற்படுத்துவது நடராஜப் பெருமானின் திருநடனம் எம் பெருமான் அம்பிகையின் பக்கம் நோக்கி ஆடுகிறார்.

"மாதொரு பாகம் நோக்கி மன்னு சிற்றம்பலத்தே
ஆதியும் முடிவும் இல்லா அற்புதத் தனிக் கூத்தாடும் நாதனார்"
எனச் சேக்கிழார் சுவாமிகள் போற்றுகிறார்.

தாய்மைக்கே தனியுரிமை கொடுத்துப் பேணும் சமயம் இந்துமதம். "தாயினும் சிறந்ததொரு கோயிலும் இல்லை" "அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்" "மாதா, பிதா, குரு, தெய்வம்" எனத் தாயை எல்லாவற்றுக்கும் மேலாக எண்ணிப் போற்றினார். சக்தியை ஐந்து வகையாகப் பிரித்து நோக்கலாம்.

| | | |
|---|---|---|
| போகசக்தி | - | பராசக்தி |
| வீரசக்தி | - | துர்க்கை |
| கோரசக்தி | - | காளி |
| அதிகாரசக்தி | - | நாராயணி |
| அருட்சக்தி | - | மனோன்மணி |

### சக்தி வழிபாட்டில் ஸ்ரீசக்கரம்



ஸ்ரீசக்கரத்தில் மூன்று ரேகைகள், 3 வளையங்கள், 43 முக்கோணங்கள் உள்ளன.

| | | |
|---|---|---|
| இதில் | சிவகோணம் | - 3 |
| | சக்திகோணம் | - 5 |

அஷ்டதளம் (8), சோடசதளம் (16), மூன்று வலயங்கள், நான்கு சக்கரங்கள், பிந்து, நாதம், கலை இவைகளுமாகச் சேர்ந்து அமைவதாகும். அம்பிக்கைக்கு உரிய விரதங்கள் இயல் நான்கில் குறிப்பிடப்பட்டுள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சக்தியானவள்,

| | | |
|---|---|---|
| மதுரையில் | - | மீனாட்சியாகவும் |
| காஞ்சியில் | - | காமாட்சியாகவும் |
| காசியில் | - | விசாலாட்சியாகவும் |
| திருக்கடவூரில் | - | அபிராமியாகவும் |
| திருநெல்வேலியில் | - | காந்திமதியாகவும் |

விளங்குகிறாள்.

*தனம் தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா*
*மனம் தரும் தெய்வ வடிவும் தரும் நெஞ்சில் வஞ்சம் இல்லா*
*இனம் தரும் நல்லன எல்லாம் தரும் அன்பர் என்பவர்க்கே*
*கனம் தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே*



## முருக வழிபாடு

"முருகு" என்ற சொல் இளமை, மணம், அழகு, தெய்வம் என்றெல்லாம் பொருள்படும். சங்ககால மக்கள் மலையும் மலை சார்ந்த பகுதிக்குறிய கடவுளாக முருகனை வழிபட்டனர். குமரக்கடவுளை வழிபடப்படும் சமயம் கௌமாரம் எனப்படும்.

## முருகனின் பெயர்களும் பொருள்களும்

| | | |
|---|---|---|
| முருகன் | - | அழகுடையவன் |
| குமரன் | - | இறைவனாய் எழுந்தருளியிருப்பவன் |
| குகன் | - | அன்பர்களின் இதயமாகிய குகையில் எழுந்தருளி யிருப்பவன் |
| காங்கேயன் | - | கங்கையால் தாங்கப்பட்டவன் |
| சரவணபவன் | - | சரவணப் பொய்கையில் உதித்தவன் |
| சேனாபதி | - | சேனைகளின் தலைவன் |
| சுவாமிநாதன் | - | தந்தைக்கு உபதேசித்தவன் |
| வேலன் | - | வேலினை ஏந்தியவன் |
| கந்தன் | - | ஒன்று சேர்க்கப்பட்டவன் |
| கார்த்திகேயன் | - | கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டவன் |
| சண்முகன் | - | ஆறுமுகங்களையுடையவன் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| தண்டாயுதபாணி | - | தண்டாயிதத்தைக் கரத்தில் ஏந்தியவன் |
| வடிவேலன் | - | அழகுடைய வேலை ஏந்தியவன் |
| குருநாதன் | - | தந்தைக்கு குருவாக இருந்து உபதேசித்தவன் |
| சுப்பிரமணியன் | - | மேலான பிரம்மத்தின் பொருளாக இருப்பவன். |

## முருகனின் ஆறுமுகங்களும் தொழில்களும்

உலகிற்கு ஒளிதருவது

வேள்வி காப்பது

அடியார் குறை நீக்கி வரம் அருள்வது

வேத ஆகமப் பொருளை விளக்குவது

பகைவரை, தீயோரை அழித்து நன்மை செய்வது

வள்ளிக்கு மகிழ்வைத் தருவது

## ஆறுபடைவீடுகளும் மகத்துவங்களும்

| | | |
|---|---|---|
| திருப்பரங்குன்றம் | - | தேவேந்திரன் மகளான தெய்வானையை முருகன் மணந்த தலம். *(மதுரைக்கு அருகில்)* |
| திருச்சீரலைவாய் | - | சூரனை வதைத்தது *(திருச்செந்தூர்)* |
| திருவாவினன் குடி | - | மாங்கனி கிடைக்காது பாலகப் பருவத்தில் துறவியாய் இருந்த தலம். *(பழனி)* |
| திருஏரகம் | - | தந்தைக்கு பிரணவப் பொருள் உணர்த்தியது *(சுவாமி மலை)* |
| குன்றுதோறாடல் | - | வள்ளியை மணந்தது *(திருத்தனிகை)* |
| பழமுதிர்ச்சோலை | - | தேவியர் இருவருடன் ஏகாந்தமாய் இருக்கும் தலம் *(மதுரைக்கு அருகில்)* |

முருகனின் சக்திகளாக இச்சா சக்தி வள்ளியாகவும், கிரியா சக்தி தெய்வயானையாகவும், ஞான சக்தி வேலாகவும் கூறப்படுகின்றது. சேவலைக் கொடியாகவும், மயிலை வாகனமாகவும் கொண்ட முருகப் பெருமானின் அருள் பெற்றோர் பலர். திருப்புகழில் அருணகிரிநாதர் முருகனின் சிறப்பை பாடி மகிழ்கின்றார். கச்சியப்ப சிவாச்சாரியார் தனது கந்தபுராணத்தில் முருகனின் தத்துவங்களை மிக அழகாக எடுத்துக் காட்டுகிறார்.

## சூரசம்ஹாரத்தின் தத்துவம்

ஆணவ மலம் நிறைந்த உயிரே சூரன் ஆணவம் முதிர்ந்த போது உயிர் இறைவனை ஒரு போதும் காணாது. ஆணவத்தை ஒழித்தால் தான் அது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனோடு சேரமுடியும். ஆணவத்தைப் போக்க வல்லவரான இறைவன் உயிர்களின் மீது கொண்ட கருணையால் உயிர்களின் ஆணவமாகிய சூரனின் ஸ்தூல உடம்பைப் போக்கி (ஆணவமலம் நீங்கிய அச்சூரனின்) ஆத்மாவைத் தன்னுடன் சேர்த்துக் கொள்கிறார் என்பதே சூரசம்ஹார தத்துவமாகும்.

## காவடியின் தத்துவம்

முருக வழிபாட்டில் தங்கள் வாழ்வில் ஏற்பட்ட இன்ப துன்பங்கள் அனைத்தையும் காவடியாகக் காட்டி ஆண்டவனின் அடிகளில் வைத்து வழிபட காவடி எடுப்பார்கள். சூரனின் குருவான இடும்பன் அகத்தியரின் ஆணைப்படி திருக்கயிலாயத்தில் இருந்து சிவமலை, சக்தி மலை எனும் இருமலைகளைத் தன் இரு தோல்களிலும் சுமந்து வந்ததே இக்காவடியின் ஆரம்பவழிபாடாகும். இன்று பலர் தங்கள் குறைகளையும், நோய்களையும் நீக்கும் பொருட்டு பல்வேறுபட்ட காவடிகளை எடுத்து முருகனை வழிபட்டு வருகின்றார்கள்.

*"அருவமும் உருவமாகி அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்ப்*
*பிரம்மமாய் நின்ற சோதிப் பிழம்பதோர் மேனியாகிக்*
*கருணை கூர் முகங்களாறுங் கரங்கள் பன்னிரண்டுங் கொண்டே*
*ஒரு திருமுருகன் வந்தாங்கு உதித்தனன் உலகம் உய்ய"*

- கந்தபுராணம்

## சண்டேசுவரர் வழிபாடு

சிவதரிசனப் பலன் சண்டேஸ்வரரைத் தரிசித்தால் தான் பூர்த்தியாகும். எப்போதும் தியானத்தில் இருக்கும் அவரை வழிபடும் போது மூன்று முறை கையால் மெதுவாகத் தட்டி வழிபடவேண்டும். சண்டேசுவரரை முழுவலமாக சுற்றக்கூடாது. மூன்று முறை கைதட்டுவது ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் எனும் முக்குற்றங்களால் வரும் தீங்கு விலகும். அதாவது தன்னால் வரும் துன்பம், சூழலால் வரும் துன்பம், இயற்கையால் வரும் துன்பம் எனும் முத்துன்பங்கள் விலகும் பொருட்டு கைதட்டப்படும். சண்டேஸ்வரர் சந்நிதியில் வேட்டி நூலையோ, சேலை நூலையோ எடுத்துப் போடக்கூடாது.

## மூர்த்திகளும் சண்டேசுவரர் பெயர்களும்

விநாயகரின் சண்டேசுவரர் பெயர் - கும்பசண்டேசுவரர்
சிவன் - தொணிச்சண்டேசுவரர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முருகன் | - | சுமித்ர சண்டேசுவரர் |
| அம்பாள் | - | யமுனா சண்டேசுவரர் |
| சூரியன் | - | தேஜஸ் சண்டேசுவரர் |

## திருக்கோயிலில் செய்யத்தகாதவைகள்

- ஆடையால் உடம்பை மூடிக்கொண்டு இறைவனை வணங்குதல். இதனால் மூன்று பிறப்பில் ஊமையாகவும், பின் ஏழு பிறப்புக்களில் தரித்திரனாகவும் வாழ்வான் என நூல்கள் கூறுகின்றன.
- ஆசாரமில்லாது நடமாடுதல், விபூதி மற்றும் பிரசாதங்களை கீழே சிந்துதல்.
- ஒரே முறை பிரகாரத்தில் வலம் வருதல்.
- எச்சில் உமிழ்தல், மலசலம் கழித்தல்.
- நித்திரை செய்தல், கால்களை நீட்டிக்கொண்டிருத்தல்.
- மயிர் கோதி முடிதல், சூதாடுதல்.
- பாதரட்சை இட்டுக் கொள்ளுதல்.
- வீண்வார்த்தை பேசுதல், பொய்பேசுதல் இரைந்து சிரித்தல்.
- பிறரைத் துன்புறுத்தல், விளையாடுதல்
- சுவாமிக்கும் பலிபீடத்திற்குமிடையே வணங்குதல்
- அபிஷேக காலத்திலும், நிவேதன காலத்திலும் வணங்குதல், வலம்வருதல்
- திருவிளக்கு அணையக் கண்டும் தூண்டாதிருத்தல்
- காம எண்ணங் கொள்ளல்
- கம்பளி ஆடை அணிதல்
- இறைவனுக்கு நிவேதியாததை உண்ணுதல், தாம்பூலம் தரித்தல், புகைத்தல்
- விக்கிரகத்தைத் தொடுதல்.
- தூபி, துவஜஸ்தம்பம் (கொடிமரம்), பலிபீடம், இடபம், விக்கிரகம் முதலியவற்றின் நிழலை மிதித்தல்.
- உற்சவம் கொண்டருளும் போது அவ்விடத்தை விட்டு உள்ளே போய் வணங்குதல்.
- வழிபடுவோருக்கு இடையூறு கொடுக்கும் வகையில் நடந்து கொள்ளல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7. தீப வழிபாடு





**திருவிளக்கின் தகைமைகள்:-**

பூஜைக்கு ஏற்றப்படும் விளக்கு, பித்தளை, செம்பு, வெள்ளி என்னும் உலோகங்களில் ஒன்றினால் அமைய வேண்டும். 'எவர் சில்வர்' இரும்பினால் ஆனது பயன்படுத்தக்கூடாது. இரும்பில் விளக்கேற்றினால் தரித்திரம், வறுமை உண்டாகும். இன்று பெரும்பாலான வீடுகளில் துருப்பிடிக்காத இரும்பினால் (Stainless Steel) ஆன விளக்குகளையே பயன்படுத்துகின்றார்கள். இது தவிர்க்கப்பட வேண்டியதாகும். பித்தளை விளக்குகளை வாங்குவதற்குப் பொருள் வசதியற்றவர்கள், மண் அகல்களைப் பயன்படுத்தலாம். அதில் தவறேதுமில்லை.

**திருவிளக்கின் பயன்:-**

திருவிளக்கில் ஐந்து சுடர்கள் இருக்க வேண்டும். ஐந்து சுடர்களையும் ஏற்றுவது சிறந்தது. நாள் தோறும் வழிபடும் வழிபாட்டில் ஒருமுகமே போது மானது. தீபத்திற்குச் சிறந்தது நெய் - நெய் விளக்கேற்றி வழிபட்டால் குலம் தழைக்கும். நல்லெண்ணெய் விளக்கு மகாலக்ஷ்மி, மகாவிஷ்ணு, சனீஸ்வரனுக்குச் சிறப்பானது. தேங்காயெண்ணெய் விநாயகருக்குச் சிறப்பானது. இலுப்பை எண்ணெய் நெய்க்கு சமமானது.

பஞ்சினாலே திரியிடலாம், தாமரைத் தண்டின் நூலால் திரியிடல் மிக மிகச் சிறப்பானது.

விளக்கின் பாதத்தில் பூவைக்கலாம். அல்லது தண்டின் பாகத்திலே பூச்சரமிடலாம். திருவிளக்கின் மேல் பூவைத்தால், வெப்பத்தினால் கருக வாய்ப்புண்டு.

தற்பொழுது எல்லா விழாக்களிலும் "மங்கல விளக்கேற்றல்" என்ற ஒரு நிகழ்ச்சி கட்டாயமான ஒரு நிகழ்வாக ஆக்கப்பட்டுள்ளது. தேவையோ, தேவையில்லையோ விளக்கேற்ற ஒரு பட்டியலே வாசிக்கப்படுகிறது. தீபம் ஏற்றும் போது பாதணிகளைக் கழற்றி விட்டு ஏற்றவேண்டும். மெழுகு வர்த்தியைப் பயன்படுத்துவதையும், தலைவிரிகோலமாக நின்று ஏற்று வதையும் தவிர்த்தல் வேண்டும். விளக்கைச் சுற்றிக் கோலம் போட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளககிற்கு குங்குமத் திலகமிட்டுப் பூக்களால் அலங்கரித்து மங்களமாக அமைப்பதே சிறந்ததாகும்.

திருவிளக்கு மகாலக்ஷ்மியின் அம்சம். மிகவும் புனிதமாகப் போற்ற வேண்டும். காலை, மாலை நேரங்களில் பெண்கள் தங்களைத் தூய்மை செய்து கொண்டு மாக்கோலமிட்டு அதில் திருவிளக்கை வைத்து சந்தன குங்குமத்தால் அலங்காரம் செய்து பாதத்திலே மலரை வைத்து தீபம் ஏற்ற வேண்டும். பழைய சங்க நூல்களிலே மாலைக் காலத்திலே நெல்லும், மலரும் தூவி திரு விளகேற்றி இல்லுறை தெய்வத்தைப் பெண்கள் வழிபாடு செய்வது சுட்டிக் காட்டப்படுகின்றது. தீப ஒளி பரவும் இடங்களிலே தரித்திரம், நோய் மன சஞ்சலம் முதலிய தீயவைகள் அண்டாது. செல்வமும், செழிப்பும் சௌ பாக்கியமும் ஏற்படும். திருவிளக்கேற்றும் பொழுது தெரிந்த துதிகளைச் சொல்வது நல்லது.



1. *"இல்லக விளக்கது இருள் கெடுப்பது*
*சொல்லக விளக்கது சோதி யுள்ளது*
*பல்லக விளக்கது பலரும் காண்பது*
*நல்லக விளக்கது நமச்சி வாயவே"*

2. *சீலத் திருவிளக்கே - சீதேவி லக்ஷ்மியே*
*கோலத் திருவிளக்கே - கும்பிட்டேன் நின்னடியே*
*தில்லை வன நாதனும் - சிவகாமி அம்மையையும்*
*சிந்தையில் கொண்டிருக்க - செய்தவினை நீங்கிவிடும்*
*தந்தை தமர் தாய், சார்ந்த குரு அரசும் - சிந்தை மகிழ்வாழ்வை*
*தேவியே செய்தருள்வாய்.*
*தொட்டிலுக்குப் பிள்ளையும் - தொழுவிற்குப் பால் பசுவும்*
*பட்டறைக்கு நெல்லும் - பதிந்த மரக்காலும்*
*உனக்கெரிக்க எண்ணையும்- எனக்குண்ணச் சோறும்*
*தட்டாமல் தாயே - தந்தருள்வாய் தகவுறவே*
*அரியவினை தீர்க்கும் - ஆனைமுகத்தோனே*
*அலரி சண்பகம் கதலி முக்கனி - ஆனபடி படைத்தேன்*
*அன்பின் மணிவாசகத்தை - ஞானம் பெறவே நயந்தோதினேன்*
*அருள்வாய்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிளக்கு அகவல்

3. விளக்கே - திருவிளக்கே - வேந்தன் உடன் பிறப்பே
ஜோதி மணிவிளக்கே - ஸ்ரீ தேவிப் பெண்மணியே
அந்தி விளக்கே- அலங்கார நாயகியே
காந்தி விளக்கே - காமாக்ஷித் தாயாரே
பசும்பொன் விளக்கு வைத்துப் பஞ்சுத்திரி போட்டு
குளம்போல நெய்விட்டுக் கோலமுடன் ஏற்றி வைத்தேன்.
ஏற்றினேன் நெய்விளக்கு எந்தன் குடி விளங்க
மாளிகையில் ஜோதியுள்ள மாதாவைக் கண்டு மகிழ்ந்தேன் யான்
மாங்கல்யப் பிச்சை மடிப்பிச்சை தாருமம்மா
சந்தானப் பிச்சையுடன் தனங்களும் தாருமம்மா
பெட்டி நிறைய பூஷணங்கள் தாருமம்மா
பட்டி நிறையப் பால்ப் பசுவைத் தாருமம்மா
கொட்டகை நிறையக் குதிரைகளைத் தாருமம்மா
புகழுடம்பைத் தாருமம்மா - பக்கத்தில் நில்லுமம்மா
அல்லும் பகலும் என் அண்டையில் நில்லுமம்மா.

**4. தரிசனம் காணல்:-**

சேவித் தெழுந்திருந்தேன் தேவி வடிவங் கண்டேன்
வச்சிரக் கிரீடங் கண்டேன் வைடூர்ய மேனி கண்டேன்
முத்துக் கொண்டை கண்டேன் முழுப் பச்சை மாலை கண்டேன்
சவுரி முடிகண்டேன் தாழைமடல் சூடக் கண்டேன்

பின்னழகு கண்டேன் பிறை போல் நெற்றி கண்டேன்
சாந்துடன் நெற்றி கண்டேன்- தாயார் வடிவங் கண்டேன்
கமலத் திருமுகத்தில் கஸ்தூரிப் பொட்டு கண்டேன்
தங்க ஒட்டியாணம் தகதகவென ஜொலிக்கக் கண்டேன்
காலிற் சிலம்பு கண்டேன் - காலாழி பீலி கண்டேன்
மங்கள நாயகியை மனங்குளிரக் கண்டு மகிழ்ந்தேன் அடியாள் நான்

அன்னையே! அருந்துணையே! அருகிலிருந்து காருமம்மா!
வந்த வினையகற்றி மகாபாக்கியம் தாருமம்மா
தாயாராம் உன்றன் தாளடியில் சரணம் என்றேன்
மாதாவே உன்றன் மலரடியில் நான் பணிந்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்துதிப் பாடல்களை மனனம் செய்து ஓதினால் நன்மைகள் உண்டாகும். இல்லத்தின் செழிப்பு. பெண்களிடமே தங்கியுள்ளது.

## குத்துவிளக்கு ஏற்றும் முறைகளும், தத்துவங்களும்

பெண் திருமணமாகி, புகுந்த வீடு செல்லும் போது, அந்த வீட்டிற்கு விளக்கு ஏற்றச் செல்வதாகப் பேசப்படுகிறது.

விளக்கின் ஐந்து முகங்களும், பெண்ணுக்கான ஐந்து இலக்கணங்களைக் குறிப்பிடுவதாகும்.

1. பொறுமை
2. சகிப்புத் தன்மை
3. விட்டுக் கொடுக்கும் தன்மை
4. சமயோசித புத்தி
5. வைராக்கியம் (நல்ல காரணங்களுக்காக)

வாழ்வு இனிமையாக நடைபெறவும் வாழ்வில் முன்னேறவும் இந்த ஐந்து குணங்களும் துணைபுரியும்.

* விளக்கு தானாக அணைய விடாமல் ஒரு பூவால் ஒற்றி அணைக்க வேண்டும்.
* வாயால் ஊதியோ, கையால் விசிறியோ அணைக்கக்கூடாது.

## விளக்கை நிறுத்துவதற்கென்று மங்கலச் சொற்கள் சில உள்ளன.

* "விளக்கை அணைச்சிடு" என்று சொல்லக் கூடாது. விளக்கை பெரிசுபடுத்து, விளக்கை அமர்த்து , விளக்கை குளிரவை போன்ற மங்கலச் சொற்களைப் பயன்படுத்துதல் வேண்டும்.
* "விளக்கைத் தூக்கி வை" என்று சொல்வதற்குப் பதிலாக "விளக்கை நகர்த்தி வை" என்று சொல்ல வேண்டும்.

வீட்டில் ஏற்றப்படும் திருவிளக்கே இலட்சுமியின் கடாட்சமாகும். மாலை ஆறு மணிக்கு வீட்டின் பின்கதவைச் சாத்திவிட்டு முன்கதவைத் திறந்து, வாசலில் நீர்தெளித்து, கோலமிட்டு, வீட்டில் விளக்கு ஏற்றப்படுகின்றது. இதன் பொருள் முன் வாசல் வழியாக வரும் இலட்சுமி பின் வாசல் வழியாகச் சென்று விடக்கூடாது என்பது தான். தீபம் ஏற்றிய பின், பின் கதவு திறக்கப்படலாம். அதாவது இலட்சுமி தீபஒளியாக வீட்டில் திகழ்கிறாள்.

## தீபமும் திசைகளும்

1) கிழக்கு : துன்பம் நீங்கும், பீடைகள் அகலும் சகல சம்பத்தும் உண்டாகும்.

2) மேற்கு : கிரகதோஷம், பங்காளிப்பகையை நீங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) வடக்கு : திரவியம், செல்வம், மங்களம் உண்டாகும்.

4) தெற்கு : தெற்குப் பார்த்துத் தீபம் ஏற்றக் கூடாது.

(இதனால் தான் வாஸ்து சாஸ்திரத்தில் தெற்கு நோக்கி பூஜை அறை வைக்க அனுமதி இல்லை.)

| | | |
|---|---|---|
| பூசை நேரங்களில் மட்டும் எரிவது | - | சாதாரண விளக்கு |
| எப்பொழுதும் எரிந்து கொண்டு இருப்பது | - | நந்தா விளக்கு |
| காலை, மாலை வேளைகளில் மட்டும் எரிவது | - | சந்தி விளக்கு |

## விளக்குத் திரியின் பலன்கள்

1. தாமரைத் தண்டில் திரி போட்டால் ஜென்ம பாவங்கள் நீங்கும்.
2. வாழைத்தண்டு நூல்திரி போட்டால் குல தெய்வக் குற்றம், சாபம் நீங்கும்.
3. புது மஞ்சள் சேலை துண்டில் திரி போட்டால் தாம்பத்தியத் தகராறு நீங்கும்.
4. புது வெள்ளை வஸ்திரத்தில் பன்னீரை விட்டு உலர வைத்துப் போட்டால் வீட்டில் இலட்சுமி கடாட்சம் வந்து சேரும்.
5. சிவப்பு நிறத்துணியால் திரிபோட்டால் - திருமணத்தடை நீங்கும் மகப்பேறு உண்டாகும்.

## விளக்கு ஏற்ற உகந்த எண்ணெய் வகைகள்

| | | |
|---|---|---|
| 1. நெய் | - | சகல செல்வமும் பெருகும். நலனும் உண்டு. முருகன் சந்ததியில் நெய் விளக்கு ஏற்றுவது மரபு. |
| 2. நல்லெண்ணை | - | நல்லெண்ணையில் விளக்கேற்றினால் எல்லாப் பீடையும் விலகும். யமபயம் இருக்காது. |
| 3. இலுப்பை எண்ணெய் | - | ஆரோக்கியம் உண்டாகும். |
| 4. ஆமணக்கு எண்ணெய் விளக்கெண்ணை | - | சகல சம்பத்தும் உண்டாகும். |
| 5. ஐந்துவகை எண்ணைகள் | - | நெய், விளக்கெண்ணை, வேப்ப எண்ணை, இலுப்பை எண்ணை தேங்காயெண்ணை ஆகிய ஐந்தும் விளக்கில் ஊற்றிஒரு மண்டலம் (45 நாட்கள்) பூஜை செய்தால் தேவியின் அருள் பூரணமாகக் கிடைக்கும். |

(கடலை எண்ணெயில் விளக்கு ஏற்றக் கூடாது)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளக்கு வகைகள்

1. வெங்கல விளக்கு - பாபம் போகும்
2. இரும்பு விளக்கு - சனிக்கிழமை இரும்பு அகலில் தீபம் ஏற்றுவது சனீஸ்வர பகவானுக்கு பிரீதியாகும்.
3. மண் விளக்கு - வீரிய விருத்தியை அளிக்கும்
4. வெள்ளி அல்லது பஞ்சலோக (தங்கம், வெள்ளி, பித்தளை, இரும்பு, செம்பு) விளக்குகள் இவை பூஜைக்கு உகந்தவை, சிறப்பைத் தரும்.

(எவர் சில்வர் விளக்கு பூஜைக்கு உகந்தது அல்ல)

## முகங்களுக்கு உரிய பலன்கள்

1. ஒரு முகம் ஏற்றுவதால் - மத்திய பலன்
2. இரண்டு முகம் - குடும்ப ஒற்றுமை பெருகும்
3. மூன்று முகம் - புத்திரசுகம் தரும்
4. ஐந்து முகம் - செல்வம் பெருகும் சகல சௌபாக்கியமும் கிடைக்கும்.

(விசேட காலங்களில் ஐந்து முகங்களும் ஏற்றப்பட வேண்டும்.)

## விளக்கு

1. நம் அக இருளை நீக்கும்
2. நற் சிந்தனை உண்டாக்கும்
3. பரநலச் சிந்தனை மிளிரச் செய்யும்
4. பண்பு நலன்கள் பெருகும்
5. பாவங்களைப் போக்கும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## இயல் இரண்டு

# வாழ்வியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 8. சைவ வாழ்க்கை

நாம் விரும்பியபடி ஒன்றைப் பெறும்போது நம் மனத்திலே இன்பம் உண்டாகின்றது. நாம் மாம்பழம் தின்ன விரும்பும் போது அது கிடைக்குமாயின், இன்புறுகின்றோம். அன்றியும் நாம் விரும்ப மாட்டாத ஒன்று நம்மைச் சேரா விட்டாலும் நாம் இன்புறுகின்றோம். களவு செய்தவன் அகப்படாமல் தப்பி விட்டானாயின் மிகவும் சந்தோஷப்படுகிறான்.

இப்படியின்றி, நாம் விரும்பிய ஒன்று கிடையாவிட்டாலும், விரும் பாதது வந்துசேர்ந்தாலும் துன்பம் உண்டாகின்றது. எனக்காயினும், என்னைச் சேர்ந்த வர்க்காயினும், என்னுடைய பொருளுக்காயினும் இடர் நேர்ந்தால் துக்கம் உண்டாகின்றது. யாராயினும் இடர் செய்தால் அவரிடத்திலே கோபம் உண்டா கின்றது. ஏதாயினும் இடர் வரப்போகிறதென்று கண்டால் அச்சம் உண்டாகின்றது.

சைவ வாழ்க்கையிலே துன்பத்துக்காயினும், துக்கத்துக்காயினும் கோபத்துக்காயினும், அச்சத்துக்காயினும் இடம்வராது. பச்சைக் கண்ணாடியை அணிந்து கொண்டு எதைப் பார்த்தாலும் அது பச்சையாகவே தோன்றும். வெண்மையான பாலும், செம்மையான இரத்தமும், நீலமான ஆகாயமும், கரிய தாகிய காகமும் பச்சையாகவே தோன்றும். அதுபோலச் சைவமாகிய கண்ணாடியாற் பார்த்தால், யாவும் உவப்பானவைகளாகவே தோன்றும். நான் விரும்பிய பொருள் கிடையாதுவிட்டால் துன்பமில்லை; எனது கப்பல் ஆழ்ந்து போனால் துக்கமில்லை. என் குழந்தை இறந்துபோம் என்று அஞ்சுவதில்லை; என் பயிரை அழிப்பவனைத் தடுத்தலும் கண்டித்தலுமேயன்றிக் கோபித்தலில்லை.

சைவ சமயத்தின்படி நாம் ஆணவமென்னும் வியாதியினாலே பீடிக்கப் பட்டிருக்கிறோம். இந்த வியாதியைத் தீர்க்கும் வைத்தியர் சிவ பெருமான்; ஆதலால் அவருக்கு "வைத்திய நாதன்" என்று பெயர். நோயாளி தனக்குப் பொருந்தாத உணவுகளை விரும்புதல் உண்டு. ஆயினும் வைத்தியன் அந்த உணவுகளைக் கொடுக்க மாட்டான். அதுபோல, நமக்கு ஆகாத பொருள் களை நாம் விரும்புதல் உண்டு; வைத்திய நாதராகிய கடவுள் அவற்றை நமக்கு அருளமாட்டார். ஆதலால் நாம் விரும்பிய பொருள் நமக்குக் கிடையா விடின், அது நமக்கு ஆகாததென்று உணர்ந்து, அது கிடையாமற் போனதைப்பற்றி நாம் சந்தோஷப்படல் வேண்டும். நோயாளி விரும்ப மாட்டாத பலவற்றை வைத்தியன் அவனுக்குச் செய்கிறான்; ஆமணக் கெண்ணெய் போன்ற கசப்பானவற்றை உண்ணச் செய்கிறான். பெரிய கொப்புளத்தைக் கத்தியினாலே கீறி வேதனையை ஆக்குகிறான். அதுபோல, சிவபிரானாகிய வைத்தியநாதர் நாம் விரும்ப மாட்டாதவற்றை நமக்குச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர்த்தலும், கொடியவேதனைகளை ஆக்குதலும், நமது ஆணவ மாகிய நோயை நீக்கி நம்மைச் சுகமாக வாழும்படி வைத்தற்கேயாம். ஆதலால், நம் முயற்சிகளைக் கடந்து, நாம் வெறுப்பவைகள் நம்மை அடைந்தாலும், நாம் வேதனைகளில் அகப்பட்டாலும், அவைகள் நமது நன்மைக்காகக் கடவுளால் அருளப்பட்டவை என்பதை உணர்ந்து அவைகளைப் பற்றி இன்புறுதலே தக்கதாம். எனது கப்பல் ஆழ்ந்து போனதும், குழந்தை இறந்து போவதும் நன்மையானவைகளே. அவைகள் எனக்கு எப்படி நன்மையாகும் என்பதை நாம் அறிய வேண்டியதில்லை. 'யாவும் அவருடைய செயலே; அவர் செய்வதெல்லாம் நன்மையே' என்ற நம்பிக்கை உறுதியாயிருந்தால் அப்பர் சுவாமிகள் பாடியருளியபடி,

*'நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம்*
*நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்*
*ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம்*
*இன்பமே எந்நாளும் துன்ப மில்லை*
*தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான சங்கரனற்*
*சங்கவெண் குழை யோர் காதிற்*
*கோமாற்கே யாம் என்றும் மீளா வாளாய்க்*
*கொய்ம் மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே."*

*சுண்ணவெண் சந்தனச் சாந்தும்*
*சுடர்திங்கட் சூளாமணியும்*
*வண்ண உரிவை உடையும்*
*வளரும் பவள நிறமும்*
*அண்ண லரண்முரண் ஏறும்*
*அகலம் வளாய அரவும்*
*திண்ணன் கெடிலப் புனலும்*
*உடையா ரொருவர் தமர்நாம்*
*அஞ்சுவ தியாதொன்று மில்லை*
*அஞ்ச வருவது மில்லை."* (தேவாரம்)

என்றும் எப்போதும் ஆனந்தமாய் வாழலாம். துக்கம், கோபம், அச்சம் மூன்றும் உடலுக்கே தீமையானவை. என்னுடைய கப்பல் ஆழ்ந்து போனால், பெரு முயற்சி செய்து பொருளைத்தேடி நட்டத்தைத் தீர்த்தலும், எனக்கு யாராவது இடர் செய்ய வரும்போது கோபம் கொள்ளுதலின்றி அவனைத் தடுத்தலும் குழந்தையானது கொடிய நோயின் வாயில் அகப்பட்டால் அஞ்சுதலன்றி நல்ல வைத்தியம் செய்தலும், அது இறந்து போனால் 'பிறந்தவர் இறப்பது திண்ணம்' என்பதைக் கண்டு மனங்கலங்காதிருத்தலும் சைவர்களல்லாதாரும் செய்யத் தக்கவைகளாம்.

**ஆக்கம் : சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 9. சைவ ஒழுக்கங்கள்



### திருநீறு அணிதல்

**சை**வ ஒழுக்கங்களுள் இன்றியமையாதது திருநீறு அணிதல். அதை அணியும் போது சிவபிரானை நினைத்தலும் திருவைந்தெழுத்தை உச்சரித்தலும் அவசியமானவை.

*"கருவா-க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்*
*உருவா-த் தெரிந்துன்ற னாமம் பயின்றே னுனதருளால்*
*திருவா- பொலியச் சிவாய நமவென்று நீ றணிந்தேன்*
*தருவா- சிவகதி நீபா திரிப்புலி யூரரனே"* (தேவாரம்)

### திருவைந்தெழுத்து

திருவைத்தெழுத்தை ஆறுதலாயும் அமைதியாகவும் அன்போடு ஒவ்வொரு நாளும் ஓதுதல்.

*காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி*
*ஓது வார்தமை நன்னெறிக் கு-ப்பது*
*வேத நான்கினும் மெ-ப்பொரு ளாவது*
*நாதன் நாமம் நமச்சி வாயவே."* (தேவாரம்)

தேவாரம் அல்லது திருவாசகம் ஒவ்வொருநாளும் ஓதுதல்; திருவாசகப் புத்தகம் ஒன்று வீட்டில் வைத்துக் கொள்ளுதல்.

### தியானம்

சிவபெருமான், உமாதேவியார், விநாயகர், வைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர் ஆகிய மூர்த்திகளுள் ஒன்றிலே விசேஷபற்று வைத்து நாள்தோறும் தியானித்துத் தோத்திரம் சொல்லி வணங்குதல்; சிவத்தியானத்துக்கு நடராச வடிவம் பொருத்தமானது.

*"தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்*
*சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமாம்*
*ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோத முத்தி*
*நான்ற மலர்ப்பதத்தே நாடு."* (உண்மை விளக்கம்)

அதிலுள்ள ஒவ்வொன்றும் அரிய உண்மைகளை விளக்கி, நம்மை நல்வழியிற் செலுத்தத்தக்கது. ஒரு திருக்கரத்திலேயுள்ள துடியானது படைத்தலாகிய தொழிலைக் குறிக்கின்றது. கடவுள் நம்மைப் படைத்தது நாம் மெ-ப் பொரு ளாகிய அவரை அடைந்து பேரானந்தத்தைப் பெறுதற்காக என்பதை அது காட்டத்தக்கது. ஆதலால் அதைக் காணும்போது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*"உற்றாரை யான்வேண்டே னூர்வேண்டேன்*
*பேர்வேண்டேன்*
*கற்றாரை யான்வேண்டேன் கற்பனவு*
*மினியமையுங்*
*குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன்*
*குரைகழற்கே*
*கற்றாவின் மனம்போலக் கசிந்துருக*
*வேண்டுவனே."* (திருவாசகம்)

என்று எண்ணலாம்

அவருடைய வேறொரு திருக்கரம் அபயகரம் எனப்படும். அது "நாம் உன்னைக் காப்போம்; ஒன்றுக்கும் பயப்படாதே" எனும் குறிப்புடையது.

*"மண்பா தலம்புக்கு மால்கடல்*
*மூடிமற் றேழுலகும்*
*விண்பால் திசைகெட் டிருசுடர்*
*வீழினு மஞ்சல்நெஞ்சே*
*திண்பா னமக்கொன்று கண்டோம்*
*திருப்பா திரிப்புலியூர்க்*
*கண்பாவு நெற்றிக் கடவுட்*
*சுடரான் கழலிணையே."* *(தேவாரம்)*

எனும் மனவுறுதியை ஆக்கத்தக்கது. திருவடிகளுள் ஒன்று முயலகனை மிதித்து ஆணவத்தை நசித்தலைக் குறிக்கும். அதை நாம் காணும்போது அவருடைய திருவடித் துணையைக் கொண்டு ஆணவத்தாலுண்டாகும் ஆசைகளை அடக்க வேண்டும் என்னும் விருப்பம் உண்டாகும். மற்றத் திருவடி அவர் நம்மைத் தம்மோடு சேர்த்துத் தம்மைப்போல் ஆக்குவார் என்பதைக் குறிக்கும். இது:-

*புகழ்மின் தொழுமின் பூப்புனைமின்*
*புயங்கன் தாளே புந்திவைத்திட்*
*டிகழ்மின் எல்லா அல்லலையு*
*மினியோ ரிடையூ றடையாமே*
*திகழுஞ் சீரார் சிவபுரத்துச்*
*சென்று சிவன்றாள் வணங்கிநாம்*
*நிகழு மடியார் முன்சென்று*
*நெஞ்ச முருகி நிற்போமே."* (திருவாசகம்)

எனும் மனப்பான்மையை ஆக்கத்தக்கது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருநாட்கள்

சிவனடியார்களது திருநாட்களைக் கொண்டாடி அவர்களுடைய திருச்சரித்திரங்களைச் சொல்லி அல்லது கேட்டு அவர்களை வழிபடல்.

"தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கு மடியேன்
திருநீலகண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே யென்னாத இயற்பகைக்கு மடியேன்
இளையான்றன் குடிமாற னடியார்க்கு மடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே." (தேவாரம்)

### கோயில் வழிபாடு

நாள்தோறும் அல்லது வாரந்தோறும் கோயிலுக்குப் போதல்.

### சைவ சமய முறைப்படி நடத்தல்

சைவ சமய முறைப்படி எப்போதும் நடக்கமாட்டாதவர்கள் வாரத்திற்கொரு முறையேனும், பட்சத்திற்கு ஒரு முறையேனும், மாசத்திற்கொரு முறையேனும் முறைப்படி தவறாது நடத்தல். இப்படி நடத்தல் விரத நாட்களிற் பொருந்தும். மாசிமாதத்தில் வரும் சிவராத்திரி விரதம் சைவர் யாவரும் அனுட்டிக்கத்தக்கது.

### சிவனடியார்

நாம் ஒருவரைக் காணும்போது அவர் சிவபிரானது திருவடிகளைச் சேருதற்கு யாத்திரை செய்பவர் என்ற எண்ணமே நமது மனத்திலே முதல் உண்டாதல். அவர் நம்மிடம் வந்த தொழிற்றொடர்பு இரண்டாவதாக எண்ணத்தக்கது.

**ஆக்கம் : சைவப்பெரியார் சு. சிவபாதசுந்தரம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருக்கோயிலில்லாத திருவிலூருந்
திரு வெண்ணீறணியாத திருவிலூரும்
பருக் கோடிப் பத்திமையாற் பாடாவூரும்
பாங்கினொடு பலதளிகளில்லாவூரும்
விருப்போடு வெண்சங்க மூதாவூரும்
விதானமும் வெண்கொடியுமில்லாவூரும்
அருப் போடு மலர் பறித் திட்டுண்ணாவூரும்
அவையெல்லா மூரல்ல அடவிகாடே
- அப்பர்.

பாடற்கினிய வாக்களிக்கும் பாலுஞ்சோறும் பரிந்தளிக்கும்
கூடற்கினிய அடியவர்தம் கூட்டமளிக்கும் குணமளிக்கும்
ஆடற்கினிய நெஞ்சே! நீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
தேடற்கரிய திருவளிக்கும் சிவாயநம என் றிடுநீறே
- இராமலிங்க அடிகளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10. சமய சின்னங்கள்



**வி**பூதியும் உருத்திராக்கமும் முக்கியமான சைவ சமய சின்னங்களாகும். இவை எமது அஞ்ஞானத்தைப் போக்கி, தீமைகளினின்றும் எம்மைப் பாதுகாத்து, இறைவனையும் அவனது பெருங்கருணையையும் நினைவூட்டும் சாதனங்கள். பிரதானமாக நீராடிய வுடனும், பூசை வழிபாடுகள் செய்யும் நேரங்களிலும் இவற்றை நாடோறும் பக்தி சிரத்தையுடன் தரித்தல் வேண்டும்.

## (அ) திரு நீறு (விபூதி)

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுஞ் சமயம் சைவம் எனப்படும். சைவ சமய ஒழுக்கங்களில் இன்றியமையாதது சிவ சின்னங்களில் ஒன்றாய திருநீறு அணிதலாகும். திருநீற்றுக்கு விபூதி, பசிதம், பசுமம், இரட்சை, ஷாரம் என்ற பெயர்களும் உண்டு.

தன்னைத் தரித்தவர்களுக்கு மேலான செல்வத்தைக் கொடுத்தலினால் விபூதி எனவும், ஒளியைக் கொடுப்பதினால் பசிதம் எனவும், பாவங்களை எரித்து நீறாக்குவதனால் பசுமம் எனவும், தன்னைத் தரித்த ஆன்மாக்கள் எல்லாவற்றையும் இரட்சிப்பதனால் - காப்பதனால் இரட்சை எனவும் உயிர்களது மலத்தை நீக்குதலால் ஷாரம் எனவும் பெயர் பெறுகின்றது.

குற்றமற்ற பசுவின் சாணத்தை நெருப்பினாலே சுடுவதனால் உண்டாகும் நீறே தூய திருநீறாகும். திருநீறு வெண்மை நிறமானது. வெள்ளை நிறத் திருநீறு அணியத்தக்கதாகும். ஏனைய நிறத் திருநீறு அணியத்தகாதது. வெண்மை நிறம் தூய்மைக்கு அடையாளம். வெள்ளை நிறத் திருநீற்றை அணிவதனால் எமது அகமும் புறமுந்தூய்மை அடைகின்றன.

இங்கே நீறாக எடுத்துக் கொள்ளும் சாணம் ஆன்மாவையும், சாணத்தில் உள்ள அழுக்குகள் ஆன்மாவோடு உள்ள மலங்களையும், நெருப்பு திருவருளையும், எரிதல் திருவருள் பதிதலையும், எரிந்தபின் வந்த வெண்ணீறு மலங்கள் நீங்கத் தூய்மையடையும் ஆன்மாவையும் குறிக்கும் என்பர் பெரியோர்.

திருநீறு இருவகையாகத் தரிக்கப்படும். ஒன்று உத்தூளனம் பரவிப் பூசுதலையே இப்பெயர்கொண்டழைப்பர். இரண்டாவது வகை திரிபுண்டரம் எனப்படும். திருநீற்றை நீரிற் குழைத்து மூன்று குறியாகத் தரிப்பதனையே திரிபுண்டரம் என்பர். சமயதீட்சை பெற்றோர் மாத்திரமே இவ்வாறு தரிக்கத் தகுதியுடையவர்கள். இவ்வாறு தரிக்கும் போது கீழ்வரும் விதிகள் கவனிக்கப்பட வேண்டியனவாகும். குறிகள் வளையாதும், இடையறாதும், ஒன்றையொன்று தீண்டாதும், அகலாதும், ஒவ்வோர் அங்குல இடைவெளியிருத்தல் போன்ற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வையே அந்நியதி விதிகளாகும். திரிபுண்டரமாக அணிதற்குரிய உறுப்புக்கள் உச்சி, நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிகட்டுக்கள் இரண்டு, விலாப்புறங்கள், முதுகு, கழுத்து எனும் பதினாறுமாம்.

திருநீறு அணியும்பொழுது உத்தம திக்குகளான வடக்கு முகமாக வேனும், கிழக்கு முகமாகவேனும் இருந்துகொண்டு தரித்தல் வேண்டும். அதனைத்தரிக்கும்போது சிவபெருமானைத் தியானித்துப் பரமாணுவள வாயினும் நிலத்திலே சிந்தாவண்ணம் அண்ணாந்து, "சிவ சிவ" என்று சொல்லிக் கொண்டு, வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் தரித்தல் வேண்டும். தரையிலே சிந்தப்பெற்றால், சிந்திய நீற்றை எடுத்துவிட்டு அவ்விடத்தைச் சுத்தி செ-தல் வேண்டும்.

திருநீறு தரிக்கப்பெற வேண்டிய காலங்களாவன; சந்தியாகாலம் மூன்றும், (காலை, உச்சி, மாலை) சூரியோதயம், சூரிய அஸ்தமனம், நித்திரைக்கு முன்னும் பின்னும், பல்துலக்கிய உடனும், நீராடிய உடனும், பூசைக்கு முன்னும் பின்னும், உணவுக்கு முன்னும், பின்னும், தம் கடமைகளைச் செ-யச் செல்லும் போதும், சிறப்பு நிகழ்ச்சிகளின்போதும் கட்டாயமாகத் திருநீறு அணிதல் வேண்டும்.

அக்கினியில் எரித்தெடுத்த தூய வெண்ணீற்றைப் புதிய பாத்திரத்தி லேயிட்டு, நறுமலர்கள் தூவிப் பாத்திரத்தின் வாயைத் தூய துணியினாலே கட்டிப் பாதுகாத்தல் வேண்டும். அணிவதற்கு வேண்டிய திருநீற்றை மட்டும் பட்டுப்பையிலேனும், சம்புடத்திலேனும் வைத்திருக்கலாம். திருநீற்றைச் சிவமாகவும், திருநீறு வைத்திருக்கும் பையைச் சிவாலயமாகவும் மதிக்க வேண்டும்.

குரு, சிவனடியார் முதலியோர் திருநீறு தந்தால், அமைதியாக அடக்கத்துடன் அவர்களை வணங்கி, இரு கைகளையும் நீட்டி வாங்கி அணிதல் வேண்டும்.

திருநீற்றுக்கு மேலே சந்தனமேனும், குங்குமமேனும் அணிதலாகாது. திருநீற்றுக்குக் கீழே புருவ நடுவில் அவற்றைத் தரிக்கலாம். திருநீறு அணி யாதவர் முகம் சுடுகாட்டுக்குச் சமமாகும். "நீறில்லா நெற்றி பாழ்" என்பதும் இதனை ஒட்டியதே என்பதைத் தெரிந்து கொள்ளவும்.

திருநீற்றின் மகிமை ஆளுடைய பிள்ளையார் அருளிய திருநீற்றுப் பதிகத்தில் விரிவாகவும், மற்றையோர் பாடல்களில் பரவலாகவுங் கூறப்பட்டுள்ளது.

ஞானாக்கினியினாலே சுடப்பட்ட பசுமல நீக்கத்தால் விளங்குஞ் சிவத்துவப் பேற்றின் அறிகுறியே திருநீறாகும். திருநீறணிவதனால் முத்தியும், சிவஞானமுங் கைகூடுமென அருள் நூல்கள் கூறுகின்றன. "முத்தி தருவது நீறு" "போதந்தருவது நீறு" "சித்திதருவது நீறு", "சுந்தரமாவது நீறு", "தேசம் புகழ்வது நீறு" என்னுஞ் சம்பந்தர் திருவாக்குகளால் இதனை யாம் உணரலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவன் திருநீறு அணியும்பொழுது அத்திருநீறு படிகின்ற இடமெல்லாம் சிவலிங்கமாகின்றதெனச் சைவ நூல்கள் கூறுகின்றன.

## திருநீற்றின் பெரும்பயன்

பாவம் ஒழிந்தால் அடுத்தநிலை பரகதியேயாகும். மண்ணுலகவாழ்வு முடிந்துவிட்டால் அதன் பின்னர் விண்ணுலக வாழ்விற்குச் செல்லவேண்டும் என்பது ஆண்டவன் நியதி. இதனைப் பட்டினத்தடிகள் "வினைப்போகமே ஒரு தேகம் கண்டாய்,வினைதான் ஒழிந்தால் தினைப்போதளவும் நில்லாது கண்டாய்" எனப்பாடி உணர்த்துகின்றார்.

சிவபெருமானும்,வானுலகத்தேவர்களும் திருநீரு அணிந்திருக்கின்றார்கள். என்னும் உன்மையினை, இறைவனைக்கண்டவர்கள் தங்கள் அருள் வாக்குகளிலே கூறியிருக்கிறார்கள். சம்பந்தர், "வானவர் மேலது நீறு" என்றும், "மேலுறைத்தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு" என்றும் பாடி தேவர்கள் திருநீறு அணிந்திருத்தலைக் கூறினர். "தோடுடைய சேவியன் விடையேறி ஓர் தூவெண்மதி சூடிக் காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளம கவர்கள்வன்" என்று பாடி சிவபெருமான் திருநீறு அணிந்திருத்தலைக் கூறினார். "காடுடைய சுடலைப் பொடிபூசி" என்பது சாணியினால் உண்டாக்கப்பட்ட எருக்கட்டிகள்,சுடுகாட்டில் அடுக்கப்பெற்று, அவை எரிந்த சாம்பலேயாகும்.

திருநாவுக்கரசர் " பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறு" என்று பாடி,சிவபெருமான் திருநீரு அணிந்திருந்ததை உணர்த்தினார். மாணிக்க வாசகப் பெருமான் "வெண்ணீற்றான்" என்று சிவனைக்குறிப்பிடுகிறார். சிவனும், தேவர்களும் தங்கள் உடம்பில் எப்போதும் வெண்ணீறு பூசியவர் களாய் விளங்குகிறார்கள். இறைவனை வணங்கி அன்பர்களும் அவ்வாறே திருநீறு அணிந்துகொள்வது முறையாகும்.


*"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை*
*மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்*
*தங்கா வினைகளுஞ் சாரும் சிவகதி*
*சிங்கார மான திருவடி சேர்வரே"* - திருமூலர்

*மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு*
*சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு*
*தந்திர மாவது நீறு சமயத்தில் உள்ளது நீறு*
*செந்துவர்வாயுமை பங்கன் திருவாலவாயான் திருநீறே*
- (சம்பந்தர் தேவாரம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஆ) உருத்திராக்கம்

**உருத்திராக்க மகிமை :** உருத்திராக்கம் என்பது உருத்திரனது கண் எனப் பொருள்படும். திரிபுரத்தசுரர்களாலே தமக்கு ஏற்பட்ட துன்பங்களைப் பற்றித் தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்டபோது, சிவபிரானது மூன்று கண்களினின்றும் சிந்தியமணியே



உருத்திராக்கம் என்பர். எனவே, ஆன்மாக்களிடம் இறைவன் கொண்டுள்ள பெருங்கருணையைச் சதா நினைவூட்டும் சாதனமாக உருத்திராக்கம் விளங்குகிறது. இதனை அணிதல் அவரது திருவருட் பேற்றுக்கு அறிகுறி. பத்தினிப் பெண்களுக்குத் திருமாங்கலியம் எங்ஙனம் புனிதமான ஆபரணமாக விளங்குகிறதோ, அங்ஙனமே சிவனடியார்களுக்கு உருத்திராக்கம் போற்றி அணிய வேண்டிய புனிதச் சின்னமாகத் திகழ்கிறது. உண்மையடியார்களைச் சைவ நெறியினின்றும் பிறழாமற் காக்கும் இரட்சையாகவும் இது விளங்குகின்றது.

**உருத்திராக்க வகைகள் :** ஒருமுகம் தொடக்கம் பதினாறுமுகம் வரை கொண்ட மணிகள் உண்டு. ஒவ்வொரு வகை மணிக்கும் ஒவ்வொரு அதிதேவதை கூறப்படுகிறது. பொன்னிறம், கருநிறம், கபில நிறம் ஆகிய நிறங்களில் உருத்திராக்க மணிகள் உள்ளன. ஒரே இன மணிகளாலான மாலைகளே அணியத்தக்கன.

**உருத்திராக்க தாரணம் :** சந்தியாவந்தனம், சிவபூசை, செபம், தேவார திருவாசக பாராயணம், புராணபடனம், சிவாலய தரிசனம் போன்ற சாதனைகளை செய்யும் காலங்களில் உருத்திராக்கம் தரித்தல் அவசியம். உறங்கும்போது, மலசலங்கழிக்கும்போதும், ஆசௌச காலத்திலும் தரிக்கலாகாது. ஆசாரமற்றோரும் தரிக்கலாகாது. சிவதீட்சை பெற்றவர்கள் இதை அணியவேண்டும். சிகை, சிரம், காது, மார்பு, தோள்கள், கைகள் ஆகியவை உருத்திராக்கம் தரித்தற்குரிய இடங்கள். எத்தனை முகங்கொண்ட மணிகளை எவ்வெவ் இடங்களில் அணியலாம் என்றும், ஒவ்வோர் இடத்திலும் தரிக்கும் மாலை எந்த அளவினதாய் இருக்கவேண்டுமென்றும் விதிகள் உண்டு. செபம் செய்ய உபயோகிக்கும் மாலை 108 அல்லது 54 மணிகளைக் கொண்டதாயிருக்கும். செபமாலை மனத்தை இறைவனிடம் செலுத்தும் சிறந்த சாதனமாகும்.

நன்றி - ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் கருத்தை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பெற்ற சைவசமயம் (விவேகனாந்த சபை வெளியீடு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவங்களைக் கண்டிப்பதனால் உருத்திராக்க மாலை கண்டிகை எனப் பெயர்பெற்றது. "உருத்திராக்க ஜாபாலம்" என்ற உபநிடதமும், ஏனைய உயர்ந்த சாத்திரங்களும் உருத்திராக்கத்தின் உயர்வை உரைக்கின்றன.

நீராடும் போது உருத்திராக்கத்தின் மீது பட்ட நீர் நம் உடம்பில் படுவதால் மிகுந்த நன்மை உண்டாகும். உருத்திராக்கம் தலை, கழுத்து, மார்பு, கை முதலிய அங்கங்களில் தரித்துக்கொள்ளவேண்டும். உருத்திராக்க மணி தரியாமல் பூசை செய்வோர் பூசையின் பயனைப் பெறாது ஒழிவர்.

*பூண்பதற்குக் கண்டியினைக் கூசியிடும் புல்லியரைக்*
*காண்பதற்குக் கூசுமரன் கைத்து - சைவசமயநெறி*
**— திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்**

**குங்குமம் :** இலக்குமி திலகம் அணிந்த சிறப்பைச் "செய்யாள் புனைந்த திலகம்" என்று பரிபாடல் பாடியுள்ளது. கூந்தலின் வகிட்டிலும், நெற்றியின் மையத்திலும் குங்குமத் திலகமிடுவது மிகப் பழைய பண்பாடு ஆகும். அவை இலக்குமி இருக்கும் இடங்களாக கருதப்படுகின்றது. ஒரு சுமங்கலியின் மஞ்சள் அழகு முகம் மங்களப் பொழிவுடன் திகழுவதற்கு காரணம் அவள் அணிந்த குங்கும திலகம் ஆகும்.

பராசக்தியின் அடையாளம் செந்நிறம். சக்தியின் செயல் ஆற்றலைக் குறிக்கும் இறைவனின் திருவருளாகிய பராசக்தியின் துணைகொண்டு ஒவ்வொரு செயல்களையும் புரிகின்றோம் என்பதனையும், மங்கலம், செல்வம், நன்மை முதலியவைகளையும் குங்குமம் குறிக்கின்றது. ஓர் சாரார் கற்பின் மகிமைச் சின்னம் குங்குமம் என்றும், ஓர் சாரார் மாங்கலியச் சின்னம் என்றும் கூறுவர். முதலில் சந்தனத்தால் திலகமிட்டதும், சிவனின் நெற்றிக் கண்ணை நினைவூட்டும். பின் சந்தனத் திலகத்தின் மேல் சிறிய குங்குமத் திலகம் இடுகிறோம். இது சிவத்தில் சக்தி அடக்கம் என்பதனை வெளிப் படுத்தும். குங்குமத்தை மோதிர விரலால் தொட்டு புருவ மத்தியில் வைக்கவேண்டும்.

**சந்தனம் :** நெற்றியின் நடுப்பகுதி இறைவன் உறையும் இடங்களில் ஒன்றாகும். இறைவனை தியானிக்கும் போது அங்கு இயங்கும் முக்கிய நரம்புகள் சூடாகின்றன. இச்சூட்டை தணிக்க நெற்றி நரம்போட்டத்தின் மீது குளிர்ந்த சந்தனத்தைப் புனைகின்றனர். இது நறுமணங்கலந்த சந்தன மரத்தில் இருந்து செய்யப்படுகின்றது. இறைவனை நெற்றிக் கண்ணை நினைவூட்டுவதற்கு அடியார்கள் சந்தனத்தை அணிகின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 11. ஆசார முறைகள்

எமது இந்து சமயத்திலே முதன்மை பெறுவது "ஆசாரம்". அதை நல்ல முறையில் பேணிக் காப்பது முக்கிய கடமையாகும். தினமும் சூரிய உதயத்தின் முன் கண்விழித்துக் காலைக் கடன்கள் முடித்து ஸ்நானம் செய்து தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, விபூதி தரித்து, சுகந்த சந்தனம் பூசி, இறை வழிபாடு செய்து புலால் தவிர்ந்த உணவு உட்கொண்டு உடற்சுத்தி, உளச்சுத்தியோடு இருப்பதே முறையான ஆசாரம். முக்கியமாக ஆலய வழிபாடு செய்யுங் காலங்களிலாவது இவற்றை முறையாக மேற்கொள்ள வேண்டும். தான் வாழும் இல்லத்தைக் கோயில் போல் ஆசாரமாக வைத்திருக்க வேண்டும். தீட்டுக்களுடன் வீட்டுக்குள் பிரவேசிப்பதைத் தவிர்க்க வேண்டும். உதாரணமாக ஒரு மரணச் சடங்கு வீட்டுக்குச் சென்றால், திரும்பி இல்லம் வந்ததும் முறைப்படி "ஸ்நானம்" செய்தே வீட்டிற்குள் பிரவேசிக்க வேண்டும். காரணம் மரணச் சடங்கில் கண்ட துயரங்களும், அழுகை, துன்ப ஒலிகளும் மனம், வாக்கு, காயங்களில் பதிந்து நிற்கையில் "ஸ்நானம்" செய்து நித்திய அனுஷ்டானம் மூலம் மனம், வாக்கு, காயங்களைச் சுத்தமாக்கி செல்லுதல். அத்தோடு இறந்தவரிடமிருந்து பிரேத கிருமிகள் தொற்றா வண்ணம் உடற்சுத்தம் முறையாகச் செய்ய வேண்டும்.

### சில முக்கிய ஆசார முறைகள்

* கோயில் இல்லாத ஊரில் குடியிருக்கக் கூடாது
* தனது இடது கையினால் ஆசனம் போட்டால் ஆயுள் குறைவு. தனது இடது கையினால் எண்ணெய் தேய்த்துக் கொண்டால் புத்திரர் அழிவு. இடது கையால் சாப்பாடு போட்டுக்கொண்டால் செல்வம் அழியும், தனது இடது கையால் படுக்கை போட்டால் இருப்பிடம் சேதமாகும்.
* ஜோதிடர், குரு, நோயாளி, கர்ப்பிணி, மருத்துவர், சந்நியாசி முதலியவர்களுக்கு அவர்களுடைய ஆபத்துக் காலத்தில் கண்டிப்பாக உதவ வேண்டும்.
* பசு, தேர், நெய்க்குடம், அரசு, வில்வம், அரசுடன் சேர்ந்த வேம்பு இவைகள் எதிரில் குறுக்கிட்டால், வலது புறம் சுற்றிச் செல்லவேண்டும்.
* குடும்பஸ்தன் ஒரு துணியுடன் உணவு உட்கொள்ளக்கூடாது. ஒரு கையை தரையில் ஊன்றிக் கொண்டு சாப்பிடக் கூடாது.
  துணியில்லாமல் குளிக்கக்கூடாது. சூரியனுக்கு எதிரில் மலசலம் கழிக்கக் கூடாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* கன்றுக்குட்டியின் கயிற்றைத் தாண்டக்கூடாது. மழை பெய்யும் போது ஓடக்கூடாது. தண்ணீரில் தன் உருவத்தைப் பார்க்கக்கூடாது.
* நெருப்பை வாயால் ஊதக்கூடாது.
* வானவில்லைப் பிறருக்குக் காட்டக்கூடாது.
* ஈரக் காலுடன் படுக்கக்கூடாது.
* வடக்கிலும், தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு எனும் திசைகளில் தலை வைத்துப் படுக்கக் கூடாது.
* பிணப்புகை, இளவெயில், தீப நிழல் இவை நம்மீது படக்கூடாது.
* நெல்லிக்காய், ஊறுகாய், இஞ்சி, தயிர் இவற்றை இரவில் சாப்பிடக் கூடாது.

**மங்கையருக்கு சில குறிப்புகள்**



* சுமங்கலிகள் நெற்றியில் குங்குமம் இல்லாது இருக்கக் கூடாது.
* இரவில் வீட்டைப் பெருக்கிக் குப்பையை வெளியே போடக் கூடாது.
* பெண்கள் பூசணிக்காயை வெட்டக் கூடாது. கர்ப்பிணிப் பெண்கள் தேங்காயை உடைக்கக் கூடாது.
* வாசல்படிகளில் தலைவிரி கோலமாக உட்காரக் கூடாது.
* தலைவிரி கோலமாக வீட்டில் இருப்பதும் வெளியில் செல்வதும் தவிர்க்கப்பட வேண்டும்.
* வீட்டுக்குவரும் சுமங்கலிப் பெண்களுக்கு இல்லத்தரசிகள் குங்குமம் கொடுத்து வழியனுப்ப வேண்டும்.
* ஒட்டுப் பொட்டுக்களைத் தவிர்க்க வேண்டும்.
* அதிகாலையெழுந்து வீடுவாசல் பெருக்கி நீர் தெளித்து வாசலில் கோலமிட வேண்டும்.
* மாலை விளக்கு வைக்கும் நேரத்தில் வெளி இடங்களுக்குச் செல்லாது விளக்கு வைத்து தூபமிட்டு வழிபாடு செய்வது நலம்.
* கோலம் போடும் போது சுப காரியங்களுக்கு இரண்டு கோடும், அசுப காரியங்களுக்கு ஒருகோடும் போடவேண்டும்.
* உரல், அம்மி, முறம், வாசற் படி, உலக்கை இவற்றின் மீது உட்காரக் கூடாது.
* சுமங்கலி கணவனுடைய அனுமதி பெற்றே விரதமிருக்க வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணவு பரிமாறும் முறைகள்

* பரிமாறும் பொழுது வலமிருந்து இடமாக பரிமாறிக் கொண்டு வரவேண்டும். முதலில் இனிப்பு பதார்த்தம் இலையின் இடப்புறம் அதாவது நாம் உட்காரும் போது எமது வலது கைப்பக்க ஓரத்தில் வைக்க வேண்டும்.
* பரிமாறும் போது உப்பு, நெய், சாதம் ஆகியவற்றை கையால் எடுத்துப் பரிமாறக் கூடாது.
* தலை வாழையிலை, உட்காரும் எமக்கு இடப்பக்கம் இலையின் தலைப்பக்கம் இருக்க வேண்டும்.
* தண்ணீர் வைக்கமால் உணவு பரிமாறக்கூடாது.
* வாழையிலையை மூடும் போது எமக்கு எதிரே உள்ள இலைக் கரையை எம்மை நோக்கியவாறு மடிக்க வேண்டும்.
* வாசல்படிக்கு நேரே அமர்ந்து உண்ணக் கூடாது.
* சாப்பிட்ட பிறகு கையலம்புங்கள் என்று கூறித் தண்ணீர் கொடுக்க வேண்டும். கைகழுவுங்கள் என்று கூறக்கூடாது.
* சாப்பிடும் போது, முதலில் இனிப்பு, உவர்ப்பு, புளிப்பு, கசப்பு, பதார்த்தங் களை வரிசையாக சாப்பிட்டு பின்பு நீர் அருந்த வேண்டும்.
* சாப்பிடும் போது தவிர மற்ற நேரத்தில் இடது கையால் தண்ணீர் அருந்தக்கூடாது.


## தலைக்குப் பூச்சூடுதல்

பெண்கள் தினசரி ஏதாவதொரு பூவைத் தலையில் சூடிக்கொள்ள வேண்டும்.

* ரோஜா மலர் - பார்வைக்கு அழகைக் கொடுக்கும், நறுமணத்தைக் கொடுக்கும், இதயத்திற்கு பலம் கொடுக்கும்.
* மல்லிகைப்பூ - கண்பார்வையைக் குணமாக்கும்.
* செவ்வந்திப்பூ - கூந்தல் வளரும், கண்ணுக்குக் குளிர்ச்சி.
* மகிழம்பூ - தலைவலி, கண்நோய் நீக்கும்.
* சம்மங்கிப்பூ - உஷ்ணத்தை ஏற்படுத்தும், வாயுத்தொல்லை நீங்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12. நாளாந்த வழிபாடு



## அறிமுகம்

நாம் சிவனை வழிபடும் சைவர்கள். எங்கள் முழுமுதற் கடவுள் சிவன். விநாயகர், சுப்பிரமணியர், வயிரவர், வீரபத்திரர், உமையம்மை சிவ மூர்த்தங்கள். சிவனுடைய இந்த மூர்த்தங்களும் சைவசமயத் தவர்களின் வழி பாட்டிற்குரியவையே. சிவனையும் சிவமூர்த்தங் களையுமே நம் வழிபடு தெய்வங்களாகக் கொள்ள முடியும். சிவனை மட்டுந்தான் வழிபடவேண்டிய நிலையிலுள்ள நாம் சிவமூர்த்தங்களிலும் சிவனைக்காணும் முறைமையாலே அவற்றையும் வழிபட முடியும்.

சைவனுக்கென்றொரு வாழ்வியலுண்டு. சைவனுக்கென்றொரு பண்பாடு உண்டு. சைவனுக்கென்றொரு கோலம் உண்டு. பார்த்த பார்வையிலே ஒருவன் சைவனா? சைவன் அல்லவனா? என்று கண்டுகொள்ள முடியும். அந்த அளவிற்குச் சைவம் அவன் வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்து கிடக்கின்றது. சைவ சமயத்தவனின் வாழ்வியலுடன் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களும் சைவசமய வாழ்வுடன் தொடர்புடையவைதான். காலைக் கடன்களை நிறைவு செய்தல், வீட்டினை வீட்டுச் சூழலைத் துப்புரவு செய்தல், புனிதப்படுத்தல், அலங்காரங்கள் செய்தல், தன்னைப் புனிதமாக்கல், வழிபாட்டு முயற்சிகளில் ஈடுபடல், உணவுப் பொருட்களைப் பெறுதல், பக்குவஞ் செய்தல், உண்ணுதல், வருவாய்க்குரிய முயற்சிகளைச் செய்தல் என்பன எல்லாம் சைவ சமய வாழ்வியலின் அடித்தளத்திருந்து எழுவது தெரிகிறது. இந்த வாழ்வியல் முறையைப் புரிய வைப்பது சேக்கிழார் தந்த பெரியபுராணம் எனும் திருத்தொண்டர் புராணம். பெரியபுராணத்திலுள்ள நாயன்மார்களது வரலாறுகள் இந்தக் கருமங்களை மிக இலகுவாக்கி விளங்க வைக்கின்றன. சைவ வாழ்வு என்பது இதுதான் என்று நாயன்மார் வாழ்வு முறை எமக்குச் சொல்லி நிற்கின்றன. காலையில் நாங்கள் எழுகின்றபோதோ அல்லது எழுந்தபின் இருக்கின்றபோதோ “சிவசிவா” என்று சொல்லிக் கொள்ளுவோம் அல்லது “முருகா” என்று சொல்லுவோம். இந்த உபயோகங்கள் எல்லாம் எம்மை அறியாமலே நிகழ்பவை. ஆனால் அவையெல்லாம் இறைவனுடனானவை.

## சைவ ஆசாரம்

சைவ ஆசாரம்...... அது என்ன? பலர் பேசியதைக் கேட்டிருக்கிறோம் தான் புதிதாக ஒன்றுமில்லை. எமது நாளாந்த வாழ்க்கையில் நாம் கைக்கொள்பவை தான். ஒழுக்கம், ஒழுங்கு, சுத்தம், புனிதம், தூய்மை முதலான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் ஒன்றாகி நிற்பதொரு நிலைதான் அது எனலாம். சைவ ஆசாரத்திற்கு எடுத்துக்காட்டாவதும் நாயன்மாரது வாழ்க்கை முறைகள்தான். அவர்கள் வாழ்வு ஒழுங்கானது, ஒழுக்கத்துடனானது, சுத்தமானது, புனிதமானது, தூய்மையானது அதேவேளை நேரியது. இவற்றைப் போற்றுவது மூலம் நாங்களும் ஆசாரசீலர்களாகலாம்.பண்டை நாள்களில் வாழ்ந்த எம் முன்னோர் போதிய கல்வி அறிவு வளர்ச்சி பெற்றவர்களாக இருந்ததில்லை. அறிவியலை அவர்கள் கேள்விப்பட்டதேயில்லை. கணனி என்றால் “இறாத்தல் என்ன விலை?” என்று கேட்கும் நிலை அவர்களுடையது. அந்த அளவிற்கு அறிவு வளர்ச்சியில் அவர்கள் பின்னின்றார்கள்.

ஆனால் சைவ ஆசாரத்தில் அவர்கள் மிக மிக வளர்ந்து காணப்பட்டனர். அவர்கள் சைவ நெறிக்கண் நின்றார்கள். சைவர்களாயே வாழ்ந்தார்கள். அதனால் அவர்கள் சைவ வாழ்வு மிக உயரியதாகவே காணப்பட்டது.

### நாளாந்த வழிபாடு :

வழிபாடு: இறைவனை ஆராதித்தல். நாளாந்த வழிபாடு: ஒவ்வொருநாளும் இறைவனை வணங்குதல். இந்த நாளாந்த வழிபாடு என்னும் உபயோகம் ஆலயங்களுக்குச் சென்று வழிபடும் முறைமையையே உணர்த்துவதாக எம்மனதிற் பட்டுவிட்டது. எல்லோரும் அப்படித்தான் எண்ணுகிறார்கள். எல்லோரும் எண்ணுகின்ற போது நாம் விலக்கானவர்களில்லையே! நாமும் அவர்களுடனாகித்தானே சிந்திக்க வேண்டும். நாம் சிந்திக்கக் கூடிய ஜீவன்கள். எனவே எமக்கென்றும் ஒரு தனித்துவம் இருக்கத்தானே வேண்டும். ஆகவே நாம் நாமாகவே சிந்திப்போம். எங்குமுள்ளவனாகிய இறைவனை ஆலயத்திற்குச் சென்று வழிபட்டாற்றான் நாளாந்த வழிபாடாகுமா? மற்றொரு கருத்து. நாங்கள் செய்யும் எந்தக் கருமத்தையும் இறைவழிபாட்டுடன் தானே ஆரம்பிக்கின்றோம். அவையெல்லாம் நாளாந்த வழிபாட்டுள் அடங்குமா? கோயிலிற் செய்வதுதான் நாளாந்த வழிபாடாகுமெனில் வீட்டில் வேலைத் தலத்தில் ஒவ்வொருநாளும் நடைபெறும் வழிபாடுகளையெல்லாம் நிறுத்தி விடுவதா? அல்லது அவற்றையும் ஆலயத்திற்குக் கொண்டு செல்வதா? இப்படியொரு சஞ்சல நிலை ஏற்படுவது இயற்கைதான்.

எனவே நாளாந்த வழிபாடு என்னும்போது நாம் இரண்டு பிரிவள் அஃனை அடக்கிச் சிந்திக்க வேண்டியவர்களாகின்றோம். ஒன்று ஆலயத்தில் நடை பெறும் நாளாந்த வழிபாடு மற்றையது வீடு முதலான இடங்களில் நடை பெறும் நாளாந்த வழிபாடு. இவற்றுள் வீட்டுடனான நாளாந்த வழிபாடுதான் என்றும் நடைபெறக் கூடியது. மற்றையவை இடையீடுபட்டுப் போகக் கூடியவை. ஆகவே வீட்டுடனான வழிபாட்டுச் சிந்தனைகள் விரிவான கருத்துப் பரிமாற்றத்திற்கு உள்ளாக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளாந்த வழிபாடு - வீட்டில்

வீட்டில் நடைபெறும் சகல வேலைகளும் கடவுள் வணக்கத்துடன் ஆரம்பமாகின்றன. இந்தவகை வழிபாடுகளனைத்தையும் நாளாந்த வழிபாட்டுடனாக்கிக் கொள்ளத்தான் வேண்டும். அவை நாளாந்தம் நடைபெறுபவை என்பதால் நாளாந்த வழிபாட்டுடனாக்கிக் கொள்ளலே முறைமையாம். அதிகாலையில் நாம் நித்திரை விட்டெழும் போதே "சிவசிவ" என்று சொல்லிக் கொண்டோ அல்லது "முருகா" என்று சொல்லிக் கொண்டோ தான் எழுகின்றோம். அந்த நேரத்திலேயே எங்களை அறியாமல் வழிபாடு தொடங்கி விடுகிறது. தொடர்ந்து விபூதி தரிக்க வேண்டும் என்பது ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பணிப்பு. சைவ வினாவிடை முதலாம் புத்தகத்தில் விபூதி தரிக்க வேண்டிய நேரங்கள் பற்றி நாவலர் குறித்துள்ள இடத்தில்:

"நித்திரை செய்யப் போகும்போதும், நித்திரை விட்டு எழுந்த உடனும், தந்தசுத்தி செய்தவுடனும், சூரியன் உதிக்கும் போதும், சூரியன் அஸ்தமிக்கும் போதும், ஸ்நானஞ் செய்தவுடனும், போசனத்துக்குப் போகும் போதும், போசனம் செய்த பின்னும் விபூதி அவசியமாகத் தரித்துக் கொள்ள வேண்டும்"

என்னும் விபரங் காணப்படுகிறது. இந்த நிகழ்வு நடைபெறுஞ் சந்தர்ப்பமெல்லாம் நாளாந்த வழிபாட்டுடனானவை தானே! தொடர்ந்து தேவாரம் ஓதுதல் என்பவற்றைச் செய்து காலைக்கடன் கழிக்கும் முயற்சியில் தொடர்புபடலாம். மலசல போசனஞ் செய்யும் வேளையிற் கூட சிவநினைவு இருக்கத்தான் செய்யும். நீருள் அமிழ்ந்து குளிக்கும் போது "சிவசிவ" என்று சொல்லிக் கொண்டுதான் குளிக்க வேண்டும். நீரை மொண்டு தன்மீது ஊற்றி நீராடும் போதும் சிவ நினைவுடன் செய்வதுதான் பொருத்தமானது. ஈரந் துவட்டுதல் முதலான நிகழ்வுகளின் போதும் ஏதாவதொரு திருமுறைப் பாடலை வாய் ஓதிக் கொண்டிருக்க வேண்டும்.

*"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே இருங்கடல் வையத்து*
*முன்னம் நீபரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கள்*
*மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்*
*பன்னி ஆதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே"*

என்பனவாய திருப்பாடல்கள் ஓதப்படக் கூடியவை. உரத்து ஓத வேண்டுமென்றில்லை. தன் காதிலே தான் கேட்டுக் கொண்டிருந்தாற் போதுமானது. சிவ சிந்தையை நிலைநிறுத்துவது தான் நோக்கம்.

நீராடுவதற்கு முன்பாக வீட்டினையும் சுற்றாடலையுங் கூட்டித் தூய்மையாக்க வேண்டும். பின்னர் சாணத்தை நீரிலே கரைத்து சுற்றுப்புறமெங்குந் தெளிக்கலாம். நாளாந்தம் சாணி கரைத்த நீரைத் தெளிப்பது முடியாத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரியமெனக் கண்டால் சாதாரணமாகக் கிடைக்கக் கூடிய தண்ணீரைத் தெளித்து இலேசாக மஞ்சள் நீர் தெளித்துவிடலாம். பட்டணப் பகுதிகளில் வெற்று நிலம் இல்லாதிருக்கலாம். சீமேந்து போடப்பட்ட நிலமெனில் நீராற் கழுவிவிடலாம்.

நிலம் அமைந்துள்ள வாய்ப்பிற்கு ஏற்ப வீட்டின் முன்னே வாயிலுக்கு நேராகக் கோலம் போடலாம். மண் நிலமானால் சாணத்தால் மெழுகிக் கோலமிடலாம். சீமேந்து நிலமானால் நீரினாற் கழுவிவிட்டுக் கோலம் போடலாம். எந்தநாளுங் கோலம் போடல் தவறாகாது. வேலை நெருக்கடி காரணமாகக் கோலம் போட முடியாததெனக் கண்டால் விசேட காலங்களில் மட்டும் போட்டுக் கொள்ளலாம். வருடப்பிறப்பு, தைப்பொங்கல், மார்கழிமாதம், நவராத்திரி, திருமணநாள், நிச்சயதார்த்தம், பொன்னுருக்கல், பூப்புனித நீராட்டு விழா, அந்தியேட்டி, வருடாந்தத் திதிநாள், திருக்கார்த்திகை, ஆவணிச் சதுர்த்தி, தைப்பூசம், சிவராத்திரி என வரும் சிறப்பு நாள்களைக் கோலம் போடும் நாள்களாகக் கொள்ளலாம். போடப்படுங் கோலம் வீட்டில் நடைபெறும் நிகழ்வை அறிவுறுத்தவல்லதாய் அமைய வேண்டும். இந்த நிகழ்வுகள் எல்லாம் சிவ உணர்வை வளர்ப்பன என்று நினைய வேண்டும். இதற்காக வெள்ளை அரிசி மா மட்டுந்தான் பயன்படுத்தப்பட வேண்டும். இப்போது அலங்காரத்தை நோக்கமாகக் கொண்டு வெவ்வேறு நிறங்களும் வெவ்வேறு பொருள்களும் பயன்படுத்தப்படுகின்றன. அந்த முறைமை சிவ சிந்தனைக்கு ஊறுவிளைப்பது. எனவே தவிர்க்க வேண்டும். அமங்கல நிகழ்வின் போது கோலம் போடுதல் இல்லை என்பது நினைவிலிருக்க வேண்டும்.

இதன் பின்னர்தான் நீராட வேண்டும். தொடர்ந்து வீட்டில் வழிபடு மிடத்தைப் புனிதமாக்கித் தீபமேற்றி நிவேதிக்கக் கூடியனவாக உள்ளவற்றை நிவேதித்து வழிபடலாம். நிவேதிக்கும் போது எது இல்லை என்றும் துன்பப் பட வேண்டிய தில்லை. திருமுறை நூல்களுள் எதையாவது ஒன்றை வைத்துத் தீபாராதனை செய்து வழிபடவேண்டியது அவசியம். திருமுறை நூல் ஒன்றும் இல்லையென்றால் தேவார திருவாசகம் முதலானவை அச்சிடப்பட்ட ஒரு நினைவு நூலையாவது வைத்து வழிபடலாம். தொடர்ந்து நடைபெற வேண்டிய வேலைகளை மனத்திலே கொண்டு அவற்றுக்குப் பாதிப் பேற்படாத வண்ணம் வழிபாட்டினை மேற்கொள்ளலாம். தொடர்ந்து இறை நினைவுடனாக உணவு கொள்ளல் நிகழாது. இந்த வேளை ஆலயத்திற்குச் செல்லலும் தொடரலாம். இது எல்லோருக்கும் பொருந்தக் கூடியதாக அமையுமோ என்பது கேள்விக்குரியது.

மதிய உணவு கொள்ளும்போது நீர் தெளித்தல், உணவில் சிறிதளவு எடுத்து ஒரு பக்கமாக வைத்து வழிபடல் என்பன நடைபெறுவதைப் பல சைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களிடம் காணுகின்றோம். சூரியன் மறைந்ததும் விளக்கேற்றி வழிபாடாற்றுவதும், தொடர்ந்த எமது முயற்சிகள் நிறைவாகியதும் சிவ சிந்தனையுடன் படுக்கையினிடமாதலும் நிகழும். படுக்கை இடமாகி இருந்து நினைக்க வேண்டிய திருப்பாடல்கள் உண்டு. சிறப்பாக மணிவாசக சுவாமிகள் அருளிய அடைக்கலப்பத்து என்னும் பதிந்துள்ள திருப்பாடல்கள் பத்தினையும் நினைந்து பார்க்கலாம். முடியாதவிடத்து ஒரு சில திருப்பாடல்களையாவது நினையலாம். அதுவும் முடியவில்லையெனில் ஒரு திருப்பாடலையாவது பாராயணஞ் செய்து துயிலலாம்.

*"செழுக்கமலத் திரளனநின் சேவடிசேர்ந் தமைந்த*
*பழுத்தமனத் தடியருடன் போயினர்யான் பாவியேன்*
*புழுக்கனுடைப் புன்குரம்பைப் பொல்லாக்கல்வி ஞானமிலா*
*அழுக்குமனத் தடியேன் உடையாயுன் அடைக்கலமே"*

இது அந்தப் பதிகத்து முதலாவது திருப்பாடல். துயிலத் தொடங்கும் போது பின்னே நிகழ்வது எதுவும் எமக்குத் தெரியாது. ஆதலின் எம்மைப் பூரணமாக அவனுக்கு அர்ப்பணித்து நிறைவான சரணாகதி நிலையில் துயில்வது மனத்திற்கு அமைதி தருவது என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

## நாளாந்த வழிபாடு - தொழிலிடத்தில் :

மாணவர்களாக இருந்தாலென்ன, பெரியவர்களாக இருந்தாலென்ன எதையும் எழுதத் தொடங்கும் போது பிள்ளையார் சுழி சிவமயம் எழுதித்தான் மேலுந் தொடருவோம். எழுத்து முயற்சி உள்ளவர்களுக்கு இது நாளாந்த வழிபாட்டு முறையாக இருக்கின்றது. வாகனங்களைச் செலுத்துபவர்கள் தமது இருக்கையில் இருந்து கொண்டு அல்லது நிற்கவேண்டிய இடத்தில் நின்று கொண்டு இறைனை நினைந்து ஆராதித்து விட்டுத்தான் வாகனத்திற் கைவைக்கின்றார்கள். இது நாளும் நடைபெறுவது.

சந்தையிற் பொருள் விற்பனை செய்பவன் சிவ சிந்தையுடன் கொடுத்து இறை அர்ப்பணமாகச் சிறுதொகையை ஒதுக்கி வைத்து விட்டுத் தான் வியாபாரத்தைத் தொடர்வான். கடைக்காரன் நாளும் தீபாராதனை செய்தே தன் முயற்சியைத் தொடர்வான். பலகாரம் செய்பவர் முதல் எடுக்கப்படுவதைக் கடவுளுக்கு நிவேதித்துத் தொழிலைத் தொடர்வார்கள். இந்த முறைமையெல்லாம் கல்வி வளச் செறிவு இல்லாத தொழிலாளரிடத்தும் நாளுங் கண்டு கொள்ளலாம். இந்தவகைத் தொழிலாளி யாராகவிருந்தாலும் நாளும் வேலை ஆரம்பிக்கும் போது தனது முதல் வருவாயின் ஒரு பகுதியைச் சிவனுக்கு அர்ப்பணித்து வழிபடுவது தவறாத ஒரு செயலாக அமைந்துவிடுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரையிலமர்ந்து மேசையிலுள்ள கோவைகளைப் புரட்டிப் பார்த்துக் கையொப்பமிடுபவரும் சிவனை நினைந்து கொண்டுதான் சேவையைத் தொடர்கின்றார். அவருக்கு அதுதான் தொழிலிட நாளாந்த வழிபாடு. சில அலுவலகங்களில் படம் வைத்துக் கற்பூர தீபத்தை நாளும் ஏற்றித்தான் கும்பிட்டு வேலை ஆரம்பிக்கப்படுகிறது.

பாடசாலைகளில் திருமுறை ஆராதனை செய்துதான் படிப்புத் தொடங்குகிறது. மரவேலை செய்பவர்கள், இரும்பு வேலை செய்பவர்கள், கல்லிற் சிற்பஞ் செய்பவர்கள் ஒவ்வொருநாளுங் காலையில் தமது ஆயுதங்களில் இரண்டொன்றை இறைவன் முன் நிவேதித்து வழிபட்டு வேலையை ஆரம்பிப்பார்.

இப்படிச் சிந்திக்கும் போது நாளாந்த வழிபாடு என்பது சுருங்கி அல்லது விரிவு பெற்றுத் "தொடர்ந்த இறைசிந்தனையுடனாகி " என்று பொருளுட னாகி நிற்கலாம். நாளாந்த வழிபாடு என்பது நாளுஞ் சிந்தித்தல் என்றாகும். நாளுஞ் சிந்தித்தல் எந்த நேரமும் நினைதல் என்றாம்.

## நாளாந்த வழிபாடு - ஆலயத்தில் :

ஆலயங்களில் நாளாந்த வழிபாடு செய்தல் எல்லோருக்கும் சாத்தியப்படக் கூடிய ஒன்றன்று. அதிகாலை வேலைக்குப் போய் இரவு திரும்பி வீடு வருபவர்கள் இருக்கிறார்கள். அதன்பின் அவர்கள் தம்மைத் தூய்மைப் படுத்திக் கொண்டு ஆலயம் சென்று வருவது முடியாத காரியம். எனவே தான் அவர்கள் தொழிலிடத்திற்குச் செல்லும் போதும் திரும்பி வரும் போதும் கோயிலின் முன்புறத்தே நின்று நாளாந்த வழிபாட்டை நிறைவு செய்து கொள்கின்றார்கள். அவர்கள் செய்யக்கூடியது அவ்வளவு தான்.


துடக்குடன் ஆலயஞ் செல்ல முடியாது. ஆலய வளவிற் போய் நிற்பதும் பொருத்தமற்றது. துடக்கு நீங்கும் வரை அவர்கள் ஆலய முன் புறத்திற்குக் கூடப் போகாதிருப்பதுதான் பொருத்தமானது.

ஓய்வு பெற்று வீடுகளில் இருக்கும் முதியவர்கள், எட்டு மணித்தியாலங் களுடன் வேலை நிறைவு பெறுபவர்கள் ஆலயங்களிலும் நித்திய வழிபாடு செய்யலாம். இவர்கள் வழிபாடு நாவலர் பெருமான் எழுதிய சிவாலய தரிசன விதி என்பதற்கமைவாக இருக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## இயல் மூன்று

# கிரியையியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13. நித்திய கருமங்கள்



ஆசார அனுட்டானங்கள் ஒரு மனிதனின் வாழ்வில் நிறைந்த பூரணத்துவம் கொடுப்பதாகும். சூரிய உதயத்தின் முன் நித்திரை விட்டெழுந்து காலைக்கடன்கள் முடித்து, தண்ணீரைச் சிவதீர்த்தமாகப் பாவித்து, ஸ்நானம் செய்து, தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, ஜெபம், தியானம் போன்றவை குறைந்தது ஐந்து நிமிடமேயாயினும் செய்து, இயலுமாயின் ஆலய தரிசனம் செய்து, சுத்தமான வாழையிலையில் உணவு உட்கொள்வது உத்தமமாகும். பிரதி நாட்கள் தோறும் இம்முறையைக் கைக்கொள்வது உளரீதியாகவும், உடல்ரீதியாகவும் ஆன்மபலம் தரும். மனம் தூய்மை பெறும்.

## நித்திய அனுட்டானம்

இது காலை, மதியம், மாலை என மூன்று வேளைகளிலும் செய்வது மிகவும் உத்தமமாகும். காலையில் சூரிய உதயத்தின் போதும், மதியம் நடுப் பொழுதின் போதும், மாலையில் சூரிய அஸ்தமனத்தின் போதும், நித்திய அனுட்டானம் செய்து சிவனைத் தியானிப்பது மிகவும் நன்மை பயக்கும். தனியான சுத்தமான இடத்தில் அமர்ந்து "திருநீற்றை" தீட்சையின் போது கூறிக் கொடுத்த மந்திர உச்சாடனத்துடன் குழைத்து, நெற்றி, மார்பு, நாபி, கை, கால், புஜம், இடுப்புப் போன்ற இடங்களில் பூசி அதற்குரிய தியான மந்திரங்களை ஜெபிப்பது அனுட்டான முறை.

## தீட்சை

தீ - கொடுத்தல், சை - கெடுத்தல், அதாவது ஞானத்தைக் கொடுத்து, மலத்தைக் கெடுத்தல். தீச்சுடர்போல் பிரகாசமான ஞான அறிவைப் புகட்டி, மந்தமாய் மனதில் படிந்திருக்கும் மலங்களை நீக்கி விடுதலே தீட்சை எனப்படும். இதில் சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை என மூவகைப்படும். இதில் ஏழு வகையான முறைகளை சாஸ்திரங்கள் கூறுகின்றன. அவை நயன தீட்சை, பரிசதீட்சை, வாசக தீட்சை, மானச தீட்சை, யோக தீட்சை, சாத்திர தீட்சை, ஔத்திரி தீட்சை எனப்படும். முறையே கண்களால் அருட் பார்வையினாலும், பரிசம் தொடுவதனாலும், உபதேசத்தினாலும், அருள் நோக்கினாலும், யோகபலத்தாலும், மறை உபதேசத்தினாலும் ஹோமத்தி னாலும் ஒரு மாணாக்கனைப் பரிசுத்த ஆத்மீக ஞானவாதியாக குருவால் ஆக்குவதே இத்தீட்சைகளாகும். தீட்சை என்பது இறைவன் குருவினிடமாக நின்று ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தைக் கெடுக்கும் கிரியை என்ற கருத்துள்ள "தீக்ஷா" என்ற வடசொல்லிலிருந்தே வந்தது. சைவசமயத்திற் பிரவேசிப்பதற்கும் அதன் வெவ்வேறு படிகளிற் புகுவதற்கும் அருகதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யளிப்பது தீட்சையே. ஒருவர் சைவ சாரத்தை மேற்கொள்ளுவதற்கு அதிகாரமளிக்கும் தீட்சை சமய தீட்சை. சமயதீட்சை பெறாதவன் சைவசமயி எனக் கூறுவதற்குத் தகுதி அற்றவன் என்பது ஆகமங்களின் கூற்று. சமய தீட்சை சரியா மார்க்கத்தாருக்கு உரியது. சிவபூசை முதலியவற்றைச் செய்வதற்கும் சிவாகமங்களை ஓதுவதற்கும் யோக சாதனைகளை மேற்கொள்ளுவதற்கும் அதிகாரம் அளிப்பது விசேட தீட்சை எனப்படும். இது கிரியா மார்க்கத் தாருக்கும் யோக மார்க்கத்தாருக்கும் அளிக்கப்படுவது. ஞான மார்க்கத் தாருக்கு அளிக்கப்படுவது நிர்வாணதீட்சை.

## அனுட்டான விதி



### பூமி சுத்தி

அஸ்திராய படு என்று தானிருக்கும் பூமியைச் சலத்துளியினாலே தெளிக்க. கணபதி குரு வந்தனம் ஓம் கம் கணபதயே நம என்று மூன்று முறை குட்டி, ஓம் கும் குருப்பியோ நம என்று கும்பிடுக.

### சல (நீர்) சுத்தி

அநுட்டான சலத்தை (நீரை) நமசிவாய என்று வலக்கைச் சுட்டுவிரல், நடுவிரல்களை உள்ளே மடக்கிப், பெருவிரலுக்கும் அணிவிரலுக்கும் நடுவாக நிரீக்ஷணமும், அஸ்திராய படு என்று பெருவிரல் நுனியையுஞ் சுட்டு விரல் நுனியையும் சேர்த்து ஒலியெழுப்புதலினாலே திக்கு பந்தனமும், கவசாய வௌஷடு என்று நீட்டிய சுட்டி விரலினாலே அவகுண்டனமுஞ் செய்க.

### ஆசமனம்

*ஆத்தும தத்துவாய சுவதா*
*வித்தியா தத்துவாய சுவதா*
*சிவ தத்துவாய சுவதா*

என்று பெருவிரலடியிற் சார்ந்த உழுந்தமிழ்ந்து சலத்தினால் ஆசமனஞ் செய்து, அஸ்திராய படு என்று அதரங்களிரண்டையும் பெருவிரலடி கொண்டு இடமாக இரண்டு தரமும் உள்ளங்கை கொண்டு கீழாக ஒரு தரமும் துடைத்துக் கை கழுவி, இருதயாய வௌஷடு என்று பெருவிரலோடு கூடிய அணி விரலினால் முகம், வலமூக்கு, இடமூக்கு, வலக்கண், இடக்கண், வலக்காது , இடக்காது, கொப்பூழ், மார்பு, வலத்தோள், இடத்தோள், சிரசு என்னும் இப்பன்னிரண்டு இடங்களையும் தொட்டு விடுக.

### விபூதி சுத்தி

விபூதியை வலக்கைப் பெருவிரல் நடுவிரல் அணிவிரல்களால் எடுத்து இடக்கையில் வைத்துக் கொண்டு, அஸ்திராயபடு என்று விபூதியிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சலத்தைத் தெளித்து, அவ்விபூதியில் ஒரு சிறு பங்கைப் பெருவிரல் அணிவிரல்களினாலே தொட்டு, அஸ்திராய ஹூம் படு என்று இராட்சதர் பொருட்டு நிருதி மூலையிலே தெளித்து, விபூதியை நமசிவாய என்று நிரீட்சணமும், அஸ்திராய படு என்று திக்குபந்தனமும், கவசாய வௌஷடு என்று அவகுண்டனமுஞ் செய்து வலக்கையால் மூடிக்கொண்டு, ஈசாநாய நம என்பது முதலிய பதினொரு மந்திரத்தாலும் அபிமந்திரிக்க.

## விபூதி ஸ்நானம்

வலக்கையின் பெருவிரல் அணிவிரல்களால் விபூதித் துளியை எடுத்து, அஸ்திராய படு என்று தலை தொடங்கிக் காலளவும் பூசி, இடக்கையில் உள்ள விபூதியைப் பெருவிரலோடு கூடிய நடு விரலினாலே இருதயாய நம என்று சலம் விட்டு கவசாய வௌஷடு என்று குழைத்து நடுவிரல் மூன்றினாலும் ஈசாநாய நம என்று சிரசிலும், தத்புருஷாய நம என்று நெற்றியிலும், அகோராய நம என்று மார்பிலும் வாமதேவாய நம என்று கொப்பூழிலும், சத்தியோசாதாய நம என்று வலமுழந்தாள், இடமுழந்தாள், வலப்புயம், இடப்புயம், வலமுழங்கை, இடமுழங்கை, வலமணிக்கட்டு, இட மணிக்கட்டு, வலவிலா, இடவிலா, முதுகு, கழுத்து என்னும் மற்றையிடங்களிலுந் திரிபுண்டரமாகத் தரிக்க.


## மந்திர ஸ்தானம்

எஞ்சிய விபூதியோடு கைநிறையச் சலம் விட்டுக் கும்பக முத்திரை யாகப் பிடித்துக் கொண்டு., ஈசாநாய நம என்பது முதலிய ஐந்து மந்திரத்தை உச்சரித்துச் சிரசிலே, புரோஷித்து விட்டுக் கைகழுவுக.

## ஆசமனம்

முன்போல ஆசமனஞ் செய்க.

## பிராணாயாமம்



வலக்கையிற் சுட்டு விரலையும், நடுவிரலையும் உள்ளே மடக்கிப் பெருவிரலினால் வலமூக்கைப் பிடித்துக் கொண்டு ஒரு தரமும். பெருவிரல் அணிவிரல்களினால் வல இட மூக்குகளைப் பிடித்துக் கொண்டு ஒரு தரமும், அணிவிரலினால் இடமூக்கைப் பிடித்துக் கொண்டு ஒரு தரமுமாக ஈசாநாய நம என்பது முதலிய பதினொரு மந்திரத்தை மூன்று தரம் உச்சரித்து நமசிவாய என்று வலக்காதை மூடுக.

## சிவதீர்த்த கரணம்

இருதயாய வௌஷடு என்று புருவ நடுவில் உள்ள அமிர்தத்தை நுதிவளைந்த சுட்டுவிரலினால் எடுத்துச் சலத்தினிடத்தே வைத்து, நமசிவாய என்று அபிமந்திரித்து அஸ்திராய படு என்று திக்கு பந்தனம் கவசாய வௌஷடு என்று அவகுண்டனமுஞ் செய்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மந்திராபிஷேகம்

வலக்கையினாற் சலத்தை அள்ளி இடக்கையில் விட்டுக் கும்பக முத்திரையாகப் பிடித்துக் கொண்டு ஈசாநாய நம என்பது முதலிய பதினொரு மந்திரத்தை உச்சரித்துச் சிரசிலே புரோட்சிக்க (தெளிக்க).

### மார்ச்சனம்:

சுத்த நீரை வலக்கையால் மூடி, ஈசாநாய நம என்பது முதலிய பதினொரு மந்திரத்தினால் அபிமந்திரித்து, வலக்கையினாலே சலத்தை (சுத்த நீரை) எடுத்து இடக்கையில் விட்டு வைத்துக்கொண்டு,அவ்விடக்கையினின்றுங் கீழே ஒழுகுகின்ற சலத்தை (சுத்த நீரை) வலக்கையினாலே, ஈசாநாய நம வௌஷடு என்பது முதலிய பதினொரு மந்திரத்தினாலே சிரசின் மேலே தெளித்து விடுக. எஞ்சிய சலத்தை (சுத்த நீரை) இடக்கையினின்றும் வலக்கையில் விட்டு, மூக்குக்குச் சமீபத்திலே பிடித்துக் கொண்டு அந்தச் சுத்த நீரை வெண்ணிறமுடைய தரும வடிவமாகி இட மூக்கினாலே உள்ளே புகுந்து அங்குள்ள பாவத்தை அழித்ததாகவும், அந்தப் பாவம் மைக்குழம்பு போல வல மூக்கினாலே புறத்தே நீங்கிக் கையிலே வந்ததாகவும் பாவித்து வலக்காற் பெருவிரலிற் சுவாலிக்கும் அக்கினியிலே அஸ்திராய கும்படு என்று புருவ முரிப்புடனே விட்டு, அந்தப் பாவஞ் சாம்பலானதாகப் பாவித்து அஸ்திராயப்படு என்று கை கழுவுக.

### ஆசமனம்

முன்போல ஆசமனஞ் செய்க.

### கவச வேஷ்டணம்

கவசாய வௌஷடு என்று வலக் கையிற் சலத்தினாலே (சுத்த நீரை) தன்னை வலப் பக்கமாகச் சுற்றுக.

### தருப்பணம்

இரண்டு கையும் நிறைந்த சலத்தினாலே (சுத்த நீரை) நமசிவாய என்று மூன்று தரந் தருப்பணஞ் செய்து, நமசிவாய என்று பத்துத்தரம் செபித்து, நமசிவாய என்று மீண்டும் ஒரு தரம் தருப்பணஞ் செய்து, ஈசாநாய சுவாகா என்பது முதலிய பதினொரு மந்திரத்தினால் ஒரு தரம் தருப்பணஞ் செய்து, உமாதேவியே சுவாகா என்றும், கணபதயே சுவாகா என்றும், சரவணபவாய சுவாகா என்றும் ஒவ்வொரு தரம் தருப்பணம் செய்க.

### ஆசமனம்

முன்போல ஆசமனஞ் செய்க.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தீர்த்தோப சங்காரம்

முன்னே சலத்திலே (சுத்த நீரில்) வைத்த அமிர்தத்தை இருதயாய வௌஷடு என்று நுதி வளைந்த சுட்டு விரலினால் எடுத்துப் புருவ நடுவிலே ஒடுக்கி விடுக.

### சூரியோபஸ்தானம்

இரண்டு கைநிறையைச் (சுத்த நீர்) சலம் விட்டுப் பிடித்துக் கொண்டு, ஈசாநாய நம என்பது முதலிய பதினொரு மந்திரத்தை உச்சரித்து, சிவசூரியாய சுவாகா என்று ஒரு தரஞ் தருப்பணஞ் செய்க. அஸ்திராய படு என்று தான் இருக்கும் பூமியைச் சலத்தினாலே (சுத்த நீரினால்) புரோட்சித்து, வடக்கு முகமாக ஆசனத்திருந்து முன்போலக் குட்டிக் கும்பிட்டுப் பிராணாயாமஞ் செய்து சிவபெருமானுடைய உருவத் திருமேனியாகிய உருத்திர வடிவத்தைத் தியானிக்க.

#### உருத்திரத் தியானம்

*மைக்களமு மான் மழுவும்*
*வரதமுட னபயமுறும்*
*மெய்க்கரமு நாற்புயமும்*
*விளங்குபணிக் கொடும்பூணுஞ்*
*செக்கருறு மதிச்சடையுஞ்*
*சேயிழையோர் பாகமும்*
*முக்கணிறை யாங்காண*
*முன்னின்றே யருள்புரிந்தான்.*

இப்படித் தியானித்துக்கொண்டு, சிவ மூல மந்திரத்தை நூற்றெட்டுத் தரமும், தேவி மூலமந்திரம் கணபதி மூலமந்திரம், சுப்பிரமணிய மூல மந்திரம் என்னும் இவைகளைத் தனித்தனியே பத்துத்தரமும் செபித்துப் பின்பு முன்புபோலக் குட்டிக் கும்பிட்டுப் பிராணாயாமஞ் செய்து தோத்திரம் பண்ணுக.

#### சிவ தோத்திரம்

*முடிகொண்ட மத்தமு முக்கண்ணி*
*னோக்கு முறுவலிப்புந்*
*துடி கொண்டகையுந் துதைந்தவெண்*
*ணீறுஞ்சுரிகுழலாள்*
*படிகொண்ட பாகமும் பாய்புலித்*
*தோலுமென் பாவிநெஞ்சிற்*
*குடிகொண்ட வாதில்லை யம்பலக்*
*கூத்தன் குரைகழலே.*

*கடையவ னேனைக் கருணையி*
*னாற்கலந் தாண்டுகொண்ட*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடையவ னேவிட்டிடுதிகண்
டாய்விறல் வேங்கையின்றோல்
உடையவ னேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன் எம்பி
ரானென்னைத் தாங்கிக்கொள்ளே.

வேதநா யகனே போற்றி
விண்ணவர் தலைவா போற்றி
மாதொருபாகா போற்றி
மறுசம யங்கண் மாளப்
பேதகஞ் செய்வாய் போற்றி
பிஞ்ஞகா போற்றி யான்செய்
பாதக மனைத்துந் தீர்க்கும்
பராபரா போற்றி போற்றி.

சீராருஞ் சதுர்மறையும்
தில்லைவாழ் அந்தணரும்
பாராரும் புலிமுனியும்
பதஞ்சலியும் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ்
வையமெலா மீடேற
ஏராரு மணிமன்று
ளெடுத்த திருவடி போற்றி.

## தேவி தோத்திரம்

பரந்தெழுந்த சமண்முதலாம்
பரசமய விருணீங்கச்
சிரந்தழுவு சைவநெறித்
திருநீற்றி னொளிவிளங்க
அரந்தைகெடப் புகலியார்கோ
னமுது செயத் திருமுலைப்பால்
சுரந்தளித்த சிவகாம
சுந்தரி பூங் கழல் போற்றி.

## விநாயகர் தோத்திரம்

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய் நம துள்ளம் பழுக்கவும்
பெருகுமா ழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுப்பிரமணியர் தோத்திரம்

*மூவிரு முகங்கள்போற்றி*
*முகம்பொழி கருணை போற்றி*
*ஏவருந் துதிக்க நின்ற*
*ஈராறு தோள் போற்றி காஞ்சி*
*மாவடி வைகுஞ் செவ்வேள்*
*மலரடி போற்றி அன்னான்*
*சேவலு மயிலும் போற்றி*
*திருக்கை வேல் போற்றி போற்றி.*

## சமய குரவர் நால்வர் தோத்திரம்

*பூழியர்கோன் வெப்பொழித்த*
*புகலியர்கோன் கழல் போற்றி*
*ஆழிமிசைக் கன் மிதப்பி*
*லணைந்தபிரானடி போற்றி*
*வாழிதிரு நாவலூர்*
*வண்றொண்டர் பதம் போற்றி*
*ஊழிமலி திருவாத*
*வூரர் திருத்தாள் போற்றி.*

## அறுபத்து மூவர் தோத்திரம்

*தத்து மூதெயின் மூன்றுந் தழலெழ*
*முத்து மூரன் முகிழ்த்த நிராமய*
*சித்து மூர்த்திதன் றாளிணை சேரறு*
*பத்து மூவர் பதமலர் போற்றுவாம்.*

இப்படித் தோத்திரம் பண்ணி, எழுந்து

இந்திராய நம என்று கிழக்கிலும்,
அக்நயே நம என்று தென் கிழக்கிலும்,
யமாய நம என்று தெற்கிலும்,
நிருதயே நம என்று தென்மேற்கிலும்,
வருணாய நம என்று மேற்கிலும்,
வாயுவே நம என்று வட மேற்கிலும்,
குபேராய நம என்று வடக்கிலும்,
ஈசாநாய நம என்று வடகிழக்கிலும் கும்பிட்டு.

பார்வதீ சமேத பரமேசுவராய நம என்று வடக்கு நோக்கி மூன்று தரஞ் சாட்டாங்கமாக நமஸ்கரித்து, எழுந்து, ஆசமனஞ் செய்க. அஸ்திராய பட் என்று இருக்குமிடத்தைச் சலத்தினால் (சுத்த நீரினால்) தெளித்து, அதனைத் தொட்டுக் கண்ணிலொற்றிக் கொண்டு சலத்தைத் (சுத்த நீரை) தூரத்திலே கால்படாதவிடத்தில் விட்டுவிடுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14. கிரியைகள்



## கிரியைகளில் பங்கு

### விநாயக குரு வழிபாடு

உலகங்கள் யாவற்றிற்கும் முதற் காரணமாகிய பொருள் பிரணவம் எனப் படும். அதற்குத் தலைமையாயிருக்கும் சிவசக்திக்கு விநாயகர் என்று பெயர். (வி = இல்லாத, நாயகர் = தலைவர், அஃதாவது தமக்கு மேல் ஒரு தலைவரில்லாதவர், மேலான தலைவர் எனப் பொருள் படும்.) எனவே முதற் செய்யப்படும் கிரியை விநாயக வணக்கம். இது கிரியை இனிது நடந்து முடிவுற முதல்வனை வணங்குதல் ஆகும். குரு, சமயக் கிரியைகளுக்கெல்லாம் தலைவராதலாலும் அவரிலே சிவபெருமானுடைய திருவருள் சிறந்து நிற்றலாலும் குருவையும் வழிபடுவர். (கு = மலம், ரு = நீக்குபவர்) சந்தனம், மஞ்சள் அல்லது கோமயம் (பசுச்சாணம்) இவற்றில் ஒன்றில் பிள்ளையாரை உருவாக்கி அறுகம்புல்லை அவருக்கு வைத்து வணங்குவது வழக்கம்.

### பவித்திரமணிதல்

பவித்திரமாவது மோதிரம் போலத் தர்ப்பையினால் செய்யப்பட்டு அணி விரலில் அணியப்படுவது. இதன் நோக்கம் கிரியை செய்யும் போது மனம் வாக்குக் காயங்களால் வரத்தக்க பாவங்களினின்றுங் காத்தல்.
(பவித்திரம் -பதனாத் த்ராயதே பாவத்திலே விழுதலினின்றும் காப்பது - காமிகாகமம்)

### சங்கற்பம்

சங்கற்பமாவது செய்யப்போகும் கிரியையிலே மனத்தைப் பதித்து அதிலே நிறுத்துவது. இன்ன காலத்திலே, இன்ன இடத்திலே, இன்ன நோக்கமாக இது செய்யப்போகிறேன் என்பது சங்கற்ப வாக்கியத்தின் சுருக்கமான கருத்து. நிகழும் படைப்புத் தொடக்கத்திலிருந்து அன்று வரையும் உள்ள காலம் இதில் குறிக்கப்படுவதால் காலத்தின் பெருமையும் தற்கால வாழ்வின் சிறுமையும் ஆன்ம ஈடேற்றத்தின் மகிமையும் உணரத்தக்கன.

### சங்கற்பம் முறை



வலது கையில் தருப்பை, பூ, மஞ்சள் அரிசி (அட்சதை) முதலியவற்றை வைத்துக்கொண்டு வலது கையை மேலாகவும், இடது கையைக் கீழாகவும் வைத்து இடது பெருவிரலை வலது பெருவிரலால் அமர்த்தி வலது முழந்தாளில் வைக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சங்கற்ப வாக்கியத்தின் கருத்து

சிவபெருமானது சங்கற்பத்தாலே தொழிற்படும் ஆதிப்பிரம்மாவின் இரண்டாவது பரார்த்தத்தில் சுவேதவராக கற்பத்தில் வைவஸ்வதமந்வன் தரத்தில் இருபத்தெட்டாவது சதுர்யுகத்திற் கலியுகத்தின் முற்பகுதியில் சம்பூத்துவீபத்தில் பாரத வருஷத்தில் பரத கண்டத்தில் மேருவுக்குத் தெற்கே (இடத்தின் பெயர்) பிரபவ முதலான அறுபது வருஷங்களுள் (இன்ன) வருடத்தில் (இன்ன) சமயத்தில்– (இன்ன) பருவத்தில் – (இன்ன) மாதத்தில் – (இன்ன) பட்சத்தில் – (இன்ன) திதியில் வாரத்தில் நட்சத்திரத்தில் – (இன்ன) நன்மையான யோகம் (இன்ன) நன்மையான கரணமுள்ளதாய் விசேட குணத்தோடு சேர்ந்த இந்த புண்ணிய தினத்தில் மம (என்னுடைய) – (இன்ன) நோக்கமாக (இன்ன) கிரியை செய்யப் போகிறேன்.

### கும்பம் வைத்தல்

கடவுளைக் கும்பத்தில் வழிபடும் போது, கும்பம் உடம்பின் பாவனையாகக் கருதப்படுகிறது. வாழையிலையை அதன் தலைப் பகுதியை வடக்கு அல்லது கிழக்குப் பக்கமாக வைத்து அதில் நெல் அல்லது பச்சை அரிசி இட்டு, தண்ணீர் நிறைந்த குடம் வைத்து ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது மாவிலைகளுக்கு மேல் தேங்காயைக் குடத்தின் மேல் வைத்து கும்பம் வைக்கலாம். கும்பத்திற்கு நூல் சுற்றி ஒரு பட்டுப் போர்த்தல் வேண்டும். தேங்காய் தலையாகவும், மாவிலைகள் தலை முடியாகவும், குடம் தசையாகவும், நூல் நாடிகளாகவும், பட்டு தோலாகவும், தண்ணீர் இரத்தமாகவும் கருதப்படுகிறது. கும்பத்திற்குள் இரத்தினம் போடப்பட்டால் அது எலும்பாகப் பாவனை செய்யப்படும்.

## அன்றாடக் கிரியைகளில் சிலநடைமுறைகள்

### மாவிலை

இது முக்கியமாக மங்களப் பொருளாகவும், தோரணமாகவும் கட்டப் படுகிறது. ஆலயங்கள் மற்றும் விழாக்கள் இல்லங்கள் திருமண வைபவங் களிலும் இம்மங்களப் பொருள் பயன்படுத்தப்படும். சகல வைபவங்களுக்கும் கும்பம் வைக்கும் பொழுது மாவிலை சடையாகப் பாவிக்கப்படுகின்றது. மாவிலை தோரணம் அமைக்கும்போது மூன்று முறையாகப் பயன்படுத்தப்படும்.

**(1.) நற்காரியங்கள் :** ஆலயங்களில் நடைபெறும் உற்சவம் விழாக்களிலும் திருமண மண்டபங்களிலும், வீடுகளில் சுப காரியங்கள் நடைபெறும் போதும் மாவிலைத் தோரணம் இலையின் காம்பு நுனியை முன்புறமாக வளைத்து இலையின் முன்பகுதியில் காம்பைக் குத்தித் தொங்க






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விடுதல் வேண்டும். இது மாவிலை தலை குனிந்து வரவேற்கும் பாணியில் இருக்க வேண்டும். (5 அல்லது 7 இலைகளைக் குத்தலாம்) இது சுபகாரியத்திற்குரிய அறிகுறியைக் காட்டும் தகமையாகும்.



**(2.) கும்பம் வைக்கும் போது :** தேங்காயின் கீழ் மாவிலையை அமைத்தல் வேண்டும். இதில் ஐந்து அல்லது ஏழு அல்லது ஒன்பது இலைகளை அமைத்தல் சிறப்பாகும்.



**(3.) அபரக்கிரியைகளின் போது :** இது வீட்டில் மரணச் சடங்கு நிகழும் போது அமைக்கப்பட வேண்டிய முறையாகும். மாவிலையின் காம்பு நுனியை பின் பக்கமாக மடித்துக் குத்தி தொங்கவிடல் முறையாகும். இது அபரக்கிரியை முறைக்கு மட்டும் உரியதாகும்.



## வாழைமரம்

இது ஆலயங்களிலும், விழாக்களிலும், வீடுகளில் திருமண வைபவங்களுக்கும் மற்றும் சுபகாரியங்களுக்கும் கட்டுதல் வேண்டும். இதன் நோக்கம் வாழையின் பெறுமதி மனிதனுக்குப் பெரும் பயனைத் தரவல்லது. இதன் இலையில் உணவு அருந்துதல், இதன் தண்டு, காய், புழம், பூ, கனி என்பவை உணவாகவும் நார் பூக்கட்டுவதற்கும் பயன்படுகின்றது. இதன் பயன் எப்படியோ அதேபோல் எல்லோரிடமும் இப்படியான பயனைப் பெறக் கூடிய நிலை வரவேண்டும். இதனை அழிக்கமுடியாது. இது வாழையடி வாழையாக வாழவேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் முகமாக வாழைமரம் கட்டப்படுகின்றது. வாழை மரம் பழுத்த பழமாக மஞ்சள் கனியாக மங்களமாக அமைந்தால் அது மிகவும் சிறப்பாக அமையும்.


மரணச் சடங்குகளில் வாழைமரம் கட்டுதல், சாம்பல் வாழைக்காய் மரத்துடன் கட்டுவது அன்றாட மரபாக அமைகிறது. இதன் பயன் துக்கத்தைத் தெரிவிப்பதன் பயனாக எடுத்துக்காட்டாக அமைகிறது. வாழைமரம் இலையில் பயன்படுத்தும் முறை : கும்பம் வைக்கும் போது தலை நுனிப் பக்கம் எப்பொழுதும் கிழக்குத் திசை அல்லது வடக்குத் திசையாக அமைத்து




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும்பம் வைக்க வேண்டும். இதுமட்டுமல்ல சாப்பிடும்போது தலை நுனி, இடக்கைப் பக்கமாக இருத்தல் வேண்டும். எனினும் அபரக் கிரியைகளுக்கு வாழை இலையின் தலைநுனி தெற்குப் பக்கமாகப் போடுதல் வேண்டும்.

## தென்னந் தோரணம்



தென்னங் குருத்து தோரணத்தின் நுனி கீழ்ப்பாகமாக இருக்கும் படியாக சுபகாரியங்களுக்கு அமைய வேண்டும்.



அபரக் கிரியைகளுக்கு மேற்பக்கமாக அமைய வேண்டும். தோரணத்தை வெட்டும் போது கவனமாக இருத்தல் வேண்டும்.

வினா : உலகத்திற்கு கருத்தா யாவர் ?
விடை : சிவபெருமான்.


வினா : சிவபெருமான் எப்படிப்பட்டவர்?
விடை : என்றும்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர்; எல்லாம் வல்லர்.

வினா : பாவங்களானவை யாவை ?
விடை : கொலை,களவு, கள்ளுக்குடித்தல், மாமிசம் புசித்தல், பொய் பேசுதல், வியபிசாரம், சூதாடுதல்.

("சைவ வினாவிடை"யில்
ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் பெருமான்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15. ஆலயக்கிரியைகள்



## 1. மகோற்சவம்



ஆலயங்களில் தினமும் நடைபெறும் கிரியைகள் நித்தியக் கிரியைகள் என்றும் விஷேடமாகச் செய்யப்படும் கிரியை நைமித்தியக் கிரியை எனவும் அழைக்கப்படும்.

இக்கிரியை வாரம், மாதம், வருடம் எனும் காலங்களில் வரும் விசேட தினங்களைச் சிறப்பாகக்கொண்டு நடைபெறும். நித்திய பூசைகளில் ஏற்படும் குறைகளை நீக்கும் பொருட்டு நைமித்திய பூசை நடைபெறும். வருடம் ஒரு முறை நடைபெறுவது மகோற்சவம் ஆகும். மகா என்பது பெரிய என்றும், உற்சவம் என்பது விழா எனவும் பொருள்படும். ஆன்மாக்களின் மலத்தை நீக்கி வீடுபேற்றை கொடுக்கும் பெரியவிழா என்று பொருள்படும். நைமித்தியக் கிரியைகளில் மகோற்சவம் சிறப்பானதொரு கிரியை ஆகும். இது இறைவனின் ஐந்தொழில்களை நினைவூட்டுகிறது. கொடிமரம் உள்ள ஆலயங்களில் கொடியேற்றம், தேர், தீர்த்தம் போன்ற உற்சவங்களும், கொடிமரமில்லா ஆலயங்களில் அலங்காரத் திருவிழாக்களும் இடம்பெறும்.

ஆலயத்தில் மகோற்சவம் தொடங்கிவிட்டால் மக்கள் வாழ்க்கையிலும் ஓர் உயிர்த்துடிப்பு ஏற்படுகிறது. இயந்திரமயமான வாழ்க்கை வாழுகின்ற மக்களது மனத்தின் சலிப்பை அகற்றி, உற்சாகத்தையூட்டி, மனப்பூரிப்பை ஏற்படுத்தி, வாழ்க்கையிற் பிடிப்பு ஏற்பட இது வழிவகுக்கின்றது.

மக்கள் ஒன்று சேர்ந்து கோயிலையும் வீதிகளையும் சுத்தம் செய்து, குலை வாழைகள் நாட்டி, தோரணங்கள் தொங்கவிட்டு, அலங்கரிப்பர். வீடுகளை சுத்தம் செய்வதுடன் விரதமும் மேற்கொள்வர்.

## மகோற்சவக் கிரியைகள்

### அனுக்ஞை (அனுமதி பெறுதல்)

கொடியேற்ற உற்சவம் செய்யும் ஆச்சாரியார் ஒரு தட்டிற் பச்சையரிசி பரப்பி இரண்டு தேங்காய், வாழைப்பழம், வெற்றிலை, பாக்கு, சந்தனம், மஞ்சள், சுவர்ணபுஷ்பம், பூ, மாவிலை, தர்ப்பை என்பவற்றை வைத்து தீர்த்தம் தெளித்து பூசை நிகழ்துவார். பின்பு அங்கு வந்திருக்கும் ஏனைய ஆச்சாரியார்களிடம் ஆசிபெற்று, பிள்ளையார், மூலமூர்த்தி, அஸ்திர தேவர், உற்சவமூர்த்தி ஆகிய தெய்வங்களுக்குப்பூசை ஆராதனை ஆற்றி உற்சவத்தை நன்முறையில் நடத்த அநுமதியும் ஆசியும் தந்தருளுமாறு வேண்டுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிராமசாந்தி

தீய சக்திகளாற் பெருவிழாவிற்கு இடையுறு ஏற்படாமல், மங்களம் உண்டாகும்படி காவற் கடவுளரான பைரவ மூர்த்திக்கு ஆற்றப்படும் கிரியை கிராமசாந்தியாகும்.

### வாஸ்துசாந்தி

நிலத்திலுள்ள குற்றங்குறைகளை நீக்குவதற்காக ஆலய மண்டபத்தில் அக்கினி காரியத்துடன் செய்யப்படும் கிரியை, வைக்கோல், தர்ப்பை முதலிய வற்றாற் செய்யப்பட்ட வாஸ்து புருஷனைப் பூசித்து சிவாக்கினியில் எரியச்செய்து பின், அவ்வுருவத்தை ஆலய மண்டபங்கள், வீதிகள் முதலிய இடங்களில் இழுத்து வந்து ஈசானத்தில் (வடகிழக்கு மூலையில்) போட்டு விடுவர். வெட்டிய நீற்றுப் பூசனிக்காயிற் குங்குமம் பூசப்பட்டு இதனுடன் எடுத்துச் சென்று போடப்படும். இக்கிரியையினால் இடசுத்தி ஏற்படுகிறது.

### மிருத்சங்கிரகணமும் அங்குரார்ப்பணமும்

மண்ணை மந்திர சகிதமாகப் பெறுவதே மிருத் சங்கிரகணமாகும். (மிருத் - மண், சங்கிரகணம் - சேர்த்தல்) நற்காரியங்களை தொடங்கும்போதும் நவதானியம் இடுதல் முக்கியமாகச் செய்யப்படும். இதனைப் 'பாலிகையிடுதல்' என்பர். ஆலயத்தின் வடகிழக்கு அல்லது வடக்குத்திசையில் இது செய்யப் படும். அங்குரார்ப்பண முறையானது நன்கு செழித்து வளர்ந்தால் நாட்டிலே தானிய விருத்தி சிறக்குமென்பது ஐதீகம். (அங்குரம் - முளை)

மேற்குறிப்பிட்ட கிரியைகள் யாவும் கொடியேற்ற விழா நடைபெறுவதற்கு முதல் நாள் இரவு நடாத்தப்படும் கிரியைகளாகும்.

### இரட்சாபந்தனம்

விழாக்கள் இடையூறின்றி நிறைவேற வேண்டுமென வேண்டுதல் செய்து, ஆச்சாரியார் தனக்கும் உற்சவ மூர்த்திகளுக்கும் காப்புக் கட்டுவர்.

இதனைத்தொடர்ந்து, உலகெங்கும் நன்மை உண்டாக வேண்டி ஆச்சாரியார் மூன்றுமுறை மேளமடிப்பார். இது பேரிதாடனமெனப்படும்.

### கொடியேற்ற உற்சவம்

கொடியேற்ற உற்சவம் மூலமூர்த்திக்குரிய ஊர்தியின் முன்னால் இடம்பெறும். கொடிச்சீலையில் மூலமூர்த்திக்குரிய ஊர்தி, அடையாளம் முதலியவற்றோடு கண்ணாடி, சூரிய சந்திரர், பூரணகும்பம் முதலியனவும் வரையப்பட்டிருக்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூலமூர்த்திகளும் அடையாளங்களும்

| | |
|---|---|
| சிவாலயம் எனில் | : இடபமும் சூலமும் |
| விநாயகர் ஆலயம் எனில் | : மூஷிகமும் (எலி) அங்குசமும் |
| சுப்பிரமணியர் ஆலயம் எனில் | : மயிலும் வேலும் |
| சக்தி எனில் | : சிங்கமும், சூலமும் |

கொடியேற்ற தினத்தன்று உற்சவமூர்த்தியை அலங்கரித்து கோயிலை வலம்வந்து கொடித்தம்பத்திற்கு முன்னால் எழுந்தருளச்செய்வர். ஆச்சாரியார் ஒருவரால் கொடிச்சீலை உள்வீதி வலமாகக் கொண்டுவரப்பட்டதும் மூலமூர்த்தியின் சந்நிதானத்தில் பூசை வழிபாடு ஆற்றப்படும். அதன்பின்னர் கொடித்தம்பத்திலுள்ள கயிற்றுடன் கொடிச்சீலையை இணைத்து வேத பாராயணத்துடன் கிரியைகள் ஆற்றுவர். கொடியேற்றும் ஆச்சாரியார் தேவர்கள் யாவரையும் அழைத்துத் தீர்த்தத் திருவிழா இடம்பெறும் வரை விக்கினங்கள் நிகழாது அருள் புரிய வேண்டுமென வேண்டுதல் செய்வர்.

சகல வாத்திய ஒலிகளுடனும் ஆச்சாரியார்களின் வேதபாராயணத்துடனும் கொடியைக் கொடித்தம்பத்தில் ஏற்றுவர். கொடிச்சீலையின் மறுமுனையைக் கொடித்தம்பத்தில் வலமாகச்சுற்றி வந்து தம்பத்தின் அடியிற் கட்டுவர். அவ்வாறு கட்டும் போது தம்பத்தின் அடியைச் சுற்றிலும் தர்ப்பைகளைப் பரப்பி இணைத்துக்கட்டுவர்.

இதனைத்தொடர்ந்து அலங்காரம் இடம்பெறும். பின் அவிப்பொருள் பலியிட்டதும், கொடித்தம்பத்திற்கு தூபதீப ஆராதனைகள் இடம்பெறும். கொடியேற்றும் ஆச்சாரியார் திக்குப்பாலகரைத் தியானித்து, அவர்களுக்குரிய வேதமந்திரம், ராகம், பண், தாளம், வாத்தியம், நிருத்தம் முதலியவற்றுடன் இறையருளைக் கொடித்தம்பத்தில் ஆவாகிப்பர்.

தீர்த்த உற்சவம் இடம்பெறும் தினமும் இருவேளைகளிற் கொடித்தம்பத்திற்கு அபிடேக பூசையாராதனைகள் ஆற்றப்படும்.

உற்சவ மூர்த்திக்கும் விசேடமான அலங்காரத்துடன் ஆராதனைகள் இடம்பெறும். வேதபாராயணம், திருமுறையோதல் என்பவற்றுடனும் தீவர்த்தி, கொடி, குடை முதலிய அலங்காரங்களுடனும் உள்வீதியில் நிகழும். உற்சவ மூர்த்தி ஈசான மூலையை (வடகிழக்கு) அடைந்தவுடன் யாகசாலையிற் பூர்ணாகுதியும் ஆராதனையும் நடைபெறும். இதன் பிற்பாடு உற்சவமூர்த்தி வெளிவீதியுலா வருவர். உற்சவ மூர்த்தி வீதியுலா வரும்போது தீட்சை பெறாதோர் மூர்த்தியைத் தரிசிப்பதாற் 'சாம்பவதீட்சை' எனும் தீட்சையைப் பெறுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்சவகாலத்திற் சுவாமி வீதியுலா வரும் வாகனங்கள் நாளுக்கு நாள் வேறுபடும். எந்த நாளில் எந்த வாகனத்தில் திருவுலா நடைபெறும் என்பதற்கும் அந்நாட்களில் உற்சவமூர்த்திக்கு எவ்வகை அலங்காரம் உரியது என்பதற்கும் நியதிகள் உண்டு. எனினும் அவ்வக்கோயில்களுக்குரிய ஐதீகத்துக்கும் வழமைக்கும் ஏற்ப இவற்றை அனுசரித்துக் கொள்வதை வழக்கிற் காண்கிறோம்.

கொடியேற்றம் தொடக்கம் தீர்த்தத்திருவிழா நிகழும் வரை நடைபெறும் உற்சவங்கள் இறைவனின் பஞ்சகிருத்தியங்களைக் குறிப்பன.

## கொடியேற்றம் - படைத்தல்

அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், கொடியேற்றம், திருக்கல்யாணம், ஆகியன இறைவனின் படைத்தற் தொழிலைக்குறிப்பன.

உயிர்களுக்கு நிலைக்களனான உடம்பு, உணர்வுக்கு வேண்டிய கருவி கரணங்கள், வாழ்க்கை நடாத்துவதற்கான இடங்கள், நுகர்ச்சிக்கு வேண்டிய பொருட்கள் ஆகியவற்றை இறைவன் உயிர்களுக்காகப் படைக்கின்றான். (தனு, கரண, புவன போகங்கள்) தனு என்பது உயிர்களின் கவசமான உடம்பு: கரணம் என்பது உடம்பில் உள்ள கருவிகள்: உயிர்கள் வசிக்க வேண்டிய உலகம் (புவனம்) : உடம்பில் நின்று உயிர் அனுபவிக்கும் சுக துக்க அனுபவங்கள் (போகம்)

கொடிமரம் பதியையும், அதிற் சுற்றப்பட்ட சீலை பசுவையும் (உயிர் களையும்) சீலையைச் சுற்றியுள்ள கயிறு பாசத்தையும் குறிக்கும். ஆசைகள் சம்பந்தமாக ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் இடையேயுள்ள தொடர்பைக் கொடிமரம், கயிறு சுற்றிய சீலை ஆகியன காட்டுகின்றன. கொடியேற்றம் என்பதன் பொருள், ஆணவம், வலிமை இழந்து, ஆன்மா ஆசைநீக்கம் பெறுதற் பொருட்டு திருவருளாகிய கொடியை ஏற்றுதல் என்பதாகும்.

## வாகனத்திருவிழா - காத்தல்

வாகனத்திருவிழா, அக்கினிகாரியம், பலி என்பன காத்தல் தொழிலைக் குறிப்பனவாகும். வாகனத்திருவிழா நடக்கும் நாட்களிற் உற்சவ மூர்த்திகள் உரிய ஊர்திகளில் திருவுலா வருவர். (தோன்றிய உலகங்களையும், உடம்பெடுத்த உயிர்களையும் உரிய கால எல்லை வரையிற் காப்பாற்றிக் கன்ம நுகர்ச்சிக்குத் துணை செய்வதே காத்தல்-திதி-எனப்படும்.)

## தேர்த்திருவிழா - அழித்தல் (சங்காரம் )

தேர்கள் பலவகைப்பட்ட சில்லுகளையும் உறுப்புக்களையும் கொண்டு விளங்குவன. இவை நான்கு பிரிவுக்குள் அடக்கப்படும். சதுரவடிவமான தேர் நாகரம் எனவும், எண்கோண வடிவமான தேர் திராவிடம் எனவும் வட்டவடிவானது வேசரம் எனவும் அறுகோண வடிவானதான தேர் அந்தரம் எனவும் அழைக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேர்த்திருவிழா, சூர்ணோற்சவம் என்பன அழித்தல் தொழிலைக் குறிப்பன வாகும். பல பிறவிகளிற் பிறந்திருந்து உழலும் உயிர்களை இளைப்பாற வைத்தல் அழித்தல் எனப்படும்.

சூர்ணோற்சவம் என்பது தீரத்த உற்சவம் நிகழும் முன் மஞ்சள் முதலிய திரவியங்களை உரலில் இடித்துப்பெறும் தூளை, சாணம், தைலம், நெய் முதலியவற்றுடன் சுவாமிக்குச் சாத்துதலாகும். சங்காரத்தொழிலை ஆற்றிய இறைவனைச் சாந்தப்படுத்துவதற்காகவே இக்கிரியை இடம்பெறும்.

## தீர்த்தத் திருவிழா - அருளல்

உற்சவ மூர்த்தி அஸ்திர தேவருடன் தீர்த்தம் நிகழும் இடத்தில் அஷ்திர தேவருக்கு முறைப்படி அபிடேகம் நடைபெறும். முதலில் ஆச்சாரியாரும் அஸ்திர தேவரும் தீர்த்தமாடுவர். இதனைத்தொடர்ந்து அடியார்களும் தீர்த்த மாடுவர். உயிர்கள் பக்குவ நிலையில் ஆசைகளை ஒழித்து வீடுபேறு எனப்படும் முத்தி அடைதலை இது குறிக்கும். மாலையில் கொடி இறக்கம் இடம் பெறும்.

## மௌன உற்சவத் திருவிழா - மறைத்தல்

உயிர்களிடம் இருவினையொப்பு (நன்மை தீமை இரண்டையும் ஒன்றாக எண்ணும் மனநிலை) மௌன நிலை வருவித்து, மலங்களை முதிர்விக்கும் அருட்செயல், மறைத்தல் எனப்படும். இதைத் தொடர்ந்து சண்டேஸ்வர உற்சவமும், ஆச்சாரிய உற்சவமும் நடைபெறும்.

## திருக்கல்யாணம்

தீர்த்தத் திருவிழாவையடுத்து மறுநாள் இடம்பெறும் உற்சவம் திருக்கல்யாணம் ஆகும். இது நம் போன்ற சாதாரண மக்கள் செய்யும் கல்யாணம் போன்றதன்று என்பதை நாம் உணர வேண்டும்.

திருக்கல்யாணம் என்பது, அருள்வடிவமான சக்தி அறிவுமயமான இறைவனோடு கலந்து பிரபஞ்சத்தை (உலகை) இயங்க வைப்பதைக் குறிக்கும். இதில் திருவூஞ்சலும் நடைபெறுவதுண்டு.

## பூங்காவனம்

திருக்கல்யாணம் உற்சவம் இடம்பெற்றதன் மறுநாள் பூங்காவன உற்சவம் இடம்பெறும். மக்களிடம் உள்ள கலையாற்றலை வெளிப்படுத்துவதற்காகவும் அதனால் மக்களின் மனதில் உற்சாகத்தை ஏற்படுத்துவதற்காகவும் இவ்வுற் சவம் இடம்பெறும். இவ்விழாவில் உற்சவ மூர்த்திகளை எழுந்தருளச் செய்து பூசை ஆராதனைகள் நிகழ்த்துவர். இதனைத்தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். கடவுள் எங்கும் நிறைந்தவர் என்பதை இவ்வுற்சவம் குறிக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாகனங்கள் காட்டும் தத்துவங்கள்

சில வாகனங்கள் வேறு பொருள்களையும் காட்டுகின்றன. ஒவ்வொரு மூர்த்திக்கும் சிறப்பாக ஒவ்வொரு வாகனம் உண்டு. ஒரு மூர்த்தியே பல வாகனங்களில் வருவதும் வழக்கம். பல மூர்த்திகளும் ஒரு மூர்த்திதானே!

## சில வாகனங்களின் பொருள்களைக் கீழ்க்காண்க


### இடபம் (எருது)



01. நான்கு கால்கள் நான்கு அந்தக்கரணங்கள் -இவை சக்தியில் ஒடுங்க சக்தி ஞானம் தோன்றும் - இஞ்ஞானம் பசு ரூபமாகிய பசு போதம் : இப்பசு ஞானத்திக்கு மேலான பதி ஞானத்திலே விளங்குபவர் சிவபெருமான்.
02. சமம், விசாரம், சந்தோஷம், சாது, சங்கம் ஆகிய நான்கு குணங்களும் தரும தேவதையின் நான்கு குணங்கள் : அவை கால்களாகும் : அத்தரும தேவதை தூய வெண்மையானது. அத்தரும தேவதையையே வாகனமாகக் கொண்டு அருள் செய்வர்.
03. ஒரு காலத்தில் தர்மதேவதையும் விஷ்ணுவும் வேண்டிக் கொண்டபடியால், அவைகளையே வாகனமாகக் கொண்டார் என்றும் கூறுவா் புண்ணிய வடிவான இடபத்தின்மீதே சிவபெருமான காட்சி கொடுக்கின்றார் என்பது பிரத்தியட்சம், பொறுமையே எருது என்றுஞ் சொல்வர்.

### மூஷிகம் ( பெருச்சாளி, மூஞ்சூறு, எலி எனப்படும் )

01. இது சிறப்பாக விநாயகருக் குரியது: கயமுக அசுரன் மூஷிகமாய் வர, அருள்செய்து, அவனை அடிமை கொண்டு வாகனமாக்கியது.



02. விநாயகர் ஓங்கார வடிவம் : அதனுள் பேரண்டங்கள் அடங்கும். அவைகளை அடக்கி யிருக்கும் பெரிய வடிவினை உடையவர். சிறிய மூஞ்சுறுவும தாங்கக்கூடிய அவ்வளவு சிறிய வடிவின ராயும் அமைய வல்லவர்.
03. ஆன்மா அளப்பெரிய பெருமையுடையது: அவ்வாறே நுண்மையுடையது : உடல் சிறியதாய் இருந்தாலும், உள்ளிருக்கும் ஆன்மா சிறியதல்ல : யானை உருவான பெரியவடிவத்தையும் அது தாங்க முடியும் : இன்னும் பலவாறும் கூறுவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மயில்



இது முருகப்பெருமானுக்குச் சிறப்பாக உரியது.

01. சூரபத்மனை வேலால் பிளந்து, ஞானமீந்து, மயிலாக்கி அடிமைகொண்டது.


02. முருகன் அழகுடையவன் : அதை விளங்க அழகுள்ள மயிலை வாகன மாக்கினார் : மயிலின் காலின்கீழ்ப் பாம்பு இருக்கிறது : அது குண்டலினி சக்தியைக் குறிப்பது : சக்தியை அடக்கி ஆளும் சக்தி வடிவேல் தான் என்பது.

03. திரோதான சக்தியாய், ஆன்மாக்களின் ஆணவ மலத்தை முதிர்வித்துப் போக்கி, அருட் சக்தியாய் நின்று, ஆட்கொள்பவர் தாமே என்பது.

04. பிரணவத்தை பீடமாய்க்கொண்டு மேலாய் விளங்குபவர் தாமே என்பது.

05. விந்து தத்துவமாகிய சத்தியே உலகத்தை விரித்துக் காட்டுவது : அச்சக்தியின் விரிவை விளக்கவே மயில் தோகையை விரித்து வாகனமாய் இருப்பது என்று இன்னொரன்ன பல கருத்துக்களைக் கூறுவர்.

## குதிரை



அசுவம், வாசி, முதலிய பல பெயர்பெறும்.

01. வேதமே குதிரையாய் உடையவர்.

| | |
|---|---|
| கால்கள் நான்கு | - அறம், பொருள், இன்பம், வீடு |
| காதுகள் இரண்டு | - கர்மகாண்டம், ஞானகாண்டம். |
| கண்கள் இரண்டு | -பரமஞானம், அபரஞானம். |
| முகம் | -விதி, ஊழ், முன்வினை, சஞ்சிதம் |
| வால் | - விலக்க வேண்டிய செய்கைகள் |
| முதுகு | - அண்ட கோடிகளின் திரட்சி |
| குளம்புகளின் மேற்பரப்புகள் | - சூரியர், சந்திரர் |
| சேணம் | - பிரபல சுருதி (வேதாந்தம்). |
| புறத்துள்ள சுழிகள் | - சிவாகமங்கள். |
| சதங்கை, சிலம்பு கிண்கிணி,மாலைகள் | } ஆகமங்கள் கூறும் மந்திரங்கள் |
| கடிவாளம் | - பிரணவம் |


அவ்வேதமாகிய குதிரையில் ஆரோகணித்து, புறச்சமயங்களாகிய படைகளை அழித்து, வெற்றி கொள்பவர் தாமே ஆதலால் வேதரூபர், வேதாந்தர் என்பது.

02. வாசி – சுவாசம் - மூச்சு : பிராணவாயுவை நடுநாடியிற் செலுத்தி, ஆறு ஆதாரங்களையும் கடந்து, மேலாதாரத்தில் உள்ள ஆயிரம் இதழ்க்கமலத்தில் சவாரி செய்து, அமிர்த பானம் பண்ணி நிற்கும் சிவயோகிகளுக்கு சிவபெருமான சுகோதையவாசிக்கு (குதிரைக்கு) மேலாய் விளங்கி நிற்பவர் என்பது பொருள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரதம் - தேர்

இது அண்டம், பிண்டம் இரண்டையும் விளங்கச்செய்வது.



| | |
|---|---|
| அச்சு | - மந்திர கலை |
| சக்கரம் | - சூரிய சந்திரர் |
| தட்டுக்கள் | - பதினான்கு உலகம் |
| ஆசனம் | - ஆகாயம் |
| கொடிஞ்சி | - புண்ணிய நதிகள், குளங்கள் ஆகியன |
| விதானம் | - நட்சத்திரங்கள் |
| மேல்விரி | - மோட்சலோகம் |
| சட்டங்கள் | - யாகங்கள் |
| திரைச்சீலை | - ஏழு சமுத்திரங்கள் |
| கலன்கள் | - கர்மேந்திரிய, ஞானேந்திரியங்கள் |
| முளைகள் | - அறுபத்துநான்கு கலைகள் |
| மணிகள் | - வேத உபாகம, தர்ம நூல்கள் |
| வில்லிற்கட்டிய மணி | - சரஸ்வதி |
| அம்பு | - விஷ்ணு |
| அம்பு இறகு | - வாயு தேவன் |
| அம்பின் கூர் | - அக்கினிதேவன் |


இத்தேரில் கங்கை முதலிய தேவ மாதர்கள் பாட, ஊர்வசி முதலிய நடன மாதர்கள் நடிக்க, சிவபெருமான் எழுந்தருளி, தேவர்கள் வேண்டு கோட்படி திரிபுரத்து அசுரர்களையும் அவர்கள் நகரங்களையும் புன்சிரிப்பால் அழித்து, அம்மூன்று அசுரர்களையும் ஆட்கொண்டு தேவர்களைக் காத்தது.

| | | |
|---|---|---|
| (அ) தாரகாட்சன் | - விஞ்ஞானகலர் | - ஆணவம் |
| (ஆ) கமலாட்சன் | - பிரளயாகலர் | - ஆணவமும் கன்மமும் |
| (இ) வித்தியுன்மாலி | - சகலர் | - மும்மலம் |

02 சரீரத்தில் ஆறு ஆதாரங்களுக்கு ஆன்மாவைச் செலுத்தி, நிரதிசய ஆநந்த ரூபியாய் அசையாமல் தேர்போல் நில் என்பதையும் கருதும்

03. திரோதான சக்தியின் விரிவைக் குறிப்பது என்பாருமுண்டு.

## ஐம்முக நாகம்




01. பாம்பு, நஞ்சு, மாணிக்கம், படம் மூன்றையும் மறைத்து, வேண்டும்போது வெளிப்படுத்தும் வல்லமை உடையது, தானும் புற்றில் மறைந்து வெளி வரும் தொழில் உடையது: அதுபோல, திரோதான சக்தி பக்குவம் வரும் வரையும் மறைந்திருந்து வேண்டும போது வெளிப்பட்டு ஆன்மாக்களுக்கு அருள்புரியுந் தன்மையுடையது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. குண்டலினி சக்தி பாம்பு வடிவானது : அதன் விரிவு, ஒடுக்கமே பிரபஞ்சத் தோற்றம், ஒடுக்கம், அச்சத்திக்கு நிமித்த காரணமாய் உள்ளவர் தாமே என்பது.

03. குண்டலினி சக்தியை ஆறாதாரங்களின் வழியாய்ச் செலுத்தும் போது, மூலாதாரத்திற்கு மேலாயுள்ள மற்ற ஐந்து ஆதாரங்களிலும் அது அடையும மாற்றத்தையே ஐம்முக நாகம் என்று உருவகப்படுத்திக்கூறுவர் யோகியர் என்பர்.


### யானை



01. விஷ்ணுவும், பரஞானமும்,பிரணவமும் முருகப் பெருமானை வேண்டி, யானை வாகனவடிவங் கொண்டு தாங்கிச் சென்றபடியால், விஷ்ணுவுக்கு மேலானவரும் பிரணவத்துக்கு மேலாய் அப்பொருளாய் இருப்பவரும், பரஞானத்தை கொடுப்பவரும் அவரே என்பதும்,

02. தும்பிக்கை போன்ற சுழுமுனா நாடிவழியாய்த் தன்னைத் தரிசிக்க வேண்டும் என்பதுமாம்.

### சிங்கம்



பொதுவாய் இது அம்மனுடைய வாகனம். துர்க்கை, காளி முதலிய மூர்த்திகளுக்கு இது வாகனம். பராக்கிரமத்தைக குறிக்கும். மிருகங்களை அடக்கி ஆள்வது போல, தேவியும் வேண்டுவாரு டைய கொடிய குணங்களை ஓட்டி, அடக்கி, ஆண்டருள் புரிவாள்.

### பூதவாகனம்

பஞ்ச பூதங்களிலும் நின்று விளங்குவோன் தானே என்பதையும், ஆன்மாககளுக்குக் கன்மானுகூலமான மரணாவஸ்தையை விதிக்கின்றவரும் தாமே என்பதையும் தருவது.

### சேவற்கொடி

01. அது கூவும் பொருள்: கொக்கரக்கோ, கொக்கரக்கோ- கொக்கு- அர- கோ, கொக்கு- மாமரம்-சூரபத்மன், அர-அறுத்த, கோ- அரசன். எனவே மாமரமாய் நின்ற சூரனை அறுத்து, தேவர்கள துன்பத்தைப் போக்கிய அரசர்க்கரசனாகிய முருகா!

02. முருகனின் சிறப்பு வாகனம். நாத தத்துவத்தைக் குறிக்கும். மேலும் ஆடு, பல்லக்கு, காராம்பசு போன்ற சில வாகனங்களும் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2. கும்பாபிஷேகக் கிரியை விளக்கம்

'பிரதிஷ்டா' என்பது 'சிறப்பாக நிற்றல்' என்று பொருள்படும். இறைவன் ஆலயத்திலே சிறப்பாக நிற்கும் பொருட்டு செய்யப்படும் மங்களகரமான கிரியைகள் கும்பாபிஷேகம் என்று அழைக்கப்படும். ஓர் ஊரில் மகாகும்பா பிஷேகம் நடைபெற்றால் தெய்வ சாந்நித்யம், ஊர்ச் சிறப்பு, நகரச்சிறப்பு, மக்கள் செல்வச்சிறப்பு, உயர் கல்விச் சிறப்பு, அரச நீதிச்சிறப்பு, மனத்தில் சாந்தி, சுபீட்ச வாழ்வு, உலக நன்மை என்பன கிடைக்கும்.



இறைவனை பரம் பொருளாக வைத்துப்பேசும் சிறப்பு நூல்களே சிவாகமங்கள் ஆகும்.சிவாகமங்கள் இருபத்தெட்டிலும் இறைவனை வழிபடும் முறையை விளக்கும் பகுதியே கிரியா பாதம் எனப்படும்.இதில் கிரியைகளுக்கே முதலிடம் அளிக்கப்படும். திருக்கோயில்களில் செய்ய வேண்டிய கிரியைகளை மூன்று பகுதிகளாக அவை கூறுகின்றன. அவை:-

1. கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம்
2. பிரதிஷ்டாதி உற்சவாந்தம்
3. உற்சவாதி பிராயச்சித்தாந்தம்

கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் என்பதில் 'கர்ஷணம்' என்பது 'உழுதல்' எனவும், 'பிரதிஷ்டா' என்பது 'இறைவனைச் சிறப்புற விளங்கச் செய்தல்' என்றும் பொருள்படும். 'பிரதிஷ்டா திஷ்டதி அநயா ப்ரக்கிரியா சிவ: இதி பிரதிஷ்டா' என்று பிரதிஷ்டா என்னும் சொல்லுக்கு விளக்கம் உண்டு.எனவே உழுதல் முதல் கொண்டு இறைவனைச் சிறப்புற விளங்கச்செய்தல் வரையிலான கிரியைகளை விளக்கும் பகுதி கர்ஷணாதி பிரதிஷ்டாந்தம் என்று கூறப்படுகிறது. அதாவது எங்கும் நீக்கமற நிறைந்தும்.கடந்தும். உள்ளும் இருப்பவராகிய இறைவன் எந்தக்கிரியைகளினால் சாநித்யம் பெற்று சிறப்புற விளங்குகிறாரோ அதற்கு பிரதிஷ்டா மகா கும்பாபிஷேம் என்று சொல்லப் படும். இப்பிரதிஷ்டை ஆனது அநாவர்த்தனம், ஆவர்த்தனம் ,புனராவர்த் தனம், அந்தரிதம் என நான்கு வகையாக சிவாகமங்கள் கூறுகின்றன.

ஆலயத்தை ஆகமமுறைப்படி புதிதாக அமைத்து அங்கு இறைவனைப் புதிதாக பிரதிஷ்டை செய்தல். 'அநாவர்த்தனப் பிரதிஷ்டை' எனவும், பன்னெடுங்காலங்களுக்கு முன்பு நிர்மாணிக்கப்பட்ட ஆலயத்தில் நெடுங் காலமாக பூசைகள் நிகழ்ந்துவரும் வேளை எதிர்பாராதவாறு காடு படர்தல், மண்மாரி, தீபரவுதல், இயற்கை அனர்த்தம் முதலியவை நிகழ்ந்து ஆலயம் மறைக்கப்பட்ட பொழுது அவ்வாலயத்தை வெளிக்கொணர்ந்தோ அல்லது முன் போல் ஆலயத்தை நிர்மாணித்தோ நிகழ்த்தும் பிரதிஷ்டை "ஆவர்த்தனப் பிரதிஷ்டை" எனவும் ஆலயத்தின் விமானம், கோபுரம்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்டபப்பிரகாரம், ஆலய விக்ரகங்கள் ஆகியவற்றில் எவையேனும் வெடித்தோ, பிளந்தோ, சேதமடையின் பாலஸ்தாபனஞ்செய்து அவற்றை ஜீர்ணோத்தாரணம் செய்து (முன்பு போல் செய்து) பிரதிஷ்டை செய்தல் "புனராவர்த்தனப் பிரதிஷ்டை" எனவும், ஆலயத்தினுள் மக்களெவரேனு மிறப்பினும், மிருகங்கள் கொல்லப்படினும், விலக்கான பெண்கள் நுழையினும, கள்ளர், பைத்தியக்காரர்,நாய், கழுதை, பன்றி,குரங்கு வேதாகமங்களை நிந்திப் பவர்கள் நுழையினும் செய்யப்படும் பிரதிஷ்டை 'அந்தரிதப் பிரதிஷ்டை' ஆகும். இந்த அந்தரிதப்பிரதிஷ்டைக்கு சுபமுகூர்த்த நிர்ணயம் கிடையாது. முதற்கூறிய மூன்று பிரதிஷ்டைகளும் நல்ல சுபமுகூர்த்தத்திலே நிகழல் வேண்டும். திதி,வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் ஆகிய ஐந்து உறுப்புக் களான பஞ்சாங்க சுத்தம் முகூர்த்தத்தில் இருப்பது அவசியம். இலக்கினம் ஸ்திரராசியாக அமைவது உத்தமம்.உபய ராசியாக அமைவது மத்திமம். சரராசி அதமமாய் விலக்கப்பட்டது.கிரகங்கள் அனுகூலமான இடங்களில் இருக்கவேண்டும். கிரியைகளின் கிரமங்களை நோக்கும்போது கர்மாரம்பம் முதல் யாகாரம்பம் வரையுள்ள சாந்தி கர்மாக்கள் "பூர்வாங்கம்" எனவும், யாகபூஜை முதல் மண்டலாபிஷேகம் வரையான கிரியைகள் "உத்தராங்கம்" எனவும் அழைக்கப்படும்.

## கும்பாபிஷேகத்திற்குரிய சில முக்கிய கிரியைகள்

### பூர்வாங்கம்

**முகூர்த்த நிர்ணயம்** (கும்பாபிஷேகத்திற்குரிய நாளைத் தெரிவுசெய்தல்)

**ஆச்சார்ய வரணம்** (சிவாச்சாரியாரை கோவில் யஜமானன் தேர்ந்தெடுத்தல்)

**திரவிய விபாகம்** (கும்பாபிஷேகத்திற்குரிய திரவியங்களை பகிர்ந்து கொள்ளுதல்) இங்கு திரவியங்களில் இரண்டு பங்கு யாகத்திற்கும், ஒரு பங்கு அபிஷேகத்திற்கும், ஒரு பங்கு சிவாச்சாரியாருக்கும், இரண்டு பங்கு பிராமணர்களுக்கும், ஒரு பங்கு வேதாத்தியானத்திற்கும் ஒரு பங்கு தட்சணை முதலியன வற்றிற்கும், ஒரு பங்கு பிராமண போசனத்திற்கும், அன்னதானத்திற்கும், ஒரு பங்கு பரிசாரகர், வாத்தியக்காரர்கள், சிற்பி, தாசி, பரிசனங்களுக்கும், ஒரு பங்கு யாகத்திரவியங் களுக்கும் பங்கிடும் கிரியையே திரவிய விபாகமாகும்.

**திரவிய சுத்தி** (திரவியங்களைத்தூய்மைப்படுத்தல்)

**அனுக்ஞை** (உத்தரவு பெறுதல்) இதுசாங்கம், உபாங்கம், பிரத்தியாங்கம் எனும் மூன்றுவிதமாகச்செய்யப்படும்.

**கணபதி ஹோமம்** ( கணபதியைக் குறித்துச் செய்யப்படுவது)

**கிராம சாந்தி** (கிராமத்தில் வசிக்கும் பிரம்ம ராட்சதர்கள், பைசாசங் கள், பூதங்கள்,முதலியவற்றால் வரும் தோஷநீக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிரவேச பலி** (அசுரர்கள்,ராட்சதர்கள் ஆகியோரால் வரும் இடையூறுகள் நீங்க)

**ரக்ஷோக்ன ஹோமம்** (யாகசாலை மத்தியில் நிறுவிய கும்பத்தில் ரக்ஷோக்ன தேவதையை அவாகித்து வழிபடல்)

**திசா ஹோமம்** (ஆலயத்தின் முன்பக்கத்திலிருந்து நான்கு திக்கிலும் அகோர, பாசுபத, பிரத்தியங்கிர அஸ்திரர்களை வழிபாடு செய்து புரோட்சனம் செய்தல்)

**நவக்கிரகஹோமம்** (ஒன்பது கிரகங்களை வழிபாடு செய்தல் )

**வாஸ்துசாந்தி** (வாஸ்து நாதரை வழிபட்டு பூமிசம்பந்தமான தோஷங்களை நிவர்த்தி செய்வதற்கு)

## உத்தராங்கம்

**மிருத்சங்கிரகணம்** (மண் எடுத்தல்)

**அங்குரார்ப்பணம்** (பாலிகைச் சட்டியில் தானியம் விதைத்தல்)

**ரட்சாபந்தனம்** (சிவாச்சாரியாருக்கு காப்புக் கட்டுதல்)

**நயனோன்மீலனம்** (நூதன மூர்த்திகளுக்கு கண் திறத்தல்)

**ஜலாதிவாசம்** (நீரில் விக்கிரகங்களை கிழக்கு முகமாக நிறுத்துதல்)

**தான்யாதிவாசம்** (தானியங்களை விக்கிரகங்களுக்கு இடுதல்)

**பிரசன்னாபிஷேகம்** (இறைவனை எழுந்தருளப்பண்ணுதல்)

**கடஸ்தாபனம்** (கும்பங்களை அமைத்தல்)

**கலா கர்ஷணம்** (விம்பத்திலுள்ள கலைகளை கும்பத்தில் சேர்தல்)

**யாக சாலாப் பிரவேசனம்** (கும்பம் யாக சாலைக்கு எழுந்தருளுதல்)

**அக்கினி கார்யம், அக்கினி விபசனம்** (அக்கினியை குண்டத்துக்கமைய பிரித்தல், வசதிக் கேற்ப ஒன்று, ஐந்து, ஒன்பது, பதினேழு, இருபத்தைந்து, முப்பத்து மூன்று எனக்குண்டங்கள அமைக்கலாம்)

**யாக பூஜைகள்** ( யாக பூஜைகள் இரண்டு, நான்கு, ஆறு, எட்டு எனும் காலங்களில் நடைபெறவேண்டும்)

**ஸ்தூபிஸ்தாபனம்**
**தீபஸ்தாபனம்**
**யந்திரஸ்தாபனம்**
**விம்பஸ்தாபனம்.** (தூபி, விளக்கு, யந்திரம், விக்கிரகங்கள் முதலியவற்றை உரிய இடத்தில் வைத்தல்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| **அஷ்டபந்தனம்** | (மருந்துக்கள் சார்த்துதல்) |
| **தைலாப்யாங்கம்** | (எண்ணை சார்த்துதல்) |
| **விம்ப சுத்தி** | (விம்பத்தை மந்திரத்தால் புனிதப்படுத்தல்) |
| **ஸ்பர்சாகுதி** | (விம்பம், கும்பம், அக்னி என்பவற்றை தொடர்பு படுத்தல்) |
| **மகா பூர்ணாகுதி** | (அக்னியில் பூரணமான ஆகுதியை வழங்குதல்) |
| **தச தர்சனம்** | (பசு,ஆசாரியார்,கண்ணாடி, பூரண கும்பம், தீபம், கன்னி, சன்னியாசி, சுமங்கலி,எஜமான்,பக்தர்கள் எனும் மங்களங்களைத் தரிசனம் செய்தல் ) |
| **மண்டலாபிஷேகம்** | (45, 24,15,12 எனும் நாட்களில் செய்தல்) |

## 3. சங்காபிஷேகத் தத்துவம்

சங்கினால் செய்யப்படும் அபிஷேகம் சங்காபிஷேகமாகும். மண் குடத்தை விட செப்பினால் செய்யப்பட்ட குடம் 1000 மடங்கு விஷேமானது. அதனிலும் வெள்ளியினால் செய்யப்பட்ட குடம் 10.000 மடங்கு விஷேசமானது. பொன்னால் செய்யப்பட்ட குடம் 200,000 மடங்கு விஷேசமானது. இரத்தினத தினால் செய்யப்பட்ட காண்டாமிருகக்கொம்பு அதைக்காட்டிலும் இருமடங்கு விசேடம். அதைக்காட்டிலும் கடலில் தேங்கிய சங்கு கோடி மடங்கு விசேடம் என ஆகமங்கள் கூறுகின்றன.



| | |
|---|---|
| சங்கின் அதிதேவதைகள் | - சூரிய, சந்திரர்கள் |
| மத்தியில் | - வருணன் |
| நுனியில் | - கங்கா,ஸரஸ்வதி |
| அடியில் | - பிரமன் |
| நடுவில் | - புண்ணிய தீர்த்தங்களும் வீற்றிருக்கின்றன. |

சங்காபிஷேகம் அஷ்டோத்திர சதம்-108, அஷ்டோத்திர சகஸ்ரம் - 1008, எனும் இருவகையில் நடைபெறும். வலம்புரி, இடம்புரி எனும் இருவகைச் சங்குகள் உண்டு. பாபங்களை நீக்கும் தன்மை சங்கிற்கு உண்டு.

### உற்சவ காலங்களில் வாசிக்கப்படும் இராகங்கள்

| | |
|---|---|
| தீபாராதனையின் போது | - மிஸ்ரமல்லாரி, தேவாரம், திருப்புகழ் |
| யாகசாலை வரை சுவாமியுடன் | - மல்லாரி |
| யாகசாலை முதல் கோபுரவாசல் வரை | - திரிபுடதாள மல்லாரி |
| கோபுரவாசல் முதல் வெளிவரை | - தோடி, நாட்டை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| வீதிகளில் | - | ராகம், பல்லவி, கீர்த்தனை. |
| கோவிலுக்குள் | - | துரித காலத் திரிபுடைமல்லாரி |
| பள்ளியறைக்கு எழுந்தருளும்போது | - | ஆனந்த பைரவி, கேதார கௌளை |
| பள்ளியறையில் | - | நீலாம்பரி |

## தர்ப்பையின் சிறப்பு

தர்ப்பை விதைபோடாமல் வளர்வதாகும். இது புனிதப்படுத்தும் ஒரு உன்னதப்பொருளாக கருதப்படுகிறது. தர்ப்பை ஒன்பது வகையாகக் கூறப்படுகிறது.

| | | |
|---|---|---|
| விஸ்வாமித்ரம் | குஸம் | காஸம் (நாணல்) |
| யவை | அறுகு | கோதுமை |
| வழல் | நெற்பயிர் | முஞ்சிப்புல் |

இவற்றில் ஒன்றை தர்ப்பையாக பயன்படுத்தலாம். ஜபம், ஹோமம், தானம், வேதாத்தியானம்,பித்ரு தர்ப்பணம் இக்கர்மாக்களில் குசம்,பொன், வெள்ளி இவைகளில் ஒன்றை கையில் தரிக்க வேண்டும். தர்ப்பை நுனியுள்ளதாகவும், நீளமானதாகவும் இருக்கவேண்டும்.ஆனால் பாதைவழியின்பக்கத்திலும், மயானத்திலும்,ஆசனமாக உபயோகித்ததும், பித்ரு தர்ப்பணம், பிரம்ம யக்ஞும் இவைகளில் உபயோகிக்கப்பட்டதும், நகங்களால் கிள்ளப்பட்டதும், நெருப் பால் கொளுத்தப்பட்டதுமான தர்ப்பைகளை ஒருபோதும் உபயோகிக்கக் கூடாது.

## பவித்திர இலக்கணம்

நுனியுள்ள நீளமான இரண்டு தர்ப்பைகளை வலமாக முருக்கி மத்தியில் மடித்து அடி நுனிகளை ஒன்றாகச்சேர்த்து, பிரணவத்தினால் முடியவேண்டும்.

| | | |
|---|---|---|
| பவித்திரத்தின் நுனி | - | 4 அங்குலம் |
| முடிச்சு | - | 1 அங்குலம் |
| வலயம் | - | 2 அங்குலம் |


இருக்க வேண்டும். பவித்திரம் வலதுகை மோதிரவிரலில் அணியவேண்டும். பவித்திரத்தை அணிந்த பின்பு கையிருந்து அதை கழற்றினால் வலது காதில் தரித்துக்கொள்ள வேண்டும். வேறு எந்த இடத்திலும் வைக்கக்கூடாது.

| | | |
|---|---|---|
| தேவகார்யங்களுக்கு | - | 2 தர்பையாலான பவித்திரமும் |
| பித்ரு கார்யத்திற்கு | - | 3 தர்பையாலான பவித்திரமும |
| தகனம் முதல்15 மாசிகம் வரை | - | 1 தர்பையாலான பவித்திரமும் தரிக்க வேண்டும். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16. வீட்டுக் கிரியைகள்



இந்து மதத்தவர்கள் கிரியை வழிபாடு களிலும், சாஸ்த்திர சம்பிரதாயங்களிலும் மிகுந்த நம்பிக்கை கொண்டுள்ளனர். அவை எமது ஆன்மாவையும், உடலையும் புனிதப் படுத்து கின்றன. உணவுகளை சுத்தப்படுத்தி நாம் உண்ணு வது போல எமது ஆன்மாவையும், உடலையும் பரிசுத்தப்படுத்தி இறைவனிடம் சேர்க்க, கிரியை களும் சம்பிரதாயங்களும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்துமத வாழ்வில் செய்யப்படும் கிரியைகள் பூர்வம், அபரம் என இரு பகுதிகளாக நோக்கலாம். பூர்வக் கிரியையாவது ஒரு உயிர் கர்ப்பமாவது முதல் இறக்கும் வரை செய்யப்படும் கிரியைகளாகும். இவை நாற்பது "ஸம்ஸ்காரங்கள்" என்று கூறப் படும். "ஸம்ஸ்" என்பது நன்றாக என்றும், "காரம்" என்பது செய்யப்படுவது என்றும் பொருள்படும். அதாவது ஜீவாத்மாவை, பரமாத்மாவுடன் சேர்ப் பதற்காக நன்றாகச் செய்யப்படும் கிரியை எனப்படுகிறது.

அவற்றுள் கர்ப்பாதானம், பும்சவனம், சீமந்தம், ஜாதகர்மம், நாம கரணம், அன்னப்பிராசனம், சௌளம், உபநயனம், பிராஜாபத்தியம் முதலிய வேத விரதங்கள், சமாவர்த்தனம், விவாகம் பஞ்சமகாயக்ஞங்கள் என்பன சில முக்கிய ஸம்ஸ்காரங்களாகும். இவை யாவும் (அவற்றுள் சில பிராமணர்களுக்கு உரியது) பூர்வக்கிரியைகளில் அடங்கும்.

முதலில் செய்யப்படும் சம்ஸ்காரமான கர்ப்பாதானம் என்பது (கர்ப்பம் - கரு, ஆதானம் உண்டாக்குதல்) ஒரு ஜீவனை (உயிரை) உண்டு, பண்ணுதல் எனப்பொருள்படும்.

கர்ப்பம் உண்டானதில் இருந்து மூன்றாம் மாதம் அந்த ஜீவனின் நன்மை கருதி பும்சவனம் செய்யப்படும் என்பது பொது விதியாகும். இது ஆண் குழந்தை பெற வேண்டும் என்பதற்காக நடைபெறும். இதில் ஆலங்கொழுந்தை அரைத்துப் புது வெள்ளாடையில் வைத்து கட்டை விரலால் மனைவியின் வலது மூக்கில் விடவேண்டும் என்பது பும்சவன நியதியாகும். வலது பக்கம் ஆண் வலிமை அதிகம் இருப்பதால் இதன் முக்கியம் பெறுகிறது. தொடர்ந்து 6ம் மாதம் அல்லது 8ம் மாதம் நடைபெறும் சமஸ்காரம் சீமந்தம் எனப்படும். குற்றங்களைப் போக்க பன்றி முள்ளால் மனைவியின் வகிடு கீறுதல் சீமந்தம் ஆகும். வயிற்றில் உள்ள கர்ப்பம் (ஜீவன்) முழுமையான அங்கங்களுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவான உடல்பெற்று இருக்கும் பருவமாக ஆறாம் மாதம் கருதப்படுகிறது. ஆதலால் குழந்தையின் எந்த அங்கங்களும் குறைவுபடாமல் இருக்கவும், தாய் சுகப்பிரசவமாக நல்லறிவுக் குழந்தையை பெற்றெடுக்கவும் சீமந்தம் செய்யப்படுகிறது. இதில் கீதங்கள் பாடுதல், வளைகாப்பிடுதல் என்பன நடைபெறும்.

நற்குழந்தை பிறந்தவுடன் ஜாதகர்மம் செய்யப்படும். ஜாத - என்றால் பிறந்தவுடன் என்றும் கர்மம் - என்றால் செய்யப்படுவது என்றும் பொருள் படும். ஒரு குழந்தை பிறந்ததும் துஷ்ட தேவதைகளின் பாதிப்பு வரலாம் ஆதலால் அத்துஷ்ட தேவதைகளின் பாதிப்பு இல்லாமல் செய்வதற்காக தேவர் களின் ஆசி வேண்டி அக்னி வழிபாட்டோடு செய்யப்படும் கிரியையே ஜாத கர்மா எனப்படும்.



குழந்தை பிறந்து 10ம், 12ம் நாட்களில் பெயர் வைக்க வேண்டும் என மனுஸ் மிருதி சொல்கிறது. சிலர் 31ம் நாளிலும் பெயரிடுகின்றனர். ஜாத என்னும் கிரியை நாமகரணத்தோடு இக்காலத்தில் செய்வதும் உண்டு. பிறந்த நட்சத்திரத்தின் படியும், தெய்வாம்சம் பொருந்திய பெயராகவும், சந்ததிவழித் தோன்றல் பெயராகவும் அமைப்பது சிறப்பைத்தரும். குழந்தையின் பெயரை குழந்தையின் வலது காதிலே மூன்று முறை கூறி கற்கண்டு தண்ணீர் பருக்குவது முறை. சுற்றியுள் ளோருக்கும் இனிப்பு முதலிய உணவுகளை கொடுத்து மகிழ்வர். இந்நாளில் குழந்தைக்கு அரைஞாண் கட்டுதல், பஞ்சாயுத சங்கிலி, பஞ்சலோகத்திலான காப்பு, காற்சங்கிலி போன்றவை அணியலாம். அந் நகைகளை தகப்பன் அல்லது தாய்மாமன் மூலம் அணிவிக்கலாம்.

பிறந்த குழந்தைக்கு 11ம், 16ம், 21ம், 31ம் நாட்களில் ஆசௌசம் கழிக்க வேண்டும் தமிழில் துடக்குக் கழித்தல் என்பார்கள்

துடக்கு கழிக்கும் போது வேதியரை அழைத்து பிள்ளையார் பூசை, புண்ணியாவாசனம் முதலியன செய்து பஞ்சகவ்யம் பருகி ஆசௌசங்களை நீக்க வேண்டும். சுத்தப்படுத்திய வீட்டிலும் அவை தெளித்து தெய்வீகப் படுத்துவது வழமையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தோஷம் நீக்கிக் குழந்தையை வெளியில் கொண்டு வருதல் "உபநிஷ்க்ரமணம்" எனப்படும். இது அநேகமாக 41ம் நாள் கோயிலுக்கு சென்று வழிபாடு செய்வதையே குறிக்கின்றது.



குழந்தை பிறந்து 6ம், 7ம், 8ம், 10ம் மாதங்களில் காது குத்துதல் இன்று ஒரு சடங்காக நடைபெறுகின்றது. தமிழர் பண்பாட்டில் கடுக்கன் முக்கியமான தாக இருப்பதாலும், குழந்தைகட்கு அழகு சேர்க்கும் வகையில் இருப்பதாலும், இது செய்யப்படுகிறது. இதை கர்ணவேதனம், கர்ணபூஷணம் என்றும் அழைப்பர். தங்கத்தின் வழியாக பாயும் நீர் உடம்பு ஆரோக்கியத்திற்கு நல்லது. நல்ல விஷயங்களை செவியின் உள்ளே செலுத்த வேண்டும். தீய விஷயங்களை உள்ளே செலுத்தாது துளை வழியாக வெளியே விடக்காது குத்தல் வேண்டும் என்பதை இத்துளை குறிக்கின்றது. இது குழந்தையின் துடக்குக் கழிவென்றும் செய்வதுண்டு.



குழந்தை பிறந்து ஆறாம் மாதம் முதல் 8,10,12 முதலான இரட்டை மாதங்களில் ஒன்றில் ஆண் குழந்தைக்கும் ஐந்தாம் மாதம் முதல் 7,9,11ம் மாதங்களான ஒற்றை மாதத்தில் பெண் குழந்தைகட்கும் அன்னப் பிராசனம் செய்ய வேண்டும். இதை பால் பருக்கல், சோறு தீற்றுதல் எனத் தமிழில் அழைப்பர். இதில் உப்பு நீக்கிய சர்க்கரை அமுது அல்லது கற்கண்டு அமுது பொங்கி வழிபாடு செய்து சுபமுகூர்த்தத்தில் தங்க மோதிரத்தால் அவ்வமுதைத் தொட்டு தந்தை மூன்று முறை ஊட்டியும் மற்றோரும் ஊட்டி ஆசிர்வதித்தும் வாழ்த்துவார்கள்.



குழந்தைக்குப் பல் முளைக்க ஆரம்பிக்கும் போது பல்லுக் கொழுக்கட்டை அவிப்பதும் இன்று ஓர் சடங்காகிவிட்டது. இதைத் தாய்மாமன் மாமி குழந்தையின் தலைமீது வெள்ளைத் துணி போட்டு ஒன்பது கொழுக்கட்டைகளைக் கொட்டி குழந்தைக்கு ஊட்டி மகிழ்தல் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழநதை பிறந்து மூன்று அல்லது ஐந்து வயதில் வித்தியாரம்பம் அல்லது ஏடு தொடக்குதல் நடைபெறும். நவ ராத்திரிவிழா முடிவான விஜயதசமி யிலோ வேறு நல்ல நாளிலோ முதன் முதலாக கல்வி பயிற்று வித்தலை இது குறிக்கும்.



சௌளகர்மா எனப்படும் கிரியையும் முக்கிய நிகழ்வாகும். முடி இறக்குதல் என்ற பெயரில் இது தமிழில் வழங்கப்படும். கோயில்களுக்குச் சென்று முடி இறக்குதலை இன்றும் காணலாம். உதாரணமாக திருப்பதி போன்ற இந்தியத் திருத்தலங்களும், முன்னேஸ்வரம், கதிர்காமம் போன்ற ஈழத்துத் திருத்தலங்களையும் குறிப்பிடலாம்.

குழந்தை பிறந்து ஏழுவயதில் (சூத்திரர் அல்லாத வர்க்கத்தினர்) உபநயனம் எனும் கிரியை செய்யப்படும். சிலர் 9,11,13 எனும் வயதிலும் இதைச் செய்வதுண்டு.

உபநயனம் என்பது ஆன்மீக அறிவிற்கு மாணவனை குரு அழைத்து செல்லுதல் என்று பொருள்படும். உலகியல் பிறப்பு, ஆன்மீகப் பிறப்பு எனும் இரண்டைக் கொண்டதால் உபநயனம் செய்தவர்கள் இரு பிறப்பாளர் என்று சிறப்பிக்கப்படுகின்றனர்.

பெண் குழந்தை பிறந்து வளர்ந்து பருவமடைந்து தாய்மைக்குத் தகுதி உடையவளாக மாறும் நாள் பூப்படைதல் என்று கூறப்படும். இது 9 வயது முதல் 12 வயது வரையுள்ள காலப்பகுதியில் இடம்பெறும். இதுவே இன்று சாமர்த்தியச் சடங்கு என்ற பெயரில் நடைபெறுகின்றது.



பெண் பூப்படைந்து ஆசௌசம் கழியும் நாளில் சுத்தி புண்ணியாகம் செய்து, கும்பஜலத்தால் "ஸ்நானம்" செய்வித்து, கண்ணூறு கழியும் பொருட்டு, நிறைகுடம், நிறைநாழி, புட்டுக்கூம்பு, திருஷ்டி உருண்டை, குத்து விளக்கு போன்றவற்றால் ஆரத்தி எடுத்து திருஷ்டி கழிப்பது மரபு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17. திருமணக் கிரியைகள்



மானிடப் பிறப்பு எடுத்ததிற்கு அர்த்த புஷ்டியாய், அறம், பொருள், இன்பம், வீடு என்ற நற்பயன்களை அடைவதற்கு, ஒரு வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொள்வது "திருமணம்" என்ற இருமனம் இணையும் இனிய நாளாகும். விவாகம் எனும் கிரியை இந்து மதத்தில் மிக முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.

*"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய*
*மூவர்க்கும் நல்லாற்றின் நின்ற துணை"*

எனும் வள்ளுவன் வாக்கிற்கு இணங்க வாழ்வதற்கு விவாகம் என்பது முக்கிய பங்கு வகிக்கின்றது. விவாகம் என்பதற்கு சிறப்பாகச் சுமப்பது என்று பொருள் உண்டு. "வஹ்" எனும் வினையடி சுமத்தல் என்ற கருத்தைத் தருகிறது. ஆதலால் தர்ம காரியங்களைச் சுமந்து செய்ய வேண்டிய பொறுப்பு இந்த விவாகத்தில் நிச்சயிக்கப்படுகிறது. இத்தர்ம நியதியைக் கொண்டே இல் வாழ்க்கை இல்லறம் என்று போற்றப்படுகிறது. இது மங்கலத்தை தருவதால் கல்யாணம் என்றும், தெய்வத் தன்மை பொருந்திய மணமாதலால் தமிழில் திருமணம் என்றும் வழங்குவர். விவாகத்தில் ஐந்து அம்சங்கள் மிக முக்கியமானதாகும். அவை - வாக்தானம், கன்னிகா தானம், வரப்ரேக்ஷணம், பாணிக்கிரகணம், சப்தபதி என்பவையாகும்.

மணப் பெண்ணைப் பார்த்து தர்மத்தை செய்வதற்காக உன்னை ஏற்கிறேன் என்று கூறுவது வாக்தானமாகும் (தர்ம பிரஜார்த்தம் த்வாம் விருனீமஹே) பெண்ணைத் தருவதாக வாக்குக் கொடுத்தல் பெரியோர்கள் முன்னிலையில் இடம்பெறும். இது நிச்சயதார்த்தம் என்பதைக் குறிக்கும். பருவம் அடைந்த ஆண், பெண் ஆகிய இருவரின் ஜாதகப்படி விவாகப் பொருத்தம் உரிய ஜோதிடர் மூலம் முறைப்படி பார்த்து பொருத்தம் நிச்சயம் பண்ணின பிற்பாடு பெண்வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்கு நன்னாளில் சென்று தாம்பூலம் பரியாற்றம் செய்தல், அதாவது மங்களப் பொருட்களாகிய மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு, பழவகைகள், இனிப்புப் பலகாரத்துடன் சென்று திருமணத்தை நிச்சயித்தல், அதன் பின் திருமண நாளை நிச்சயித்து விட்டு பின் பெண் வீட்டுக்கு மாப்பிள்ளை வீட்டாரும் சென்று மேற்கூறியபடி தாம்பூலம் மாற்றுவர். இதவே நிச்சயதார்த்தம் எனப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொன்னுருக்கல்



மாங்கலியம் (தாலி) செய்வதற்கு நல்ல நாள் பார்த்து மாப்பிள்ளை வீட்டில், அல்லது ஆசாரி வீட்டில் பொன்னுருக்கல் செய்தல் வேண்டும். இதில் மணப்பெண் தவிர ஏனைய உறவினர்கள், நண்பர்கள் கலந்து கொள்வர். பெண் வீட்டார் இனிப்பு பலகாரம் கொண்டு வருவது சம்பிர தாயமாகும்.

மணமகன் வீட்டுவாசலில் முறைப் படி நிறை குடம், குத்து விளக்கு, பன்னீர் தட்டு, குங்குமம், சந்தனம் வைத்து வரவேற்க வேண்டும். அதே நாள் அல்லது பின்பு பெண்ணுகு உரிய கூறைப்புடைவை போன்றவற்றையும் கடையில் நல்ல நாளாகப் பார்த்து வாங்க வேண்டும்.

இதே நாள் பெண்வீட்டிலும், மணமகன் வீட்டிலும் தனித்தனியே அவர்களின் வளவில் ஈசான (வடகிழக்கு) மூலையில் முகூர்த்தக்கால் அல்லது கன்னிக்கால் ஊன்ற வேண்டும். இதற்கு இப்போது முள்முருங்கை மரத்தில் இருந்து ஒரு தடியை வெட்டி அதன் மேல் நுனியில் ஐந்து மாவிலைகளை மஞ்சள் பூசிய கயிற்றால் கட்டி சுமங்கலிப் பெண்களால் நவதானியம் இட்டு ஊன்றப்படும். முகூர்த்தக்கால் ஊன்றிய பின் இரு வீட்டாரும் திருமணச் சடங்குகள் முற்றாக முடிவடையும் வரை எந்தவிதமான துக்க நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்ளக் கூடாது என்பர்.

### மாப்பிள்ளை அழைப்பு



திருமண நாளன்று சுப நேரத்தில் தோழனுடன் பெண் வீட்டார் மாப்பிள்ளை வீட்டுக்குச் சென்று, மாப்பிள்ளையை மணப்பந்தலுக்கு அழைத்து வருவர். (மாப்பிள்ளை வீட்டில் பால் அறுகு வைத்து மாப்பிள்ளைக்குப் புனித நீராட்டுதல், தலைப் பாகை வைத்தல் போன்ற நிகழ்வுகளும், அதே போல பெண்ணுக்கும் புனித நீராட்டுதலும் நடைபெறும்.

மணப்பந்தலின் முன்றலில் நிறைகுடம் வைத்து மங்கள விளக்கேற்றி வைக்க வேண்டும். எல்லாக் காரியங்களுக்கும் முதலில் நாங்கள் வணங்கும் விநாயகரை (பசுவின் சாணத்தில் அல்லது மஞ்சள் மாவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளையார் பிடித்து) எழுந்தருளச் செய்து மலர் சூட்டி மங்களப் பொருட்களையும் வரவேற்புக்கு சந்தனம், குங்குமம், பன்னீர் முதலியவற்றையும் வைத்தல் வேண்டும். மாப்பிள்ளை தோழனுடன் வந்து சேர்ந்ததும், தோழன் மணமகனின் காலைக் கழுவுவார். தோழனுக்கு அன்பளிப்பாக மாப்பிள்ளை மோதிரம் போடுவது வழக்கம். இரு மங்கல மங்கையர் (சுமங்கலிகள்) ஆரத்தி எடுத்து திலகம் வைத்தும், மாமனார் மாப்பிள்ளைக்கு மலர் மாலை போட்டும் வரவேற்பது வழமை. (பிராமணக் கல்யாண வீடுகளில் காசி யாத்திரை, சமாவர்த்தனம் எனும் கிரியைகள் நடைபெறுவதும், ஊஞ்சல் ஆடுதலும் முக்கிய நிகழ்வாகும். இது வானத்திற்கும் பூமிக்கும் உள்ள தொடர்பு காட்டப்படும். இதில் மணமகள் இடது பக்கம் இருக்க வேண்டும்.) அதன் பின் மாப்பிள்ளையைத் தோழன் நிறை குடத்துக்கு வலமாக அழைத்து வந்து மணவறையில் அமர வைப்பர். மாப்பிள்ளையை வலது பக்கமாக அழைத்து வரவேண்டும். (அதாவது சிவாச்சாரியார் இருக்கும் பக்கமாக) முதலில் சங்கற்பம், பிள்ளையார் பூஜை, ஆசமனம், புண்ணியாகம், பஞ்ச கவ்வியசுத்தி போன்ற கிரியைகள் நடைபெறும்.

### பவித்திரம் அணிதல்

திருமணக் கிரியைகளைச் செய்யவிருக்கும் சிவாச்சாரியர், தான் செய்யப் போகும் கருமத்திற்கு இறைவனிடத்தும் பெரியோரிடத்தும் அனுமதி வேண்டுதலைத் (அனுக்ஞை) தொடர்ந்து சங்கற்பம் (அதாவது செய்யப் போகும் கிரியைகளுக்காக உள்ளத்தை உறுதி செய்து கொண்டு பவித்திரம் அணிதல்) இடம்பெறும். எந்தக் கிரியையும் இனிது முடிப்பதற்கு மேலான தலைவரான விநாயகப் பெருமானின் திருவருளை வேண்டி விநாயகர் பூசை முடிவில் மூவகை தத்துவங்களையும் நினைத்து நீரை உட்கொள்ளல் ஆசமனம் எனப்படும். உள்ளம் தூய்மையாகி ஆன்மா அருள்வழி நிற்க இக்கிரியை இடம்பெறும். இடத்தையும், பொருளையும் சுத்தி செய்வது புண்ணியாகம் செய்யப்படும் இக் கிரியையில் பஞ்ச கவ்விய பூசையும் இடம்பெறும்.

### அங்குரார்ப்பணம்

அங்குரார்ப்பணம் எனப்படுவது முளைப் பாலிகை (நவதானிய முளை) இடுதல். (அங்குரம் முளை, அங்குரார்ப்பணம் முளையிடுதல்) அதாவது முளைக்கும் விதைகளை பாலிகையிடல் என்பதாகும். அனைத்திலும் இந்தக்கிரியை உண்டு. திருமணத்தில் இதைச் செய்வதன் பொருள் நவதானியம் செழித்து வளர்வது போல இத் தம்பதிகளின் வாழ்வும் செழிப்புடையதாக அமையவேண்டும் என்பதற்காகவும், நவதானியம் எனப்படும். முளைப் பாலிகைகள் மனிதனால் விதைக்கப்பட்டு மனிததேவைக்காக பயன்படுத்துவது போல இல் வாழ்க்கையில் கணவன், மனைவி மற்றோருக்கும் தம்மால் இயன்ற உதவிபுரிந்து அறத்தோடும் என்றும் பாலிகை இடும் சுமங்கலிகள் போல மங்களமாய் வாழ வேண்டும் என்பதற்காகவும் இது நடைபெறும். மணமகன், மணமகள் என இருவருக்கும் தனித்தனியாக அங்குரார்ப்பணக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரியை செய்வது மரபு. (மணமகள் மணமகனுக்கு வலப்பக்கத்தில் இருப்பாள்)



## இரட்சாபந்தனம்

எடுத்த கருமம் இடையூறின்றி இனிது நிறைவேறவும், வேறு செயல் சிந்தனை இன்றிக் குறித்த கரும சிந்தனையில் மூழ்கி இருக்கவும், எல்லாப் பாவங்களையும் நீக்கிப் புனித மயமாக்க இந்த ரட்சா பந்தனம் செய்யப்படுகிறது. தமிழில் காப்புக் கட்டுதல் என்று கூறுவர். மண மகன், மணமகள் இருவருக்கும் தனித் தனியாக இந்தக் காப்புக் கட்டப்படும்.

மணமகனுக்கு ரட்சாபந்தனம் (காப்புக்கட்டி) முடித்து, பிறிதொரு இடத்தில் இருத்திப் பெண்ணை அழைத்து வருவார்கள். சில இடங்களில் மணமகன் அப்படியே இருக்கப் பெண்ணை அழைத்து வருவதும் உண்டு. இதற்கு காரணம் பெண்ணுக்கு காப்புக் கட்டாமல் மணமகனைப் பார்க்க கூடாது என்கின்ற ஒரு நியதியால் மணமகனைப் பிறிதொரு இடத்தில் அமரச் செய்கின்றனர். ஆனால் பெண் அழைத்து வரப்படும் போது முகத்திரை போட்டே அழைத்து வருவதால் மணமகன், மணவறையில் இருக்கவே பெண்ணையும் வைத்து காப்புக் கட்டலாம் என்கின்ற மரபிலும் இரு விதமாய் இக்கிரியை செய்வதுண்டு மாங்கல்யம் பெண்ணின் கழுத்தில் கட்டப்படும் வரை லட்சுமி, நாராயணராக மணமகனையும் பெண்ணையும் பாவனை செய்து தாலி கட்டியபின் சிவசக்தி ரூபமாக அமர்த்திக் கிரியை நிகழ்த்துவர். அதற்காகவே முதலில் பெண் வலது பக்கமும் ஆண் இடது பக்கமும் தாலி கட்டிய பின் ஆண் வலமாகவும் பெண் இடமாகவும் மாற்றி இருத்துவார்கள். விஷ்ணு தனது வலது மார்பிலேயே லட்சுமியைக் கொண்டுள்ளார். சிவன் தனது உடம்பின் இடது பாகத்தைச் சக்திக்கே கொடுத்துள்ளார் என்கின்ற தத்துவம் இதனைப் புலப்படுத்தும்.

இரட்சாபந்தனமான பின்பு ஆசாரியர் முறைப்படி சிவனதும், சக்தி யினதும் அருளைப் பெறுவதற்காக சிவ கும்பத்திற்கும், சக்தி கும்பத்திற்கும் பூசை செய்து வழிபாடு நடத்துவர். வாழ்க்கைக்கும் நவக்கிரகங்களுக்கும் தொடர்புண்டு. எனவே அவர்பால் வரும் குற்றங்களைப் போக்கியருளும்படி நவக்கிரகங்களுக்கு பூசை செய்யப்படும்.

கும்பத்திலே பூசித்த யாகே வர யாகே வரி (சிவசக்தி) யின் அருளை நிலைபெறச் செய்வதற்கு ஓம குண்டத்தில் அக்கினி காரியம் செய்யப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு வளர்க்கும் அக்கினி சிவாக்கினி எனப்படும். சிவாக்கினி பாவங்களை எரித்து வாழ்க்கைக்கு வேண்டிய தூய அருளை வழங்கும்.

## பிதுரர் ஆசீர்வாதம்

குடும்ப வாழ்வைத் தொடங்கும் போது அது தவறின்றி நடப்பதற்கு அக் குடும்பத்து முன்னோரது ஆசீர்வாதம் வேண்டும். அதற்காக முன்னோர்களாகிய பிதுரர்களை திருமணத்திற்கு அழைத்து அவர்களது ஆசியைப் பெறும் வகையில் செய்யப்படுவது நாந்தி சிரார்த்தமாகும். இது மணமகன் மணமகள் ஆகியோரின் தந்தையர்களால் செய்யப்படும்.

## கன்னிகாதானம்



பெண்ணை முறையாகப் பெற்றோர்களால் "தாரதத்தம்" செய்யவார்கள். ஒரு பொருளை இறுதியாகக் கொடுப்பதற்குத் தண்ணீர் விடுதல் முன்னாள் மரபு. இதற்குரிய கிரியையானது மணமகன், மணமகள் இருபகுதிப் பெற்றோரையும் அழைத்துச் சங்கல்பம் செய்து சம்பந்திகள் ஒருவருக்கொருவர் உபசாரம் செய்வது. (இது கிரியை முறையில் சொல்லப்படவில்லை சபை சிறப்பிற்காகச் செய்யப்படும் ஒரு சிறப்பாகும்.)

அதன் பின் கிழக்கு முகமாய் (மணவறையிலிருந்து சபையோரைப் பார்க்கும் வண்ணம்) மணமகளின் தந்தை அமர்ந்து, ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, பழம், எலுமிச்சம்பழம், தேங்காய், மஞ்சள் துண்டு, சில்லறைக்காசு, பொன், மலர் போன்ற பொருட்கள் தட்டில் வைத்து பெண்ணின் கையைத் தட்டிலே வைத்து, தந்தை தட்டையும் மகளையும் சேர்த்துப் பிடிக்க, சிவாச் சாரியார் மணமக்களின் வம்சாவழியை (மணமகளினதும், மணமகனினதும் தந்தை, தந்தையின் தந்தை பேரன் அவரின் தந்தை (பாட்டன்) ஆகியோரின் பெயர்களைக் குறித்து சிவாச்சாரியரிடம் திருமணக் கிரியைகள் தொடங்க முன் கொடுத்து வைப்பது உசிதம்) சபையோர் அறிய எடுத்துக் கூறி, மணமகளின் தகப்பனார் மணமகனுக்குத் தன்மகளைக் கொடுக்கும் போது பின்வரும் மந்திரப் பொருளைக் காணலாம்.

"அழகும், அறிவும், ஆரோக்கியமும் அமைந்த நன்கு அலங்கரிக்கப் பட்ட இந்தப் பெண்ணை நான் உனக்கு அளிக்கிறேன். அவள் தர்மம், செல்வம், அன்பு, அனைத்தையும் காப்பவளாக இருப்பாள்" என்ற கருத்துப்பட அம் மந்திரம் அமைந்திருக்கிறது.

இம் மந்திரத்தைக் கூறி தாயார் மூன்றுமுறை தண்ணீர் விட மங்கள வாத்தியங்கள் முழங்க கன்னிகையைத் தானமாக மணமகன் கையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பர். தண்ணீர் தாரையோடு கொடுத்தலால் இதற்கு தாராதத்தம் என்பர். ( தத்தம் - கொடுத்தல்) மணமகன் அவளைப் பெற்று

*"இல்வாழ் வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்*
*நல்லாற்றின் நின்ற துணை"*

என்பதற்கிணங்க வாழத் தயாராகிறான். இக்கன்னிகாதானத்தைச் செய்ய தாய் தந்தையர் இல்லாதோர் அவர்களுடைய அண்ணன், அக்கா தம்பதிகள், சித்தப்பா தம்பதியர் அல்லது நெருங்கிய உறவுத் தம்பதிகளை நியமிக்கலாம்.

கன்னிகாதானம் அக்கினி, விநாயகர், சிவன் பார்வதி முப்பத்து முக்கோடி தேவர்கள், வேதப்பிராமணர்கள், உற்றார், உறவினர்கள், சபையோர்கள் சாட்சியாக நிகழ்த்தப்படுவது.

### தாலிகட்டல்



தாலியிலே சிவலிங்கம் விநாயகர் அல்லது லட்சுமியினுடைய திருவுருவம் அமைத்தல் சிறந்தது. அதன் பின் ஒரு தட்டிலே மாங்கல்யம், கூறை, மாலை, கால் மிஞ்சி மற்றும் மங்கலப் பொருட்கள் வைத்து மணமகனின் தந்தை, தாய், சபை யோரிடம் ஆசி பெறுதல். பின் மணமகன் தனது கையால் மணமகளிடம் கொடுத்து கூறை மாற்றி வரச் செய்தல் இடம்பெறும். கூறைமாற்றி வந்ததும், மணப்பெண் மண மகனுக்கு வலப்பக்கம் வந்து அமர மாங்கல்ய பூசை செய்து மணமகன் எழுந்து வலது பக்கத்திற்கு வந்து சிவாச்சாரியார்கள் அவையோர்கள் ஆசீர்வதிக்க கெட்டி மேளம் முழங்க, கழுத்தில் தாலி கட்டுதல் நடைபெறும். தமிழில் மங்கல நாண் பூட்டல் என்று சொல்லப்படும்.

தாலி - என்ற சமஸ்கிருதச் சொல் பனை மரத்தைக் குறிக்கிறது. தால விருட்சம் என்றால் பனைமரம், தால என்பது பனை ஓலையையும் குறிக்கும். பழைய காலத்தில் தங்கத்திற்கு பதிலாக பனை ஓலையை பயன்படுத்தினர் என சிலகுறிப்புகள் உள்ளன.

ஆதி காலத்தில் மஞ்சள் கயிற்றினாலே தான் தாலி கட்டப்பட்டு வந்தது. தற்போது தங்கத்திலே கட்டுகின்றனர். இருப்பினும் சில குடும்பத்தினர் இன்னும் மஞ்சள் கயிறு மாங்கல்யத்திற்கு பாவிப்பது குறிப்பிடத்தக்கது. தாலி கட்டும் போது பின்வரும் மந்திரம் சொல்லப்படும்.

*"மாங்கல்யம் தந்து நானேந*
*மமஜீவன ஹேதுநா*
*கண்டேபத்நாமி ஸுபகே*
*துவம்ஜீவ சரதச்சதம்"*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருள் :-

"இது மங்கள சூத்திரம் நான் வாழ்வதற்கு ஏதுவானது. இதை உன் கழுத்தில் கட்டுகிறேன். சௌபாக்கியவதியே! நீ நூறு வருடங்கள் சுகமாக வாழ்ந்திருப் பாயாக" என்ற கருத்து காணப்படுகிறது.

தாலி கட்டும் போது அமங்கல வார்த்தைகள், தும்மல் போன்ற துர்சகுன ஒலிகள் கேட்கக்கூடாது என்பதற்காக கெட்டி மேளம் கொட்டப்படும். மாங்கல்யம் ஒன்பது இழைகளை உடையது.

1. வாழ்க்கையை உள்ளபடி புரிந்து கொள்ளுதல் 2. மேன்மை.
3. ஆற்றல் 4. தூய்மை
5. தெய்வீக நோக்கம் 6. உத்தமகுணங்கள்
7. விவேகம் 8. தன்னடக்கம்
9. தொண்டு

இவற்றை ஒரு பெண் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கருத்தில் மாங்கல்யம் அமைக்கப்பட்டுள்ளது.

சுபமுகூர்த்தத்தில் மணமகன் மணமகளின் வலப்புறம் சென்று வடக்கு நோக்கி நின்று, மாங்கல்யத்தை இரு கரங்களாலும் பெற்று ஒரு சுமங்கலி திரு விளக்கு ஏந்தி நிற்க கட்டுவது வழமை. தாலியில் மூன்று முடிச்சு இடம்பெறுதல்.

மணமகன் முதல் முடிச்சு போடுகிறான். இது கணவனுக்கு கட்டுப்பட்டவள் என்பதையும் இரண்டாம் மூன்றாம் முடிச்சு மணமகனின் சகோதரி போடுகிறாள். இது கணவனின் தாய் தந்தையர்க்கு கட்டுப்பட்டவள் என்பதையும் தெய்வத்திற்கு கட்டுப்பட்டவள் என்பதையும் குறிக்கும்.

**மாலை மாற்றுதல்**



தாலிகட்டி முடிந்தபின் மாலை மாற்றுதல் வாழ்க்கையில் உடலாலும், உள்ளத்தாலும் நாம் இருவரும் ஒருவரே என்ற தத்துவத்திற்கு ஏற்ப பெண்ணின் கழுத்தில் இருக்கும் மாலையை ஆணுக்கும், ஆணின் கழுத்தில் இருக்கும் மாலையை பெண்ணிற்குமாக மூன்று முறை கழற்றி மாற்றுவார்கள். பொதுவாக ஒருவர் கழுத்தில் போட்ட மாலையை இன்னொருவர் போடக் கூடாது என்பது சா திர விதி ஆனால் ஈருடல் ஓர் உயிர் போல கலந்து விட்டதனால் அன்பின் நிமித்தம் மாலையை மாற்றுகின்றார்கள். தொடர்ந்தும் மங்கலப் பொருட்களாகிய மஞ்சள், குங்குமம், பூ, வாசனைப் பொருட்கள், சீப்பு, கண்ணாடி முதலியவற்றை மணமகன் மணமகளிடம் கொடுப்பார். கணவன் மனைவியாக ஆனபின் தம் மங்கலக் கோலத்தை இருவரும் கண்ணாடியில் பார்த்து மகிழ்வர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பால் பழம் பருகுதல்

வாழ்க்கைத் துணை ஒருவருக்கொருவர் அமைந்த வேளை வாழ்க்கை என்றும் இனிப்பாக அமைய முதல் பானமாய் பாலும், பழமும் பருகுதல் வேண்டும். அத்துடன் கோ எனப்படும் பசு தரிசனமும் இடம்பெறும். (அல்லது திருவிளக்கு தரிசனம் செய்யலாம்).

### பாணிக்கிரகணம் (கைப்பிடித்தல்)



பாணிக்கிரணம் என்றால் மணமகனின் கையை மண மகன் பிடிப்பது என்று பொருள் இதைத் தமிழில் "கைப் பிடித்தல்" என்பார்கள். (பாணி - கையை, கிரகணம் - பிடிப்பது) இதன் போது "நீயும் நானும் முதுமையடைந்து விட்டாலும் கூட ஒருவரை விட்டு ஒருவர் பிரியாதிருப் போம் என்று உன் கையைப் பிடிக்கிறேன்" எனும் மந்திரம் சொல்லப்படும். ஆணின் வலக்கை பெண்ணின் வலக்கையைப் பிடிக்க வேண்டும்.

### ஏழடி நடத்தல் (ஸப்தபதி)

பெண்ணின் வலது கையைப் பற்றிக் கொண்டு வலது கால் பெருவிரலைப் பிடித்துக் கொண்டு மணமகன் புனிதமான ஏழடி வைத்தல் ஸப்தபதியாகும். (சப்த - ஏழு, பதி - அடி) அக்கினி எரியும் ஹோம குண்டத்தில் இருந்து அம்மி வரை ஏழு இடங்களில் நெல்போட்டு அந்த இடங்களில் மணமகன் தன் கையால் பெண்ணின் வலக்காலைத் தூக்கி வைத்து நடத்தி வருதல், ஞானி களால் வகுக்கப்பட்ட ஏழுக்குரியவை பல ஸப்த சாகரம், ஸப்த லோகங்கள், ஸப்த நாடிகள், ஸப்த கன்னி கைகள், ஸப்த வாரங்கள் போன்றவையைக் குறிப் பிடலாம். இவை வாழ்க்கையின் நடைமுறைக்கு முன்னுதாரணமாகவும், செயற்படவும், கேட்கவும், இரசிக்கவும் உதவுவன. கணவனானவன் தனது இஷ்டங்களுக்குப் பிரியமானவளாய்த் தன்னை சார்ந்த வகையில் இந்த ஏழடி மூலம் தன்னோடு சேர்த்துக் கொள்வதே இதன் பொருளாகும்.



இவ்வாழ்வில் பெறவேண்டிய ஏழு பொருள்களை இது குறிக்கும். அவற்றைப் பெறுவதற்கு இருவரும் ஒத்து முயற்சி செய்ய வேண்டும். ஏழு பொருள்களுமாவன உணவுப் பொருள், உடற்பலம், கடவுள் வழிபாட்டுடன் நல்வினை, மனச்சாந்தி, நல்லறிவு, சகல போகங்களும் காலத்திற்கு காலம் வரும் பொருள்களும் அவற்றால் வரும் சுகங்களும், யாகத்திற்கு நல்ல துணையாக இருப்பதுமான பொருளைத் தரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதை வேறுவிதமாகவும் சொல்வர் அதாவது.

| | | |
|---|---|---|
| ஓரடி | - | கடவுளுக்காக |
| இரண்டாவது அடி | - | கணவனுக்காக |
| மூன்றாவது அடி | - | சேர்ந்தோர் குலத்தைக் காக்க |
| நான்காவது அடி | - | அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு எனும் பெண்களின் குணநலன்களைப் பேண |
| ஐந்தாவது அடி | - | இருவரதும் அறிவு நல்வழியாக அமைய |
| ஆறாவது தடி | - | கலைகள் ஆறும் அன்புக் கணவனுக்குப் பொருந்தும் வரை ஊட்டப்பட உரியன. |
| ஏழாவது அடி | - | ஏழேழு பிறப்பும் கணவருடன் இன்புற்று வாழ வேண்டும் என்பதற்காக |

என இக்காலப்பாடல் பொருள் விளக்கம் தருகிறது.

### அம்மி மிதித்தல்



நான்கு மூலைகள் கொண்ட ஒரு கல்லை (அம்மி) வைத்து அதன்மேல் பெண்ணின் காலைத் தூக்கி வைத்து தனது கையால் கணவன் மிஞ்சியைப் பெருவிரலுக்கு அடுத்துள்ள விரலில் அணிவிப்பது முறை. கல்லிலே உள்ள நான்கு விட்டங்களும் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நால்வகைக் குண இயல்பைக் குறிக்கும். அதன் நடுப் பகுதியில் கணவன் பெண்ணின் காலைத் தூக்கி வைக்கும் போது இந்தக் கல்லைப் போல் உறுதியாய் தனது நிலையில் நின்று பிரியாது இளகாது தனது கணவன் மேல் உள்ள பற்றும் நீங்காது கற்பு நெறியில் நின்று விலகாது தன்னை உறுதியாய் நிலைப்படுத்த வேண்டும் என்பது பொருளாகும். பெண்ணின் வலது காலை (எட்டாவது அடி) மணமகன் கையால் தூக்கி அம்மியால் வைத்து பெரு விரலுக்கு அடுத்த விரலில் மெட்டி அணிவிப்பர். இந்தக் கல்லைப் போல் நிலையாக நின்று உன் எதிரிகளைச் சகித்துக்கொள். இது பெண்ணுக்குத் கற்பையும் ஒழுக்கத்தையும் தாங்கி வாழ்க்கையில் இன்ப துன்பங்களைக் கண்டு கலங்காமல் உறுதியான கொள்கைகளைக் கடைப் பிடித்து நடக்க வேண்டும் என்பதை உணர்த்துகிறது.

அம்மி ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு பெண்ணிற்கும் இன்றியமையாதது. அக்காலத்தில் மணப்பெண்ணைத் தீய ஆவிகள் அணுகா வண்ணம் காக்க இரும்பு வளையம் அணிவிக்கபபட்டது. இக்காலத்தில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளியால் செய்த மிஞ்சி அணிவிக்கப்படுகின்றது. வெள்ளி உலோகத்திற்கும் தீய ஆவிகள் விரட்டும் தன்மை உண்டு என்பதால் மெட்டி அணிதல் முக்கியமாகக் கருதப்பட்டது.

அக்கினியை வலம் வரும்போது கிழக்குப் பக்கத்தில் வைத்திருக்கும் மஞ்சள் நீர் நிறைந்த பாத்திரத்தில் இருக்கும் மோதிரத்தை இருவரும் தேடி எடுக்க வேண்டும். இது மூன்று முறை நடைபெறும். விட்டுக் கொடுத்து வாழ வேண்டும் என்பதை இது எடுத்துக் காட்டுகிறது.

### பிராயச்சித்தம்

குற்றங்குறைகள் தீர்ப்பதற்காகப் பிராயச்சித்த ஓமமும் கிரியைகளின் நிறைவில் தோழன் நெற்பொரியைப்பெற்று மண மகனின் கையில் கொடுக்க, மணமகன் தான் பெற்ற பொரியை மணமகளின் கையில் கொடுத்து (மணமகள் அதனை இரண்டு கைகளாலும் ஏற்றுக் கொள்ள) மணமகன் மணமகளின் கைகளை தன் இரு கைகளாலும் தாங்கி குருக்கள் அக்கினியில் சிருக்ஸ்ருவம் (யாககுண்டத்தில் நெய் சொரிவதற்காக மரத்தால் செய்யப்பட்ட யாளி போன்ற முன்பகுதியை உடையது) மூலம் நெய்சொரியும் போது அக்கினியில் இடுவர். "அக்கினி பகவானே சகல செல்வங்களையும் எமக்குத் தந்தருள வேண்டும்" என வேண்டுதல் செய்து (ஒரு நூலாசிரியர் சிறப்பாக நென் மலர் என்று வர்ணிக்கின்ற) நெற்பொரியைச் சொரிய வேண்டும்.

### அருந்ததி பார்த்தல்



கற்பு நெறியில் மிகச் சிறந்தவளாய் விளங்கியவள் அருந்ததி எனும் மங்கை. அவளின் சிறப்பினால் வானிலே நட்சத்திர மாக இன்றும் ஜொலித்துக் கொண்டிருக் கிறாள். பெண்ணின் கற்புநெறி பெரு மையை உணர்த்தவே அருந்ததி இருக்கும் திசை பார்த்து நமஸ்காரம் செய்வது மரபு. சில இடங்களில் அருந்ததிக் கெனக் கும்பம் வைத்து கும்பத்திலே பூ போட்டு வணங்கு வதும் உண்டு.

"அண்டல மீதுலவும் அருந்ததி என்னும் அருந்திறற் கற்பினாள் உன்னைக்கண்டதால் ஊறு படவொணாதென்னக் கருதி நீ கங்குலிற் கவிகை கொண்டது முறைதான்" என்று புகழேந்திப் புலவர் பாடியது இத்தொடர்பில் ஒரு நூலாசிரியர் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

அருந்ததி வசிட்டரின் மனைவி. சிறந்த பதிவிரதை வானத்தில் துருவ மண்டலத்திற்கு அருகில் ஏழு நட்சத்திரங்களுக்கு இடையில் வசிட்ட நட்சத்தி ரமும் அதன் அருகில் அருந்ததியும் இருப்பதாக புராணங்கள் கூறுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மோதிரம் போட்டு எடுத்தல்

இது கிரியையிலே கூறப்படவில்லை. மணமக்களுக்கு கூச்சம் தெளியவும், சபை சிறப்புக்காகவும் மோதிரத்தை மஞ்சள் கலந்த நீரில் போட்டு இருவரும் ஒரே சமயத்தில் கை விட்டு எடுக்க வேண்டும். மணமக்கள் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழ வேண்டும் என்ற தத்துவத்தையும் இது குறிக்கும்.

### அரசாணி



இது பத்ததியிற் கூறப்படவில்லை. இது தேசவழக்கம் போலும். அரசிலே சிவ பிரானையும் வேம்பிலே உமாதேவியாரையும் வழிபடும் வழக்கம் இன்றும் உண்டு. ஒரே இடத்தில் அரசும் வேம்பும் நட்டுப் பூசிப்பதுமுண்டு. ஆதலால் அரசு சிவனைக் குறித்தல் பெறப்படும். ஆல் விஷ்ணுவைக் குறிப்பதென்பர். அரசும் ஆலும் சிவனையும் சக்தியாகிய விஷ்ணுவையும் பூசிப்பதற்காக நடப்பட்டு அரசால் என்ற பேருண்டாகி அரசாணி என்று மாறியிருக்கலாம். இப்போது இவைகளுக்குப் பதிலாக முள்முருக்கு நடப்படுகிறது. கற்புநெறி தவறாது வாழவேண்டும் என்பதற்காக தரிசிக்கப்படுகின்றது. (இந்திரன் சபத்துக்குள்ளாகியதை முள்முருக்கு குறிக்கின்றது.) முருக்கு அரசு போலவே சிவ வழிபாட்டுக்குரிய மர மென்பர். அரசு, ஆல், முருக்கு ஆகிய மூன்றும் பிரமா, விஷ்ணு, ருத்திரனாகிய மும்மூர்த்திகளையும் பூசிப்பதற்குரிய மரங்கள் என்றும், இவை மூன்றையும் நடும் வழக்கமும் உள்ளதென்றும் கூறுவர்.

### வாழ்த்துதல்

இந்த நிகழ்வு மணமக்கள் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வேண்டும் எனப் பெரியோர்கள் மனமுவந்து ஆசீர்வதிப்பதாகும். அறுகானது நன்றாகப் பரவும் தன்மையும், இலகுவில் அழியாத தன்மையும் உடையதால், மணமக்கள் இருவரும் அதே தன்மையோடு சிறப்புற்று வாழவேண்டும் என்ற நோக்கில் அறுகைச் சேர்த்து மஞ்சள் கலந்த அரிசி போடுதல் அறுகரிசியாக வாழ்த்துவது மரபாகும். இவ்வறுகு அரிசி போடுவதில் மாறுபட்ட தன்மையைக் காண முடியும். சிலர் கீழ் இருந்து மேல் நோக்கியும், சிலர் மேல் இருந்து கீழ் நோக்கியும் ஆசீர்வதிப்பதுண்டு. இதில் சரியான முறை உச்சியில் (சிரசில்) மூன்று முறை இடுதலே ஆகும்.

(நிறைவு - மகிழ்வு - வெற்றி குறித்துப் பண்டைய நாளில் அறுகெடுத்து வாழ்த்தும் வழக்கம் இருந்து வந்தது. (சேக்கிழார் பெரியபுராணம் பாடி முடித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யானைமீதமர்ந்து வீதியுலா வரும்போது ஆரணங்கள் விரித்தோதி மாமறையோர் எதிர் கொண்டு, அறுகெடுப்ப வாழ்த்தெடுத்தார் அரம் பயர்களெல்லாம் என்பது திருத் தொண்டர் புராண வரலாறு - 88) அறுகிட்டு வணங்குதல் என்ற மரபு காலப்போக்கில் அறுகொடு நெல்லும் மலரும் கலந்து இடுதல் என்று மாறிற்று. நெல் அரிசியாகி அட்சதை இடுதல் என்றும் ஆயிற்று. அறுகும் அட்சதையும் மலரும் கலந்து இட்டு வாழ்த்துதல் அட்சதையிடுதல் என்று உலகில் வழக்கில் வழங்கக் காண்கிறோம்.)



## ஆரத்தி எடுத்தல்

திருமண நிகழ்வின் நிறைவாக மணமக்களின் கைகளில் கட்டிய காப்புக் களை அவிழ்த்து, பவித்திரங் களை கழற்றி வெற்றிலையில் வைத்துக் குருக் களுக்கு தட்சணையும் சேர்த்து வைத்துக் கொடுத்து மணமக்கள் ஆசீர்வாதம் பெறுவர். இதில் மணமக்கள் தங்கள் காப்புக்களைக் கழற்றுதல் வேண்டும். திருமணச் சடங்கின் முடிவில் ஆரத்தி எடுத்தல் இடம் பெறும். மணமக் களுக்கு "கண்ணூறு" (கண் திருஷ்டி) கழியும் பொருட்டு ஒரு தட்டிலே குங்குமம் தூவி அதன்மேல் மூன்று வாழைப் பழத் துண்டுகளில் நெய்தீபம் ஏற்றி இரு சுமங்கலிகள் வலது பக்கத்திலிருந்து இடது பக்கமாக மூன்றுமுறை சுற்றித்தீபத்தை அணைத்து மணமக்களுக்கு அக்குங்குமத்தை நெற்றியில் திலகமிட்டு விடுதல் நிகழும்.



ஆரத்தி எடுத்தபின் தோழன், மணமகன், மணமகள், தோழி என்ற வரிசை யில் மங்கள மேளம் முழங்க எல்லோரும் வாழ்த்த வீட்டினுள்ளே வலது காலை எடுத்து வைத்து மணமக்கள் செல்வார்கள். அவர்களுக்கு முன்னே பூரண கும்பம், மங்கள தீபம் என்பனவற்றை சுமங்கலிகள் கொண்டு செல்வர். வழிபாட்டறையில் அவற்றை வைத்து மணமக்கள் பெற்றோரின் ஆசியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18. ஏனைய கிரியைகள்

## 1. புதுமனை புகுதல்



நாம் வீடுகட்டத் தேர்ந்தெடுக்கும் நிலத்திற்குள் முதன்முதலில் செய்யும் பூஜையானது அத்திவாரமிடல். அதற்கு நாம் முறையாக சிவாச்சாரியரை அணுகி அவருடைய அறிவுரை ஆசியுடன் புண்ணிய இடங்களாய் விளங்கும் ஆலயங்களின் வீதிமண், மலைமண், ஆற்றுமண், புற்றுமண், ஆனைக் கொம்பினால் எடுத்த மண் (ஆனை தந்தத்தால் எடுத்த மண்), எருதுக் கோட்டு மண் (எருது பாதம் பட்ட மண்), குளத்து மண் போன்றவற்றை ஒரே அளவில் எடுத்துக் குழைத்து பெட்டி செய்து, அடிப் பேழையில் பள்ளம் செய்து அவற்றில் நவரத்தினக்கற்களைப் போட்டுத் தங்கத் தகட்டில் "வாஸ்து யந்திரம்" போட்டு ஈசான மூலையில் (வடகிழக்கு மூலையில்) வைத்துப் பூஜை செய்ய வேண்டும். வீட்டின் பெரியார் கையால் அதைக் குழியில் இட்டு அத்திவாரமிடல் வேண்டும்.

இதற்குரிய விளக்கம் யாதெனில் காலங்காலமாக எம் சந்ததியினரை வாழ வைக்கும் "கிரக லக்குமி" எனப்படும் வீட்டையும் எம்மையும் தாங்கி நிற்கும் பூமாதேவியே எம்மால் இயன்ற நவரத்தின, பொன், பொருள், தானங்கள் உமக்கு அர்ப்பணிக்கிறோம். அதைக் காலைவேளையில் சூரியபகவான் சாட்சியோடு மக்களுக்காகவே தம்மை அர்ப்பணித்து அவர்களுக்காகவே என்றும் இறைவனைப் பிரார்த்திக்கும் சிவாசாரியர்களின் துணையோடு முறையாக உமக்கு அர்ப்பணிக்கிறோம. எமது வீட்டு நிலத்தில், நீர்வளம், நிலவளம், பயிர்வளம் நிறைந்து நிற்க அருளவேண்டும் எனப் பிரார்த்திக்கும் பூஜையாகும்.

அதேபோன்று வீட்டு வேலைகள் நடைபெறும் காலம் வீட்டிற்கு முதல்நிலை, வளை என்பன சுப முகூர்த்தங்களில் வைக்கும்போது அதற்குரிய வர்கட்கு தச்சுவேலையாளிக்கு உடை, தட்சணை, தாம்பூலம் கொடுத்து உபசரித்து, அவர் மனம் மகிழ எமை வாழ்த்திட வழிசெய்யும் உபசாரமாக இது அமையும்.

வீட்டிலே வழிபாட்டறை அமைக்கும் போது கிழக்கு முகமாக அல்லது வடக்கு முகமாக அமைப்பது உத்தமமாகும். பொதுவாகவே வழிபாட்டறை தனிமையானதாகவும், பரிசுத்த இடமானதாகவும் அமைவது வீட்டிற்குச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வ போகங்களைக் கொடுக்கும். தீட்டுகள் (ஆசௌசம்) வரும் காலங்களில் வழிபாட்டறையை யாரும் அணுகாது மூடிவிடுதல் உத்தமம்.

## வீடு கட்டும்போது வரும் விடயங்களைக் கவனிக்க வேண்டும்

1. வாசல்கால் நிலை வைக்காமலும், தரை பூசாமலும், சுவரில் சுண்ணாம்பு அடிக்காமலும், மனைவி கர்ப்பமாக இருக்கும் காலத்திலும், இயற்கை உத்பாதம் நடக்கையிலும், வேதம் சொல்லாமலும், திருமுறை ஓதாமலும், வாஸ்து ஹோமம் செய்யாமலும் புதிய வீட்டில் கிரஹப் பிரவேசம் செய்யக் கூடாது. கிருகாரம்ப காலத்தில் இராசவாசல் மண் அல்லது புண்ணிய ஷேத்திர மண், மலைமண், ஆற்றுமண், புற்றுமண், நண்டுப் புற்றுமண், ஆனைக்கோட்டு மண், எருது கோட்டுமண், குளமண், கொழுமண், இவைகளைச் சமமாகக் கூட்டி பெட்டி செய்து, அடிப்பேழையில் பள்ளமாக்கி அதில் மாணிக்கம், வைடூர்யம், வைரம், நீலம், முத்து, புஷ்பராகம், மரகதம், கோமேதகம், பளிங்கு ஆகிய இரத்தினங்களை வைத்து மூடி தங்கத் தட்டில் வாஸ்து யந்திரம் போட்டு வாஸ்து பூஜையும், நவக்கிரக பூஜையும் செய்து யந்திரத்தைப் பழம்பாசியினாற் சுற்றி நிருதி அல்லது ஈசானத்தில் வைத்து அந்த இடத்தில் ஒரு மண்டல பூஜை செய்யவும்.

2. இயற்கை உத்பாதம் என்பது இடியுடன் கூடிய மழை காலம் மற்றும் புயல்காற்று, நிலநடுக்கம் உண்டாகும் காலம் வானத்தில் வால்நட்சத்திரம் தோன்றும் காலம் போன்றவை. இவை விலக்க வேண்டும்.

3. கிழமைகளில் செவ்வாய், சனி, விலக்கத்தக்கவை. கிரஹப் பிரவேசம் செய்யும் வீட்டுத் தலைவனின் ராசிக்கு எட்டில் சந்திரன் இருக்கும் காலமும் விலக்கத்தக்கவை. மேலும் நல்ல நாளும் கோளும் அறியாமல் பிரவேசிக்கக் கூடாது.

4. முதலில் பசு செல்வதால் லட்சுமி தேவி சந்தோஷம் அடைகிறாள்.

5. அடுத்து தம்பதிகள் குல தெய்வ, இஷ்ட தெய்வப் படங்களுடன் பிரவேசிப்பதால் முன்னோர்களும் கிரக தேவதைகளும் பிரியமடைகின்றன.

6. சுமங்கலிப் பெண் இல்லத்தில் உள்ளே செல்வதால் மஹாலஷ்மி வாசம் உண்டாகிறது. (ஸ்வஸ்தி வசனம் வேத கோஷம்) இவை இரண்டாலும் அபசகுனங்கள் விலகுகிறது.

7. நண்பர்கள் அன்று விருந்து உண்பதால் அக்னி அருளும், வாஸ்து தோஷமும் நீங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கூடுமானவரை பூஜை அறையும், கழிவறையும் பக்கத்தில் இல்லாமலும், சமையலறை கடந்து கழிவறை அடையாமலும் வாசலுக்கு நேர் கிணறு வைக்காமலும் முதலில் கட்டிய பிரதான வாயிலை மூடாமல் இருப்பதுவும் நல்லது.

9. **வாயிற் பொருத்தம்**
இடபம், மிதுனம், கர்க்கடகம், ராசியில் பிறந்தவர்களுக்கு கிழக்கு, வடக்கு வாயில் வீடும்; சிங்கம், கன்னி, துலாம் ராசியில் பிறந்தவர்களுக்கு கிழக்கு, தெற்கு வாயில் வீடும்; விருச்சிகம், தனுசு, மகரம் ராசியில் பிறந்தவர்களுக்கு தெற்கு, மேற்கு வாயில் வீடும்; கும்பம், மீனம், மேடம் இராசியில் பிறந்தவர்களுக்கு மேற்கு, வடக்கு வாயில் வீடும் உத்தமம். இராசிப் பொருத்தம், வாயிற் பொருத்தம் இரண்டும் பொருந்தில் உத்தமம். ஒன்று பொருந்தில் மத்திமம். இரண்டும் பொருந்தாவிடில் அதமம்.

10. **வீட்டின் நிலப்பிரமாணம்**
வீடு கட்டும் நிலம் ஆகக் குறைந்தது 80 முழ நீளமும், 78 முழ அகலமும் கொண்டதாக இருத்தல் வேண்டும். இப்பிரமாணத்துக்கு குறைந்தளவுள்ள நிலத்தில் வீடு கட்ட வேண்டி நேரிடின் நிலத்தின் அகலத்துக்குத்தக்க நீளத்தை அளந்து அவ்வளவு நிலத்தையும் புறம்பான காணியாக எல்லையிட்டு, அக்காணிக்குள் வீட்டு நிலம் வகுத்தல் நலம்.

11. **வீட்டுக்கு வாயில் வகுத்தல்**
மனையின் நீளத்தை 9 பாகமாகப் பகுத்து வலப்பாலில் 5 பாகமும், இடப்பாலில் 3 பாகமும் கழித்து மற்றொரு பாகமாக வாயில் வகுக்க வேண்டும்.

12. **வீட்டுக்குத் தோஷமுள்ளவை**
புதிதாகக் கட்டும் மனைக்கு கிழக்கு, தென்கிழக்கு, தெற்கு, தென்மேற்கு இத்திக்குகளிலே சமீபமாக வேறு வீடுகளிருப்பது தோஷம். இடையில் வழி இருப்பின் அதிக தோஷமல்ல. தன் வீட்டுக்குக் கிழக்கே இருக்கும் வீடு 87 முழத்திற்கும், தென்கிழக்கே, தெற்கே இருக்கும் வீடுகள் 73 முழத்திற்கும் தென்மேற்கே இருக்கும் வீடு 83 முழத்திற்கும் அப்பாலிருந்தால் தோஷமல்ல. வீட்டினுள் எதிருக்கெதிராய் ஒன்றையொன்று பார்க்கும்படி இரட்டைக் கூடங்கள் அமைக்கலாகாது. வீட்டின் பார்வையில தூலங்களின் குத்தாயினும் மூலைக்குத்தாயினும் காணப்படுவது தோஷம்.

13. **வீடு கட்டும் மாதங்கள்**
சித்திரையில் வடக்கு வாயில் வீடும், வைகாசியில் வடக்குத் தெற்கு வாயில் வீடுகளும், ஆடியில் கிழக்கு வாயில் வீடும், ஆவணியில் கிழக்கு மேற்கு வாயில் வீடுகளு : ஐப்பசியில் தெற்கு வாயில் வீடும்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்த்திகையில் தெற்கு வடக்கு வாயில் வீடுகளும், தையில் மேற்கு வாயில் வீடும். மாசியில் மேற்கு கிழக்கு வாயில் வீடுகளும், எழுந்திருப்பு முகூர்த்தத்தில் எல்லா வீடுகளும் கட்டத்தகும். ஆனி, புரட்டாதி, மார்கழி, பங்குனி மாதங்களில் வீடு கட்டலாகாது.

14. **கிருகப்பிரவேசத்துக்கு வேண்டியவை**
தீபம், விநாயகர், இலட்சுமி, சரஸ்வதி, படங்கள், பூரண கும்பம், புஷ்பமாலை, மஞ்சள், தாம்பூலம், பால், பழம், நைவேத்தியங்கள் உப்பு, நெல் முதலிய தானியங்கள், சுவர்ணம், வெள்ளி, நவரத்தினம், நவவஸ்திரம், ஆபரணம், இவைகளை மங்கல வாத்திய கோஷத்தோடு சுமங்கலிகள் கொண்டுவர வீட்டினுள் பிரவேசிக்கவும்.

15. **வீடு கட்டுவதற்கு ஆகாத இடங்கள்**
தெற்கு, மேற்குத் தாழ்ந்த பூமி, முக்கோண வடிவான பூமி, சந்நியாசிகள், பேய் பிடித்தவர்கள், பேய் வித்தைக்காரர்கள், சண்டாளர் வசித்த இடங்கள், கோயிலிருந்த இடங்கள், மயானம், யுத்தஞ் செய்த இடம் முதலியன வீடு கட்டுவதற்கு ஆகாதவை. துலா, கோபுரம், அரசு, வன்னி, வில்வம் இவைகளின் நிழல் வீட்டிற்படலாகாது.

**(நன்றி: திருக்கணித பஞ்சாங்கம்)**

## வீட்டின் திசைகளும் அமைப்பும்

**கிழக்குத் திசை , வடகிழக்குப் பகுதி**
கிணறு, பூஜை அறை, வரவேற்பு அறை, தண்ணீர்த் தொட்டி

**கிழக்குத் திசை, தென்கிழக்குப் பகுதி**
உணவருந்தும் அறை, சமயலறை, குளியலறை, கழிவறை.

**தெற்குத் திசை, தென்கிழக்குப் பகுதி**
வரவேற்பு அறை, படுக்கை அறை, மாடிப்படிகள்,

**தெற்குத் திசை, தென்மேற்குப் பகுதி**
படுக்கை அறை, அலுவலகம்,

**மேற்குத் திசை, தென்மேற்குப் பகுதி**
தண்ணீர்த் தொட்டி, பொருட்கள் வைக்கும் அறை, குளியலறை

**மேற்குத் திசை, வடமேற்குப் பகுதி**
படுக்கை அறை, மாட்டுத்தொழுவம், தண்ணீர்த்தொட்டி

**வடக்குத் திசை, வடமேற்குப் பகுதி**
வரவேற்பறை, படிக்கும் அறை, குளியலறை

**வடக்குத் திசை, வடகிழக்குப் பகுதி**
பூஜை அறை, கிணறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. ஷஷ்டியப்த பூர்த்தி



மனிதனது ஆயுட்காலத்தில் பன்னிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை இயற்கையாகவும் கிரஹங்களின் சேர்க்கையாலும் ஏற்படும் மாற்றங்கள் மனித வாழ்விலும் சிற்சில தோஷங்களை ஏற்படுத்துகின்றன. அவற்றை அகற்றிக் கொள்வதற்கும் ஸந்ததியின் நலத்திற்கும் திடகாத்திரத்திற்கும், நிறைந்த வாழ்வுக்கும், நீண்ட ஆயுள் விருத்திக்கும் வேண்டி சில சாந்தி கர்மாக்கள் கட்டாயமாகச் செய்ய வேண்டுமென்று சாஸ்திரங்கள் விரிவாக எடுத்துக் கூறுகின்றன.

அவற்றுள் அறுபதாம் ஆண்டு ஜன்ம நட்சத்திரத்தில் செய்யப்படும் "ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தியும்" எண்பதில் இருந்து எண்பத்தி நான்கு வயதிற்குள் செய்யப்படும் "சதாபிஷேகமும்" அவசியமான சாந்தி கர்மாக்கள் என சாஸ்திரங்களில் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன.

சாந்தி கர்மாக்கள் நித்தியம், நைமித்திகம், காமியம், சாந்திகம், பௌஷ்டிகம் எனப்பல வகைப்படும். அறுபதாம் ஆண்டு ஜன்ம நட்சத்திர நிமித்தம் செய்வதால் "ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி" நைமித்திகம் என்றும் சிலர் கூறுவர். எவ்வாறாயினும் இது ஷஷ்டியப்த பூர்த்தி என வழங்கப்படுவதால் செய்பவருக்கும் அவரது குடும்பத்திற்கும் சந்ததியினருக்கும் (பிள்ளைகளுக்கும்) உண்டான எல்லாத் தோஷங்களையும் போக்கிக் கொள்ளச் செய்யப்பட வேண்டிய அவசியமான கர்மா என ஏற்படுகின்றது.

வழக்கத்திலே ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தி எனக் கூறினாலும் இதனை ரிஷிகள் "உக்கிர ரத சாந்தி" என்ற பெயராலேயே அழைக்கின்றனர். ஒன்றுக்கொன்று சிறிது வேறுபாடுகள் இருந்தாலும் பொதுவாக முக்கிய கர்மாக்களில் மாற்றமில்லை என்பதை சௌனகர், போதாயனர், சைவாகமம் என்பன இதை உக்கிர ரத சாந்தி என்றே கூறுவதிலிருந்து அறியலாம்.

சாந்தி என்ற பெயரால் உதக சாந்தி, ருது சாந்தி ஷஷ்டியப்தபூர்த்தி சாந்தி என்ற கர்மாக்கள் அழைக்கப்படுகின்றன. உபநயனத்திலும் சீமந்தத்திலும் பொதுவாக கர்த்தாவிற்கு ஏற்பட்ட ஸர்வ தோஷங்களையும் வேத மந்திரங்களால் ஜபிக்கப்பட்ட தீர்த்தத்தைக் கொண்டு போக்கிக் கொள்ளலாம். இது உதக சாந்தியாகும். பெண் ருதுவான காலத்தில் திதி வார, நட்சத்திரங்களால் ஏற்படும் தோஷங்களை அகற்றிக் கொள்வதற்கும், கன்னித் தோஷங்களை நீக்கியும், பெண்ணின் சௌபாக்கியங்களுக்கும் செய்யப்படுவது ருது சாந்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஷஷ்டியபத பூர்த்திசாந்தியிலும் அறுபதாம் ஆண்டு ஜன்ம நக்ஷத்திரத்தில் கிரஹங்களாலும், மற்றும் பல வகையாலும் ஏற்பட்ட தோஷங்களை அகற்ற பல தேவதைகளுக்கு பிரத்தியேகமாக கும்பங்கள் வைத்தும் குறிப்பிட்ட தேவதைகளை அதில் ஆவாஹனம் செய்து, மந்திரங்களை ஜபித்தும், ஹோமங்களைச் செய்வதும், தீர்த்த ஸ்நானம் செய்வதும், தானாதிகளைச் செய்வதும் மிகவும் முக்கியமானவைகளாக அமைகின்றன.

இக்காலத்தில் இச்சாந்தியை செய்யாது விடின் மரணத்துக்குச் சமமான கஷ்டங்களும், நஷ்டங்களும் தன அழிவு, மனைவி மக்கள், சுற்றத்தவர்கள், உறவினர்கள் ஆகியோர்களை இழக்க நேரிடுதல் போன்ற துர்ப்பாக்கியங்கள் ஏற்படும் எனச் "சௌனகர்" தெளிவாகக் கூறியுள்ளார். இதற்கான சாந்தி செய்யும் முறையையும் அவரே பின்வருமாறு கூறியுள்ளார்.

உக்ரநாதன் என்ற மிருத்யுவைப் போல் சுவர்ணப் பிரிதிமை ஒன்று செய்து, கலசத்தில் வைத்து பிரஜாபதி, யமன் என்ற அதிதேவதை, ப்ரத்யதி தேவதை, நவக்கிரகங்கள், திக்பாலகர்கள், நதிகள், சிரஞ்சீவி எழுவர், துர்க்கை, கணேசன், வருணன், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் முதலியவர்களை முறையாக ஆச்சார்யரைக் கொண்டு ஆவாஹனம் செய்து பூஜிக்க வேண்டும். இவற்றில் பிரதான தேவதையாக உக்ரனும் அதிதேவதையாக பிரம்மாவும், யமனும், உபதேவதைகளாக நவக்கிரஹங்களும், திக்பாலகர்களும், சப்தசிரஞ் சீவிகளும் தேவதைகளாக துர்க்கை, கணேசர், விஷ்ணு ஆகியோர்களையும் முறைப்படி பூஜிக்கப்பட வேண்டும்.

அன்னம், நெய், பாயாசம், எருக்குசமித்து, எள்ளு இவைகளால் நூற்றெட்டு முறை ஹோமமும் நவக்கிரஹ ஹோமமும் அதற்குரிய தான சமித்துக்கள் தான்யவகைகளுடன் விரிவாகச் செய்து கலச தீர்த்தங்களைத் தம்பதியருக் அபிஷேகிக்க வேண்டும். அபிஷேகத்தின்போது, வேதமந்திரங்களான திக்பால மந்திரங்கள், ஆயுஷ்ய சூக்தம், மிருத்து சூக்தம், ஸ்ரீ சூக்தம், புருஷ சூக்தம் முதலிய ருத்திராதி சூக்தங்களையும் புராணமந்திரங்களையும் சொல்ல வேண்டும் பிரதிமையை கலசங்களுடன் ஆச்சார்யருக்கு அளித்து இயல்பிற் கேற்றவாறு யாகம் செய்யும் வேதியர்களுக்குத் தட்சணை கொடுப்பதோடு பிராம்மணர்களுக்கு வேட்டி, நெய், கம்பளம், பசு, இரும்பு, பொன், தானியவகைகள் போன்ற அறுபது வகையான தானங்கள் கொடுத்து விப்ர போஜனமும் (உணவு) செய்விக்க வேண்டும். இவ்வாறு செய்வதனால் ஸர்வாரிஷ்டங்களும் சாந்தி யடைந்து தம்பதி சமேதராகவும், புத்திர பௌத்திரர்களோடும் நீண்டகாலம் சுகமாக வாழ்வார்கள் எனச் சௌனகர் கூறுகின்றார். இவ்வாறு சாந்தி பரிகாரம் செய்து ஆரோக்கியமாகவும், திடகாத்ரமாகவும் இருந்து கொண்டு பாவங்களைப் போக்கி, தானங்களால் புண்யங்களைப் பெற்று, தர்மங்களால் பிறருக்கு உபகாரியாக இருந்து கொண்டு தெய்வத்திற்கு சமமான அந்தஸ்து உடையவராக ஆகிறார்கள் என்பதே இவைகளின் தத்துவமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“சாந்தி ரத்நாகரம்” என்ற நூலில் ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தியைப் பற்றி ஸௌனகர், போதாயனர், சைவாகமம் என மும்முறைகளில் கூறப்பட்டிருக்கின்றது. பூஜைக்குரிய தேவதைகளுக்கு தனித்தனியாக கலசங்களை வைத்தும், வகைக்கொன்றாக கலசங்களை வைத்து தேவதைகளை ஆவாஹனம் செய்தும், ஒரே கலசத்திலேயே தேவதைகள் அனைவரையும் ஆவாஹனம் செய்து பூஜிக்கலாம் எனவும் கூறப்பட்டுள்ளது.

இதில் சைவாகமம் மிகவிரிவாக இச்சாந்தி முறைகளை இரு நூற்றித் தொண்ணூறு (290) கலசங்களுடன் செய்யுமாறு விபரிக்கின்றது. இதிலே குறிப்பிட்ட தேவதைகளுக்கொரு கலசமாக முப்பத்தி நான்கு கலசங்கள் வைத்து ஒரு பட்சமாகவும், அறுபது கலசங்கள் வைத்து இன்னொரு பட்சமாகவும், செய்வதுண்டு.

சிவாகமோத்த உக்ர ரத சாந்தியிலே இரு நூறு (200) கலசங்களுக்கு பூஜை செய்யுமாறு சொல்லப்பட்டுள்ளது. பிரதான தேவதை ம்ருத்யு, தெற்கேயும், வடக்கேயும் முறையே உக்ரனும், ம்ருத்யுஞ்சயனும் உப தேவதைகளாக ஏழு சிரஞ்சீவிகள் 60 வருடங்கள், தட்சணாயனம், உத்தராயணம், ஆறு ருதுக்கள், பன்னிரண்டு மாதங்கள், சுக்கில கிருஷ்ண பட்சங்கள், திதிகள், நட்சத்திரங்கள், தை முதலான மாதங்கள், அஷ்டவசுக்கள், வ்ருஷ்கம்பாதி யோகங்கள், கரணங்கள் ஸ்த்யோஜாத பஞ்ச ப்ரஹ்மங்கள், சைலபுத்திரி முதலான நவதுர்க்கைகள், பிரம்மா, விஷ்ணு, ருத்திரன், கணபதி, க்ஷேத்திரபாலர், அபயங்கரர், 12 ராசிகள், 7 மருத்துக்கள், பதினொரு ருத்ரர்கள், பன்னிரண்டு ஆதித்யர்கள், ஆகாயம், பூமி, கிரஹங்கள் இவ்வாறு விரிவான பூஜைகள் சிவாகம வழிவந்தவர்களுக்கு அறுபதாவது ஜன்ம நட்சத்திரத்தில் செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது. ஸௌனகர் தேவதைகளைக் குறைத்து முக்கியமான இருபத்தாறு கலசங்களோடு செய்யும் முறையைக் கூறுகின்றார். இதிற் கூட நவக்கிரகங்கள் ஒன்பதிற்கும் பதிலாக ஒரு கலசமும் திக்பாலகர்கள் எண்மருக்குப் பதிலாக ஒரு கலசமும் வைத்து எல்லாமாக பதினொரு கலசங்களுடன் பூஜை செய்யும் முறைகளும் உள்ளன. இன்னொரு முறையிலே மேற்சொன்ன பதினொரு கலசங்களுடன், ஆச்சார்ய கலசம் என மேலதிகமாக ஒரு கலசமும் வைத்துச் செய்வதுமுண்டு. ஆனால் போதாயனரோவெனில் எல்லாத் தேவதைகளையும் ஒரே கலசத்திலேயே ஆவாஹனம் செய்து பூஜிக்கலாம் எனவும் கூறுகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகமாக தற்கால அனுட்டான முறையில் இருக்கும் வழக்கமாக நவக்கிரஹங்களுக்கு ஒன்பது கலசங்களும், திக்பாலகர்களுக்கு எட்டுக் கலசங்களும் ஈசானாதி பஞ்சப் பிரமங்களுக்கு ஐந்து கலசங்களும் மிருத்தியுஞ்ஜயம், பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், மாக்கண்டேயர், சப்த சிரஞ்சீவி, ஆயுஷ்தேவதை, அறுபது வருஷங்கள், இருபத்தேழு நட்சத்திரங்கள், ஷஷ்டி தேவதை ஆகியோர்களுக்குப் பதிலாக ஒவ்வொரு கலசங்களும் வைத்து முழுமையாக முப்பத்தி மூன்று (33)கலசங்கள் வைத்து பூஜை செய்யப்பட்டு தம்பதிகளுக்கு அபிஷேகிக்கப்படுகின்றன. இவற்றுக்கு அங்கமான தானங்கள் முக்கியமாகின்றன. குறிப்பாக தானங்கள் தசதானங்கள், பஞ்சதானங்கள் நவக்கிரக தானங்கள், பஞ்ச உபசார தானங்கள் தனிப்பட்ட தானங்கள் ஏழு, பூஜோபசார தானங்கள் பதினொன்று, ரிணதேனுதானம், பாபதேனுதானம், மோட்சதேனுதானம், நிரீஷ் ஆயுஸ்யதானம் என அறுபது வகையான தானங்கள் செய்யப்படுகின்றன.

ஷஷ்டியப்த பூர்த்தி சாந்தியானது மனிதன் தனது இயல்புக்கேற்றவாறான முறையில் கிரஹங்களால் ஏற்படக்கூடிய கஷ்டங்களையும், சத்துருக்களால் உண்டாகும் அபிசாரம், சூன்யம் முதலியவற்றை நீக்கவும், பல்வகைத் துன்பங்களைப் போக்கவும், நீண்ட ஆயுளோடு சீரும் சிறப்புமாக வாழவும், குடும்ப நலங்களை நாடியும், நல்வாழ்வு வேண்டியும் கட்டாயம் செய்து கொள்ளப்பட வேண்டும் என்பது அவசியமாகின்றது.

## 3. பீமரதசாந்தி

எழுபது வயதினிலே செய்து கொள்ளப்படும் சாந்தி "பீமரத சாந்தி" எனக் கூறப்படுகின்றது. "பீம" என்பதற்கு பயங்கரமானது எனப் பொருள் கொள்ளப் படுகின்றது. மரணத்திற்கு அதிகாரி யமன் என்றும், வியாதிகளுக்கெல்லாம் அவனது சேனைகள் தான் காரணமென்றும் சாஸ்திரங்கள் பிரசித்தமாகக் கூறுகின்றன. இக்காலங்களில் யமனது இரதம் பயங்கரமானதாகவே தோற்ற மளிக்கும், புத்திர பௌத்திரர்களுக்கும் துன்பத்தை விளைவிக்கும் என்பதால் பீமரத சாந்தி கட்டாயமாகச் செய்து கொள்ளப்பட வேண்டும் என்பது அவசியமாகின்றது. இச்சாந்தி செய்யும் முறையை சைவாகமமும் ஸௌனகரும் இரு வகையாகக் கூறினாலும் இரண்டிலுமே அதிகபேதமில்லை எனலாம்.

எழுபதாவது ஜன்ம நட்சத்திர தினத்தில் மிருத்தியுஞ்ஜயரைக் கலசத்தில் சுவர்ண பிம்பத்துடன் ஆவாஹனம் செய்து அதிதேவதை, பிரத்யதிதேவதை, திக்பாலர்கள் முதலியவர்களுக்கு தனித்தனியாக கலசங்கள் வைத்து ஷோடஸோபசார பூஜைகள், ஜபம் என்பன செய்து அந்தந்த தேவதைகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமந்திரத்தால் ஹோமம் செய்து தம்பதிகளுக்கு அபிஷேகம் செய்ய வேண்டும். பின்பு பிரதிமை, கலசம், வேட்டி, தசதானம், அன்னதானம் முதலியவை செய்து, பிராமணோத்தமர்களிடம் ஆசீர்வாதம் பெறவேண்டு மெனவும் கூறப்பட்டுள்ளது. பீமரத சாந்தியினால் எல்லா விதமான கஷ்டங்களும் அகன்று பல நன்மைகள் சேரும் என சாஸ்திரங்கள் வலியுறுத்திக் கூறுகின்றன.

## 4. சதாபிஷேகம்

"சதாபிஷேகம்" அல்லது "ஸஹஸ்ர சந்திர தர்சனம்" என்னும் சாந்தி எண்பத்தோராவது வருஷத்தில் செய்ய வேண்டுமென ஸௌனகரும், எண்பத்தொன்றில் இருந்து, எண்பத்திமூன்றுக்குள் சதாபிஷேகம் செய்ய வேண்டுமென புராணங்களும் கூறுகின்றன.

ஆண்டொன்றிற்கு பன்னிரெண்டு பூரண சந்திரர்களைத் தர்ஸித்தாகக் கொண்டு எண்பத்தொரு வருஷங்களிலும் தொள்ளாயிரத்து எழுபத்திரெண்டு (972) பூரண சந்திரர்களையும் சில ஆண்டுகளில் வரும் அதிகமாசங்களால் ஏற்படும் பூரண சந்திரர்களின் தர்சனங்களுடன் ஆயிரம் பூரண சந்திர தர்சனங்கள் ஆகியதாக எடுத்துக்கொள்ளப்படும். இவர்களை ஆயிரம் பிறை கண்ட புருஷர்கள் எனச் சிறப்பாகப் போற்றப்படுவார்கள். சதாபிஷேகத்தில் ஆயிரம் பூரண சந்திர தர்சனங்கள் முக்கியப்படுத்தப்படுகின்றது.

சைவாகமத்தில் இதன் விளக்கம் பார்வதி பரமேஸ்வரர்களுக்கிடையே நடைபெறும் உரையாடலாக விபரிக்கப்பட்டுள்ளது.

பார்வதிதேவி சிவனிடம், மனிதன் தனது கிழத்தன்மையில் வேதம் கூறிய கர்மாக்களைச் செய்ய முடியாது போய்விட்டால் புண்ய புலன்களை விரும்பி எதைச் செய்ய வேண்டுமென கேட்க, பரம சிவன் பின்வருமாறு கூறியதாகச் சொல்லப்பட்டுள்ளது.

"ஆயிரம் பூர்ண சந்திரர்களைத் தர்சித்த பின்போ, அல்லது தனது பேரனுக்கு புத்திரன் பிறந்த உடனேயோ இந்தச் சதாபிஷேகக் கர்மாவைச் செய்ய வேண்டும். சதாபிஷேகத்தில் செய்யும் தான, தர்ம, ஜப, ஹோமம் முதலியன வயதானதால் செய்ய முடியாமல் விடுபட்ட ஏனைய கர்மாக்களுக்குப் பிராயச்சித்தமாக அமையும். அதே சமயத்தில் கர்ம பந்தங்களில் இருந்து விடுபடச் செய்து புண்ணியத்தை அளிக்கும்" என்று கூறினார்.

சதாபிஷேகமானது கங்கை, சேது முதலான புண்ணிய நதி ஸ்நானங்களால் ஏற்படும் புண்ணியத்தையும், கிருசரம், சாந்த்ராயணம் முதலியவைகளாலுண்டாகும் புண்ணியத்தையும் கொடுக்கின்றது. இச்சமயத்தில் நூறு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது ஐம்பது சுவர்ணங்களாலும் இரத்தினங்களாலும் அபிஷேகம் செய்து கொள்ள வேண்டும்.

பத்தினி, புத்திரர், பௌத்திரர் அனைவரும் மங்கள ஸ்நானம் செய்து, சுத்திக்காக புண்யாகவாசனம் செய்து நாந்தி சிராத்தமும் செய்ய வேண்டும். உத்தம குணமும், ஆசாரமும் நிறைந்த வேதியரை ஆச்சார்யனாகவும், வேத மறிந்த வேதியரை பிரம்மாவாகவும், அழைக்கப்பட வேண்டும்.

அலங்காரம் செய்யப்பட்ட மண்டபத்தில் தான்யத்தைப் பரப்பி ஸ்ரீ லட்சுமி நாராயணனைப் பிரதான கலசத்திலும், சூரிய சந்திரர்களை இரு கலசங்களில் இருபுறமும் வைத்து சுவர்ணப் பிரதிமைகளை கலசங்களிலே வைத்து ஆவாஹனம் செய்து ஷோட ஸோபசார பூஜைகளையும் முறையாகச் செய்ய வேண்டும்.

மண்டபத்தின் மேற்கில் அக்கினியைப் பிரதிஷ்டை செய்து நவக்கிரஹ ஹோமம் தேவதைகளுக்குரிய ஹோமம் என்பவற்றை பிரதான தேவதைகளின் வேத மந்திரங்களினால் ஆயிரத்தெட்டு (1008) அல்லது நூற்றெட்டு (108) முறைகள் விசேடமாக ஹோமம் செய்து கொள்ள வேண்டும்.

பின்பு தம்பதிகளுக்கு கலசதீர்த்தத்தை அபிஷேகம் செய்து கொள்ள வேண்டும். தீர்த்தாபிஷேகத்தின் போது நவக்கிரஹ மந்திரங்களையும், ருத்திராதி சூக்தங்களையும் கூறிக்கொள்ள வேண்டும். ஸ்ரீ சூக்தத்தைக் கூறிக்கொண்டு சுவர்ணாபிஷேகம் செய்ய வேண்டும். பின்பு பிரதிமா தானங்கள், தசதானங்கள், பூதானம், கோதானம், பூமிதானம் என்பவற்றை தம் இயல்புக்கேற்றவாறு செய்ய வேண்டும். வயது முதிர்ந்த பிராமணோத்தமர்களிடம் ஆசீர்வாதம் பெற்று விப்ரபோஜனமும்( உணவு) கொடுக்க வேண்டும்.

இவ்வாறு சதாபிஷேகத்தை செய்யும் போது மஹாபாபங்கள் அகன்று, இருபத்தேழு (27) தலைமுறைகளுக்கு அஷ்ட ஐஸ்வர்ய நலங்கள் பூரணமாகக் கிடைக்கும் என்று சாஸ்திரங்கள் பகருகின்றன.

## (தமிழில்) கொண்டாடப்படும் விழாக்கள்

| | | |
|---|---|---|
| 25ம் ஆண்டு நிறைவு விழா | - | வெள்ளிவிழா |
| 50 ம் ஆண்டு நிறைவு விழா | - | பொன் விழா |
| 60ம் ஆண்டு நிறைவு விழா | - | மணி விழா |
| 75 ம் ஆண்டு நிறைவு விழா | - | பவள விழா |
| 80 ம் ஆண்டு நிறைவு விழா | - | முத்து விழா |
| 100ம் ஆண்டு நிறைவு விழா | - | நூற்றாண்டு விழா |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரகங்கள்





## கோளறு திருப்பதிகம்

*வேயுறு தோளிபங்கன் விடமுண்டகண்டன்*
*மிக நல்ல வீணை தடவி*
*மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்*
*உளமே புகுந்த அதனால்*
*ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள*
*சனிபாம் பிரண்டுமுடனே*
*ஆசறு நல்ல நல்ல அவைநல்ல நல்ல*
*அடியா ரவர்க்கு மிகவே.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## இயல் நான்கு

# விரதவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19. முக்கிய விரதங்கள்



எமக்கு எல்லா நலன்களையும் எப்பொழுதும் தந்துகொண்டிருக்கின்ற இறைவனை மறவாது, நினைந்து, வாழ்த்தியும், வணங்கியும் இருத்தலே எமது கடமையாகும். பகுத்தறிவற்ற பிற உயிரினத்திற்கு அது இயலாதாயினும், பகுத்தறிவு படைத்த மனித இனத்திற்கு அஃது இன்றியமையாதது. எனினும் உலகியல் சூழல்களால் அக் கடமையை இயற்ற இயலாத நிலையில் இருப்பதால், குறிப்பிட்ட சில நாட்களிலேனும் மக்கள் அக்கடப்பாட்டில் நிற்றல் வேண்டும். அந்நாட்களே விரத நாட்களாகும். விரதம் - தவம் - நோன்பு என்பன ஒரு பொருட் சொற்கள்.

**"மனம் பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு, உணவை விடுத் தேனுஞ் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதல் விரதமாகும்." - நாவலர் பெருமான்**

இஃது ஆன்ம ஈடேற்றங்கருதிச் செய்யுஞ் சாதனை ஆகும். விரதம் "நோன்பு" என்றுங் கூறப்படும். பெரியோர் கூறும் புண்ணியம் ஏழினுள் ஒன்று தவம் விரதம் அனுட்டித்தல். விரதம் அனுட்டிப்பதனால் மனம் புத்தி முதலிய உட்கருவிகள் தூய்மை அடையும். இதனால் ஞானம் - நல்லறிவு கைகூடும்.

## விரதங்களும் அனுட்டான நியமங்களும்

விரதம் என்றால் ஐம்புலனடக்கம் என்பது பொருள். அதாவது சித்தத்தை ஒருமுகப்படுத்துதல். மனமானது பொறிவழிச் செல்லாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும், சுருக்கியேனும் திரிகரண சுத்தியுடன் இறைவனைச் சிறப்பாக வழிபடுதல்.

விரதம் அனுட்டிப்பவர் விரதகாலங்களில் தாம்பூலந்தரித்தல், புகைபிடித்தல், பகலில் நித்திரை செய்தல், சிற்றின்பம் துய்த்தல் முதலியன செய்தலால் பிராயச்சித்தமற்ற பாவ தண்டனைகளுக்குள்ளாக்கப்படுவர்.

விரதங்கள் மனிதனுடைய வாழ்வை மேன்மையுறச் செய்து நன்மை நோக்கி இட்டுச் செல்கின்றன. விரதங்கள் உணவு உட்கொள்வதில் பலவகையாக உள்ளன. அவை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. யாசிதம் - இருபகல் உணவு உண்டிருத்தல்
2. பாதக்கிரிச்சனம் - நல் உணவு உண்டிருத்தல்.
3. பன்னக்கிரிச்சனம் - அரசு, அத்திரி, வில்வம் இவைகளின் தளிர்களில் ஒன்றை நீரில் தோய்த்து உட்கொண்டிருத்தல்.
4. சௌமியக்கிரிச்சனம் - ஒரு பகல் பால், மோர், நீர், பொரிமா ஆகியவற்றில் ஒன்றை உட் கொண்டிருத்தல்.
5. அதிகரிச்சனம் - மூன்று நாள் ஒவ்வொரு பிடி அன்னம் உண்டும் அது இல்லாமலும் இருத்தல்.
6. கிரிச்சனாதி கிரிச்சனம் - இருபத்தியொரு நாள் பால் மட்டும் உண்டிருத்தல்.
7. பிரசாபத்திய கிரிச்சனம் - மூன்று நாளில் காலை, மூன்று நாள் மாலை, மூன்று நாள் இடைவேளை, மூன்று நாள் உணவின்றியும் இருத்தல்.
8. பார்க்ககிரிச்சனம் - பன்னிரண்டு நாள் உணவின்றி இருத்தல்.
9. சாந்தாபன கிரிச்சனம் - ஒரு நாள் கோசலம், ஒரு நாள் கோமயம், ஒரு நாள் பால், ஒரு நாள் தருப்பை நீர், ஒரு நாள் உணவு உட்கொண்டிருத்தல்.
10. மகாசாந்தாபன கிரிச்சனம் - மேற் கூறப்பட்டவைகளில் ஒன்றைக் கடைப் பிடித்தல்.
11. சாந்திராயணம் - வளர்பிறை முதலாக ஒவ்வொரு பிடி உணவு கூட்டித் தேய் பிறை முதலாக ஒவ்வொரு பிடி உணவு குறைத்து உட்கொண்டு மூன்று வேளையும் ஸ்நானம் செய்தல்.
12. வால சாந்திராயணம் - சாந்திராயணத்தின் இரவு வேளையில் மட்டும் நான்கு பிடி உணவு உட்கொள்ளுதல், என்பனவாக உள்ளன.

## *சித்திரை*

### சித்திரா பூரணை

வருடம் பிறந்து முதலாவதாக வரும் பூரணை என்பதோடு எமது தலைவிதியை நிர்ணயிக்கும் எமது வாழ் நாள் கணக்குகளை எழுதிப் பேணும் யமதர்மராஜனின் கணக்குப் பிள்ளையாகிய சித்திரகுப்தர் திருவவதாரம் செய்த நாளுமாகும்.

தமது தாயை இழந்தவர்கள் இத்தினத்தில் தாயை நினைத்து விரதமனுட்டித்துப் பிரார்த்தனை செய்வதால் அன்னாரின் ஆன்மா சாந்தி பெறுகின்றது. அன்று உப்பைத் தவிர்த்து பசும்பால், தயிர் உண்ணாமல் இருத்தல் சிறப்பு. இதனால் பாவச்சுமை குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சித்திரைத் திருவோணம்

ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு வருடத்தில் செய்யப்படும் ஆறு அபிஷேகங்களில் வருடம் பிறந்து முதல் வருகின்ற அபிஷேகம் சித்திரைத் திருவோணத்தில் நிகழ்கின்றபடியால் இத்தினம் வழிபாட்டிற்குரிய முக்கிய தினமாகும்.

## வைகாசி

### வைகாசி விசாகம்

அசுரர்களை அழித்தொழித்துத் தேவர்களைக் காத்தருளியதன் மூலம் அதர்மத்தை ஒழித்துத் தர்மத்தை நிலை நாட்டியது மட்டுமன்றி முழு உலகமுமே உய்வடையும் பொருட்டுச் சரவணப் பொய்கையில் முருகப் பெருமான் திருவவதாரம் செய்த தினமாகையால் முருக வழிபாட்டிற்குச் சிறந்த தினமாகும்.

## ஆனி

### ஆனி உத்தரம்

எமது இறைவனாகிய சிவபெருமான் நடராஜர் என்ற நாமத்தில் தனது அடியார்களுக்காகத் தில்லையில் திருநடனம் புரிந்தது இத்தினத்திலாகும். தனது திருநடனத்தின் மூலம் எம்பெருமான் பஞ்சகிருத்தியங்களையும் புரிகிறார். இத்தினம் நடராஜர் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும்.

## ஆடி

### ஆடிச் செவ்வாய்

இத்தினம் அம்பாள் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும். விவாகமாகாத கன்னிப் பெண்கள் இத்தினத்தில் விரதமிருந்து அம்பாள் தரிசனத்தில் ஈடுபடுவதன் மூலம் மாங்கலியப் பாக்கியம் கிடைக்கப் பெறுவர். செவ்வாய் தோஷமுள்ளவர்களும் ஏனையோரும் செவ்வாய்க்கிழமை விரதத்தை ஆடிச் செவ்வாயன்று கோவிலில் சங்கற்பம் செய்து ஆரம்பிப்பது உத்தமமானது. ஒரு பொழுது அன்னமோ, பால், பழமோ உண்டு. இவ்விரதத்தைக் கைக்கொள்ளலாம்.

### ஆடி அமாவாசை

இத்தினம் பிதிர்க்கடன் செய்வதற்குச் சிறந்த நாளாகும். தந்தையை இழந்தவர்கள் இத்தினத்தில் விரதமிருந்து வழிபாட்டிலீடுபட்டுத் தானங்கள் செய்வதால் பிரிந்த ஆன்மாக்கள் ஈடேற்றம் அடைகின்றன.

### ஆடிப்பூரம்

உலக மாதாவாகிய உமாதேவியார் ருதுவாகிய தினமான இத்தினம் அம்பாள் விரதத்திற்கும் தரிசனத்திற்கும் உகந்த நாளாகும். அம்பாளின் எட்டு வகைச் சித்திகளையும் பெற இந்நாள் வழிபாடு உன்னதமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆவணி

### ஆவணிச் சதுர்த்தி (ஆவணி மாதம் வளர்பிறை 4ம் நாள்)

ஆவணி மாதத்துப் பூர்வ பக்கச் சதுர்த்தி விநாயகப்பெருமான் திருவ வதாரம் செய்த தினமாகையால் விநாயக விரதத்திற்கும் வழிபாட்டிற்கும் சிறந்த நாளாகும்.

### விநாயக சதுர்த்தி விரதம்



மாதந்தோறும் வரும் வளர்பிறைச் சதுர்த்தித் திதி விநாயகர் விரதத்திற்குச் சிறந்த நாளாகும். ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தியில் அனுட்டிக்கப்படும் விநாயக சதுர்த்தி விரதம், மற்றும் விரத பலனிலும் பார்க்கக் கூடுதலான பலனை நல்கும் எனச்சமய நூல்கள் சாற்றுகின்றன. அந்நாளில் இளம்பிறைச் சந்திரனைப் பார்த்தலாகாது. பகலில் உபவாசம் இருந்து ஆலய தரிசனம் செய்த பின், இரவில் கொழுக் கட்டை மோதகம் முதலியன விநாயகருக்கு நிவேதித்து உண்ணலாம். அந்நோன்பு நோற்பவர் விநாயகரை அறுகம் புல்லால் அர்ச்சிப்பது அளவிறந்த பலனைக் கொடுக்கும். இத்தினத்தில் விரதம் அனுட்டித்து உள்ளன்போடு வழிபடுவோர்க்கு விநாயகர் திருவருள் கடாட்சம் கிடைக்கும் என்பது உறுதி. அதுபோல் தேய்பிறையில் வரும் சதுர்த்தியைச் சங்கடகர சதுர்த்தி என அழைத்து விரதமிருப்பர்.

### ஆவணிச் சதுர்த்தசி

ஸ்ரீ நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகங்களில் இத்தினத்தில் நடை பெறும் அபிஷேகமும் ஒன்றாகையால் இத்தினம் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்ததாகும்.

### ஆவணி மூலம்

மாணிக்கவாசக சுவாமிகளுக்காக சுந்தரேஸ்வரப் பெருமான் மதுரை மாநகருக்கு எழுந்தருளி அருள் பாலித்த தினம் இதுவாகும். அதாவது, மாணிக்க வாசக சுவாமிகளைப பாண்டிய மன்னன் சிறையிலிட்டுத் தண்டனை விதித்த சமயம் சுவாமியவர்களை விடுவிப்பதற்காகச் சிவபெருமான் காட்டிலுள்ள நரிகளைப் பரிகளாக்கிக் கொண்டு வந்து அவரைச் சிறையினின்றும் மீட்டது ஆவணி மாத மூல நட்சத்திரத் தினமாகும். இதன் காரணமாக இத்தினம் பிட்டுக்கு மண் சுமந்த விழாவாகக் கொண்டாடப்படுகின்றது.

### ஆவணி ஞாயிறு

எல்லா மாதங்களிலும் ஞாயிறு வருகின்ற போதிலும் ஆவணி மாதத்தில் வரும் ஞாயிற்றுக்கிழமை சூரிய விரதத்திற்கும் வழிபாட்டிற்கும் சிறந்ததாகும். இம்மாதத்தில் சூரிய பகவான் சிங்கராசியில் பிரவேசிப்பதால் ஞாயிற்றுக் கிழமை முக்கியத்துவம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புரட்டாதி

### நவராத்திரி விரதம்



புரட்டாதி மாதம் வளர்பிறைப் பிரதமை முதல், நவமி முடிய வரும் ஒன்பது நாளும் கும்பத்திலே பூசைசெய்து தேவியை அனுட்டிக்கும் விரதமாம். இதில் வரும் அட்டமிக்கு மகா அட்டமி என்றும் நவமிக்கு மகா நவமி என்றும் பெயர். இதனால் இதை மகாநோன்பு அல்லது மகர் நோன்பு என்று சொல்லிக் கொண்டாடுவர். இது தேவி உபாசகர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் விரதமாகும். இந்த ஒன்பது இரவுகளிலும், முதல் மூன்று நாட்களிலும் வீரத்தை வேண்டித் துர்க்கையையும், அடுத்த மூன்று நாட்களிலும் செல்வத்தை வேண்டித் திருமகளையும் இறுதி மூன்று நாட்களும் கல்வியை வேண்டிக் கலைமகளை யும் நினைந்து பூசித்து விரதம் அனுட்டிப்பர். நோன்பு நோற்பவர்கள் பிரதமை யில் எண்ணெய் முழுக்காடி நோன்பைத் தொடங்க வேண்டும். இவ்விரதம் அனுட்டிப்போர் முதல் எட்டுநாளும் ஒருபோது உணவு உட்கொண்டு, ஒன்பதாவது நாளான மகாநவமியில் உபவாசம் இருத்தல் உத்தமம். இந்நோன்பு நாட்களில் அபிராமி அந்தாதி, குமரகுருபரரின் சகலகலா வல்லிமாலை போன்ற பாடல்கள் பாராயணம் செய்யத்தக்கன.

| நாள் | இராகம் | பிரசாதம் | பழம் | புஷ்பம் | பத்திரம் |
|---|---|---|---|---|---|
| 1வது | தோடி | வெண்பொங்கல் சுண்டல் | வாழை | மல்லிகை | வில்வம் |
| 2வது | கல்யாணி | புளியோதரை | மா | முல்லை | துளசி |
| 3வது | காம்போதி | சக்கரைப் பொங்கல் | பலா | சம்பங்கி | மரு |
| 4வது | பைரவி | கறிச்சாதம் பொரியல் | கொய்யா | ஜாதிமல்லிகை | கதிர்ப் பச்சை |
| 5வது | பந்துவராளி | தயிர்ச் சாதம் | மாதுளை | பவளமல்லி | விபூதிப் பச்சை |
| 6வது | நீலாம்பரி | தேங்காய்ச்சாதம் | நாரத்தை | செம்பருத்தி | சந்தன இலை |
| 7வது | பிலகரி | எலுமிச்சம்பழம் | பேரீந்து | தாழம்பூ | தும்பை இலை |
| 8வது | புன்னாக வராளி | பாயசம் முறுக்கு | திராட்சை | ரோஜா | பன்னீர் இலை |
| 9வது | வசந்தா | திரட்டுப் பால் | நாவல் | தாமரை | மருக் கொழுந்து |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

#### புரட்டாதிச் சனி

பொதுவாகச் சனிக்கிழமை சனீஸ்வர வழிபாட்டிற்கான நாளாக இருந்த போதிலும் புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் அனுட்டிக்கப்படும் விரதமும் வழிபாடும் மேலான பலனைத் தர வல்லனவாகையால் இத்தினம் சனீஸ்வர வழிபாட்டிற்குச் சிறப்பான நாளாகும். இத்தினத்தில் கறுப்பு எள் பொட்டளமாக கட்டி மண்சிட்டியில் வைத்து நல்லெண்ணெய் விட்டு எரித்து வழிபடுவார்கள்.

#### கேதார கௌரி விரதம்

இவ்விரதம் புரட்டாதி மாத வளர்பிறை அட்டமி அல்லது நவமி அல்லது தசமித் திதியில் ஆரம்பமாகி ஐப்பசி மாதத் தேய்பிறை சதுர்த்தசியில் (14ம் நாள்) முடிவுறுகின்றது. இருபத்தொரு நாட்களைக் கொண்ட மஹோன்னத விரதம் இதுவாகும். உமாதேவியார் சிவ பெருமானை நோக்கி சிவபூசை செய்து அர்த்த நாரீஸ்வரப் பேற்றினைப் பெற்ற விரதமாகையால் இது கேதார கௌரி விரதம் என்று சொல்லப்படுகின்றது. மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்கலமாக இருக்க வேண்டும் என்றும், மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை வேண்டியும் இதனை அனுஷ்டிப்பர்.

மங்களகரமான வாழ்க்கையை வேண்டி ஆண்களும் இந்த விரதத்தை அனுட்டிப்பதுண்டு. விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சுகளாக இடப்பட்டு, இறுதி நாளன்று அந்த நூலை கோயில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கையிலும், பெண்கள் தமது இடதுகையிலும் அணிந்து கொள்வர்.

#### மகாளயம்

மகாளய பட்சம் புரட்டாதி அமாவாசையன்று முடிவடையும். அதற்கு முந்திய பதினைந்து நாட்களாகும். இது பிதிர்களை நினைத்து அவர்களுக்குச் செய்யப்படும் தானமாகும். பிதிர்களை நினைத்து மாதந்தோறும் தானம் செய்ய முடியாதவர்கள் இந்தக் காலத்தில் தானங்களைச் செய்வதால் பன்னிரண்டு மாதங்களிலும் செய்த பலனைக் கொடுப்பதாகும். மகா + ளயம் - பிதிர்கள் பூமிக்கு வரும் நாள் இதுவாகும்.

#### புரட்டாதி பூர்வ பக்க சதுர்த்தசி (புரட்டாசி மாதம் வளர்பிறை 14ம் நாள்)

நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகங்களில் இத்தினத்தில் நடை பெறும் அபிஷேகமும் ஒன்றாகும். இத்தினம் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும்.

### *ஐப்பசி*

#### வெள்ளிக்கிழமை விரதம்

சுக்கிரவாரம் என்றால் வெள்ளிக்கிழமை என்பது பொருள். வெள்ளிக்கிழமை விரதமாவது ஐப்பசி மாதத்து முதலாவது வெள்ளிக்கிழமை தொடங்கி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளிக்கிழமை தோறுஞ் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாகும். இவ்விரத நாளில் உபவாசமிருத்தல் உத்தமம். அதற்கு இயலாதவர்கள் இரவிலே பழம் முதலியன உட்கொள்ளலாம். இதற்கும் இயலாதோர் ஒருபொழுது பகலில் உணவு கொள்ள லாம். இவ்விரதம் மூன்று ஆண்டுகளுக்கேனும் அனுட்டித்தல் வேண்டும். இவ்விரதத்தை நிறைவு செய்யும்போது, விரதமிருக்குஞ் சாந்திக் கிரியைகளுடன் முடித்தல் வேண்டும். இக் கிரியை "உத்தியாபனம்" எனக் கூறப்படும். விரத பலனை அடையும் பொருட்டுச் செய்யும் கிரியை இதுவாகும். ஐப்பசி மாதத்துக் கடைசி வெள்ளிக் கிழமை உத்தியாபனஞ் செய்து கொள்ளுதற்கு உகந்த நாள் ஆகும். மேலும் அம்பிகைக்கும், விநாயகருக்கும் உரிய நாளாகவும் கொள்ளப்படுகிறது.



## கந்தசட்டி விரதம்

ஐப்பசி மாதம் அமாவாசைக்கு அடுத்த பிரதமை முதற் சட்டி ஈறாகிய ஆறு நாளும் அனுட்டிக்கும் விரதம் இதுவாகும். ஒவ்வொரு நாளும் காலையில் நீராடி முருகப்பெருமானை வழிபட்டு, சிறிதளவு நீர்மட்டும் அருந்தி உபவாசம் ஆறு நாளும் இருந்து, ஏழாம்நாள் சிவனடியார்களுடன் பாரணை செய்வது இவ்விரதத்திற்கு நியமமாகும். இதற்கு இயலாதவர் முதலைந்து நாளும் ஒரு பொழுது உண்டு, சட்டியில் உபவாசஞ் செய்யக் கடவர். இவ்விரதம் ஆறு ஆண்டுகள் அனுட்டித்தல் வேண்டும்.

பிரதமையில் சிவபெருமானது நெற்றியிலிருந்து தெறித்த பொறிகள் ஆறும் சரவணப்பொய்கையில் ஆறுருவாக, அதனை உமாதேவியார் எடுக்க ஆறுதிருமுகமும், பன்னிரண்டு திருக்கையுமுடைய ஒருருவாய் எழுந்தருளிய நாள் இக்கந்த சட்டி நாளாகும். சூரபதுமனை முருகன் சங்காரஞ் செய்த நாளும் இதுவேயாம். கந்தபுராண உபதேச காண்டத்தில் இவ்விரதம் பற்றிய செய்திகள் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. தேவர்கள் இவ்விரதத்தை நோற்றுப் பயன் பெற்றதாகவும் இந்நூல் கூறும்.

*மறைகளின் முடிவால் வாக்கால் மனத்தினால் அளக்கொணாமல்*
*நிறைவுடன் யாண்டு மாகி நின்றிடும் நிமல மூர்த்தி*
*அறுமுக உருவாய்த் தோன்றி அருளொடு சரவணத்தில்*
*வெறிகமழ் கமலப் போதில் வீற்றிருந்தருளி னானே.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கார்த்திகை விளக்கீடு

முன்னொரு காலத்தில் தேவர்கள் சிவபிரானை வேண்டித் தவம் செய்து பலவகையான வரங்களைப் பெற்றனர். பின் ஆணவமல மமதையால் இறை வனை மதியாது மயக்குற்றனர். அப்பொழுது சிவபிரான் அவர்கள் முன் ஒரு கிழவனாகக் காட்சியளித்து ஒரு தும்பை ஓர் இடத்தில் நட்டுவிட்டு இதை யாராவது பிடுங்குங்கள் என்று கூறினார். ஒருவராலும் அதைப்பிடுங்க முடிய வில்லை. ஆணவ மமதை அடங்கிக் கிழவனைப் பார்த்தனர். அப்பொழுது அவர் சோதிவடிவாய் நின்றனர். அன்றைய தினம் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரம் கூடிய பௌர்ணமி நாளாகும். இத்தினமே விளக்கீடு எனக் கொண்டாடப்படுகின்றது.

## விநாயக சட்டி விரதம்

இவ்விரதம் கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரம் கழிந்த மறுநாள் ஆரம்பித்து 21வது நாளாகிய சதய நட்சத்திரமும் சட்டித்திதியும் கூடிய நாளில் நிறைவு பெறுவதாகும். இது விநாயக விரதங்களில் மிகச் சிறப்பான விரதமாகும். இந்நாள் தான் விநாயகப் பெருமான் கஜமுகாசுரனைச் சம்சாரம் செய்த நாளுமாகும். இதில் காப்புக் கட்டுதல் முக்கிய நிகழ்வாகும். இவ்விரதத்தில் விநாயகர் அகவல், விநாயக புராணம் என்பன படிக்கப்படும்.

## கார்த்திகை விரதம்

கார்த்திகை மாசத்துக் கார்த்திகை நட்சத்திரம் முதலாகத் தொடங்கி, மாசந் தோறும் வரும் கார்த்திகை நட்சத்திரத்தில் சுப்பிரமணியக் கடவுளைக் குறித்து நோற்கும் விரதம் கார்த்திகை விரதமாகும். கிருத்திகை எனவும் இது கூறப்படும்.

கார்த்திகை நட்சத்திரத்திற்கு முதல் நாளாகிய பரணியில் ஆசாரமாக இருந்து, ஒருபோது உண்டு, மறு நாள் (கார்த்திகை நாள்) முருகனை முறைப்படி பூசைசெய்து வழிபாடாற்றி உபவாசமிருந்து, அடுத்த நாளாகிய ரோகிணியில் பாரணை செய்தல் உத்தமம். இது கைகூடாதவர் பழம் முதலியன இரவில் உட்கொள்ள வேண்டும். இவ் விரதம் பன்னிரண்டு வருடங்கள் அனுட்டித்தல் வேண்டும். அரிச்சந்திரன், அந்திமான், சந்திமான் ஆகியோர் இவ்விரதத்தை அனுட்டித்துச் சித்தி..ள் அடைந்ததாக வரலாறு கூறுகின்றது. (அந்திமான் சந்திமான் இடையேழு வள்ளல்கள்.)

## சோமவாரம்

சிவ விரதங்களுள் சோமவார விரதமும் மிக மேலானதாகும். சந்திரனுக் குரிய தினம் திங்கள். எனவே திங்கட்கிழமை சோமவாரம் என அழைக் கப்படுகிறது. கிருதயுகம் தோன்றியதும் சந்திரன் சிவபெருமானின் முடியில் அமரும் பேற்றினைப் பெற்றதும் கார்த்திகை சோம வாரத்திலே தான். எனவே இம்மாதத்து திங்கட்கிழமை முக்கியத்துவம் பெறுகின்றது. கார்த்திகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதத்தில் திங்கட்கிழமைகளில் பகல் முழுவதும் உபவாசமிருந்து சிவபெரு மானைச் சிந்தித்து வழிபாட்டில் ஈடுபட்டு இரவு மட்டும் ஒரு வேளை உணவு உண்ணல் வேண்டும்.

## மார்கழி

### திருவெம்பாவை

மாதங்களில் சிறந்தது மார்கழி மாதமாகும். மாதங்களில் நான் மார்கழி என்று கிருஷ்ண பகவான் கீதோபதேசத்தில் கூறுவதிலிருந்து இதன் மகிமையை அறியலாம். மேலும் மார்கழி தேவர்களுக்கு விடியற்காலம். எனவே இறைவனை நினைத்து திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை ஆகியன பாடுவதற்கு மார்கழி உகந்த மாதமாகும்.

மார்கழி திருவாதிரை நட்சத்திரத்திற்கு முந்திய ஒன்பது தினங்களும் திருவெம்பாவை உற்சவ காலங்களாகும். திருவாதிரை நட்சத்திர தினத்தன்று திருவெம்பாவை நிறைவு பெறுகின்றது. திருவெம்பாவை, நடராஜப் பெருமானுக்கு உரித்தான உற்சவம்.

மேலும் மார்கழியில் நிகழும் விழா இறைவனின் ஐந்தொழில்களில் அனுக்கிரகத்தைக் குறிப்பதாகையால் இவ்விழா எல்லா விழாக்களிலும் சிறப்புடையதாகும். மார்கழி திருவாதிரையில் நடைபெறும் நடேசர் அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆருத்திரா தரிசனமும் ஆன்ம ஈடேற்றத்துக்கு இன்றியமையாதனவாகும்.

### திருவாதிரை விரதம்



மார்கழியில் வரும் திருவாதிரை நட்சத்திரத்தோடு கூடிய நன்நாளில் அனுட்டிப்பது திருவாதிரை விரதம். இந்த விரதம் சிவபெருமானுக்கு மிகவும் உகந்தது. இதனையொட்டியே சிவ பெருமானை ஆதிரையின் முதல்வன் என்றும், ஆதிரையான் என்றும் கூறுவர். மார்கழித் திங்கள் திருவாதிரை நாளன்று நடராசருக்குச் சிறப்புக்கள் நடைபெறும். அவற்றுள் சிதம்பரத்தில் நடப்பது மிகுந்த சிறப்புடையது. இவ்விரதம் சிதம்பரத்திலிருந்து அனுட்டிப்பது உத்தமோத்தமம். அங்கு ஆருத்ரா தரிசனம் செய்வதற்காக அநேகர் செல்வர். ஆருத்ரா என்பது ஆதிரையைக் குறிக்கும் சொல். இவ்விரதத்தில் உபவாசம் இருத்தல் மேலாம்.

சங்சரசங்கிதை என்னும் வடமொழி நூலின் உபதேச காண்டத்தில் இவ்விரதமகிமை கூறப்பட்டுள்ளது. கச்சியப்பசிவாசாரியருடைய மாணாக் கராகிய கோனேரியப்ப முதலியார் தமிழில் இதனை மொழி பெயர்த்துள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தை

### தைப்பூசம்

தை மாதம் பூரணையுடன் சேர்ந்து வரும் நட்சத்திர தினம் முருக வழிபாட்டிற்குச் சிறந்த நாளாகும். இத்தினத்தில் பலர் பாற்குடம், காவடி முதலியன எடுத்து முருகனை வழிபடுவார்கள்.

### தை அமாவாசை

இத்தினத்தில் தான் அபிராமிப்பட்டரின் பிரார்த்தனையின் நிமித்தம் அம்பிகையின் அருளால் பூரணை தினமாகக் காட்சியளித்தது. இந்நூலில் அபிராமி அந்தாதி படித்துத் தேவியை வழிபடுவார்கள்.

## மாசி

### மகா சிவராத்திரி



இராத்திரி என்பது இருட்காலம் என்பதை யாவரும் அறிந்தது. எனினும் உண்மையான இருட்காலம், இறைவன் உலகம் முழுவதையும் ஒடுக்கி நிற்கும் காலம். இதனை "சர்வசங்கார காலம்", "பிரளயகாலம்", "ஊழிமுடிவு" என்று பலவாறாகக் கூறுவர். இரவில் ஒளியின்றி உயிர்களின் நடமாட்டமில்லாது எங்கும் அமைதி நிலவுவது போல், இந்த ஊழி ஒடுக்ககாலத்தில் பஞ்ச பூதங்களும், தநு, கரண, புவன, போகங்களும் ஒன்றுமேயில்லாது உயிர்கள் செயலற்றுக் கிடப்பனவாம். ஆகவே அப்பொழுது அமைதியே நிலவும். இந்தப் பேரிருளில் தனித்து நிற்பவன் சிவபெருமான் ஒருவனேயாம். நாம் நாள்தோறும் காண்கின்ற இரவு அனைத்துயிர்க்கும் உரிய சாதாரண இராக்காலம். ஆயின் உலக ஒடுக்க நிலை யாகிய இரவு சிவனுக்கே உரிய சாதாரண இராக்காலமாகும். இதனாற்றான் இவ் விரவு "சிவராத்திரி" எனப்பெயர் பெற்றுள்ளது.

ஒடுங்கிய உலகத்தை மீளத் தோற்றுவித்தற்காக இறைவன் சோதி வடிவான இலிங்கமாய் நின்று "இலளிதாதேவி" என்னும் பெயரோடு சத்தியைத் தோற்றுவிக்க, அத்தேவி இலிங்கப்பிரானை வணங்க, அவர் இலிங்கோற்பவராகத் தோன்றி உலகின் மறு தோற்றத்தின் பொருட்டுப் பிரம்மா முதலியோரைப் படைத்துச் சிருட்டித் தொழிலை ஆரம்பிப்பார். இதனையே மாசிமாதத்துச் சதுர்த்தசித் திதியில் வரும் இரவும், அன்று இரவு மூன்றாம் சாமம் நடைபெறும் இலிங்கோற்பவ பூசையும் எடுத்துக்காட்டுகின்றன. சிவனிடத்தில் அன்பு பூண்டொழுகுவோர்க்கு அன்றைய நாள் சிறந்த நோன்பு நாளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விரதமுறை:** சைவ சமயிகள் யாவராலும் அனுட்டிக்கப்பட வேண்டிய விரதம் சிவராத்திரி விரதமாகும். மாசிமாதத்துத் தேய்பிறைச் சதுர்த்தசித் திதியில் சிவபெருமானைக்குறித்து அனுட்டிப்பது சிவராத்திரி விரதம். இந்நாளில் உபவாசம் இருப்பதோடு இரவு முழுவதையும் நித்திரையின்றிச் சிவபூசையிலும், சிவ வழிபாட்டிலும் செலவு செய்தல் வேண்டும். இரவில் நான்கு சாமப் பூசைகளும் அவ்வக்காலங்களில் செய்தல் உத்தமம். இன்றேல் ஒருகாலத்திற் சேர்த்தேனும் செய்தல் வேண்டும். இது மத்திமம் ஆகும். நான்கு சாமமும் பூசை செய்வோர் முதற் சாமத்திற் பாலாலும், இரண்டாம்சாமத்திற் தயிராலும், மூன்றாம்சாமத்தில் நெய்யாலும், நான்காம் சாமத்தில் தேனாலும் பெருமானுக்கு அபிடேகம் செய்யக்கடவர். நான்குசாமப் பூசைகளிலும் வில்வத்தால் அர்ச்சிப்பது மேலான பலனைக் கொடுக்கும். இக்காலங்களில் விநாயகருக்கும், சண்டேசுவரருக்கும் பூசை செய்தல் வேண்டும். சிவபூசை இல்லாதோர் நான்கு சாமமும் சிவாலய தரிசனம் செய்வதோடு, பஞ்சாட்சர செபம், சிவபுராணம் படித்தல், கேட்டல் முதலியவற்றில் இரவைக் கழித்தல் வேண்டும். உபவாசம் இருக்க இயலாதோர் நீரேனும் பாலேனும் உண்டு கொள்ளலாம். இரவு முழுவதும் இந்நாளில் நித்திரை விழிக்க முடியாதவர் பதினாலாவது நாழிகையில் வரும் இலிங்கோற்பவகாலம் வரையிலாயினும் நித்திரை ஒழித்தல் வேண்டும். இவ்இலிங்கோற்பவகாலத்தில் செய்யும் தரிசனமும் பூசையும் பெரும் பலன் நிறைந்தன. இறைவனின் திருவுளம் பற்றிய காலம் இதுவாகும்.

உபவாசம் மேற்கொண்டோர் அடுத்தநாட்காலையிலே நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு சூரியோதயத்தின் முன் ஆறு நாழிகைக்குள்ளே சிவனடியாரோடு பாரணம்பண்ணல் வேண்டும். பாரணம்பண்ணிய பின் பகலிலே நித்திரை செய்யக்கூடாது. (பாரணம் - உபவாசத்திற்குப் பின் உட்கொள்ளும் உணவு).

சிவராத்திரி விரத பலன் பாவநீக்கமும், உலகம் எல்லா நலன்களும் பெற்றுச் செழித்தலுமே.

## சிவராத்திரியின் வகைகள்

1. மகாசிவராத்திரி
2. யோக சிவராத்திரி
3. நித்திய சிவராத்திரி
4. மாத சிவராத்திரி
5. பட்ச சிவராத்திரி என ஐந்து வகைப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவராத்திரியில் நான்கு சாமப் பூசை விதி முறைகள்

| சாமம் | மலர் | பத்திரம் |
|---|---|---|
| 1-ஆவது | தாமரை, அலரி | வில்வம் |
| 2-ஆவது | சண்பகம், தாமரை | துளசி, வில்வம் |
| 3-ஆவது | செங்கழுநீர், அத்தி, பிச்சி | முட்கிளுவை, வில்வம், அறுகு |
| 4-ஆவது | நந்தியாவர்த்தம் | விளா |

| சாமம் | பழம் | தூபம் | ஓதும் வேதம் |
|---|---|---|---|
| 1-ஆவது | வில்வம் | சாம்பிராணி | இருக்கு |
| 2-ஆவது | பலா | சந்தனக்கட்டை | யசுர் |
| 3-ஆவது | மாதுளம் | குங்குலியம் | சாமம் |
| 4-ஆவது | நானாவிதபழங்கள் | கர்ப்பூரம் | அதர்வம் |

### பிரதோஷ விரதம்



ஒவ்வொரு மாதமும் வரும் வளர்பிறை தேய்பிறை எனும் இரண்டிலும் 13ம் திதியாகிய திரயோதசித் திதியில் சூரிய அத்தமனத்திற்கு முன் ஒன்றரை மணி நேரமும், பின் ஒன்றரை மணி நேரமும் உள்ள காலம் (மாலை 4.30-6.00) பிரதோஷ காலம் எனப்படும். இக்காலத்தில் சிவபெருமானைக் குறித்து இவ்விரதம் அனுட்டிக்கப்படும். ஐப்பசி, கார்த்திகை, சித்திரை, வைகாசி ஆகிய மாதங்களில் ஒன்றில் வரும் சனிப்பிரதோஷத்தில் தொடங்கி இவ்விரதத்தை அனுட்டிக்கத் தொடங்கலாம். பகலில் உணவை விடுத்து, பிரதோஷ காலம் தொடங்குவதற்கு முன்பே நீராடி, சிவபூசை முடித்துச் சிவாலய தரிசனம் செய்து, பிரதோஷகாலம் கழிந்தபின் சிவனடியாரோடு உணவு கொள்ளல் வேண்டும். பிரதோஷ காலத்தில் சிவாலயத்தை வலம் வந்து இடபதேவரையும் சண்டேசுவரரையும் கும்பிடுதற்கு விசேட முறை உண்டு. பிருதிவியிலுள்ள தீர்த்தங்களெல்லாம் பிரதோஷ வேளையில் சிவதரிசனத்தின் பொருட்டு நந்திதேவரை வந்தடைவதாகப் புராணங்கள் கூறுவதனால், இந்நேரத்தில் நந்திதேவரது இரண்டு கொம்புகளுக்கும் இடையால் சிவதரிசனஞ் செய்தல் மிகவும் உத்தமமென அருள் நூல்கள் கூறுகின்றன. காப்பரிசி நிவேதனம் செய்வது சிறப்பைத் தரும். அதையே விரத உணவாகவும் உண்ணலாம்.

இறைவன் தீர்த்தங்களின் வடிவாய் இருந்து உயிர்களது வினையைப் போக்கி, அவைகட்கு நலஞ் செய்பவன். அப்படியான தீர்த்தங்கள் நந்தி தேவரிடம் பிரதோஷ வேளையில் வந்திருக்கும்போது அவருக்கூடாகச் சிவ தரிசனஞ் செய்பவர்கள் அத்தீர்த்தத்தில் நீராடிச் சிவ தரிசனஞ் செய்பவர் களாகின்றனர். இத்தீர்த்தத்தைத் தாண்டி வழிபடுவோர், தாங்கள் செய்த பாவத்தைத் தீர்த்தத்தில் கழுவி உயிரைத் தூய்மை செய்துகொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல இடங்களில், பல காலங்களில் சென்றாடிப் பயன்பெறுதற்குரிய புண்ணிய தீர்த்தங்களின் பலன்களை, ஓர் இடத்தில், ஒரு பொழுதில் எல்லோரும் மானசீகமாக ஆடிப் பெறுதற்பொருட்டு, பிரதோஷப் பொழுதில் புண்ணிய வடிவான நந்தியம்பெருமானடியில் ஒன்றுதிரண்டுவர வைத்திருப்பது இறைவனது பேரருட் கருணைக்கோர் எடுத்துக்காட்டாகும். இப்படியான சிறந்த விரதத்தை விதிப்படி நோற்போர் மேன்மையான சித்திகளை எய்துவர். பிரதோஷகாலத்தில் செய்யும் ஆலய பிரதட்சணத்தைச் சோமசூத்திரப் பிரதட்சணம் என்பர்.

உணவு உண்டல், உறங்கல், எண்ணெய் தேய்த்தல், நீராடல், நூல்களைப் படித்தல் முதலியன பிரதோஷ காலத்தில் தவிர்க்கப்படல் வேண்டும்.

பிரதோஷ விரத தரிசன பலன் கடன், வறுமை, நோய், பயம், பாவம் முதலானவற்றை நீக்கும்.

### சோம சூத்திரப் பிரதட்சண முறை

பிரதோஷ காலத்தில்( மாலை 4.30 முதல் 6.00 மணிவரை) சிவாலயம் சென்று தரிசிக்கும் போது வலம் வரும் முறைக்கு சோமசூத்திரப் பிரதட்சண முறை என்று பெயர். இதன் முறை -

முதலில் சிவனையும், நந்தியையும் வணங்கி இடமாக சண்டேஸ்வரரை வழிபட்டு அப்படியே திரும்பி வந்து முன்போல் சிவனையும், நந்தியையும் வணங்கி வழக்கம்போல ஆலயத்தை வலமாக வந்து சண்டேஸ்வரர் ஆலயம் வரை வழிபட்டு அப்படியே திரும்பி வந்து முன்போல் சிவனையும், நந்தியையும் வணங்கவேண்டும். இவ்வாறு மூன்று முறை செய்யவேண்டும். இதுவே சோமசூத்திரப் பிரதட்சண முறையாகும்.

### மாசி மகம்

மாசி மாதம் மக நட்சத்திரம் கூடிய நாளான இத்தினம் நடராஜப் பெருமானின் ஆறு அபிஷேகத் தினங்களில் ஒன்றாகையால் நடேசர் தரிசனத்திற்குச் சிறந்த நாளாகும். அம்பிகை தாட்சாயணியாகத் தாமரை மலரில் அவதரித்த நாள் இதுவாகும்.

## *பங்குனி*

### பங்குனி உத்தரம் (கல்யாண சுந்தர விரதம்)

உலக மாதாவாகிய உமாதேவியார் மலையரசன் மகளாக திருஅவதாரம் செய்து சிவபெருமானைத் திருமணம் செய்தது இத்தினமாகும். இத்தினம் விழா எடுப்பதற்கும் தரிசனத்துக்கும் சிறந்த நாளாகும். இவ்விரதத்திற்கு இரவில் பழமும் பாயாசமும் உண்பது நியதி. இயலாதவர்கள் நண்பகல் ஒருபொழுது உணவு உண்ணலாம்.

### பங்குனித் திங்கள்

பங்குனித் திங்கள் அம்பிகை வழிபாட்டிற்குச் சிறந்த நாளாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20. பண்டிகைகள்

## 1. சித்திரை வருடப் பிறப்பு

இது சித்திரை மாதம் முதலாம் திகதி, அதாவது சூரியபகவான் மேடராசிக்குள் பிரவேசிக்கும் காலம் கொண்டாடப்படுவதாகும். எமது தமிழ் வருடங்கள் அறுபது (60) உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெயர் (நாமம்) கொண்டு மழை, காற்று, பயிர்வளம் போன்ற இயற்கைக்கால பலாபலன்களை மாற்றி அமைப்பன. இவ்வருடங்களின் ஆரம்பம் (பிறந்த நாள் அதாவது பிரம்மா உலக படைப்பு ஆரம்பித்த நாள் என்பது புராண ஐதீகம்) இதையே புதுவருடப் பிறப்பாகக் கொண்டாடுகின்றோம். இந்நாளில் எம்மவர்கள் தமது பாவங்கள், தோஷங்கள் நீங்க வேண்டி ஆலயங்களில், அர்ச்சகர் இல்லங் களில் மருந்து வகை, பூ வகை, வாசனைத் திரவியம் போன்றவை போட்டுக் காய்ச்சிய மருத்து நீரைத் தலையிலே தேய்த்து, ஸ்நானம் செய்து, உலகின் கண் கண்ட தெய்வமாய் மிளிரும் சூரியபகவானுக்கு, வீடுகளில் பொங்கலிட்டு பூஜை செய்து புத்தாடை அணிந்து ஆபரணங்கள் அணிந்து, ஆலய வழிபாடு செய்து, குரு, பெரியார் ஆசிகள் பெற்று, அறுசுவை உணவு உண்டு, மங்களகரமாய் நித்திரை செல்ல வேண்டும். இது எம்மவர் பாரம்பரிய மரபாகும். மங்களகர மான இந்நாட்களில் மனத்தில் மகிழ்ச்சி ஏற்படும் வண்ணம் நடந்து கொள்வது அந்த வருடம் முழுநாளும் எம்மவர் மனங்கள் மகிழ்வு பெறும் என்பதும் எம்மவரின் ஐதீகமாகும்.

வருடத்திலுள்ள பன்னிரெண்டு மாதங்களும் சுழற்சியில் மேடம் முதல் மீனம் ஈறான பன்னிரெண்டு ராசிகளிலும் சஞ்சரிக்கும் கிரகங்களி நடுநாயகமான சூரியபகவான் ஒவ்வொரு வருடமும் சித்திரை முதலாந் திகதி கடைசியாகிய மீன ராசியிலிருந்து முதல் வீடாகிய மேடராசிக்குள் பிரவேசிக் கிறார். இத்தினத்தையே எமது மூதாதையர் எமது வருடப்பிறப்பாகக் கணித்துக் கொண்டாடுகிறார்கள். மேலும் உலகில் உள்ள சகல நிகழ்வுகளுக்கும். சூரியனே காரணமாக இருப்பதால் அவர் முதலாவது வீடான மேடராசியில் பிரவேசிக்கும் பொழுது பூரண கும்பங்கள் வைத்துப் பாற் பொங்கல் பொங்கிப் படைத்து வரவேற்கப்படுகின்றார்.

## 2. ஆடிப்பிறப்பு

ஆடி பிறக்கும் பொழுது மாரியும் பிறக்கிறது என எமது மூதாதையர் நம்பினார்கள். எமது சீவியத்திற்குத் தேவையான விளைபொருட்களை விளைவிப்பதற்கு மாரி இன்றியமையாததாகையால் ஆடிப்பிறப்பைக் கொண்டாடி மாரி காலம் வரவேற்கப்படுகின்றது. ஆடி மாதத்தில் தான் எமக்கு தேவையான விளைபொருட்களுக்கும் வித்திடப்படுகின்றது. இவை காரணமாக ஆடிப்பிறப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. தீபாவளி

ஐப்பசி மாதத்தில் அமாவாசைக்கு முதல் நாளாகிய சதுர்த்தசி பொருந்திய விடியற்புற நேரம் தீபாவளிக் காலமாகும். வீடுவாசல் அக்கம் பக்கம் எல்லா இடங்களிலும் தீபங்கள் ஏற்றப்படுவதால் இந்நாளுக்குத் தீபாவளி என்று பெயர் வந்ததாகச் சைவப் பெரியார் சிவபாத சுந்தரனார் கூறுகிறார். அன்றைய தினம் காலையில் ஸ்நானம் செய்து கோவிலுக்குச் சென்று தரிசனம் செய்து புண்ணியச் செயல்கள் செய்ய வேண்டும். உபவாச விரதம் அனுட்டித்தல் உத்தமம். இந்த நாள் ஆன்மாக்கள் நரக வழியினின்றும் நீக்கப்படும் நற்பாக்கிய நிலையைக் குறிப்பதாகும். எனவே பாதகத் தொழில்களின்றும் விலகியிருத்தல் சகலரதும் கடனாகும்.

இஃது அனைவரும் புனிதமானவராய் இறைவனைப் பிரார்த்திக்கும் திருநாளாகும். இந்நாளில் நரகாசுரன் என்ற அசுரன் பல கொடுமைகளையும் பஞ்சமா பாவங்களையும் செய்து வந்தான். இவனுடைய கொடுமை தாங்காத தேவர்கள் விஷ்ணு பகவானிடம் சரணடைந்து, தம்மைக் காக்க வேண்டி நிற்க, அதற்கிணங்கி எம்பிரான் அவனைச் சம்ஹாரம் செய்ய, இறக்கும் தருணத்தில் தன் தவறை உணர்ந்த அசுரன், தான் செய்த அனைத்துப் பாவங்களுக்கும் விமோசனம் கிடைக்கும் பொருட்டுத் தான் இறக்கும் இந்நாளில் "இறைவா நான் எனக்காக எதுவும் கேட்கவில்லை. நான் செய்த பாவங்களுக்குப் பரிகாரமாக இன்றைய நாளில் யார் ஆசாரமுள்ளவராய், பஞ்சமா பாவங்களையும் விடுத்து உன்னைத் தியானித்து பூஜிக்கின்றார்களோ அவர்களுக்கு நரகம் விடுத்துச் சொர்க்கம் கிடைக்க அருள வேண்டும்" எனப் பிரார்த்திக்க இறைவனும், அவனுக்கு அருள் வழங்கி, மோட்சம் கொடுத்தார். இந்நாளில் உபவாசமிருந்து விஷ்ணு நாமங்கள் ஜெபித்து, விஷ்ணு தரிசனம் செய் வோருக்கு, வைகுண்ட மோட்சம் கிடைக்கும் என்று புராணங்களில் சொல்லப்பட்டுள்ளது. இதைப் புரியாத நம்மவர், தீபாவளி நாளில் உயிர்ப்பலி செய்து, புசித்து, மதுஅருந்தி, பல பாவங்களையும் மேற்கொள்வது அறியாமையாகும். இனிவரும் நாட்களிலாவது, எம்மவர்கள் இப்படியான பாவச் செயலை விடுத்து நற்செயலும் நற்கதியும் பெறுவார்களாக.

## 4. தைப்பொங்கல்

உலகத்திலே மாரியுண்டாவது சூரியனினால், பயிர்கள் விளைவது மாரி யினால். எனவே எமக்குத் தேவையான அனைத்தையும் கொடுப்பவர் சூரியபகவான். ஆடியில் விதைக்கின்ற பயிர்கள் எல்லாம் மாரி காலத்தில் வளர்ந்து முற்றித் தை மாதத்தில் அறுவடை செய்யப்படுகின்றன. எமது சீவியத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களை விளைவித்துத் கொடுத்த சூரியனுக்கு நன்றிக் கடன் செலுத்துவதற்காகத் தை முதல் நாள் பூரண கும்பம் வைத்து வரவேற்றுப் புதிதாக அறுவடை செய்த அரிசியில் சூரியன் உதயமாகும் நேரத்தில் பாற்பொங்கல் பொங்கிப் படைத்து நன்றிக் கடன் செலுத்தப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21. பஞ்சாங்கம்

நாள், திதி, நட்சத்திரம் யோகம், கரணம் இவை ஐந்தும் பஞ்சாங்கமெனப்படும்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வாரங்கள் | - | 7 | திதிகள் | - | 30 |
| நட்சத்திரங்கள் | - | 27 | யோகங்கள் | - | 27 |
| கரணங்கள் | - | 11 | | | |

இவை பஞ்சாங்க உறுப்புக்களாகும்.

**திதிகள் - 30**

| | | |
|---|---|---|
| பிரதமை | ஷஷ்டி | ஏகாதசி |
| துதியை | ஸப்தமி | துவாதசி |
| திரிதியை | அஷ்டமி | திரயோதசி |
| சதுர்த்தி | நவமி | சதுர்த்தசி |
| பஞ்சமி | தசமி | 15 பூர்ணிமை |
| | | 30 அமாவாசை |

**நட்சத்திரங்கள் - 27**

| | | |
|---|---|---|
| அச்சுவினி | மகம் | மூலம் |
| பரணி | பூரம் | பூராடம் |
| கார்த்திகை | உத்தரம் | உத்தராடம் |
| ரோகிணி | அத்தம் | திருவோணம் |
| மிருகசீரிடம் | சித்திரை | அவிட்டம் |
| திருவாதிரை | சுவாதி | சதயம் |
| பூனர்பூசம் | விசாகம் | பூரட்டாதி |
| பூசம் | அனுஷம் | உத்தரட்டாதி |
| ஆயிலியம் | கேட்டை | ரேவதி |

**யோகம் - 27**

| | | |
|---|---|---|
| விஷ்கம்பம் | பிரீதி | ஆயுஷ்மான் |
| சௌபாக்கியம் | சோபனம் | அதி கண்டம் |
| சுகர்மம் | திருதி | சூலம் |
| கண்டம் | விருத்தி | துருவம் |
| வியாகாதம் | அரிஷணம் | வச்சிரம் |
| சித்தி | வியதீபாதம் | வரியான் |
| பரிகம் | சிவம் | சித்தம் |
| சாத்தியம் | சுபம் | சுப்பிரம் |
| பிராமியம் | மாகேந்திரம் | வைதிருதி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கரணங்கள் - 11

| | | |
|---|---|---|
| பவம் | பாலவம் | கௌலவம் |
| தைதுலம் | கரசம் | வணிசம் |
| பத்திரை | சகுனி | சதுஷ்பாதம் |
| நாகவம் | கிம்ஸ்துக்கினம் | |

### பூர்வபட்சம்

அமாவாசைக்கு பின்வரும் திதிகள் பூர்வபட்சமாகும். வளர்பிறை, சுக்கிலபட்சம் எனவும் இது அழைக்கப்படும்.

### அபரபட்சம்

பௌர்ணமிக்கு பின்வரும் திதிகள் அபரபட்சம் ஆகும். இது தேய்பிறை, கிருஷ்ண பட்சம் எனவும் அழைக்கப்படும்.

### உத்தராயணம்

தை முதல் ஆனி மாதம் வரை தேவர்களுடைய ஒரு பகல் பொழுது காலமாகும். மிகவும் புண்ணியமான காலம்.

### தட்சிணாயணம்

ஆடி முதல் மார்கழி மாதம் வரை தேவர்களுடைய ஒரு இரவுப் பொழுதாகும்.

### ராசிகள் - 12

மேடம், இடபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம்.

### ராகு காலம்

ராகு காலத்தை நினைவில் வைத்து கொள்ள "திண்டுக்கல் சந்தையிலே வெற்றிலை புகையிலை விற்கும் செட்டியும் ஞானியாவான்" என்ற (பழமொழியை) வரிகளை ஞாபகப்படுத்திக் கொண்டால் போதும். இந்த பழமொழியின் வார்த்தையின் முதல் எழுத்தைக் கொண்டு நிதானித்து விடலாம்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| திங்கள் | - | 7.30 | முதல் | 9.00 | வரை |
| சனி | - | 9.00 | முதல் | 10.30 | வரை |
| வெள்ளி | - | 10.30 | முதல் | 12.00 | வரை |
| புதன் | - | 12.00 | முதல் | 1.30 | வரை |
| வியாழன் | - | 1.30 | முதல் | 3.00 | வரை |
| செவ்வாய் | - | 3.00 | முதல் | 4.30 | வரை |
| ஞாயிறு | - | 4.30 | முதல் | 6.00 | வரை |

(வாக்கிய பஞ்சாங்க நேரப்படி)

ராகு காலத்தின் தொடக்கத்தில் இருந்து முதல் ½ மணிநேரத்தைத் தலையான காலம் (தலை) என்றும், இரண்டாவது ½ மணிநேரத்தை மத்திய காலம் (வயிற்றுப் பகுதி) என்றும், மூன்றாவது ½ மணிநேரத்தைக் கடைசிப் பகுதி என்றும் பிரிக்கப்படுகிறது. இவற்றுள் மூன்றாம் பாதத்தின் பகுதி (வால் பகுதி) மிகவும் முக்கியம் வாய்ந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்கு அமிர்த கடிகை என்று பெயர். இந்தக் காலமே வெற்றி தித்திக்கும் சிறந்த காலம். "அமிர்தம்" என்ற அருமருந்தினை அருந்தியவன் ஆயுளுக்கு எப்படி ஒரு குறையும் வராதோ அதுபோல ராகு காலத்தில் துர்க்கைக்கு செய்யும் பூஜைகள் புண்ணியத்தை பெருக்குவதுடன் உடனடியாக பலனும் அளிக்கின்றது.

### எமகண்டம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஞாயிறு | - | பகல் | - | 12.00 | முதல் | 1.30 | வரை |
| திங்கள் | - | காலை | - | 10.30 | முதல் | 12.00 | வரை |
| செவ்வாய் | - | காலை | - | 9.00 | முதல் | 10.30 | வரை |
| புதன் | - | காலை | - | 7.30 | முதல் | 9.00 | வரை |
| வியாழன் | - | காலை | - | 6.00 | முதல் | 7.30 | வரை |
| வெள்ளி | - | பகல் | - | 3.00 | முதல் | 4.30 | வரை |
| சனி | - | பகல் | - | 1.30 | முதல் | 3.00 | வரை |

(வாக்கிய பஞ்சாங்க நேரப்படி)

### மலமாதம்

எந்த மாதத்திலாவது, இரண்டு அமாவாசை அல்லது இரண்டு பௌர்ணமி வந்தால் அது மலமாதமாகும். இதில் திருமணம் முதலிய சுபகாரியங்கள் செய்யக் கூடாது.

### அக்கினி நட்சத்திரம்

சித்திரை மாதம் 21ம் திகதி முதல் வைகாசி மாதம் 14ம் திகதி வரை உள்ள காலப்பகுதி இதில் சுபகாரியம் செய்யக் கூடாது.

### தோஷமில்லாத காலம்

சூரிய உதயத்தில் (உஷத் காலத்தில்) திதி தோஷமும், (அபிஜித்) உச்சிக் காலத்தில் அதாவது **12½** நாழிகைக்கு மேல் 1 நாழிகைக்குள் நட்சத்திர தோஷமும், அஸ்தமன (மாலை) நேரத்தில் லக்ன தோஷமும், இரவில் வார தோஷமும் இல்லையாம்.

### அமாவாசை

அமாவாசையில் தானம், பிதுர் காரியங்கள் செய்யலாம். அமாவாசையில் வேறு ஏதாவது சுபகாரியம் செய்வதானால் அமாவாசையை ஆறாகப் பிரித்து கடைசி ஆறாவது பிரிவில் சுபகாரியம் செய்யலாம். ஆனால் அமாவாசையில் திருமணம் செய்யக் கூடாது.

| | நவக்கிரகங்கள் | ஸ்தலங்கள் | கற்கள் |
|---|---|---|---|
| 1) | சூரியன் | சூரியனார் கோயில் | மாணிக்கம் |
| 2) | சந்திரன் | திங்களூர், திருப்பதி | முத்து |
| 3) | செவ்வாய் | வைத்தீஸ்வரன் கோயில் | |
| | | பழனி | பவளம் |
| 4) | புதன் | மதுரை | மரகதம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 5) | குரு | ஆலங்குடி, திருச்செந்தூர் | புஷ்பராகம் |
| 6) | சுக்கிரன் | கஞ்சனூர் | |
| | | ஸ்ரீ ரங்கம் | நல்ல வைரம் |
| 7) | சனி | திருநள்ளாறு | நீலம் |
| 8) | இராகு | திருநாகேஸ்வரம் | கோமேதகம் |
| 9) | கேது | கீழ்ப்பெரும்பள்ளம் | வைடூர்யம் |

## இராசிக் கற்கள்

| இராசி | | இரத்தினக்கல் |
|---|---|---|
| மேடம் - | விருச்சிகம் | நற்பவளம் |
| இடபம் - | துலாம் | வைரம் |
| மிதுனம்- | கன்னி | மரகதம் |
| கடகம் | | முத்து |
| சிம்மம் | | சிவப்பு மாணிக்கம் |
| தனுசு - | மீனம் | புஷ்பராகம் - கனக புஷ்பராகம் |
| மகரம் - | கும்பம் | நீலம் |

## பஞ்சாங்கம் பார்க்கும் முறையும் விளக்கமும்.

**திதி** - சந்திரனைத் தழுவி வருவது. ஆகாயத்தில் சந்திரனுக்கும், சூரியனுக்கும் இடைப்பட்ட தூரமே திதியாகும். இதில் வளர்பிறை தேய்பிறை என இருவகைப்படும். சூரியனும் சந்திரனும் ஒன்று சேரும் திதியே அமாவாசையாகும்.

**நட்சத்திரம்** - இவை சூரியனைச் சுற்றிவருபவை ஆகும். ஒரு நட்சத்திரம் நான்கு பாதங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. பாதத்தையும் நட்சத்திரத்தையும் வைத்தே ஒவ்வொரு இராசியும் அமையும்.

**யோகம்** - ஆகாயத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் இருந்து சூரியனும், சந்திரனும் செல்லும் நேரம். ஒவ்வொரு யோகத்திற்கும் தனித்தனித் தன்மைகள், குணங்கள் உள்ளன. சுபகாரியங்கள் செய்யும் பொழுது அதற்குரிய சுபயோகங்களைப் பார்க்க வேண்டும்.

**கரணம்** - திதியில் பாதியே கரணம் ஆகும். "கரணாக் காரிய சித்தி" கரணத்தை அறிந்து செய்வதால் காரியங்கள் நல்லபடியாக முடியும் என்பர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நல்ல நேரம் பார்க்கும் பொழுது கவனிக்கத்தக்கவை

- அன்றைய தினம் கரிநாளாக இருத்தல் கூடாது.
- திதியில் அட்டமி, நவமி திதிகளைத் தவிர்த்தல் வேண்டும்.
- யோகம் மரண யோக வேளையாக இல்லாமல் சித்த, அமிர்த யோகமாக இருத்தல் வேண்டும்.
- இராகு காலம், எமகண்ட நேரங்களாக இருக்கக் கூடாது.
- முக்கியமாக பிறந்த நட்சத்திரக்காரருக்கு அன்றைய தினம் சந்திராஷ்டம தினமாக இருத்தல் கூடாது.
- முக்கியமாக கீழ்க்கண்ட பஞ்சகங்களில் கீழ்க்கண்ட சுபகாரியங்களைத் கண்டிப்பாகத் தவிர்த்தல் வேண்டும்.

  **அக்கினி, சோர, ரோக, பஞ்சகங்கள்-:** திருமணம், சீமந்தம், புதுமனை குடிபோதல், பங்குத் தொழில், கம்பனி போன்றவை ஆரம்பித்தல் கூடாது.
  **அக்கினி பஞ்சகம்-:** பஞ்சு, எரிபொருட்கள், நூல் துணி வகைகள், சம்பந்தப்பட்ட தொழில்கள் தொடங்கக் கூடாது.
  **இராஜ பஞ்சகம்-:** அரசு, வங்கி, மற்றும் பொது நிதி நிறுவனங்கள், கடன் வாங்கி நடத்தும் தொழில் என்பன தொடங்கக் கூடாது.
  **நிஷ் பஞ்சகங்கள்-:** மிக்க சுபம் தரும்.

### நாழிகை விபரம்

| | | |
|---|---|---|
| 60 விநாடி | - | ஒரு நாளிகை |
| 60 நாழிகை | - | ஒரு நாள் (24 மணித்தியாலம்) |
| $2\frac{1}{2}$ நாழிகை | - | ஒரு மணி (60 நிமிடம்) |
| 1 நாழிகை | - | 24 நிமிடம் |
| 1 வினாடி | - | 0.24 நிமிடம் (14.4 செக்கண்ட்) |

### வாஸ்து புருடன் எழுந்திருக்கும் காலங்கள்


| தமிழ் மாதம் | தமிழ் திகதி | நேரம் |
|---|---|---|
| சித்திரை | 10 | 8. 00 மு. ப - 9. 30 மு. ப |
| வைகாசி | 21 | 9. 12 மு. ப - 10. 42 மு. ப |
| ஆடி | 11 | 6. 48 மு. ப - 8. 18 மு. ப |
| ஆவணி | 6 | 2. 24 மு. ப - 3. 54 பி. ப |
| ஐப்பசி | 11 | 6. 48 மு. ப - 8. 18 மு. ப |
| கார்த்திகை | 8 | 10. 00 மு. ப - 11. 30 மு. ப |
| தை | 12 | 9. 12 மு. ப - 10. 42 மு. ப |
| மாசி | 22 | 9. 12 மு. ப - 10. 42 மு. ப |

வாஸ்து புருடன் எழுந்திருக்கும் $1\frac{1}{2}$ மணி நேரத்திலும் கடைசி 18 நிமிடமே மிகச்சிறந்ததாகையால் அந்நேரத்தில் வீடு கட்ட, குடிபோக, மிகச் சிறந்ததாகும். அதில் எந்தவித தோஷமும் ஏற்படாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## இயல் ஐந்து

# சிராத்தவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22. அபரக் கிரியைகள்

## அபரக்கிரியையின் சொல் விளக்கம்

அபரம் என்பது பிந்தியது எனப் பொருள்படும். கிரியை என்பது நன்றாகச் செய்யப்படுவது எனப் பொருள்படும். அதாவது ஒருவர் இறந்த பின்பு ஆத்மா இறைவனடி சேர வேண்டி அவரது புத்திரர் முதலியோரால் நன்றாகச் செய்யப்படுவதே அபரக் கிரியை இதுவே உ த்தரகிரியை, சிராத்தக் கிரியை, மரணக் கிரியை என அழைக்கப்படும்.

ஒருவர் இறந்தபின் அவரது நன்மை கருதி அவரது பிள்ளைகள் முதலியோரினால் செய்யப்படும் கிரியைகள் அபரக் கிரியைகள் எனப்படும். கிரியைகள் செய்வதனால் இறந்த ஆன்மா பாவங்களினின்றும் நீங்கி, சிவத்துவம் அடையும் என்பது நம்பிக்கை. தாய்தந்தையர்க்குச் செய்ய வேண்டிய கடமைகளை அவர்கள் உயிருடன் இருக்கும்போதும். இல்லாதபோதும் பிள்ளைகள் தவறாது செய்தல் வேண்டும். அபரக்கிரியைகளின் பலனை சிவாகமங்களும், புராண இதிகாசங்களும் விளக்குகின்றன.

தாய்தந்தையரைப் பேணாது கடவுளை வழிபடல் பயன்தராது என்பது கௌசிகர் வரலாறு மூலம் அறியலாம். அவர்களை வழிபடுவதாகிய ஒரு புண்ணியமே ஒரு பிறப்புக்குப் போதியதாம்.

இல்லறத்தார்க்குரிய முக்கிய ஐவகைக் கடமைகளில் பிதிர்க் கடன் முக்கியமானதாலேயே திருவள்ளுவர் பிதிர்களைத் 'தென்புலத்தார்' எனக் கூறியுள்ளார். பிதிர்க்கடன் செய்தோர் பெரும்பேறுகளும், சித்திகளும் பெறுவர். சிவ அருளுக்கு ஆளாவர். பிதிர்க்கடன் செய்யாதோர் சமய ஆசாரந் தவறியவராவர். பிதிரர் வருந்தின் பெருந் தீமைகள் நேரும்.

## அபரக்கிரியைகளின் வகை :

இவை தகனக்கிரியை, அத்திசஞ்சயனம், அந்தியேட்டி, ஏகோதிட்டம், சபிண்டீகரணம், மாசியம், சிராத்தம் எனப்பல பகுதிகளை உடையன இவைகள் சிராத்தக் கிரியை எனவும் அழைக்கப்படும். தீட்சை பெற்றோரே சைவர் என்று சொல்லுந் தகுதி பெற்றவர். தீட்சை பெற்றோர்க்கு மாத்திரம் சைவக் கிரியைகள் செய்யப்படும். உயர்ந்த நிலையிலுள்ள சிவனடி யார்கள் சிவனேயானவர். அவர்களுக்குரிய உத்தர கிரியைகள் வழிபாடாக நடைபெறும். அவர்கள் சிராத்தம் குருபூசையாக நட்சத்திர நாளில் நடைபெறும்.

மற்றவர்களுக்கு பூதவுடலில் தீட்சைவைத்தபிறகு கிரியைகள் செய்யலாம். வாழ்நாள் முழுவதும் அசைவ உணவுகளை உண்ணாத சுத்த சைவர்களுக்குப் பூதவுடலிலேயே அந்தியேட்டியும் செய்யலாம். அவர்களுக்கு 16ம் நாள் கல் வைத்து பாடாண பூசை செய்யலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அபரக்கிரியைகளின் பாகங்கள்

அபரக்கிரியைகளை மூன்று பாகங்களாக வகுப்பர்.

பூர்வாங்கம் :- தகனம் முதல் ஏகோதிட்டம் வரையுள்ள கிரியைகள்

மத்தியாங்கம் :- மாசியம் முதல் சபிண்டீகரணம் வரையுள்ள கிரியைகள்

உத்தராங்கம் :- ஆப்திக சிராத்தம், சிராத்த வகைகள், புரட்டாதி மாத அபர பட்சத் திதிகளில் செய்யப்படும் மஹாளய சிராத்தம் முதலியன.

## அபரக்கிரியைகளின் விபரங்கள்

உக்கிராந்திக் கிரியை
தேகாந்த சூர்ணோற்சவம்
அத்தி சஞ்சயனம்
நக்னப் பிரச்சாதனம் அந்தியேட்டி
பாஷாணத்தாபனம்
ஏகோத்திரவிருத்தி
பிண்டதானம்
நவசிராத்தம்
பாஷாண உத்தாபனம்
சம்கிதா சிராத்தம்
இடபதர்சனம்
ஏகோதிட்டம்
மாசியம்
சோத கும்ப சிராத்தம்
சபிண்டீகரணம்
ஆப்திகம்
மஹாளயம்
இவைகள் உத்தரகிரியை என அழைக்கப்படும்.

## உக்கிராந்திக் கிரியை

உக்கிராந்திக் கிரியை என்பது ஒருவருடைய உயிர் உடலை விட்டு நீங்கும் நிலையில் செய்யப்படும் தசதானக் கிரியை (பத்து வகையான பொருட்களை தானம் கொடுக்கும் வழக்கம்) உக்கிராந்திக்கிரியை எனப்படும்.

## உக்கிராந்திக் கிரியை செய்யும் முறை :-

ஒருவருக்கு மரணம் அண்மித்ததை அறிந்து தம் குருவை வரவழைத்து, "பாபநீக்கத்தின் பொருட்டு" குல ஆசார அனுஷ்டான முறைக்கமைய

1. கன்றோடு கூடிய பசுமாடு
2. நெல் விளையக் கூடிய அளவு விளைவு நிலம்
3. எள்ளு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. பொன்
5. நெய்
6. உணவுத் தானியங்கள்
7. வெள்ளி
8. உப்பு
9. வெல்லம்
10. ஆடைகள்

ஆகியவற்றை புத்திரர்கள் அவர் பெயரால் அந்தணருக்கு வழங்கலாம்.

### உயிர் உடலை விட்டு நீங்கியபின்பு நடாத்தப்படுகின்ற கிரியைகள்

விநாயக வழிபாடு
பஞ்ச கௌவ்ய பூஜை
புண்ணியாக வாசனம்
மண்டப சுத்தி (கிரியை செய்யும் இடத்தினை நெற்பொரி, சந்தனம், வெண்கடுகு, விபூதி, புஷ்பம், அட்சதை எனும் பொருட்களைக் கொண்டு தூய்மைப்படுத்தல்)

### உருத்திரகும்ப பூஜை

பூதவுடலை குளிப்பாட்டல் (எண்ணெய், பஞ்சகவ்யம், இளநீர், மஞ்சள்நீர், சிவகும்ப நீர் ஆகியவைகளால் உடலைச் சுத்தி செய்து புத்தாடை உடுத்தி திருநீறுபூசுதல்)

பேரிதாடனம்
சூர்ணோற்சவம்
சுண்ணமிடித்தல் என்பன செய்தல்

### பேரிதாடனம் கிரியை விளக்கம் :-

பேரி என்பது மேளம், தாடனம் என்பது அடித்தல் எனப்படும். குருவானவர் மந்திரரூபமாக பிரம்மா, விஷ்ணு, உருத்திரன், சப்த மாதர்கள், அஷ்டமஹா நாகங்கள், சூரியர், சந்திரர் ஆகியோர்களை மேளத்தில் பூஜித்து ஆவாஹித்து இறந்தவருடைய ஆன்மா ஈடேற்றம் அடைய வேண்டும் எனும் சிவலோகப் பிராப்திக்காக மூன்று முறை மேளமடித்தலைக் குறிக்கும் கிரியையாகும்.

### சூர்ணோற்சவமும், சுண்ணமிடித்தலும் :-

ஆன்மா தூல தேகம் நீங்கிய பின்பு சூக்கும தேகத்துடன் சஞ்சரிக்கின்ற நிலையைக் குறிப்பதே சூர்ணோற்சவமாகும். இறந்தவரது ஆன்மா சிவகதி அடைய ஏற்படும் தடைகளை நீங்கச் செய்வதற்கும் உடலைப் புனிதப் படுத்தவும், மங்களம் வேண்டியும் இக்கிரியை செய்யப்படுகின்றது.

மஞ்சள் பொடி, அறுகு, நல்லெண்ணெய் எனும் பொருட்களை பூமி தேவியாக பூஜிக்கப்பட்ட உரலில் இட்டு மேருமலையாக பூஜிக்கப்பட்ட உலக்கை யினால் 81 பதமந்திரங்களைச் சொல்லியும் இறுதியில் திருப்பொற் சுண்ணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் திருவாசகம் பாடியும் இடிக்கப்படும் கிரியைகளே சூர்ணோற்சவமும், சுண்ணமிடித்தலுமாகும். பாவங்கள் அகன்ற பின்பு திருவருள் உண்டாவதற்காக தீப்பந்தம் ஏற்றப்படும். தொடர்ந்து திருமுறைகள் ஓதப் படும்.

உடலை மயானத்திற்கு எடுத்துச் செல்லும்போது அட்டதிக்கு தேவர்களின் ஆசியைப் பெறுவதற்காக சைவாசாரமுள்ள ஒருவரினால் வழியிலே நெற்பொரி தூவப்படும்.

ஓமாக்கினியிலிருந்து உருத்திரனை ஆவாஹித்த சிவாக்கினியும், கும்பமும் உடன் எடுத்துச் செல்லப்படும். சுடுகாட்டிலே, நாலு முழ நீளமும், இரண்டு முழ அகலமும் உள்ள பொருத்தமான இடத்தில் மஞ்சள், குங்குமம் இட்டு விறகு அடுக்கப்படும். அதன் மீது உடலை வைத்து தற்புருஷ மந்திரத்தினால் நீரையும், அரிசியையும் இறந்தவர் வாயில் இட்டு கும்பநீரை உடலுக்கு தெளித்து, சிவாக்கினியை விறகின் கண் இட்டு எரியச் செய்வர்.

தகனம் செய்த பின்பு நீர்க்கரையில் கொள்ளி வைத்தவர் நீராடி வீடு செல்வர். தீயிலே உடலை அக்கினி பகவானுக்கு ஆகுதியாகக் கொடுக்கும் நிகழ்வாகவே தகனம் அமைகின்றது. நீராடிய பின்பு இறந்த முன்னோர்கள் ஆகிய பிதிர்களின் திருப்தியின் பொருட்டு மூன்று முறை இருகைகளிலும் நீர் எடுத்து தர்ப்பணம் செய்வதோடு தகன சம்ஸ்காரங்கள் முடிவடைகின்றன.

**அஸ்தி சஞ்சயனம் :-**

அஸ்தி சஞ்சயனம் என்பது எரிக்கப்பட்ட உடலில் இருந்து எலும்புகளையும், சாம்பலையும் எடுத்து புண்ணிய நீரில் சேர்ப்பதாகும். அஸ்தி - எலும்பு, சஞ்சயனம் கரைத்தல். இஃது கால், தொப்பூழ், நெஞ்சு, முகம், தலை ஆகிய இடங்களில் உள்ள எலும்புகளைச் சாம்பலுடன் எடுத்துப் பால் உள்ள பாத்திரத்தில் இட்டுக் கொண்டு புண்ணிய நீரில் சேர்த்து வழிபாடு செய்தலாம். அஸ்தியைப் புண்ணிய தீர்த்தத்தில் இடுவதினால் ஆன்மா புண்ணிய உலகம் அடையும் என்பது பொருள். சாம்பல் அள்ளுதல் என்று இன்று கூறப்படுவது இதுவேயாம்.

**நக்ன தானம் :-**

ஒரு நீர்க் கரையை அடைந்து, ஒரு குடத்தில் அரிசியை நிரப்பி அக்குடத் தினை சுற்றி வஸ்திரம் காட்டி வெண்கலப்பாத்திரத்தில் நெய் ஊற்றி பரமசிவனை நினைத்தவாறு இறந்தவரின் பசி, தாகம் முதலியவற்றை நீக்கும் பொருட்டு அந்தணருக்கு தானமாக கொடுக்கப்படுவதை நக்ன தானம் எனச் சொல்லப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி:-

அந்திய என்பது இறுதியாகும் இஷ்டி என்பது யாகம் எனப்படும். சமயாச் சாரங்களில் உண்டான குறை குற்றங்கள் நீங்கும் பொருட்டு உடலை விட்டு நீக்கிய உயிர், சபிண்டீகரணத்தின் பின்பு மோட்சப் பிராப்தி அடைய வேண்டும் என்று இறுதியாக செய்யப்படும் யாகம் அந்தியேட்டி எனப்படும்.

## அந்தியேட்டியின் வகைகள்:-

அந்தியேட்டி மூன்று வகைப்படும்.

1. தீட்சை பெறாத சிவனடியார்களுக்கும், சமய தீட்சை பெற்றவர்களுக்குமான சமய அந்தியேட்டி ஓர்வகையாகும்.
2. சமய தீட்சையுடன் விசேட அந்தியேட்டி பெற்றவர்களுக்கான விசேட அந்தியேட்டியாகும்.
3. சமய தீட்சை, விசேட தீட்சை, நிர்வாண தீட்சை முதலிய தீட்சைகள் பெற்றவர்களுக்கான அந்தியேட்டியாகும்.

## அந்தியேட்டிக்குரிய கிரியைகள் :-

விக்னேஸ்வர பூஜை
பஞ்சகவ்விய பூஜை
சிவகும்ப பூஜை
வர்த்தனி கும்ப பூஜை

சிகாஸ்தானத்தில் பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் எனும் பஞ்ச பூத தத்துவங்களுக்கான பூஜை, திரிசூலம் முதலான தசாயுதங்களின் பூஜை, அக்கினி வழிபாடு எனப் பல கிரியைகள் நடைபெறும்.

## பாஷாண ஸ்தாபனம் :- (பாடாண பூஜை)

ஒரு கல்லை வைத்து இறந்தவரின் ஆன்மாவை மந்திரத்தால் அதில் வருவித்து அதற்குச் செய்யும் பூஜை. இதனால் பிரிந்த ஆன்மாவானது சிவபதவியை அடையத்தக்கதாகின்றது. பூசையினால் அதற்குத் திருப்தியும், மற்றவைகளால் ஆன்மாவின் குற்ற நீக்கமும் உண்டாகும்.

## ஏகோத்திர விருத்தி :-

ஏகோத்திர விருத்தி என்பது ஒவ்வொன்றாக அதிகரிப்பது எனப் பொருள் படும். அதாவது வீட்டில் ஆசாரமாக விதிப்படி கல்லை நாட்டி பூசிப்பதாயின் முதல் நாளில் மூன்று தர்ப்பணமும், இரண்டாம் நாள் முதல் தர்ப்பணத்தின் எண்ணிக் கையை ஒவ்வொன்றாகக் கூட்டியும் தர்ப்பணம் செய்தலே ஏகோத்திர விருத்தி எனப்படும்.

## திலோதகம், வாசோதகம் என்பதன் விளக்கம் :-

எள்ளுடன் நீரினால் செய்யப்படும தர்ப்பணம் திலோதகம் என்றும் சீலையை நீரில் நனைத்து பிழிந்து செய்யப்படும் தர்ப்பணம் வாசோதகம் என்றும் சொல்லப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 'பாஷாணமாகிய கல்லு சேர்க்கப்படும் இடம் :-

ஆன்மாவைப் பூஜித்த கல்லையும் அதற்குப் படைத்த பலிப் பொருட் களையும் நீர் நிலைகளில் சிறப்பாக புனித புண்ணிய தீர்த்தமான சமுத்திரத்தில் சேர்க்கப்படுகின்றது. குறிப்பாக கீரிமலை, வில்லூன்றி, முகத்துவாரம் போன்ற தூய்மையான கடற் பகுதிகளில் விடப்படுகின்றது.

### உருத்திர பலி :-

இறந்தவருடைய ஆன்மா உருத்திர பதவி அடைய வேண்டும் என்பதற்காக சிவனை வேண்டி நடாத்தப்படுகின்ற பூஜை, பலியிடல் என்பன உருத்திர பலி எனப்படும்.

### பிரபூத பலி :-

உடல் அக்கினியால் தகிக்கப்பட்டதால் சூக்கும தேகமாகிய பிரேதம் அதன் வெப்பத்தினை தாங்கமுடியாது வருந்துகின்றது. அதனால் அதற்கு அதிகமான பசி, தாகம் எடுக்கின்றது. அவற்றை நிவர்த்தி செய்யவும் சந்தோஷப்படுத்தவும் செய்யப்படும் நிகழ்வு பிரபூதபலி எனப்படும். இதுவே எட்டுப் பூசை எனச் சொல்லப்படுகின்றது.

### ஏகோதிட்டம் :-

ஏக என்றால் ஒன்று, திட்டம் நினைத்தல் என்பதாகும். இறந்தவருடைய ஆன்மாவின் பிரேதத்துவ நிலை நீங்க நினைத்து ஒரு அந்தணரை வரவழைத்து வழங்கப்படுகின்ற தான நிகழ்வு ஏகோதிட்டமாகும். இது மகா ஏகோதிட்டம் எனவும் சிறப்பிக்கப்படுகின்றது. சிறப்புடன் செய்யப்பட வேண்டிய ஏகோ திட்டத்திற்கு 24 வகைத் தானங்கள் அவரவர் சக்திக்கேற்ப அந்தணருக்கு ஒரு ஆண்டுக்குப் போதுமான அளவு பொருட்களைக் தானமாகக் கொடுத்து, ஒரு வருடம் முடியும் வரை அவரை எதிர்கொள்ளாமல் இருக்கச் செய்தல் வேண்டும்.

### தானமாகக் கொடுக்கப்படுகின்ற பொருட்கள் :-

பவித்திரம், பூணூல், கமண்டலம் (செம்பு) உருத்திராக்கம் மிதியடி (பாதுகை), தண்டம், விபூதிப்பை, தொப்பி, குடை, சால்வை, ஆடை, பொன், மோதிரம், இரத்தினம், நெய், நல்லெண்ணெய், பசு, பூமி, உணவுப்பொருட்கள் அலங்காரப் பொருட்கள் என்பன.

### சபிண்டீகரணம் :-

இறந்தவரை பிதிர் தேவர்களோடு சேர்ப்பதற்காக பிண்டமிட்டுச் செய்யப்படும் கிரியை சபிண்டீகரணம் எனப்படும். சபிண்டீகரணத்தால் ஆன்மா சுத்தி பெற்றுச் சிலலோகம் சேரும். பிண்டத்திற்குரிய பொருட்கள் அரிசி, எள்ளு, உழுந்து, பால், தேன், பழம், சர்க்கரை என்பவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதிர்களுக்குச் செய்யும் இக்கிரியையைப் பிதிர் தேவர்கள் பெற்று இறந்தவர்க்கும் அவரது தலைமுறை முன்னோர்க்கும் வழங்குவர். இதற்காகவே சிவபெருமான் பிதிரர்களைப் படைத்துள்ளார்.

**மாசிகங்கள் :-**

மாசிகங்கள் நான்கு வகைப்படும்.

1. ஊனமாசிகம் - இறந்த நாள் முதல் இருப்பதேழாம் நாளின் மேல் மூன்று நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும்.
2. திரைபட்சமாசிகம் - நாற்பதாம் நாள் முதல் நாற்பத்தைந்து நாட்களுள் செய்யப்படவேண்டும்.
3. ஊனஷாண் மாசிகம் - நூற்றெழுபது நாளின் மேல் பத்து நாட்களுக்குள் செய்யப்பட வேண்டும்.
4. ஊனாப்திக மாசிகம் - முந்நூற்று நாற்பத்தைந்தாம் நாளின் மேல் பதினைந்து நாட்களுக்குள் (ஆப்திகத்திற்கு முன்) செய்யப்பட வேண்டும்.

இந்த நான்கு மாசிகங்களும் இரண்டாம் மாதம் முதல் பன்னிரெண்டாம் மாதம் வரை இறந்த திதிகளின் செய்யப்படும் பதினொரு மாசிகங்களுமாக பதினைந்து மாசிகங்கள் செய்யப்படவேண்டும்.

**குறிப்பு:**

கிழக்கு மாகாணத்தில், முக்கியமாக கிராமங்களில் வாழ்கின்ற இந்து மக்கள் இறந்த உடலைத் தகனம் செய்யாது அடக்கஞ் செய்கின்றனர் என்பது எங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதற்கு பல்வேறு காரணங்கள் இருக்கலாம். பொருளாதாரக் குறை , மனித வலுவின்மை, தலைமுறை தலைமுறையாக அடக்கமே பின்பற்றப்பட்டமை போன்ற காரணங்களினாலும் இம்முறை பின்பற்றப்படுகின்றது.

இவ்வாறு பிரேத அடக்கம் நடைபெறும் சமயங்களில் அவற்றிற்கும் சில கிரியை முறைகள் பின்பற்றப்படுகின்றன. அக்கிரியைகளும் கிராமத்திற்குக் கிராமம் மாற்றங்களுடையதாகவும் காணப்படுகின்றன.

இச்சந்தர்ப்பங்களில் ஊர்பிரமுகர் அல்லது குடும்பப் பிரமுகர் ஒருவர் தலைமை தாங்கி சகல கருமங்களையும் சரியாக நடத்தி முடிப்பார். பிரேதம் கிடங்கில் வைக்கப்பட்டதும் முதலில் மண்போடுதல் இறந்தவரின் வாரிசாக இருப்பார். கொள்ளிக் குடம் உடைத்தல் தந்தைக்கெனில் மூத்த மகன், தாய்க்கெனில் இளையமகன் என்றெல்லாம் வழமையாக இருக்கின்றன.

பிரேத அடக்கத்தின் பின் தகனக்கிரியைகளை அடுத்து நடைபெறும் வீட்டுக்கிரியைகளைப் போன்று மாசிய சிராத்தம், ஆட்டைத்திவசம், வருடச்சிராத்தம் என்பனவும் அவரவர் தகுதிக்கு ஏற்ப இடம்பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23. சிராத்தக் கிரியைகள்

### சிராத்தம்

சிரத்தையோடு செய்யப்படுவது சிராத்தம் எனப்படும். சிரத்தையாவது பற்று. அன்பு என்பதாகும். இறந்தவர்களில் அன்பும் பற்றும் உடையவர்களினாலே தான் இக்கிரியை செய்யப்பட வேண்டும். இக்கிரியையின் உயர்நிலை அன்பு ஆகும். சிராத்தம், பிதிர், கருமம் எனும் பொருள் உடையதாய் எல்லாப் பிதிர் கருமங்களையும் குறிப்பதாகும். ஆயினும் இது நம்நாட்டில் ஆட்டைத்திவசம், திவசம் என்பவற்றையே குறித்து வழங்குகின்றது.

### சிராத்தக் கிரியைகளின் ஒழுங்கு முறைகள்

1. சங்கற்பம்
2. விநாயக பூஜை
3. வருண கும்ப பூஜை
4. பஞ்ச கவ்ய பூஜை
5. புண்ணியாக வாசனம்
6. அனுக்ஞை
7. உபவீத தாரணம்
8. சூரிய பூஜை
9. மாசிகம் (மாதம் தோறும் மாசிகம் செய்யப்படாவிட்டால் பதினைந்து மாசிகங்கள் செய்யப்பட வேண்டும். ஆப்திக சிராத்தத்திற்கு மட்டும் உரியது. (இவ் விடத்தில் பதினைந்து பிண்டங்கள் போடப்பட வேண்டும்.)
10. அந்தணருக்கு உணவிற்குரிய பொருட்களை வழங்கல்
11. பிண்டப் பிரதானம் (பிண்டம் போடுதல் நான்கு பிண்டங்கள் போடபபட வேண்டும்.)
12. பிண்ட ஆராதனையும் பிண்ட அலங்களும்
13. எள்ளும் தண்ணீரும் இறைத்தல் - தர்ப்பணம்
14. ஆராதனை ,15 சூரிய வழிபாடு, 16 அந்தணர் வழிபாடு, 17 ஆசீர்வாதம்.

### நவ சிராத்தம்

நவம் என்பது புதிது ஆகும். முதலில் செய்யப்படும் சிராத்தம் நவசிராத்தம் எனப்படும். இந்நிகழ்வின் போது இறந்தவருடைய ஆன்மா பிரேதத் தன்மையில் இருந்து நீங்கப் பிராத்திக்கப்படுகிறது.

### ஸம்கிதா சிராத்தம்

நேத்திர மந்திரம் தவிர்ந்த ஏனைய பஞ்சப் பிரம்ம ஷடங்க மந்திரங்களைக் கூறி (ஈசான, தற்புருஷ, அகோர, வாமதேவ, சத்யோஜாத, ஹ்ருதய, சிரஸ், சிகா, கவச, அஸ்திர மந்திரங்கள்) பத்து அந்தணர்களுக்கு தானம் கொடுத்தல் ஸம்கிதா சிராத்தம் எனப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச்சிராத்தத்தினால் ஆசாரக் குறைபாட்டினால் ஏற்பட்ட குற்றம் குறைகள் நீங்கி மந்திரசுக்தி உண்டாகி சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய பதவிகள் கிடைக்கப் பெறுகின்றன.

### சோதகும்ப சிராத்தம்

சோத என்பது சுத்த ஜலமாகும்.இறந்த ஆன்மாவின் பசி, தாகம் என்பன நீங்குவதற்காக சுத்த ஜலம் நிறைந்த கும்பத்தினை அந்தணருக்கு தானமாக கொடுத்தல் ஆகும். ஆன்மாவிற்கு சுகவிருத்தி ஏற்படுத்த நடாத்தப்படுகின்ற கிரியா நிகழ்வே இச் சிராத்தமாகும்.

### கயா சிராத்தம்

கயா காசியில் உள்ள தீர்த்தம். இதில் பிதிர்களை எண்ணிச் சிராத்தம் செய்யின் வேறு சிராத்தம் வேண்டியதில்லை. இச்சிராத்தம் பிதிர்களுக்கு திருப்தியைக் கொடுப்பதுடன் போக மோட்சங்களையும் கொடுக்கக்கூடியது. கயா சிராத்தத்தினால் ஏழு கோத்திரத்திலுள்ள நூற்றொரு குலமும் விருத்தியாகும். இப்படியான வேறு பல புண்ணிய தீர்த்தங்கள் சிராத்தம் செய்வதற்கு உண்டு. அயோத்தி, மதுரை, இராமேஸ்வரம், மாயை, காஞ்சி, அவந்தி துவாரகை, திருக்கேதீஸ்வரம், திருகோணமலை, கன்னியா நீரூற்றுகள், கீரிமலை , முன்னேஸ்வரம், மாமாங்கேஸ்வரம் போன்ற புண்ணியத் திருத்தலங்களாகும்.

### ஆட்டைத்திவசம் - ஆப்திகம்

ஆட்டைத் திவசம் என்பது (ஆப்திகம்) ஒருவர் இறந்த ஒரு ஆண்டின் பின்பு இறந்த மாதத் திதியில் செய்யப்படும் சிராத்தமாகும்.

### சிராத்தம் - திவசம்

ஒவ்வொரு வருடமும் ஒருவர் இறந்த மாதப் பட்சத்திதியில் செய்யப்படுவது சிராத்தமாகும்.

### அமாவாசைத் தர்ப்பணம்

மாதம் தோறும் வரும் அமாவாசையில் செய்யப்படும் தர்ப்பணமாகும். இது தீர்த்த சிராத்தம் எனவும் அமாவாசைச் சிராத்தம் எனவும் சொல்லப்படும்.

### சிராத்தத்திற்கு கர்த்தாவாக இருப்பதற்கு அதிகாரம் உடையவர்கள்

புத்திரன், மனைவி, மகள், தமையன், இளைய சகோதரன், சகோதர புதல்வன், தந்தை, தாய், மருமகள், சகோதரி புதல்வன், பிதிர்வழிச் சபிண்டர், சமானோதகன், தாய் வழிச்சபிண்டன், தாயின் சகோதரன், சீடன், குரு, மகளின் கணவன், தோழன், அரசன் ஆகியோரில் முதலில் புதல்வனே இறந்தவரது கடமைகளை செய்வதற்கு அருகதையுடையவனாவான்.

### பிண்டம் என்பதன் விளக்கம்

பிண்டம் என்பது தேகம் என்பதாகும். அதாவது இறந்தவரது ஆன்ம ஈடேற்ற பரிபூரண சித்தியின் பொருட்டு அரிசி, உழுந்து, எள்ளு, தயிர், பால்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேன், வாழைப்பழம், நெய் எனும் பொருட்களால் உருண்டையாக உருட்டி பிண்டமிடல் ஆகும்.

பிண்டத்திற்குரிய பொருட்கள்: அரிசி, கறுத்த எள்ளு, உழுந்து, பால், தேன், பழம், சர்க்கரை ஆகியனவாம். பிதிர்களுக்கு செய்யும் இக்கிரியையை, பிதிர்தேவர்கள் பெற்று இறந்தவர்க்கும் அவரது தலைமுறை முன்னோர்க்கும் வழங்குவர். இதற்காகவே சிவபெருமான் பிதிர்களைப் படைத்துள்ளார்.

## பிண்டமிடும் சந்தர்ப்பங்கள்

ஏகோதிட்டத்தின் போது ஒரு பிண்டம் இடப்படும். மாசி கத்தின் போது பதினைந்து பிண்டங்கள் இடப்படும், சபிண்டீ கரணத்தின் போது ஏழு பிண்டங்கள் இடப்படும். ஆப்திக வருட சிராத்தத்தின் போது நான்கு பிண்டங்கள் இடப்படும் (மாசிகம் செய்யாது விட்டு, ஆப்திக சிராத்தத்தில் மாசிகமும் சேர்த்துச் செய்தால் மொத்தம் பத்தொன்பது பிண்டங்கள் இடப்பட வேண்டும். (சாதாரண திவசத்தில் நான்கு பிண்டங்கள் இடப்படும்.)



## சிராத்த காரியத்தின் சில பொது விஷயங்கள்

ஒருவர் இறந்த திதியைக் கொண்டே சிராத்தம் நிச்சயிக்கப்படுகிறது. ஒரு மாதத்தில் இரு தடவைகள் சிராத்தத் திதி வந்தால் பின்னைய திதியினைக் கைக் கொள்ள வேண்டும். சிராத்தம் செய்யும் தினத்தில் ஆசௌசம் இருக்குமாயின் குறிப்பிட்ட அந்த ஆசௌசம் கழிந்த தினத்தில் தான் சிராத்தம் செய்ய வேண்டும். ஆசௌசம் கழிந்த தினத்தில் சிராத்தம் செய்ய முடியா விட்டால் அம்மாத அமாவாசையில் அல்லது ஆடி அமாவாசையில் (தந்தைக்கு) தாய்க்காயின் சித்திரா பூரணையில் அச் சிராத்தம் செய்யப்பட வேண்டும்.

## சிராத்தத்தில் பெண்ணின் நிலைப்பாடு

* சிராத்தம் செய்யும் கர்த்தாவின் மனைவி வீட்டு விலக்காக இருந்தால் அன்று சிராத்தம் செய்யாது மனைவிக்கு வீட்டு விலக்கு வந்து ஐந்தாம் நாள் செய்தல் வேண்டும்.

* விதவைப் பெண் வீட்டுக்கு விலக்காயிருக்கும் போது தன் கணவனின் சிராத்தம் வந்தால் வீட்டு விலக்கு வந்து ஐந்தாம் நாளே சிராத்தம் செய்யப்பட வேண்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* சிராத்தத்திற்காகச் சமையல் ஆரம்பமாகி பின்பு ஆசௌசம் வந்தால் அச்சிராத்தம் முடியும்வரை ஆசௌசம் அவரைப் பற்றாது.

## ஒருவருடைய இறந்த மாதம் திதி, பட்சம் தெரியாது விட்டால் சிராத்தம் செய்யும் முறை

* ஒருவருடைய இறந்த மாதம் தெரியாது திதி மாத்திரம் தெரிந்தால் அவருக்கு ஆடி, பூரட்டாதி, மார்கழி, மாசி ஆகிய மாதங்களில் ஒன்றில் அவர் இறந்த திதியில் சிராத்தம் செய்ய வேண்டும்.

* ஒருவருடைய இறந்த மாதம் தெரிந்து திதி தெரியாது விட்டால் அவர் இறந்த மாதத்தில் அட்டமி, அல்லது ஏகாதசி ஆகிய திதியில் சிராத்தம் செய்யப்பட வேண்டும்

* தாய் தந்தை இருவரது சிராத்தமும் ஒரே நாளில் வந்தால் ஒன்றாக சமையல் செய்து இரு சிராத்தமாக செய்யப்பட வேண்டும்.

* ஒருவர் மறதியினால் சிராத்தம் செய்யாது விட்டால் அவர் அந்த மாதத்து தேய்பிறை அட்டமி ஏகாதசி, அமாவாசை ஆகிய ஏதாவதொரு நாளில் தவற விடப்பட்ட சிராத்தத்தினைச் செய்ய வேண்டும்.

* ஒருவருடைய தாய் இறந்த ஒருவருட காலத்துக்குள் தந்தை இறந்து விட்டால் தந்தையின் சிராத்தத்துடன் தாயின் சிராத்தத்தினை செய்து கொள்ள வேண்டும். அதே போன்று தந்தை இறந்த ஒரு வருட காலத்துள் தாய் இறந்து போனால் தாயின் சிராத்தத்துடன் தந்தையின் சிராத்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.

### மஹாளய சிராத்தம்

மஹாளயம் என்பது மகான்களாகிய பிதிர்கள் பூவுலகில் தங்கும் காலமே மஹாளயம் என அழைக்கப்படும். புரட்டாசி மாத அபரபட்சமே (தேய்பிறைகாலம் ) மஹாளயபட்சத் தினமாகும். இக்காலத்தில் இறந்த பிதிர்களைக் குறித்துத் தர்ப்பணமும் மஹாளய சிராத்தமும் செய்யப்பட வேண்டும். பிதிர் லோகம் நீங்கிய பிதிர்களைப் பெற்றோர்களும் அவர்களது பெற்றோர்களும் தமது பாவ வினைகளை எண்ணியவாறு பசியினாலும், தாகத்தினாலும் தமது பிள்ளைகள் முதலியோரின் இல்லம் நாடி பூவுலகில் தமக்கு நெய்,தேன், பாயாசம், எள்ளுடன் நீர் என்பன கிடைக்கமாட்டாதா என ஏங்குகிறார்கள். எனவே தான் இக்காலத்தில் மஹாளய காலத்தில்) செய்யும் தர்ப்பணமும் மஹாளய சிராத்தமும் சிறப்பானதாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிராத்தம் செய்யும் இடம்:**

இறந்தவர் வீடு, திருநந்தவனம், மலை, திருக்கோயில், புண்ணிய தீர்த்தக்கரை, குருவின் மனை போன்ற கோமயத்தினால் சுத்திசெய்யப்பட்ட இடங்கள் சிறப்பானவை.

**சிராத்தத்துக்கு உரிய பொருட்கள்:**

எள், நெல்லரிசி, கோதுமை, சிறுபயறு, உழுந்து, சர்க்கரை, தேன் பசுநெய், பசும்பால், பசுந்தயிர், எண்ணெய், சிகைக்காய், உப்பு, புளி, மிளகு, சீரகம், மஞ்சள், இஞ்சிக்கிழங்கு, வாழையிலை, வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாப்பழம், பலாக்காய், தேங்காய், இளநீர், புடோலங்காய், அவரைக்காய், பாகற்காய், எலுமிச்சம்பழம், நெல்லிக்காய், சிறுகிழங்கு, வள்ளிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, கருவேப்பிலை, வெற்றிலை, பாக்கு, சுக்கு, கராம்பு, சாதிக்காய் முதலியன.

**சிராத்தத்திற்கு ஆகாத பொருட்கள்:**

கடலை, பீர்க்கங்காய், பூசினிக்காய், முருங்கைக்காய், கத்தரிக்காய், அத்திக்காய், வாழைப்பூ, வெங்காயம், வெள்ளைப்பூண்டு, கொவ்வை, எருமைப்பால், எருமைத்தயிர் முதலியன.

**பொருள் இல்லாதவர் சிராத்தம்:**

சிராத்தத்திற்குப் பொருள் இல்லாதவர் காய், கனி, கிழங்கு எள்ளு இவைகளையேனும் சற்பாத்திரப் பிராமணருக்குக் கொடுத்துப் பிரதட்சண நமஸ்காரஞ் செய்து திலதருப்பணம் பண்ணித் தான் திருத்தியாக உணவு செய்தல் வேண்டும். தருப்பணஞ் செய்வதற்கும் வல்லமை இல்லாதிருப்பின் பசுக் கூட்டங்களுக்குப் புல்லைக் கொடுத்தல் மேலாம் - இதற்கு விதி.

'இடிகொண்மாவினாற் பிண்டமேயாயினு மிடுக
இல்லையென்றிடிலெள்ளுடன் புனல்கையாலிறைக்க
வல்லவம்பெறாதாயினுமாவின மருந்தப்
புல்லதாயினும் போடுக............"

-திருச்செந்தூர்ப் புராணம்

**சிராத்தத்துக்கு உபயோகமாகும் பத்திரம் - மலர்:**

துளசி, வில்வம், தாமரை, சண்பகம், அறுகு, புன்னை, நந்தியாவர்த்தை, எருக்கம்பூ, மருக்கொழுந்து, வெட்டிவேர் முதலியன.

**சிராத்தத்துக்கு ஆகாதவை:**

மகிழம்பூ, தாழம்பூ, அலரிப்பூ, சிறுசண்பகப்பூ முதலியன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிராத்த தினத்திலே செய்யத் தகாதன:**

தயிர்கடைதல், நெற்குத்துதல், நெய்முதலிய பொருட்களைக் கொடுத்தல், வாங்குதல் - கண்ணீர் விடுதல், கோபித்தல், பொய் சொல்லுதல், சிந்திய அன்னத்தை மிதித்தல்.

**சிராத்தம் கொடுக்க தக்க பாத்திரர்:**

பிதிர்தேவர் பொருட்டு இறந்தவர் பெற்ற தீட்சையேனும், அதனின் மேலான தீட்சையேனும் பெற்ற சற்பாத்திரர்களுக்குச் சிராத்தங் கொடுக்கலாம்.

வேத சிவாகமங்களை ஓதி உணர்ந்து பாவங்களை விலக்கித் தருமங்களைக் கைக்கொண்டு கடவுளை மெய்யன்போடு வழிபடுபவரும், தம்மைப் போலவே பிறரும் நன்நெறியிலே நின்று உய்யவேண்டுமென்றெண்ணி அவர்களுக்கு அந்நெறியை உபதேசிப்பவருமானோர் சற்பாத்திரராவர். அசற்பாத்திரர்க்குச் சிராத்தங் கொடுத்தலாகாது. வேதசிவாகமங்களைக் கற்று அதன்வழி நில்லாதோரும், பிறர்க்கு அந்நெறியைக் கூறி வழிப்படுத்தாதோரும் சிராத்தத்திலே அன்புடன் கொடுத்தவைகளைத் திருத்தியுடன் ஏற்றுக் கொள்ளாதவருமானோர் அசற்பாத்திரராவர். இவர்களுக்குச் சிராத்தங் கொடுத்தலாற் பலன் உண்டாவதில்லை.

**சிராத்தம் நடைபெறும்போது செய்யத்தக்கன:**

வேத பாராயணஞ் செய்தல், தமிழ்வேதங்களையும் புராணங்களையும் ஓதுதல். இவை பிதிர்களுக்கு மிகத் திருப்தியானவையாம்.

**உபசாரம்:**

சிராத்த முடிவில் ஆசாரியருக்கு உபசாரஞ் செய்து அவரை உபசரித்து வணங்கி ஆசீர்வாதம் பெறுதல் வேண்டும். உபசாரஞ் செய்யும்போது அஃது ஆசாரியருக்கென்று எண்ணிக் கொடுத்தலாகாது. பிதிர்தேவர்களுக் கென்றே எண்ணிக் கொடுத்தல் வேண்டும்.

**சிராத்த காலம்:**

இராக்காலத்திலும், சூரியோதயம் முதல் ஆறு நாளிகை வரையுமுள்ள காலைப்பொழுதிலும், இராக்காலத்தின் இறுதி முகூர்த்தமாகிய இரண்டு நாளிகையும் பகற்காலத்தின் இறுதி முகூர்த்தமாகிய இரண்டு சந்தியாகாலமும் தவிர்ந்த ஏனைய நேரங்கள் பிதிர்சிராத்தத்திற்கு உரியனவாம்.

**உணவு:**

சிராத்த காலங்களிலே அதிதிகளுக்கு அன்னங் கொடுத்தல் பெரும் புண்ணியமாகும். பரமசிவனும், பார்வதி அம்மையும், முருகக் கடவுளும், திருமாலும், பிரமாவும், தருமதேவதையுமாகிய சகலருங்கூடி அதிதி வடிவமாய் வருவரென்று மெய்நூல்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனிஷ்டா பஞ்சமி தோஷம்

தனிஷ்டா பஞ்சமி தோஷம் என்பது அவிட்டம், சதயம் பூரட்டாதி, உத்தி ரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் ஒன்றில் ஒருவர் மரணமடைந்தால் தனிஷ்டா பஞ்சமிதோஷமாகும்.

அவிட்டம், சதயம் ஆகிய நட்சத்திரங்களுக்கு ஆறுமாதங்கள் தோஷ மாகும். பூரட்டாதி, உத்திரட்டாதி ஆகிய நட்சத்திரங்களுக்கு மூன்று மாதங்கள் தோஷமாகும். ரேவதி நட்சத்திரத்திற்கு ஒன்றரை மாதங்கள் தோஷமாகும்.

## தனிஷ்டா,பஞ்சமி தோஷம் நீங்க செய்யப்பட வேண்டிய காரியங்கள்

ஆசௌசம் நீங்கும்வரை தீபம், பசு, நீர், பூரண கும்பம் என்பனவற்றை ஒவ்வொருநாளும் இல்லத்தில் வைத்தல் . நவதானியம், எள்ளு, நெற்பொரி என்பனவற்றை இல்லத்து வளவெங்கும் தூவுதல் வேண்டும். நீற்றுப்பூசணிக் காயை வாயிலில் கட்டல் வேண்டும்.பய நிவர்த்தி நூல் என்பன கட்டுதல் தர்ப்பையினை ஆள் உருவம் செய்து தகனம் முதலியவற்றை குருமூலமாக பஞ்சமித் தோஷ நிவர்த்தி சாந்தி செய்தல் . யமனை, எருமை வாகனத்தில் செப்புத்தகட்டில் கீறி பூஜித்து தானமாக கொடுத்தல் நவக்கிரகம், மஹாலட்சுமி, பார்வதி, பரமேஸ்வரன் முதலிய தெய்வங்களை பூஜித்தல். ஹோமம் செய்தல், தசதானங்கள் வழங்குதல் என்பன செய்து தனிஷ்டாபஞ்சமித் தோஷ நிவர்த்தி செய்து கொள்ளப்பட வேண்டும்.

## அபரக் கிரியைகளில் கவனிக்க வேண்டியவை

தந்தை தாயாருக்கு மூத்த புதல்வனே சங்கற்பித்துக் கிரியைகளைச் செய்தல் வேண்டும். தந்தைக்கு மூத்த புதல்வனும், தாய்க்கு இளைய புதல்வனும் கிரியை செய்யும் வழக்கமும் உள்ளது. புத்திரன் அல்லாத வேறு உறவினர் ஒருவர் கிரியை செய்வதாயின், அவர் பெற்றோரில் ஒருவருக்காவது முன்னர் கிரியை செய்திருக்க வேண்டும்.

### பிரேதத்தை குளிப்பாட்டுதல்

அபிடேகம் செய்தல் வீட்டின் தெற்குப்புறத்தில் நடாத்தப்படும். தெற்கே தலைவைத்துக் கிடத்துதல். கர்த்தாவும் ஆசௌசகாரரும் அரப்பு, எண்ணை வைத்தல், அரிசிமா, மஞ்சள் மா, அபிடேகக்கூடு, பால், தயிர், இளநீர், பின்னர் கும்பநீர் அபிடேகம் செய்தல். உடலின் கால் பகுதியில் தொடங்கி தலை வரை அபிடேகம் செய்தல். இவற்றைக் கர்த்தா செய்வார். பன்னீர் முதலிய வாசனைப் பொருட்களைச் சாத்துதல். ஆடை, அணிவித்து அலங்காரம் செய்து, மலர்மாலை வைத்து, பிரேதத்தை மண்டபத்திற்கு கொண்டுவந்து தெற்கு வடக்காகத் தலையை வைத்தல்.

### மண்டபத்தில்:

சைவக்குருக்கள் கிரியைகளை நடத்தி வைப்பார். திருநீறு வைத்தல், சந்தனம், குங்குமம் இடுதல். சுண்ணமிடித்தல், திருபொற்சுண்ணம் பாடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறுகு, மஞ்சள் பொடி என்பற்றை உரலில் இட்டு, கர்த்தா உலக்கை பிடித்து இடித்தல். சுண்ணப்பொடி கண்களில் வைத்தல், உடலில் தெளித்தல். (பிரேத அபிஷேகம் செய்யும் போது சுண்ணப்பொடியையும் சேர்த்துக் கொள்ளுதல் விதிமுறையாகும்). கற்பூரம் கொளுத்துதல், பேரப்பிள்ளைகள் தீப்பந்தம் பிடித்தல், திருமுறை ஓதல், பெண்கள் வாய்க்கரிசி போடுதல் இறுதி வணக்கம், மரியாதை செய்தல். உரியமுறையில் மாயானத்திற்கு எடுத்துச்செல்லல். வீட்டிலிருந்து பூதவுடலின் கால்கள் முன்பக்கமாக இருக்கும் வகையில் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

*பிரேத ஊர்வலத்தில்*:

கர்த்தா மட்குடக் கும்பம் தோளில் வைத்துக்கொண்டு, தீச்சட்டியுடன் பூதவுடலுக்கு முன்செல்ல வேண்டும். ஆசௌச உரிமையாளர்கள் பின்செல்வர்.

*மயானத்தில்*:

விறகுகள் தெற்கு, வடக்காக அடுக்கப்பட்டிருத்தல் வேண்டும். அதன் மேல் தலை தெற்குப் பக்கமாக அமையும்படி பூதவுடலை வைக்க வேண்டும். சுற்றத்தார் வாய்க்கரிசி போடுதல், கார்த்தா வாய்க்கரிசி போடுதல். கும்பத்துடன் சுற்றி வந்து தலைப் பாகமாகக் கொள்ளிவைத்தல். திரும்பி நின்று பின்புறமாக கொள்ளி வைத்தல். இடப்புறமாகவே சுற்றிவரவேண்டும். இறுதியில் கால்மாட்டில் சென்று பூணூல், பவித்திரம் என்பவற்றைச் சிதையில் போட்டு விட்டு, விழுந்து வணங்கி திரும்பிப் பார்க்காமல் செல்லல் வேண்டும். மரணித்தவரும், கார்தாவும் வாழ்நாள் பூராகவும் மச்சமாமிசம் உண்ணாதவராய் விளங்கினும் விசேட தீட்சை பெற்றவர்களாக இருப்பினும் அந்தியேட்டி செய்து தகனம் செய்யப்படும்.

இதற்கிடையில் வீட்டிலுள்ளோர் வீட்டைக்கழுவிச் சுத்தம் செய்வர். அணிந்திருந்த ஆடைகளை தோய்த்து உலர்த்துவர். அனைவரும் நீராடித் தூய்மையாய் இருப்பர்.

மயானத்திலிருந்து திரும்பியவர்கள் நீராடித் தம்மைச் சுத்தம் செய்ய வேண்டும். கர்த்தா வீடு வந்ததும், வேப்பிலை உண்டு, பசுவைத் தரிசித்து, ஆரத்தி எடுத்து உட்செல்ல விடுவர். வீட்டில் விளக்கேற்றி அன்னம் , இளநீர் படைத்து இறந்தவர்க்கு நிவேதனம் செய்வர். இந்நடைமுறை அடுத்து வரும் நாட்களிலும் இடம் பெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவா நீ ஆடும் போது உன்னடியின் கீழ் இருக்க என்றார்.

– காரைக்காலம்மையார்

தந்தையார் தாயார் உடன் பிறந்தார்
தாரமார் புத்திரரார் தாந்தாம் ஆரே
வந்தவாறு எங்ஙனே? போமாறு ஏதோ?
மாமாயம் இதற்கேதும் மகிழவேண்டாம்
சிந்தையீர் உமக்கொன்று சொல்லக் கேண்மின்
திகழ மதியும் வாள் அரவும் திளைக்கும் சென்னி
எந்தையார் திருநாமம் நமச்சி வாய
என்றெழுவார்க்கு இருவிசும்பில் இருக்கலாமே

- அப்பர் தேவாரம்


நினைமின் மனனே! நினைமின் மனனே!
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே!
அலகைத் தேரின் அலமரு காலின்.

உலகப்பொய் வாழ்க்கையை யுடலையோம் பற்க;
பிறந்தன இறக்கும் ; இறந்தன பிறக்கும்;
தோன்றின மறையும்; மறைந்தன தோன்றும் ;
பெருத்தன சிறுக்கும்; சிறுத்தன பெருக்கும்;
உணர்ந்தன மறக்கும்; மறந்தன வுணரும்.

– பட்டினத்தடிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## இயல் ஆறு

# ஆசௌசவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24. இந்துக்களின் வாழ்க்கையில் ஏற்படும் பிறப்பு மரண ஆசௌச காலங்கள்

## ஆசௌசம் என்பது என்ன?

பிறப்பு, மரணம், ருதுவாதல் ஆகியகாலங்களில் தீட்டுக் கவனிக்கப் படுகிறது.

இதில் சூதகம் எனப்படும ருதுவாதலே மிக அதிகமான தீட்டு என சாஸ்தி ரங்கள் கூறியிருப்பினும் அந்தத் தீட்டு குடும்பத்தவர்களையோ உறவினர் களையோ பாதிப்பதில்லை. பருவமடையும் போதும் பின்னர் மாத விலக் காகும் போதும் அப்பெண் தனித்து இருக்குமாறு வைக்கப்பட்டு குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்கள் அவருடன் தொடர்பின்றி இருந்தால் அவர்களுக்கு தீட்டு இல்லை. ஆனால் அதிகமான குடும்பங்களில் அப்பெண் வீட்டின் சகல பகுதிகளிலும் நடமாடுவதாலும் மற்றவர்கள் அவளோடு தொட்டுப் பழகுவதாலும் ஆடைகள் ஒன்றோடொன்று தொடர்புபடுவதாலும் துடக்கு ஏனையோருக்கும் காக்கப்பட வேண்டி நேர்கிறது.

பிறப்பு, இறப்பு சம்பந்தப்பட்ட துடக்குகள் கடல் கடந்து வாழ்ந்தாலும் இரத்த உரித்தாளர்களால் காக்கப்பட வேண்டும். உறவு என்பதும், உரிமை என்பதும் உடல் சம்பந்தப்பட்டவை அன்று. உளம் சம்பந்தப்பட்டவை. அதனால் இடைவெளி இதனால் பாதிக்காது.

மஹோற்சவம் முதலிய ஆலய பெருவிழாக்களின் போது இல்லங்களில் திருமணம் முதலிய எவ்வித விசேட கிரியைகளையும் செய்யாமல் தவிர்த்துக் கொள்வது எம்மை முழுமையாக ஆலய விழாக்களில் இணைத்துக் கொள் வதற்காகவே. இதே போல இல்லத்தில் நமது உறவுகளின் மிக முக்கியமான சில இன்ப துன்ப நிகழ்வுகளின் போது நாம் ஆலயத்திற்கும் போகாமல் அச் செயற்பாடுகளில் எம்மை முழுமையாக ஈடுபடுத்த வேண்டும் என்பது ஆசௌசம் காத்தலில் உள்ள ஒரு சிறப்பான அம்சம். இன்னும் பல நுணுக்க மான காரணங்கள் இருக்கின்றன.

தர்ம சாஸ்திரங்கள் வர்ணாசிரம தர்மத்தின் அடிப்படையிலேயே ஆசார ஒழுக்கங்களை வகுத்துக் கூறுகின்றன. அதனால் அந்தணர்களுக்கும் அந்தணரல்லாதோர்க்கும் ஆசௌச தினங்கள் வேறுபடுகின்றன. அதனைக் காத்தல் பிதிர்க்கடன் முதலிய அபரக்கிரியைகளைச் செய்தல் முதலியவற்றிலும் சில வேறுபாடுகள் உண்டு. எனினும் அந்தணர்க்கும், ஏனேயோருக்குரிய ஆசாரம் பற்றிய கோட்பாடுகளில் நிறைய ஒற்றுமைகள் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமிகாமத்தில்,

*விப்ரே சுத்திர் தசாஹஸ்யாத்*
*க்ஷத்ரியே த்வாதசாஹ் நிகாத்*
*தச பஞ்சாஹ்நிகாத் சுத்தி*
*வைஸ்யே, சூத்ரே ச மாசிகாத்* என ஆசௌச நியமம் கூறுகின்றது.

அந்தணர்களுக்குப் பத்து நாட்களிலும், க்ஷத்திரியர்களுக்கு 12 நாட்களிலும், வைஸ்யர்களுக்கு 15 நாட்களிலும், ஏனையோருக்கு 31ம் நாளிலும் துடக்கு நீங்குகிறது என்பது பொருள். இதே கருத்தை சுவாயம்புவ ஆகமமும் கூறுகிறது.

இந்நாளில் க்ஷத்திரியர், வைசியர் என்ற வகுப்பினர் உரிய முறைப்படி காண்டலரிது. மாமிச போசனம் நீங்கிச் சமய, விசேட தீட்சைகளைப் பெற்று நித்திய சிவபூசை வழிபாட்டுடன் இருக்கும் சைவக் குருமாரும், வேறுசிலரும் வைசிய வகுப்பார்போல் நோக்கப்படலாம். ஏனையோர் யாவரும் அந்தணர், அந்தணர் அல்லாதோர் என இரு வகுப்பில் அடங்குவர்.

## ஆசௌசம் எத்தனை நாட்கள்?

பூரண ஆசௌசம் என்பது அந்தணர்களுக்குப் பத்து நாள். மச்ச மாமிச போசனமின்றி சைவசமய ஆசாரப்படி ஒழுகும் நற்சூத்திரருக்கு 15 நாளும் ஏனையோருக்கு 30 நாளும் ஆசௌசம் என்பது யாவரும் ஒப்புக் கொள்ளும் நியதிகள்.

ஆலயங்களில் தொண்டு புரியும் சிவகன்மருக்கு 20 நாளும் திராவிட கானம் பாடவல்லாருக்கு 15 நாளும் ஆசௌசம் காக்கப்பட வேண்டும் என்ற ஒரு குறிப்பும் உண்டு. இது அவர்கள் சுத்த சைவர்களாக ஒழுகுவதால் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

பாரதத்தின் சில பிரதேசங்களில் 21ம் நாள் துடக்குக் கழிக்கும் வழக்கம் மரபு வழி நிலவுகிறது. யாழ்ப்பாணத்தில் சிலர் 16ம் நாள் துடக்குக் கழிக்கின்றனர். மேலே குறிப்பிட்ட விதிவிலக்கைத் தமக்கு சாதகமாக இவர்கள் எடுத்துக் கொள்கின்றனரேயன்றி இதற்குச் சாஸ்திரப்பிரமாணம் இல்லை.

## ஆசிரம அடிப்படையில் ஆசௌசம்.

வருணாசிரம அடிப்படை என முன்னர் குறிப்பிட்டவாறு வருணம் பற்றிய விளக்கத்தை மேலே கண்டோம். ஆச்சிரமம் என்பது பிரமசரியம் (மாணவப் பருவம்) கிருஹஸ்தம் ( இல்லற நிலை ) வானப்பிரஸ்தம் ( துறவுக்கு ஆயத்த நிலை) சந்நியாசம் (துறவு) என்ற நான்கு வாழ்க்கைப் படிநிலைகளைக் குறிக்கும். ஆசௌசமானது இல்லறத்தோருக்கு மட்டுமே உண்டு. பிரமச்சாரிகள் தாய் தந்தையருடன் சேர்ந்து வாழ்வதால் அவர்களுக்கும் ஆசௌசம் ஏற்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(முற்காலத்தில் குருகுல வாசத்திலிருப்பதால் தீட்டு இல்லை) ஆனால் தாய் தந்தையரை விட்டு விலகித் தனித்திருந்தால் பிரமச்சாரிகளுக்குத் துடக்கு இல்லை.

### ஒருவருடைய துடக்கு அவர் சார்ந்த யார்யாருக்கு வரும்?

இதற்கான விளக்கத்தை விழிநாதர் இயற்றிய அகபஞ்ச சஷ்டி நூல் தெளிவாக வரையறுக்கிறது. வைத்ய நாத தீட்சிதீயம், ஆசௌச தீபிகை முதலிய நூல்களும் 'அண்ணா' என்பார் உரைவகுத்த 'யஜுர்வேதிய ஆபஸ்தம்ப அபரப் பிரயோகம்' என்ற நூலும் இந்த விபரங்களைத் தருகின்றன. இவற்றை ஆராய்ந்து தொகுத்த பிரம்மஸ்ரீ. நடனசபாபதிசர்மா அவர்கள் தமது தகன சம்ஸ்காரம் எனும் நூலின் அநுபந்தத்தில் சில விபரங்களைத் தந்துள்ளார். அவற்றை இக்கட்டுரை பெரிதும் எடுத்தாளுகிறது.

ஓர் ஆண் மகனுக்கு அவனுடைய பிதா(தந்தை), பிதாமகன் (தந்தையின் தந்தை), ப்ரபிதாமகன் (தந்தையின் தாத்தா), விருத்தப் பிதாமகன் (தந்தையின் தாத்தாவின் தந்தை), ப்ரவிருத்தப் பிதாமகன் (தந்தையின் தாத்தாவின் தாத்தா),அதிப்ரவிருத்தப் பிதாமகன் (அவரின் தந்தை) என்னும் அறுவரும் அவ்வறுவருடைய புத்திரர் (மகன்), பௌத்திரர் (மகனின் மகன்), ப்ரபௌத்திரர் (பௌத்திரனின் மகன்), பிருத்தப் ப்ரபௌத்திரர் (பௌத்திரனின் பௌத்திரன்), ப்ரவிருத்தப் ப்ரபௌத்திரர் (பூட்டானின் மகன்), அதிப் ப்ரவிருத்தப் ப்ரபௌத்திரர் (பூட்டானின் பேரன்)ஆகிய அறுவரும் அவர்களுடைய புத்திரர்களும்,தானும் ஆகிய ஏழு தலைமுறையினர் ஆசௌச உரிமையாளர் ஆவர். இவர்கள் சபிண்டர் எனவும் ஞாதிகள் எனவும் அழைக்கப்படுவர். சுற்றத்தவர் என இங்கே அவர்கள் சுட்டப்படுகின்றனர்.

### ஆசௌசம் எத்தனை நாள் எனக் கணிப்பது எப்படி?

பூரண ஆசௌசம் என்பது அந்தணருக்கு 10 நாள். ஏனையோருக்கு 30 நாள் எனும் போது மூன்று மடங்காக அமைவது போலவே அதற்குக் குறைந்த நாட்கணக்குகள் கூறப்படும் போதும் அந்தணர்க்குரிய நாளில் மூன்று மடங்காக ஏனையோருக்குக் கொள்ள வேண்டும்.

### ஆசௌசம் எவ்வகைகளில் ஏற்படலாம்?

ஆசௌசம் 10 வகையாக ஏற்படலாம் என நூல்கள் விதிக்கின்றன.

பிறத்தல், இறத்தல், சுடுதல், பிரேதத்தின் பின் செல்லல், சுமத்தல், அழுதல், ஆசௌசியின் அன்னம் புசித்தல், ஆசௌசிகளுடன் கலத்தல், வபனம் (முகச்சவரம்) செய்யாமை, சபீண்டிகரணம் முதலியன செய்யாமை என்பவையே அவை.

பிறப்புத் தீட்டிலும் இறப்புத் தீட்டு இரு மடங்கு வலிவுடையது. பூப்படைதல் அதைவிட இருமடங்கு. மரணத்தினால் ஏற்படும் தீட்டை விட இறந்தவரைத் தகனம் செய்வதால் ஏற்படும் தீட்டு இருமடங்கு வலிமையுடையது எனக் காமிகம் கூறுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25. ஆசௌச விபரங்கள்

## 1. ஜனன ஆசௌசம் (பிறப்பு சம்பந்தமான துடக்குகள்)

* ஆண் குழந்தை பிறந்தால் 30 நாளும் பெண் குழந்தை பிறந்தால் 40 நாளும் தாய்க்கு ஆசௌசம் உண்டு.

* ஆண் குழந்தை பிறந்தால் தந்தைக்கும், உறவினர்க்கும் (முன்னாள் காட்டியவாறு 7 தலை முறையினர்க்கு) பூரண ஆசௌசம்.

* பெண் குழந்தை பிறந்தால் குழந்தையின் சகோதரர், தந்தை, தந்தையின் உடன் பிறந்தோர், அவர்களது புதல்வர்கள், தந்தையின் தந்தை, அவருடன் பிறந்தோர் ஆகியோருக்கு பூரண ஆசௌசம்.

* நிறைமாதத்தில் குழந்தை இறந்து பிறந்தாலும், பிறந்து இறந்தாலும் மரண ஆசௌசம் இல்லையெனினும் ஜனன ஆசௌசம் பூரணமாக ஞாதிகள் யாவருக்கும் (உறவுகளுக்கு) உண்டு.

* 7ம், 8ம்,9ம் மாதங்களில் குழந்தை பிறந்து இறந்தாலும் தாய் தந்தையார்க்கு பூரணை ஆசௌசம். சகோதரர் முதலியோர்க்கு கேள்விப்பட்டதும் ஸ்நானத்துடன் சுத்தமாகும.

* கர்ப்பம் கரைந்தால் (கருச்சிதைவு ஏற்பட்டால்) எத்தனை மாதத்தில் அது நிகழ்ந்ததோ அத்தனை நாள் துடக்குத் தாய்க்கு மட்டும் உண்டு. (உதாரண மாக 4ம் மாதத்திலாயின் 4 நாள் பிராமணர்க்கு. ஏனையோர்க்கு 12 நாள் )

* ஒரு குழந்தை பிறந்து ஆசௌச நீக்க தினத்தின் பின் அந்தச் செய்தி கேள்விப்பட்டால் தந்தை ஸ்நானத்தால் சுத்தமடைகிறார். ஏனையோர்க்கு ஆசௌசமில்லை.

## 2. மரண ஆசௌசம் (இறப்புப் பற்றிய தீட்டுக்கள்)

* பொதுவான மரணத் துடக்குகள் உறவினர்க்கு பூரணமாக உண்டு. (அந்தணர்க்கு 10 நாள். ஏனையோர்க்கு 30 நாள்).

### ஆண்குழந்தை

* குழந்தை பிறந்து துடக்கு கழியுமுன் இறந்தால் பெற்றோருக்கு மட்டும் பூரண ஆசௌசம். ஏனையோருக்கு ஸ்நானத்தால் சுத்தம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* 3 வயதுக்குட்பட்ட குழந்தை இறந்தால் சகோதரர் பெற்றோருக்கு பூரண ஆசௌசம். ஏனையோருக்கு அந்தணராயின் ஒரு நாளும் ஏனையோ ராயின் 3 நாளும் ஆசௌசம்.

* 3 வயதுக்கு மேல் உபநயனம் செய்யுமுன் இறந்தால் அல்லது ஏழுவயதுக்கு முன் இறந்தால் அந்தணர்க்கு 3 நாள், ஏனையோருக்கு 9 நாள் (பெற்றோருக்கும்,சகோதரர்களுக்கும் பூரண ஆசௌசம்).

* ஏழு வயதுக்குமேல் ஒரு பிள்ளை இறந்தால் பெற்றோருக்கும், சகோதரர்களுக்கும் பூரண ஆசௌசம்.

## பெண் பிள்ளை

* மூன்று வயதுக்குட்பட்ட பெண் குழந்தை இறந்தால் பெற்றோருக்கும் சகோ தரருக்கும் மட்டும் ஆசௌசம். உறவினர்க்கு ஸ்நானத்துடன் நீங்கும்.

* மூன்று முதல் எட்டு வயது வரையான பெண்பிள்ளை இறந்தால் அந்தணராயின் ஒரு நாளும் ஏனையோர் 3 நாளும் காக்க வேண்டும். பெற்றோருக்கும் சகோதரர்க்கும் பூரண ஆசௌசம்.

* எட்டு வயதின் மேல் திருமணத்திற்கு முன் இறந்தால் அந்தணர் 3 நாளும் ஏனையோர் 9 நாளும் காக்க வேண்டும். (உறவினர்) பெற்றோருக்கும் சகோதரர்க்கும் பூரண ஆசௌசம்.

* திருமணமான ஒரு பெண் இறந்தால் அவளது தந்தை வழி உறவினர்க்கு ஆசௌசம் இல்லை. கணவனுக்கும் அவனது உறவுகளுக்கும் பூரண ஆசௌசம்.

## 3. விசேட விதிகள்

* ஒருவர் இறந்தால் அவரது தாயின் தந்தை, தந்தையின் தாய், தாய் மாமன் மனைவி, பெண் கொடுத்த மாமனார், பெண் கொடுத்த மாமியார், தாயின் சகோதரிகள், தாயின் சகோதரர்கள் முதலியோர் அந்தணராயின் 3 நாளும் ஏனையோர் 9 நாளும் ஆசௌசம் காக்க வேண்டும்.

* ஒரு பிறப்புத் தீட்டை காத்துக் கொண்டிருக்கும் போது இன்னொரு பிறப்புத் தீட்டு வருமாயின்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. பெற்றோர் முழுமையாக ஆசௌசம் (அதாவது 30 நாளும்) காக்க வேண்டும்.

2. உறவுகளுக்கு முதலாவது ஆசௌசக் கழிவுடன் இரண்டாவது கழிந்து விடும்.

* ஒரு மரண ஆசௌசத்தின் நடுவில் ஒரு ஜனன ஆசௌசம் வந்தால் அது முந்திய மரண ஆசௌச முடிவில் கழிந்து விடும். ஆனால் குழந்தையின் பெற்றோருக்கு மட்டும் அவர்களது ஜனன ஆசௌசம் பூரணமாக உண்டு.

* ஓர் ஆசௌசம் காத்துக் கொண்டிருக்கும் போது இன்னொரு மரண ஆசௌசம் வந்தாலும் அது முந்திய தொடக்குடன் கழிந்து விடும். ஆனால் தாய் தந்தை, கணவன் அல்லது மனைவி, பிள்ளைகள் இறந்தால் புதிய தீட்டை முழுமையாகக் காக்க வேண்டும்.

## விசேட விதி விலக்குகள்

* தற்கொலை மரணத்தினால் தகனம் செய்தவர்களுக்கு மட்டுமேதீட்டு. மற்றையோருக்கு இல்லை.

* தற்கொலை செய்து இறந்தவருக்கு மந்திரமில்லாமல் தகனம் செய்து ஆறுமாதம் கழிந்த பின்பே கிரியைகள் செய்ய வேண்டும்.

* யுத்தத்தில் வீரமரணம் அடைந்தோர்க்கு உடனே கிரியைகள் செய்யலாம். இம்மரணத்தினால் உறவினர்க்கு ஆசௌசமில்லை.

## 4. பொது விஷயங்கள்

* ஜனன,மரண ஆசௌசம் மற்றும் சூதகம் என்பன இரவு ஒன்றரை மணிக்கு முன்பானால் முதல் நாள் என்றும் ஒன்றரை மணிக்கு பின்பானால் அடுத்த நாள்என்றும் கணக்கு எடுக்க வேண்டும்.

* ஆசௌச காலத்தில் நித்திய கர்மாநுஷ்டானங்களை மந்திரம் உச்சரிக்காது மானசீகமாகச் செய்யலாம். நித்திய விரதங்களை அனுஷ்டிக்கலாம்.

* தமது தலைமுறையிலுள்ளோரை குறித்து சிராத்தம் மாசிகம் முதலியன செய்யும் தினம் ஆசௌச காலத்தில் வரின் ஆசௌசம் நீங்கிய தினத்தில் அதனைச் செய்யலாம். சிராத்தம் முதலியன ஆரம்பித்த பின் கேள்விப் படின் சிராத்தம் நிறைவு பெறும் வரை ஆசௌசம் இல்லை.

* ஆசௌசியின் பொருட்கள், அன்னம் முதலியனவும் ஆசௌசம் என்பதால் அவருடன் பிறர் கலத்தலாகாது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தானியம், பொன், பசு, ஆடு, வெல்லம், நெய், எள்ளு, கரும்பு, காய்கறி, தண்ணீர், உப்பு, விறகு, எண்ணெய், மருந்து, அரிசி இவற்றுக்கு ஆசௌசம் இல்லை.

ஆசௌசியின் அன்னம் புசித்தவனுக்கும் ஆசௌசம் நேரும். அறியாது புசித்தால் அவ்வுணவு ஜீரணிக்கும் வரை ஆசௌசம். அறிந்து புசித்தால் ஆசௌசியின் ஆசௌசக் கழிவு நாள் வரை அவ்வுணவு புசித்தவரும் ஆசௌசம் காக்க வேண்டும்.

## 5. பூப்பு ஆசௌசம்

மாதவிலக்கு காலத்தில் ஒரு பெண் நான்கு நாட்களும் பூரணமாக விலக்கப்பட்டவளே. ஐந்தாம் நாள் எண்ணெய் ஸ்நானத்தின் பின்னரே அவள் நற்காரியங்களில் கலந்து கொள்ளலாம்.

20 நாளில் மேல் பூப்பு வந்தால் மேற்கூறிய முறையில் கடைப் பிடிக்கலாம். 20 நாட்களின் முன் வந்தால் ஸ்நானத்தினால் சுத்தமாகும. அதை மாத விலக்காக கொள்வதில்லை.

முன்னர் குறிப்பிட்டவாறு பூப்புத்தீட்டு குடும்பத்தவரையோ, உறவினர் களையோ பாதிபபதில்லை. பருவமடையும் போதும் பின்னர் மாதவிலககாகும் போதும் அப்பெண் தனித்து இருக்குமாறு வைக்கப்பட்டு குடும்பத்தின் ஏனைய அங்கத்தவர்கள் அவளுடன் தொடர்பின்றி இருந்தால் அவர்களுக்கு தீட்டு இல்லை. ஆனால் அதிகமான குடும்பங்களில் அப்பெண் வீட்டின் சகல பகுதிகளிலும் நடமாடுவதாலும் மற்றவர்கள் அவளோடு தொட்டுப் பழகு வதாலும் ஆடைகள் ஒன்றோடொன்று, தொடர்புபடுவதாலும் துடக்கு ஏனை யோருக்கும் காக்கப்பட வேண்டி நேர்கிறது.

**நன்றி: இதுதான் இந்து மதம் [சர்வானந்தமய பீட வெளியீடு]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26. ஆசௌச விளக்கங்கள்

*"சம்ஸ்கார பராமரிசம் உண்மை யானும்*
*அதன் இன்மை கூறப்பட லானும்"* - (பிரம்மசூத்திரம் 101)

*"புறத்தூய்மை நீரான் அமையும்; அகத்தூய்மை*
*வாய்மையால் காணப்படும்"* - (குற 298.)

முனிமொழி என ஔவையார் பாராட்டிய பிரம்மசூத்திரம் சம்ஸ்காரங்கள் மூலமே ஒருவன் ஞானம் பெறத்தக்க பக்குவம் பெறுவான் என்பதை வலியுறுத்துகிறது. தரும சாத்திரங்களிலே நாற்பது சம்ஸ்காரங்கள் பேசப்படுகின்றன. சைவ ஆகமங்கள் அவற்றுள் பதினாறை வலியுறுத்தும். (சம்ஸ்+காரம் = தூய்மைப்படுத்தும் கிரியை)

அவை ஏன்? ஆன்மீக வாழ்வுக்கு உயிர்நாடியான அவை இன்றைய லௌகிகப் போக்குக்கு வேண்டியவை தானா? இவ்வித ஐயவினாக்கள் சைவ மக்களிடையே எழுகின்றன. முக்கியமாக மரண வீட்டுக்குச் சென்று வருவோர் தூய்மை செய்யப்படுவது அவசியம் என்று பழமை பேணுவோர் கருதுகிறார்கள். 'இது விஞ்ஞான அடிப்படையில் தோன்றியது' என்று-விளக்கம் அளித்துத் திருப்தியடைகிறார்கள். சுகாதார பரமான தூய்மைக்கும், கிரியா பரமான தூய்மைக்கும் வேறுபாடு உண்டு என்பதை அவர்கள் உணர்வதில்லை. இருவேறு திசையில் போகும் நாகரிகங்களின் மோதுதலில் சிக்கித் தவிப்பவர்களின் சந்தேகங்களைப் போக்கி 'துவந்துவங்கள் தூய்மை செய்வதே' இத்தொகுப்பின் நோக்கம்.

சைவசமயிகளிடையே கோவிலுக்குப் போதல், விவாகம் போன்ற நற்கருமங்களின் போது, 'எனக்கு ஆசூசம்' என்ற பேச்சு இடம்பெறும். அதை எதிர்த்தும், விஞ்ஞான விளக்கம் கொடுத்து ஆதரித்தும் பேசுவோர் அதிகம். ஆசௌசம் என்ற சொல் திரிந்து பேச்சு வழக்கில் ஆசூசம் என்று ஆயிற்று.

'சுகி' என்றால் சுத்தம். சௌசம் சுத்தம் உடையது. அசுசி = அழுக்கு: ஆசௌசம் (கிரியாபரமான) சுத்தம் இன்மை. ஆன்ம ஈடேற்றத்தின் பொருட்டுக் கிரியைகளைச் செய்கிறவனுக்கு, அவைகளைச் செய்ய அதிகாரம் இல்லாமற் செய்யும் ஓர் அசுத்தி ஆசௌசம் எனப்படும். தீட்டு, தொடக்கு என்ற சொற்களும் மக்கள் பேச்சில் வரும் துடக்கு நீக்கிய பின்னரே நற்காரியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யலாம். இல்லாவிட்டால், உளரீதியான ஓர் அருவருப்பு உள்ளே இருந்து கொண்டே இருக்கும். மனம் ஆன்மீக நற்கருமத்தில் படியாது.

அசுத்தியை (அழுக்கை)ப் போக்க 1) காலம் 2) ஸ்நானம் (நீராடல்) 3) இரண்டும் ஆக மூன்று வழிகள் இருக்கின்றன.

1) ஊரில் ஒரு இறப்பு நிகழ்கிறது. அழுகை, மேள ஒலி, ஒலிபெருக்கி மூலம் மரணம் பற்றி ஊரார் அறிகின்றனர். கோவிற் பூசை நிறுத்தப்படும். நற் காரியங்கள் நடைபெறா. ஊர்த்துடக்கு பிரேதம் ஊருக்குள் இருக்கும் காலம் வரை அவ்வூர் மக்களைப் பீடிக்கும். பிரேதம் ஊரிலிருந்து அகற்றப் பட்டதும் துடக்கு நீங்கிவிடும்.

2) இறப்பு நிகழ்ந்த வீட்டுக்குச் சென்று, மரணச்சடங்குகளில் பங்கு பற்றிய அயலவர், உறவினரின் ஆசௌசம் ஸ்நானத்தால் நீங்கும். இரத்த உரித்துக் காரர் (ஆண்வழி) ஆகிய துடக்குக்காப்போர் உறவு பற்றி, மனத்தில் துக்கம் நிலைத்திருக்கும். இறந்தோரை நினைத்து இடையில் அழுகை வரலாம். துன்பம் தோய்ந்த உள்ளத்துடன் ஆன்மீக முயற்சிகளில் ஈடுபட முடியாது. அதனால் ஒரு குறித்த கால எல்லை வைத்து அதன் முடிவில் நீராடி, ஆசௌசத்தை நீக்கலாம். இங்கு காலம், ஸ்நானம் ஆகிய இரண்டும் வேண்டியதாகிறது.

ஆசௌசம் பத்துவகையாக ஏற்படலாம்: 1) பிறப்பு, 2) இறப்பு, 3) சுடுதல், 4) பிரேதத்துக்குப் பின்னே செல்லல், 5) காவுதல், 6) அழுதல், 7) ஆசௌசிகளிடம் சாப்பிடுதல், 8) கலத்தல், 9) குறித்த கால எல்லையில் தலைமயிரை அகற்றாமை, 10) இறந்தவருடைய உரிமைக்காரர் (மகன் அல்லது கொள்ளி வைத்தவர்), இறந்தவரது பிரேதத்தன்மையை நீக்கி விடும் கிரியை ஆகிய சபிண்டீகரணம் செய்யாமை. (மயிர்முழுவதையும் களைதல் ஆசௌச நீக்கத்தின் பொருட்டு இன்றும் பல கிராமங்களில் வழக்கம்)

## பிறப்பு

ஒரு வீட்டில் குழந்தை பிறத்தல் தொடர்பாக உண்டாகும் துடக்கு நான்கு வகையானது: 1) கருச்சிதைவு நான்கு மாதத்துக்குள் நிகழ்தல்; 2) 5 ஆம் 6 ஆம் மாதங்களில் நிகழ்தல்; 3) 7ஆம் 8ஆம் 9ஆம் மாதங்களில் நிகழ்தல்; 4) பத்தாம் மாதத்தொடக்கத்தில் நிகழும் இயற்கையான பிறப்பு. முதலிரு நிகழ்ச்சிகளிலும் எத்தனை மாதச்சிசு வெளிப்பட்டதோ அத்தனை நாட்கள் துடக்கு. உதாரணம் 6ஆம் மாதத்தில் கருச் சிதைந்தால் 6 நாள் துடக்கு. அதன் பிறகு நிகழ்ந்தால், இயற்கையாகக் குழந்தை பிறக்கும் போது துடக்குக்காக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள் அளவு. பிள்ளைப் பேற்றில் பெண் பிறந்தால் 40 நாளும், ஆண் பிறந்தால் 30 நாளும் பிதாமாதா இருவருக்கும் துடக்கு. முதல் ஆறு மாதத்துள் சிசு அழிதலில் தந்தை முழுகத் துடக்குப்போம். துடக்குக்காக்கும் உறவினர் (ஞாதிகள்) 5 ஆம் மாத நிகழ்விலிருந்து முழுகி ஆசௌசத்தைப் போக்கலாம். பூரணகருச் சிதைவிலும், பிள்ளை பிறந்தவுடன் இறந்தாலும், தந்தை 10 நாள் துடக்குக் காக்க வேண்டும். 10 நாட்களுள் குழந்தை இறந்தால் மரணத் துடக்குக் கொள்ளத் தேவையில்லை. இயற்கை யான பிறப்பில் 30 நாள் துடக்குக் காப்பது வழக்கம். (தாய்க்கு 40 நாள் என்ற முறையில் குழந்தையைக் கோவிலுக்கு 40 ம் நாள் கொண்டு போகும் வழக்கம் இருந்து வருகிறது.)

சைவக்குரு (ஆசாரிய அபிஷேகம் பெற்றவர்) ஆசௌச நிகழ்வில் உடன் சுத்தியாகிறார். தீட்சை பெற்ற சைவசமயத்தவருள் நியமங்களில் வழுவாது சந்தியாவந்தனம் செய்வோர் 25 நாளும், ஒழுங்காகக் கோயில் தொண்டு செய்வோர் 20 நாளும் துடக்குக்காக்க வேண்டும். பிரமசாரிக்குத் துடக்கில்லை என்பது குருகுலத்தில் வசித்து ஞான நூல்களைக் கற்றலில் காலம் கழிப்பவர்க்கே பொருந்தும். உறவினருடன் வசிக்கும் பிரமசாரி அர்ச்சகர் இவ்விதியில் அடைக்கலம் புகமுடியாது. மூன்றாம் தீட்சையாகிய நிர்வாண தீட்சை பெற்றுச் சிவபூசை தவறாது செய்கிறவருக்கு மூன்று நாள் துடக்கும். கோவில்களில் ஓதுவார்களாகப் பணிபுரிவோர் 15 நாளும், ஆடல், பாடல், வாத்திய வழிபாடு செய்வோர் 14 நாளும் காக்க வேண்டும்.

## இறப்பு

மரணஆசௌசமே பிரதானமாகப் பேணப்படுவது நம் நாட்டு வழக்கம். அதனால் இப்பகுதி விரிவாக எழுதப்படுகிறது. குழந்தை பிறந்து பெயர் இடுவதற்கு முன் ஒரு மாதத்தினுள் இறந்தால் உடன் சுத்தியாம். பல் முளைக்குமுன் (6 மாதத்துள்) ஆயின், ஒரு நாள் துடக்கு. 11 ம் ஆண்டுக்குப் பின் முழுத் துடக்கு. பெண்மகவு விவாகம் செய்யுமுன் இறந்தால் பெற்றோருக்கு 3 நாள் துடக்கு. விவாகம் நிச்சயித்த பெண் மணவிழாவுக்கு முன் இறந்தால் கணவனும் அவன் உறவினரும் 3 நாள் துடக்குக் காப்பர். பிற ஆத்மா சாந்திக் கிரியைகளும் கணவன் வீட்டாரே செய்யவேண்டும். ஒரு மாதத்தின் பின் இறக்கும் சிசுவைச் சுடலாம்; அன்றி புதைக்கலாம். 11 வயதுக்குப் பின் சுடுவதே நல்லது.

ஆண் மரணித்தால் ஆண்வழியில் ஏழுதலை முறை வரை துடக்குக் காக்க வேண்டும். குரு சீட தொடர்பு பற்றி 3 நாள் காக்க. தாய்வழிப்பாட்டன், பாட்டி, மாமன், மாமி, மருமகன், மகள் வயிற்றுப்பேரன் ஆகியோருக்கு 3 அல்லது 6 நாள் துடக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானம், வேள்வி, விவாகம் போன்ற நற்கருமங்களுக்கு இடையிலும், போர், உள் நாட்டுக்குழப்பம் மலைச்சரிவு, மரம் விழுதல் பூகம்பம் போன்ற பெரும் ஆபத்துக்களின் மத்தியிலும், வரும் துடக்கு உடனே நீங்கும். ஒரு வரம் கேட்டு அநுட்டிக்கும் உபவாச விரதத்தின் இடையில் துடக்கு ஏற்பட்டால், தானம் அருச்சனை இரண்டையும் நீக்கி விரதத்தை அநுட்டிக்கலாம். விவாகம் செய்யும் மாப்பிள்ளை, கன்னியைத்தானம் செய்பவர், கோவில் திருவிழாவோ பிரதிஷ்டையோ செய்யும் ஆசாரியர், செய்விப்பவர் (எஜமானர்) துணைப் பணிகள் செய்வோர் ஆகியவர்களுக்கு உடன் சுத்தியாம். சிராத்தம், யாத்திரை ஆகிய புண்ணிய கருமங்களைச் செய்யும் போது துடக்குண்டானால் உடன் சுத்தியாம்.

## வீர மரணம்

அரசசேவகர் போரில் இறந்தால் சுற்றத்தாருக்கு உடன்சுத்தி. அவ்விதம் இறந்தவர்களுக்கு அபரக்கிரியையும் உடன் செய்யலாம். (துர்மரணத்திற் போல, குறித்தகாலத்தின் பின்செய்ய வேண்டும் என்ற விதியில்லை)

## துர் மரணம்

இது இருவகை (1) புத்திபூர்வமானது; (2) அபுத்திபூர்வமானது. முதல் வகையில் சாதாரண (மந்திரமின்றி) மரணக்கிரியை (சுடுதல்) செய்யலாம். பின்னர் உரியகாலத்தில் செய்யும்போது, மந்திரத்துடன் கிரியை செய்யலாம். இதில் சபிண்டருக்குத் துடக்கு இல்லை. ஸ+பிண்டர் = தென்புலத்தாருக்குப் பிண்டம் இடும் கடன் உள்ள உறவுமுறைக்குள் அடங்குவோர்; தன்னையும் சேர்த்து ஏழுதலை முறை (ஆண்வழியில்). பின்னர் ஆறுமாதம் அல்லது ஒரு வருடம் கழித்துக் கிரியை செய்யும்போது ஒருநாள் காக்க வேண்டும். (மூளைப் பிசகினால் தற்கொலை செய்தவருக்கு நீர்க்கடன் செய்து, துடக்குக் காக்கலாம் என்பர்.) இரண்டாவது வகையான துர்மரணம் இடி, தீ, ஆற்றுப்பெருக்கு, விஷக்கடி போன்ற திடீர் விபத்துக்களால் நிகழ்வது. இதில் கிரியையும் ஆசௌசமும் கொள்ளலாம்.

## பொருள்கள் சுத்தி

துடக்கு உடையவர் உபயோகித்த பொருள்கள் குற்றம் உடையன. அவர் துடக்கு முடியும்போது நீர்தெளித்தல், கழுவுதல் போன்றவற்றால் குற்றம் நீங்கும். துடக்கு ஆரம்பிக்குமுன் சில நற்கருமங்களுக்கு எனக் குறித்து எடுத்துவைத்த பொருள்களுக்குக் குற்றமில்லை (தானம், பூசை முதலியவற்றுக்கு உபயோகிக்கலாம்.) பொன், தானியம், வெல்லம், உப்பு, பால், நெய் முதலியவற்றைத் துடக்கு வீட்டில் இருந்து பெறலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராம ஆசௌசம்

ஓர் ஊரில் பிரேதம் இருக்கும் வரை சகலருக்கும் துடக்கு இருப்பதால், கோவிற்பூசை முதலியன செய்யக்கூடாது. சிவபூசை, அநுட்டானம், போன்றவையும் விலக்கப்பட்டுள்ளன. பிரேதம் கிராமத்தை விட்டு அகற்றப்பட்ட பின் பிராயச்சித்தம் செய்து கர்மானுட்டானங்களைச் செய்யலாம். இது சிற்றூர்களுக்குப் பொருந்தும். பல வீதிகளுள்ள பெரிய ஊர் ஆனால், தூரத்தில் பிரேதம் இருந்தால், ஓர் எல்லைக்கு அப்பால் வசிப்பவர்களுக்குத் துடக்கு இல்லை. எல்லைகணிக்கும் போது( (பூசைக்குரிய) கைமணி அடிக்கும் ஓசைகேட்கும் தூரம் அல்லது) 11 முழம் ஆகிய (விற்) கோல் (நில அளவு) 11 (சுமார் 55 யார்) கொண்ட தூரம் ஆசௌச எல்லையாக எடுத்துக் கொள்ளலாம். அடுத்த வீதியில் பிரேதம் இருந்தாலும் இந்தக்கணிப்பின்படி வரும் இடைவெளிக்குள் துடக்குக் காக்கலாம். அப்பால் இருந்தால் ஆசௌசம் இல்லை.

கோவிற் பிரதிஷ்டை முதலிய கிரியைகளுக்கு நடுவில் கிராமத்தில் ஒரு மரணம் நிகழ்ந்தால் இறந்த பிரேதத்தை மயானத்திற் சேர்த்த பின் தொடர்ந்து கிரியை செய்யலாம். பட்டணம், இராசதானி முதலிய பெருநகர்களில் துடக்கு இல்லை. பிரேதத்தைத் தொட்டவர் தூக்கியவர், பின்னே சென்றவர்கள் துடக்கு உடையர்.

துடக்கு நாட்கள் வைதிகமுறையில் முத்தீவளர்க்காதவர்களுக்கு இறந்த நாள்முதல் கணிக்கப்படல் வேண்டும். (சிவபூசையோடு தீ வேட்கும் குருமாருக்குத் தகனம் செய்த நாள் முதல், கணிக்குக) இரவில் பிறப்பு, இறப்பு நிகழ்ந்தால் அடுத்துச் சூரியன் உதிக்குமுன் உள்ள நாளே கொள்க. (மேலை நாட்டு முறையில், இரவு 12 மணிக்குப்பின் அடுத்த நாள் எனக் கொள்ளக் கூடாது.)

பிறப்புத் துடக்குக்கு இடையில் இறப்பவரின், இறப்புக் கணக்கின் பின்னரே துடக்கு கழியும். இறப்புத் துடக்குக்கு நடுவில் பிறப்பு வந்தால், மரணத் துடக்குடன் அது நீங்கும். ஒரு மரணத் துடக்கு முடியுமுன் மற்றொரு மரணம் வந்தால் பிந்திய துடக்கு முடிவிலேதான் இரண்டு துடக்கும் நீங்கும். முந்தியதற்குரிய கிரியைகளும் பிந்தியதன் முடிவிலேயே செய்ய வேண்டும்.

சபிண்டருள் ஒரு துடக்கு வந்த செய்தி தூர இடத்தில் நிகழ்ந்ததை ஒரு துடக்குக் கழியும் நாளில் கேட்டால் மேலும் இரண்டு நாள் துடக்குக் காக்க. அச்செய்தி - உதாரணமாக, அந்நிய தேசத்தில் இறப்பு நிகழ்ந்த செய்தி - மூன்று மாதத்துள் கிடைத்தால் மூன்று இராத்திரி துடக்குக்காக்க. ஒருவருஷத்துக்குள் கிடைத்தால் ஒரு நாள் காக்க. ஒருவர் இறந்த செய்தி துடக்கு எல்லைக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைத்தால் மீதி நாட்கள் மட்டும் கொள்க; உ+ம் அயல்நாட்டில் ஒருவர் இறந்த செய்தி சகோதரருக்கு 20 ஆம் நாள் கிடைத்தால் மீதி 10 நாள் ஆசௌசம் காக்க. துடக்கு எல்லை கழிந்து ஒருவருடத்துள் பெற்றோரின் மரணத்தைக் கேள்விப்பட்டால் மகன் முழுத் துடக்கும் காலமும் காக்க வேண்டும். அவர்களுக்கு உரிய கிரியை அங்கு செய்யப்பட்டிருந்தால், 3 நாள் காத்தால் போதும்.

துடக்குக் காலத்தில் சந்தியாவந்தனம் செய்யலாம் (மானஸீகமாயேனும் செய்க) ஞான நூல்களை ஓதுவதைச் சமய தீட்சை பெற்றோர் ஒரு நாள் விலக்கலாம். விசேட தீட்சை பெற்றோர் ஆசௌசத்திலும் சிவபூசை செய்யலாம். தாமரை இலையில் நீர் போல் அவர் மனத்தில் துடக்குப்பற்றாது. பக்தி, வைராக்கியம், ஞானம் இல்லாதோர் அகப்பூசை செய்க. அப்போது குரு அன்றேல் ஒத்த தீட்சையுடையவர் அவருடைய புறப்பூசையைச் செய்யவேண்டும். ஆனால், எத்தகுதி உடையவரும் பரார்த்த பூசை (பர+அர்த்தம்= பிறர், பொருட்டு கோவில் முதலியவற்றில்) செய்யக்கூடாது. ஆசௌசம் உடையவர் கோவில் வெளிவீதியில் நின்று வழிபடலாம். உயர்தீட்சை பெற்றோர் மண்டபத்துள் நிற்கலாம். துடக்குக் காலத்தில் கோவிலுக்குப் பூ எடுத்துக் கொடுக்கக்கூடாது. உருத்திராட்ச மாலை தரிக்கக்கூடாது.

## பூப்பு

பெண்கள் முதற்பூப்பு, மாதவிலக்குக் காலத்தில் மூன்று நாள் துடக்குக் கொள். 18 நாட்களுள் மீண்டும் அடையாளம் கண்டால் ஒரு நாள் துடக்கு. 19 நாளில் ஆயின் 2 நாளும், 20 நாள் ஆயின் 3 நாளும் கொள்க. ஆன்மீக வாழ்வில் நம்பிக்கையுள்ளோர் 3 நாளும் முழுகுதல் செய்யார். இக்காலத்தில் அகப்பூசை வழிபாடு செய்யலாம். அவர்களை அறிந்தோ அறியாமலோ தொடுவோர் முழுகி, உரிய மந்திர ஜபம் செய்து சுத்திபெறுகின்றனர்.

## மயிர் களைதல்

துடக்கு நீக்கும் போது மயிர்களைதல் அவசியம் என முன்னர் கூறப்பட்டது. சில கிராமங்களில் சவக்கிரியை தொடங்குமுன் மழித்தல் வழக்கமாய் உள்ளது. துடக்குக் கழியும் தினத்தில் கிரியைகளுக்கு முன்களைதலே சாத்திர சம்பிரதாயம். மத்தியானத்துக்குப் பின்மயிர் களைதல் விலக்கப்பட்டுள்ளது. தலைமுதல் மயிர்நீக்கப்படுவதால் முண்டிதம் எனப்படும். மகன்கடமை செய்ய முடியாமல், இன்னொருவர் தீக்கடன் முதலியன செய்தால் அவரும் அதனைச் செய்யலாம்.

*நன்றி :- ஆசௌச விளக்கம் ஆ. சபாரத்தினம்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27. சில கேள்வி பதில்கள்

## 1. மஹாளய பட்சத்தின் சிறப்பு யாது?

தட்சிணாயனகாலம் தேவர்களுக்கு இரவாகும். இக்காலத்தில் வரும் ஐந்தாவது கிருஷ்ண பட்சம் பிதிர்தேவதைகளுக்குரிய காலமாகச் சொல்லப் படுகிறது. சூரியன், கன்னி ராசியில் சஞ்சரிக்கும் இந்தப் பதினைந்துநாள்கள் 'மஹாளய பட்சம்' எனப்படும். இவ்வேளையில் அனைத்துப் பிதிர் தேவதை களும் தங்களது சக்தியைப் பெற்று சஞ்சரிக்கும். இவ்வேளையில் இறந்த வர்க்கு வழிபாடுகள் செய்வது சிறப்புடையது.

இப்பட்சத்தில் ஒரு நாளிலாவது கட்டாயம் பிதிர்களுக்குத் தர்ப்பணம் (நீர்க்கடன்) செய்ய வேண்டும் என்பது சாஸ்திரம். ஆந்திரத்தில் 10 நாளும் இக்கடனைச் செய்வார்கள். வடநாட்டில் உள்ளவர்கள் இப்பட்சத்தில் ஒரு நாளாவது கங்கைக்குச் சென்று நீராடி, பிதிரர்களுக்குத் தர்ப்பணம் செய்வார்கள்; குளித்து முடித்து ஈர ஆடையை எதிர்முகமாகப் பிழிந்து அந்நீரைவார்த்து நீர்க்கடனாகக் கொடுப்பதுவும்;

குடுமியை- முன்புறமாகப் பிழிந்துவார்த்து அந்நீரைப் பிதிர்க்குரியதாக்கி நீர்க்கடன் செய்தாலும் தினந்தோறுமே பிதிர்க்கடனாகச் செய்வதுண்டு. நம் முன்னோர்களுக்கு இவை மிகவும்முக்கியமான ஆகாரமாகச் சொல்லப்படுகிறது.

## 2. சிராத்த காலத்தில் தகப்பனார், பாட்டனார், முன் பாட்டனார் ஆகிய மூவர் பெயர்களையும் சொல்லிச் செய்வதற்கான காரணம் யாது?

இதற்கு இரு வகையாகச் சொல்லலாம்.

1. ஒரே பெயரில் வேறு எவரேனும் பிதிர்களாக இருக்கலாம். அதனால் அவருக்கு முற்பட்டவரைச் சொல்கிறோம். இனங்கண்டு கொள்வதற் காகஒரு வேளை அதிலும் ஒற்றுமையிருந்துவிட்டால், என்னசெய்வது? அதற்காக மூன்றாமவர் பெயர் உதவக்கூடும் அல்லவா? அதற்காக சொல்கிறோம். மூன்று பெயர்களும் ஒன்று போலச் சேர்வது என்பது பொதுவாக அமைவதில்லை. மிகவும் அபூர்வம்.

2. அறியியல் பூர்வமானகருத்தாவது - தந்தையின் சுக்கில தாதுவிலிருந்தே குழந்தை பிறப்பதாகச் சொல்லப்படுகிறது. குழந்தையின் உற்பத்திக்கான மூலமாகவுள்ள இந்தச் சுக்கில தாதுவில் 84 கூறுகள் (அம்சங்கள்) உள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அக்கூறுகளுள் 28 கூறுகள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சாப்பிடும் உணவு நீர் ஆகியவற்றால் உண்டாகின்றன. மற்ற 56 கூறுகள் அவனுடைய முன்னோர்கள் மூலம் கிடைக்கின்றன. முன்னோர்கள் மூலம்வரும் இந்த 56 கூறுகளுள் தந்தையிடமிருந்து 21ம், பாட்டனாரிடமிருந்து 15ம், முன் பாட்டனாரிடமிருந்து 10ம், நான்காம் பாட்டனாரிடமிருந்து 6ம், ஐந்தாவது பாட்டனாரிடமிருந்து3ம், ஆறாவது மூதாதையரிடமிருந்து 1ம் ஆக 56கூறுகளும் கிடைக்கின்றன என்பது அறிவியல் உண்மை. இதிலிருந்து ஒருவனுக்கு, அவனோடு சேர்ந்து ஏழு தலை முறைவரை பிண்டத் தொடர்பு இருக்கிறது. இந்தக் கணக்கில்தான் தாயாதிகளை கணக்கில் எடுத்துக் கொள்கிறோம்.

இவர்களுள் பிண்டத் தொடர்பு, படைத்தல் சக்திக்கு அதிக நெருக்கமாக இருப்பது 21, 15, 10 ஆகிய கூறுகளையுடைய முதல் 3 தலைமுறைகளில்தான் அமைகின்றது.

பத்துக்கு குறைவான கூறுகளைத் தருபவர்களின் அம்சங்கள் (கூறுகள்) மிகவும் குறைவாக இருப்பதால் அவை சிறு அம்சங்களாகின்றனவே தவிர, படைத்தலுக்கு அவ்வளவாகத் துணையாவதில்லை. அதிகமாக அம்சங்களை உதவி படைப்புக்குத் துணையாவது தந்தை, பாட்டனார், முன்பாட்டனார் ஆகியயோருடைய தாதுத் தொடர்பேயாகும். அதனால் தான் சிராத்த காலத்தில் இம் மூன்று பெயர்களைச் சொல்லியழைத்து அவர்களுக்குப் பிண்ட தர்ப்பணம் செய்கின்றோம். (முன்பாட்டனார் முப்பாட்டனார்.)

## 3. பிண்டதானம் தருவதன் கருத்து யாது?இதனால் பிதிர்களுக்குத் திருப்தி ஏற்படுவது எங்ஙனம்?

படைப்பின் ஆரம்பத்தில் முதலில் உயிர்களே உற்பத்தி செய்யப்பட்டாக வைதிக விஞ்ஞானம் கூறுகிறது. அவை இருபகுதிகளாகப் பிரிந்தன. 1) பிருகு குளுமையான உயிர் 2) அங்கிரா வெப்பமான உயிர், வெப்பமான (அக்கினேயமான) உயிர்களிலே சோமம் (குளுமை) பெய்யப்படும் பொழுது படைப்பு நடைபெறுகிறது. பூமியை 3 அங்குலம் தோண்டினால் அதற்கு அக்கினியின் தொடர்பு ஏற்படுகிறது. அதில் விதை உருவமான ஸோமத்தை விதைத்தால் முளை விடுகிறது. அதைப் பாதுகாக்க சௌம்ய பிராணன்கள் (குளுமை) தேவைப்படுகிறது. இதைக் கவனித்தால் அக்கினி சோமம் இவையிரண்டுங் கலந்ததே சிருஷ்டி (படைப்பு) என்பது தெரியவரும். பித்ருக்கள் (முன்னோர்கள்) சோம உயிர்கள், சோமனின் இனம் ஸோமனின் பக்கத் தையே நாடும். அதனால் தான் பித்ருக்கள் குளிர்ச்சியான (சோமம்) சந்திர லோகத்துக்குப் (சோமன்= சந்திரன்) பக்கத்திலேயே இருக்கிறார்கள். அவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கு நாம் சோமப் பிரதானமாக எள் போன்றவை கலந்த பிண்டங்களைத் தருவோமேயானால் அவர்கள் குளிர்ச்சியும் தங்களுக்கென்று குறித்துள்ள (குளிர்ச்சி நிறைந்த ) சந்திரலோகத்திற்கு அருகில் உள்ள பித்ருலோகத்தை அடைந்து அங்கு குளுமையாக, சந்தோஷத்துடன் (திருப்தி அடைந்து) வாழ்கிறார்கள். இதுவே பிண்டதானம் செய்யப்படுவதின் கருத்தாகும்.

### 4. தருப்பணரூப சிராத்தம் என்பது யாது?

இது அமாவாசையில் செய்யப்படுவதாகும். அன்னசிராத்தத்தில் அன்னபிண்டமும், ஆமசிராத்தத்தில் ஆமபிண்டமும் இடல் வேண்டும். அன்னசிராத்தத்தில் ஆமபிண்டமும் ஆமசிராத்தத்தில் அன்னபிண்டமும் இடுதல் குற்றமாகும்.

அன்னசிராத்தம் அபராணதில் செய்தல் வேண்டும். ஆமசிராத்தம் சங்கவகாலத்தில் செய்து போசனம் அபராணத்திலும் செய்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| **பிராதக்காலம்** | – | சூரிய உதயம் முதல் ஆறுநாழிகை வரை. |
| **சங்கவ காலம்** | – | அதன்மேல் பன்னிரண்டு நாழிகை வரை. |
| **மத்தியானம்** | – | அதன்மேல் பதினெட்டு நாழிகை வரை. |
| **அபராணம்** | – | அதன்மேல் இருபத்திநாலு நாழிகை வரை. |
| **சாயான்னம்** | – | அதன்மேல் முப்பது நாழிகை வரை. |

**சூரிய உதயம் காலை ஆறுமணியாயின்**

| | | |
|---|---|---|
| **பிராதக்காலம்** | – | காலை 6.00 - 8.24 வரை. |
| **சங்கவ காலம்** | – | அதன்மேல் - 10.48 வரை. |
| **மத்தியானம்** | – | அதன்மேல் பகல் 1.12 வரை. |
| **அபராணம்** | – | அதன்மேல் மாலை 3.36 வரை. |
| **சாயான்னம்** | – | அதன்மேல் மாலை 6.00 வரை. |

சிவபெருமான் – அபிடேகத்தாலும், பிதிர்கள்– தர்ப்பணத்தாலும் மகிழ்வர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்







## இயல் ஏழு

# தத்துவவியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28. சைவ சித்தாந்தம்

**சை**வ சித்தாந்த சாத்திரங்கள் மெய்கண்ட சாத்திரங்கள் எனவும் சொல்லப் படும். அவை பதினான்கு. அவற்றை அருளிச் செய்தவர் அறுவராவர்.

பரமேசுவரன் வேதாகம உண்மைகளையெல்லாம் திருநந்திதேவருக்கு உபதேசித்தருளினார். அந்தத் திருநந்தி தேவரை அபரசிவன் எனவும் கூறுவர். திருநந்திதேவரே சனற்குமாரர், திருமூலர் முதலிய ஞானிகளுக்கெல்லாம் குருவாக இருந்து வேதாகமங்களைப் போதித்தருளினார். அங்ஙனம் போதித்த ஞானச் செல்வமானது குருசீட பரம்பரை உரிமையாக (தந்தை - மகன் உறவும் உரிமையும் போல) வழி வருவதாயிற்று. அதனால் சித்தாந்த சாத்திரம் அருளிய பெரியார்களைத் திருக்கயிலாய பரம்பரைச் சந்தனா சாரியர்கள் என அழைப்பர்.

சந்தனாசாரியர்கள் அகச்சந்தனாசாரியர்கள், புறச் சந்தனாசாரியர்கள் என இரு வகையினர். திருநந்திதேவர், சனற்குமாரர், சத்தியஞான தரிசனர், பரஞ் சோதியார் என்பவர்கள் அகச் சந்தனாசாரியர்கள். இவர்கள் ஒருவருக் கொருவர் குருவுஞ்சீடருமாய் வழிவழி வந்தோர். இவர்களில் நான்காமவரான பரஞ்சோதியாரிடம் தீட்சையும் உபதேசமும் பெற்றவர் மெய்கண்ட தேவராவர். இவர் புறச் சந்தனாசாரியரில் முதல்வர். இவரது தலைமாணவர் அருணந்திசிவாசாரியர், இவரது சீடர் மறைஞான சம்பந்தர், இவர் மாணவர் உமாபதிசிவாசாரியர். உமாபதிசிவம் வரையுள்ள நால்வரும் புறச்சந்தனா சாரியராவர்.

புறச்சந்தனாசாரியரில் மறைஞானசம்பந்தர் மௌனியாகவே இருந்தார். நூலெதுவும் பாடியருளவில்லை. மெய்கண்டதேவரும், அருணந்தி சிவாசாரியரும் உமாபதிசிவாசாரியாருமே சாத்திரங்கள் அருளிச்செய்தனர். மெய்கண்டதேவரின் மாணவர் நாற்பத்தொன்மரில் மற்றொருவராகிய மனவாசகங்கடந்த தேவநாயனாரும், இவர்களுக்கு முற்பட்ட காலத்தவர் களாகிய திருவியலூர் உய்யவந்த தேவநாயனாரும், திருக் கடவூர் உய்யவந்த தேவநாயனாரும் ஆகிய மூவரும் ஒவ்வொரு நூல் பாடியருளினர்.

| மெய்கண்ட சாத்திரங்கள் | பாடியருளியவர் |
|---|---|
| 1. திருவுந்தியார் | திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் |
| 2. திருக்களிற்றுப்படியார் | திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் |
| 3. சிவஞானபோதம் | மெய்கண்ட தேவநாயனார் |
| 4. சிவஞானசித்தியார்<br>5. இருபா இருபஃது | அருணந்திசிவாசாரியர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. உண்மை விளக்கம் } மனவாசகங்கடந்த தேவநாயனார்

7. சிவப்பிரகாசம்
8. திருவருட்பயன்
9. வினாவெண்பா
10. போற்றிப்பஃறொடை
11. கொடிக்கவி
12. நெஞ்சுவிடுதூது
13. உண்மை நெறிவிளக்கம்
14. சங்கற்ப நிராகரணம்

} உமாபதிசிவாசாரியார்

சித்தாந்தசாத்திரங்களில் முதலிலுள்ள இரண்டும் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டிலும், அடுத்துள்ள மூன்றும் சமகாலத்தில் கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டிலும், சித்தாந்த சாத்திர அட்டகம் (அட்டகம் - எட்டுநூல்) எனப் படும் நூல்கள் கி.பி. பதினான்காம் நூற்றாண்டிலும் தோன்றின என்பர்.

சந்தானகுரவர் வரலாறு பின் விரிவாக உள்ளது. திருவியலூர் உய்யவந்த தேவநாயனார் வடநாட்டினின்று தென்னாடு வந்து தங்கி, ஞானவிருந்தளித்த நல்லார். இவர் மும்மூன்று அடிகளே கொண்ட நாற்பத்தைந்து பாடல்களில் சித்தாந்த உண்மைகளைக் கூறினர். இவரது சீடரின், சீடரே திருக்கடவூர் உய்ய வந்த தேவநாயனார், திருவுந்தியார் பாடலுக்கு விளக்கம் கூறும் வகையில், நூறு பாக்களில் திருக்களிற்றுப்படியாரைப் பாடியருளியவர். இந்நூலை நடராசப் பெருமானது சந்நிதித் திருக்களிற்றுப் படியில் வைக்க, அந்த யானைக் கரம் இந்நூலை எடுத்துக் கூத்தரின் திருவடிக்கீழ் வைத்தமையால் திருக்களிற்றுப் படியார் எனப் பெயர்பெற்றது. இவ்விரு நூலும் மெய்கண்ட தேவருக்கு முன் தோன்றியவை.

மெய்கண்ட தேவர் அருளிச்செய்த சிவஞானபோத நூல், தமிழிலே தோன்றிய தனிமுதநூல் என்பர் சிலர். வடமொழியிலுள்ள இரௌரவ ஆகமத்தில் சிவஞானபோதம் என உள்ள பன்னிரு சூத்திரத்தின் மொழி பெயர்ப்பு நூலென்பர் ஒரு சிலர். சிவஞானபோதநூல் சித்தாந்த சாத்திர நூல்களில் சிகாமணியாய் விளங்குவது. மிகத் திட்பநுட்பமான முறையில் சைவ உண்மைகளைக் கூறுவது. மெய்கண்டதேவரே இந்நூலுக்கு வார்த்திகப் பொழிப்பும், உதாரண வெண்பாக்களும் சூர்ணிக்கொத்து என்னும் அட்ட வணையும் இயற்றியருளினார். இந்நூலைத் தம் மாணவர் நாற்பத்தொன்பதி மருக்கும் போதித்தருளினார். இந்நூலுக்குத் திருவாடுதுறையா தீனத்து மாதவச் சிவஞான முனிவர்கள் ஒரு சிற்றுரையும், மாபாடியம் என்னும் பேருரையும் எழுதியுள்ளார்கள். வேறு பல உரைகளும் இதற்கு உள.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***சிவஞானசித்தியார் :*** இதனைத் தம் குருவின் ஆணைப்படி இயற்றியருளியவர் அருணந்தி சிவாசாரியர். சிவஞான போதத்திற் கூறப்பட்ட உண்மைகளை மிக விரிவாக அளவை நூற் பிரமாணங்கள் காட்டிவிளக்கிக் கூறியதாயுள்ள சிறந்த நூல் இதுவே. சிவத்துக்குமேல் தெய்வமில்லை; சிவஞான சித்திக்கு மேல் நூலில்லை என்ற பழமொழி இந்நூலின் சிறப்பைக் காட்டும். இருபா இருபஃது என்பதும் இவரால் அருளப்பட்டதே.

மெய்கண்டதேவரின் மாணவரில் மற்றொருவராகிய மனவாசகங் கடந்த தேவநாயனார், நடராசப் பெருமானுடைய உண்மைத் தத்துவத்தை விளக்கிக் கூறிய ஐம்பத்துநான்கு பாடல் கொண்ட சிறு நூல் உண்மைவிளக்கம் என்பது. உமாபதி சிவாசாரியார் அருளிச்செய்த நூல்களில் சிவப்பிரகாசம், திருவருட் பயன், சங்கற்பநிராகரணம் என்பன சிறந்த நூல்கள். இவை சிவஞானபோதம் முதலிய நூல்களின் கருத்தையே மேலும் தெளிவுபடுத்திக் கூறும் நூல்கள்.

***மெய்கண்ட சாத்திரங்களுட் கூறப்படுவன :*** மெய்கண்ட சாத்திரங்கள் இறைவன் ஒருவன் உளன் என்றும்; அவன் சிவனே என்றும்; அவனை அடைந்து இரண்டறக்கலந்து பேரின்பம் அநுபவிப்பதற்காக உயிர்கள் எண்ணிறந்தன உள என்றும்; அவ்வுயிர்கள் அங்ஙனம் நல்வாழ்வு பெறுவதற்காக இறைவனாலே தோற்றுவிக்கப்பட்ட தநு, கரண, புவன, போகங்கள் உள என்றும், ஆன்மாக்களை அநாதியே பற்றி நிற்கும் ஆணவ மயக்க நீக்கத்தின் பொருட்டுத் தநு கரணம் முதலியவற்றோடு திரோதான சக்தி ஆன்மாவைப் பொருந்தி "விடிவாம் அளவும் விளக்கு" என நின்று துணை புரியும் எனவும், இவ்வுதவிகளையெல்லாம் தமது ஒப்பற்ற (சிற்சக்தி யாகிய) பேரருளினாலே வழங்கியாளுகின்ற இறைவனை நன்றியறிதலுடன் மனம், மொழி, மெய்களினால் வழுத்திச் (சிவபுண்ணியங்களாகிய) சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் படிகளிலே முறைதவறாமல் நிற்றலினால் அவ்வான்மாக்கள் "தாடலை" போல் அத்துவித முத்தி பெற்று உய்யும் எனவும் முடிந்த முடிபாக அறுதியிட்டுரைப்பனவாம்.

**நன்றி : சைவசமயம் – விவேகானந்த சபை வெளியீடு**

## மெய்கண்ட சாஸ்திரங்களில் கூறப்பட்ட சாராம்ச விடயங்கள்

### இறையுண்மை

முப்பொருள் உண்மை பேசும் நெறியாகச் சைவ சித்தாந்தம் விளங்குகிறது. பதி, பசு, பாசம் எனும் இம் முப்பொருளாகப் பதியுண்மை முதன்மைக் குறியதாகும். பதியாகச் சிவன் எடுத்தாளப்படுகிறான். சிவன் முழுமையான நிறைவான உண்மைப்பொருளாக எடுத்தாளப்படுவதுடன் வழிபாட்டிற்குரிய தன்னிகரில்லாத கடவுளாகவும் போற்றப்படுகிறான். சைவ சித்தாந்தம் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொண்டு விளங்கி கட + உள் எனும் பகுப்பு கடந்து – உள்ளார் அல்லது கடந்து வெளியிலும் இருப்பவர் எனச் சுட்டி நிற்கிறது. இதனையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தைக் கடந்து இருப்பவர். உலகைக் கடந்தவர். இவற்றைக் கடந்தும் அதனுள் நிற்பவர் எனப் பலவாறாக விரிந்து விளங்கி நிற்றலைக் காணலாம். முதற்கடவுளராக பரமசிவம் சொரூபநிலை அல்லது சிறப்பியல்பு, தடத்த நிலை அல்லது பொதுவியல்பு எனும் இரு நிலையை கொண்டவனாக விளங்கப் படுகின்றனர்.

## சொரூபநிலை

எந்தவித கலப்புமின்றி தன் உண்மையுடன் விளங்கும் நிலையே சொரூப நிலையாகும். சிறப்பியல்பாகவும் சைவ சித்தாந்தம் எடுத்தாளுகின்றது. இந் நிலையால் சொரூபசிவன், பரமசிவன் என அழைக்கப்படுவதாகச் சைவ சித்தாந்திகள் கொள்வர். இறைவன் ஆன்மாக்களையும் பிறபொருட் களையும் நோக்காது தன் சுயசொரூபத்தில் விளங்குவதே உண்மை இயல்பாகின்றது. பரமசிவன் அருவம், உருவம், அருவுருவம் எனும் முந்நிலை மேனி கடந்தவனாயும் மனம், வாக்கு, காயம் எனும் திரிகரண நிலைக்கு அதீதமான வனாயும் விளங்குகின்றான்.

## தடத்தநிலை

தடத்த நிலையால் சிவன் குணவியல்புகளுடன் கூடியவராய் உருவ, அருவ, அருவுருவத் திருமேனிகள் தாங்கியவராய் வழிபாட்டிற்குரிய தெய்வமாய் உணர்ந்தறிதற்கெளியவனாய் விளங்குகின்றான். இங்கு இறைவன் ஆன்மாக்களின் பொருட்டுத் திருமேனிகளை எடுக்கிறார். இவ்வகையில் அருவம், அருவுருவம், உருவம் எனும் மூன்று வகையான திருமேனிகளைக் கொண்டு ஒன்பது வகையான நாமரூப பேதங்களைக் கொள்ளுகின்றான். சிவம், சக்தி, நாதம், விந்து எனும் நான்கு அருவத் திருமேனிகளையும், மகேஸ்வரன், உருத்திரன், விஷ்ணு, பிரமன் எனும் நான்கு உருவத் திருமேனிகளையும் தாங்குவதாக மெய்கண்ட சாஸ்திரங்கள் கொள்ளும்.

## பிராமணங்கள்

காட்சி, அனுமானம், ஆப்த வாக்கியம் ஆகிய அறிவைத் தரவல்ல மூன்றினைப் பிரமாணமாகச் சைவ சித்தாந்திகள் கொள்வர். ஏனைய பிராமணங் களின் அம்சங்களும் இம்மூன்றினுள்ளும் அடங்குமென சைவ சித்தாந்தம் கருதுகின்றது.

## பிரபஞ்ச கர்த்தா

இறைவன், உயிர், உலகு எனும் முப்பொருளை ஏற்று நிற்கும் சைவ சித்தாந்தம் இறைவனே இவ்வுலகின் இயக்கத்திற்கும் அசைவிற்கும் அடிப் படைக் காரணமென உணர்த்துகின்றது.

## காரணகாரியம்

உலகின் தோற்ற ஒடுக்கத்திற்கு நிமித்த காரணமாய்ச் சிவன் எடுத்தாளப் படுகின்ற வேளை, சைவசித்தாந்தம் காரணகாரிய தத்துவத்திற்கும் முதன்மை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளிப்பதைக் காணலாம். சைவ சித்தாந்தம் விளக்கும் காரணகாரிய தத்துவ மானது சற்காரியவாதமெனப்படும். இங்கு உள்ளதே தோன்றும். இல்லது வராது எனும் அடிப்படைச் சற்காரியவாதம் சைவசித்தாந்தத்தில் எடுத்தாளப்படு கின்றது. சற்காரியவாத அடிப்படையால் இறைவனது உண்மை மேலும் தெளிவாகின்றது.

## ஆன்மாவின் இயல்பு

முப்பொருள் பேசும் சைவ சித்தாந்தத்தில் பதியை அடுத்துள்ள பௌதீக அதீத பொருளாக உள்ளது பசுவாகும். பசு என்பது பந்திக்கப்பட்டதெனக் கொள்ளலாம். பதியாகிய சிவம் சத்துத் தன்மையதாகவும், பசு சதசத்துத் தன்மையதாகவும், பாசம் அசத்துத் தன்மையதாகவும் விளக்கப்படுகின்றன. பசு சத்துப் பொருளாக விளங்குகின்ற வேளை, சத்தினை அல்லது அசத்தினைச் சார்ந்து விளங்கும் தகைமையுடையதனால் சதசத்தாகச் சுட்டப் பெறுகின்றது. உலகப் படைப்பை ஆதாரமாகக் கொண்டு இப்படைப்பிற்கு மூலகாரணமாகிய பதியை உணர்ந்து கொள்ளலாம் என்பது போல இவ்வுலகப் படைப்பினை அனுபவங்களை ஆன்மா உண்டெனச் சித்தாந்திகள் அனுமானப் பிரமாணத்தின் துணைக் கொண்டு நிறுவுகின்றனர்.

### பாசப்பிணி

முப்பொருளிலான சைவ சித்தாந்தத்தில் பதி, பசுவை அடுத்துள்ள மூன்றாவது பொருளாகப் பாசம் அமைந்துள்ளது. பதி, பசுவைப் போல பாசமும் அநாதியானது. அறிந்து கொள்ளுகின்ற ஆன்மாவும், அறிவாக விளங்கப்படுகின்ற சிவனும், ஆன்மாவைப் பந்தித்து நிற்கின்ற பாசமும் அநாதியானவை என்பது தெளிவாகும். ஆன்மாக்களைப் பாசம் பந்தித்துள்ள மையால் பசுவென அழைக்கப்படுகின்றது. இப்பாசம் ஆணவம், கன்மம், மாயை என மூன்றாக உள்ளன. இவை ஆன்மாவின் சுய அறிவை மூழ்கடித்து உண்மை இயல்பை உணரவொட்டாது செய்து விடுகின்றன.

### ஆணவம்

ஆன்மாவின் அறிவை மறைத்து, தன்னிலையை உணரவொட்டாது தடுப்பது ஆணவமலமாகும். இவ்வாணவ மலமானது ஆன்மாக்களோடு கூடி நின்று ஆன்மாவின் அறிவையும் தொழிலையும் மறைத்து நின்று புலனா கின்றது. ஆன்மாவின் அறிவை மறைத்து மூடமாகிய அஞ்ஞானத்தை ஏற்படுத்துவதற்குக் காரணமாய் அமைவது ஆணவமேயாகும். ஆனால் ஆணவமலமானது ஆன்மாவின் குணமன்று. ஆன்மாவுடன் சிவன் வேறு பாடின்றி இருக்கையிலும் சிவனைத் தெரியாது. மறைத்திருக்கும் மலங்கள் தனித்துவமான குணங்களைக் கொண்டனவாகும். இதுதவிர அகங்காரம், மமகாரம் என்பனவும் ஆணவத்தின் வெளிப்பாடுகளாகும். ஆன்மா அறிவே சொருபமானது அறியாமை ஆன்மாவின் குணமன்று. ஆணவத்தின் சேர்க்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையினால் ஆன்மா தன் இயல்பைவிடுத்து அறியாமையின் வசமாகின்றது. ஆணவத்தின் குணவியல்புகளே இந்நிலைக்குக் காரணமாகின்றது.

### கன்மம்

ஆன்மாக்களைப் பந்திக்கின்ற மும்மலங்களுள் ஒன்றான கன்மம் அநாதியானதெனச் சித்தாந்தத்தில் எடுத்தாளப்படுகின்றது. கன்மம் என்பது செயல் அல்லது வினை எனப்படும். செயலும், செயலின் பயனால் வருகின்ற விளைவும் கன்மம் எனும் சொல்லால் உணர்த்தப்படுகின்றது. அதாவது இப்பிறவியில் நாம் ஆற்றுகின்ற வினைகளும் முற்பிறப்பில் ஆற்றிய வினைகளின் பயனாகப் பெற்றவையும் கன்மம் எனும் நிலைக்குரித்தாகின்றன. சித்தாந்தத்தில் கன்ம வினையானது மூன்று வகைப்படும்.

(1) ஆகாமியம் - மேல்வினை
(2) சஞ்சிதம் - எஞ்சியவினை
(3) பிராரத்துவம் - ஊழ்வினை (வருவினை)

### மாயை

மும்மலங்களும் ஒன்றான மாயை மாய்தல், ஆகுதல் எனும் இருநிலைப் பொருள் பொருந்த உலகின் தோற்ற ஒழுக்கத்திற்குரிய நிலைகளாக எடுத்தாளப்படுகின்றது. உடல், உலகங்கள் ஒடுங்கித் தோன்றுவதற்கு மாயையே காரணமாய் உள்ள போதிலும் மாயை, மலம் எனும் போது தன்வசம் மயக்குவதே என்பது பெரிதும் தோற்றப்படுகின்றது. மாயை மூன்று வகைப் படும். அவை சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என்பனவையாகும். மாயையில் நின்று மொத்தம் முப்பத்தாறு (36) தத்துவங்கள் எழுவதாகச் சைவசித்தாந்தம் விளக்கும்.

### சைவசித்தாந்தத்தில் விடுதலை

சைவசித்தாந்தத்தில் உயர்ந்த நோக்காகவும், உன்னத இலட்சியமாகவும் அமைவது விடுதலையாகும். இங்கு விடுதலை என்பது முக்தி, வீடு, மோட்சம், நிர்வாணம், அருகதநிலை எனப் பலவாறாக இந்நிலை சுட்டப்படுகின்றன. மேலும் விடுதலை என்பது பந்தம், கட்டு, மலம், பாசம் எனச் சுட்டப்பெறும். அஞ்ஞான நிலையினின்று விடுபடுதலைக் குறித்து நிற்கின்றது. மல பந்தங்களில் இருந்து ஆன்மா விடுபட்டு தன் சுயரூபத்தை உணர்ந்து உயரிய நிலையடைவதே முக்தியாகின்றது. இருவினையொப்பும், மல பரிபாகமும் ஆன்மாக்களுக்கு சிவஞானத்தால் வந்துற்ற வேளையில் மலத்தடைகள் நீங்கி, ஒன்றாகி இரண்டற்ற தன்மையால் பரிபூரணமான சிவனைப் பொருந்துதல் மாத்திரமன்றி அந்தச் சிவமாகவே நிற்பதே சைவ சித்தாந்த முத்திக்குரிய தாகுமென சைவ சித்தாந்தம் விளக்கமாக விபரித்துக் கூறுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 29. சைவ சித்தாந்தம் – அடிப்படை அம்சங்கள் விழுமியங்கள்

1. **சைவம்**

- சைவம் - தமிழர்களின் சமயம் - உலகின் சமயம் தென்னாடுடைய சிவன் எந்நாட்டவர்க்கும் இறைவன்
- சைவசிந்தாந்தம் - சைவத்தின் தத்தவமுறைமை - மெய்யியல்
- சமயம் என்பது அனுபவம் - அனுட்டானத்திற்குரியது - செயல் சார்ந்தது - வாழ்க்கை சம்பந்தப்பட்டது.
- தத்துவம் என்பது கொள்கை, கோட்பாடு, ஞானம் சார்ந்தது. - அறிவு நெறி - உண்மையறிவு சம்பந்தப்பட்டது.
- 'மெய்ப்பொருள் காண்பது அறிவு'
- அறிவு - தூயஅறிவு - வாலறிவு - ஞானம்
- தத்துவம் - 'ஞானத்தின் பாலான விருப்பு'
  'உண்மையில் நாட்டம்'
  'பொய் கெட்டு மெய்யாதல'
- தத்துவம் - இலக்குகள், நோக்கங்கள். குறிக்கோள்கள், பயன்கள்
  - இவற்றை வகுத்துத் தருதல்
  - இவற்றை அடைவதற்கான வழிமுறைகள்,விதிகள். செயன்முறைகள், நடைமுறைகள், வழிகாட்டல்கள் என்பவற்றை அறிவு அறிக்கை அம்சங்களாக முன்வைத்தல்.
  - நெறிப்படுத்தல் படிமுறைகள்
  - கண்காணித்தல், மதிப்பீடு செய்தல்
- "குறிக்கோள் இலாது கெட்டேன்" - அருளாளர்
- "நாம் எங்கு செல்கின்றோம்?" - குறிக்கோள்
  'எந்த வழியூடாகச் செல்கின்றோம்?' - செயலொழுங்கு நெறிப்படுத்தல்
  சரியான வழியூடாகச் செல்கின்றோமா?' கண்காணித்தல், கணிப்பிடல்/மீள் ஆய்வு செய்தல்.
  குறித்த இடத்தை அடைந்து விட்டோமா?' - பயன் - குறிக்கோள் பயன் ஆகின்றது.
- "கல்விக்குப் பயன் அறிவு; அறிவுக்குப் பயன் ஒழுக்கம்"
  "கற்றதனால் - அறிவு பெற்றதனால் - ஆய பயன் வாலறிவன் நற்றாள் தொழல்"
  "இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது
  கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்"
  "கற்றல் - நிற்றல் - கற்றாங்கு ஒழுகு"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

எனவே தத்துவம் செயலாக வேண்டும் - சமயமாக வேண்டும்

- அறிவு - செலுக்கு இன்றியமையாதது
- தத்துவம் - சமயத்திற்கு இன்றியமையாதது
- சைவசித்தாந்தம் - சைவசமயத்திற்கு இன்றியமையாதது.

**2. சைவசமயம் - தத்துவம்**

- சைவசமயத்திற்கும் சைவசித்தாந்தத்திற்குமிடையே நெருங்கிய கருமத் தொடர்பு உள்ளது.
- அறிவு, ஒழுக்கம் - ஒரு நாணயத்தின் இரண்டு பக்கங்கள் போன்றவை.
- இரண்டில் ஒன்று குறையாக இருந்தாலும் வாழ்க்கை பழுதுபட்டுவிடும், மதிப்பு, பெறுமதி இறங்கிவிடும்.
- சமயம் சாதனையில், சாதனை மூலமாக மதிப்புப் பெறுகிறது.
- சைவம் தொடர்பான பிரச்சினைகள் சைவசித்தாந்த அடிப்படையில் ஆராய்ந்து முடிவுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.
- சமயமே வாழ்க்கை, வாழ்க்கையே சமயம். சமயம் வாழ்க்கையை மேம்படுத்துகிறது. மேம்பட்ட வாழ்க்கை, பிறவியின் நோக்கத்தை அடையச் செய்கின்றது.
- சமயத்துவம், வாழ்க்கைத்தத்துவமாகும்.
- வைத்துள் வாழ்வாங்கு வாழ்தல்
  - மண்ணில் நல்ல வண்ணம் வாழ்தல்
  - இறைவனை முன்வைத்து, அவனை விசாரித்து, ஒப்புதல் பெற்றுக் கரும மாற்றுதல்.
  - அகந்தை, மமதை என்பவற்றைப் படிப்படியாகக் குறைத்தல்.
  - பிறவித் துன்பங்களினின்றும் நீங்கப் பெறுதல்.
  - என் கடன் பணி செய்து கிடத்தல் - பயன் எதிர்பாராது சேவை செய் எல்லாம் இறைவன் செயல் என உணரப்பெற திருவருள் உணர்வோடு செயலாற்றல்.
  - இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது. கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்.
  - சைவசித்தாந்த அடிப்படை அறிவு, சைவ சமயத்தை விளங்கிக் கொள்வதற்கும், சைவஒழுக்கத்திற்கு ஆதாரமாக உள்ளது.
- தத்துவம் - சமயம் - வாழ்க்கை

சைவம் இம்மூன்றையும் உள்ளடக்குவதால் முழுமையான நெறியாக உள்ளது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. சைவ சித்தாந்தம்

- சைவம் சிவசம்பந்தமுடையது. சைவத்தின் முடிந்த முடிவுகள் இவையெனக்காட்டி, விளக்குவது சைவசித்தாந்தம், சித்தாந்தம்: அறிவின் எல்லை; முடிந்த முடிவு -
- சைவசமய உண்மைகளும் அடிப்படைக் கோட்பாடுகளும் மிகவும் தொன்மை வாய்ந்தவை.
    - தொல்காப்பியம்
    - சங்க இலக்கியங்கள்
    - திருக்குறள்
    - திருமந்திரம்
    - தேவார திருவாசகங்கள்
    - ஏனை பன்னிரு திருமுறை நூல்கள்

      ஆகியவற்றில் அவை விரவிக் காணப்படுகின்றன.
    - "சித்தத்தைச் சிவன்பால் வைத்தல்" - சைவசித்தாந்தக் கோட்பாடு. நித்தியமான, பேரறிவும் பேராற்றலும் கொண்ட மெய்ப்பொருளாகிய சிவபெருமானை முற்று முழுதாக உணர்தல்.

## 4. சைவசித்தாந்த சாத்திரங்கள்

- சைவ சித்தாந்தத்திற்கு மூலநூல்கள் சிவாகமங்கள்.
- தமிழில் மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கு உள்ளன.
- சைவ சித்தாந்தக் கோட்பாட்டினை முதலிலே முழுமையாக, நூல்வடிவில் உருவமைத்தவர் மெய்கண்டார்.
- சைவ சித்தாந்தக் கலை, தமிழர் பாரம்பரியத்தில் இடம் பெறுகிறது. சைவ சித்தாந்தக் கலையானது தமிழ் மக்களின் சமய ஆன்மீக சமூக, பொருளாதார, ஒழுக்க, பண்பாட்டு, கலாசார வாழ்வியல் ரீதியாகச் செல்வாக்குச் செலுத்தி வந்துள்ளது.
- தமிழ் மக்களின் பண்புசார் வாழ்க்கைத் தரத்தின் உயர்வுக்கும் மேம்பாட்டிற்கும், அவற்றிற்கு அடித்தளமாகவும் ஆதாரமாகவும் விளங்கும் மனித, ஆன்மீக விழுமியங்களுக்கும், சைவ சிந்தாந்தக் கலையில் தமிழ் மக்கள் கொண்டுள்ள பற்றும் பரிச்சயமும், அறிவும் சாதனை அனுபவமும் காரணங்களாகும்.
- சைவ சித்தாந்தம் நமது 'முதுசொம்', முதுசொத்து. - எங்கள் உரிமை. உரிமை பேணுதல் நமது கடமை.
- கந்தபுராண கலாசாரம் - தமிழர் கலாசாரம் - அது சைவசித்தாந்த கலாசாரம் ஆகும்.
- "சைவசித்தாந்தமே திராவிட மேதையின் மிக உன்னதமான படைப்பாகும். அதுவே இந்தியாவில் தோன்றிய மதங்கள் யாவற்றிலும் மிக நுட்பமானதும் மிகப் பெறுமதி வாய்ந்ததும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றைய மதங்களிலே தன் செல்வாக்கினைப் பதித்ததுமான தலைசிறந்த மதமாகும்" ஆங்கிலேயப் பாதிரியார் ஜீ.யு. போப் (திருவாசகத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்)

- சிந்துவெளி நாகரின் உலகின் மூத்த நாகரிகம். சைவம் தோன்றிய நாகரிகம். நாகரிகமடைந்த திராவிட மக்களின் சிந்தனை வெளிப்பாடு, சைவம் ஆக மலர்ந்தது. ஞானியரும், முனிவர்களும், அறிவர்களும் தூய மனத்தினராய் ஆழ்ந்து சிந்தித்து, நுண்ணியதாய் உணர்ந்து வெளிப்படுத்திய உண்மைகளே, சைவசமயம் என உருவாகியது. சிவன், பசுபதி என அழைக்கப்பட்டான். பசு என்றால் உயிர், பதி என்றால் தலைவன். பசுபதி உயிர்களின் தலைவன். இந்த எண்ணக் கருத்து, சைவ சித்தாந்தத்தின் மூல எண்ணக்கருவாகியது எனலாம்.
- பதி - முற்றறிவுடையது - பேரறிவுடையது.
  பசு - சிற்றறிவுடையது - ஓர் எல்லைக்குட்பட்டது.
  பாசம் - அறிவற்றவை - சடப்பொருள்

  சைவசித்தாந்தம், பொருள்களை, அறிவின் அடிப்படையில், மேற்குறிப்பிடப்பட்டவாறு, வகைப்படுத்துகிறது. முப்பொருள் உண்மை பற்றிக் கூறுவது சைவசித்தாந்தம்.
- "பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
  பதியினைப் போல் பசு பாசம் அனாதி
  பதியினைச் சென்று அணுகாப் பசு, பாசம்
  பதி அணுகில் பசு, பாசம் நிலாவே" - (திருமந்திரம் 115)
- சிவபெருமானே முதற் சைவசித்தாந்தப் பேராசிரியர்
- திருக்கைலாசமலையிலே, ஸ்ரீகண்ட பரமசிவன் கல்லாலமரத்தின் கீழ், தட்சணாமூர்த்தம் கொண்டு எழுந்தருளி, வேத ஆகமங்களின் மெய்ப்பொருளைத் திருநந்தி தேவர், சனற்குமார முனிவருக்கு உபதேசித்தருளினார்.
  - சனற்குமாரர், சத்தியஞான தரிசனிகளுக்கு உபதேசித் தருளினார்.
  - சத்திய ஞானதரிசினிகள் பரஞ்சோதி மாமுனிவருக்கு உபதேசித்தார். இவர்கள் திருக்கைலாயமலையில் இருந்தவர்கள்.
  - ஒரு குரு சீடபரம்பதை - சந்தானம் - வளரலாயிற்று. இவர்கள் அகச் சந்தான குரவர் எனப்படுகிறார்கள்.
  - குரவர் = குருமார்கள்
- திருக்கைலாயமலைக்கு அப்பால் தெற்கே, தமிழ்நாட்டில் தோன்றி வளர்ந்தது, புறச் சந்தான குரவர் பரம்பரை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வடக்கிலிருந்து வந்த பரஞ்சோதிமாமுனிவர், மெய் கண்டாருக்கு ஞானகுருவாய் அமர்ந்து சைவசித்தாந்த மெய்ப்பொருளை உபதேசித்தார்.
- சிறு பிள்ளையாக வீதியில் விளையாடிக்கொண்டிருந்த திருவெண்காடரின் பக்குவநிலையைக் கண்டு, அவருக்கு உபதேசிக்கப்பட்டது.
- பரஞ்சோதி முனிவர் தமது குருவான சத்தியஞான தரிசினியின் பெயரையே தீட்சைப் பெயராகத் திருவெண்காடருக்கு இட்டார்.
- சத்திய ஞானதரிசினி - தமிழில் 'மெய்கண்டார்'
- மெய்கண்டார் - அருணந்தி சிவாச்சாரியார்
- மறைஞானசம்பந்தர் - உமாபதி சிவாச்சாரியார்
- இவர்கள் புறச்சந்தான குரவர் எனப்படுவர்.
- இவர்களில் மறைஞான சம்பந்தர் தவிர்ந்த மூவர் தமிழில் சைவசித்தாந்த சாத்திர நூல்களைச் செய்தவர்கள்.
- சந்தான குரவர், சந்தானாசிரியர் எனவும் அழைக்கப்படுவர்.

◆ பிரமதேவரின் புதல்வர்கள், சனகர், சனாதனர், சனந்தனர், சனற்குமாரர் என்போர். இவர்கள் முனிவர்கள், வேதங்களைக் கற்றிருந்தும் அவர்களுக்கு ஓர் ஐயம் இருந்தது.

◆ அவர்கள் ஐயத்தைத் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக சிவபெருமானிடம் சென்றனர்.

◆ திருக்கைலாய மலையிலே, சிவபெருமான் தட்சணாமூர்த்தியாக (தென்முகக்கடவுள்) வீற்றிருந்தார். முனிவர்கள் அவரிடம் தமது ஐயத்தைக் கூறினர்.

◆ அவர்கள் தெளிந்து கொள்ள விரும்பியது, வேதங்களை நன்கு கற்றும், ஞானம் என்பது என்ன என்று தெரிந்து கொள்ள முடியவில்லை என்பதேயாகும்.

◆ சிவபெருமான் அம் முனிவர்கள் நால்வருக்கும் ஆகம அறிவினை உணர்த்தியருளினார்.

◆ சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று நெறிகளையும் அவர்களுக்கு விளக்கி விட்டுத் தமது உபதேசத்தை அம்மட்டில் நிறுத்திக் கொண்டார்.

◆ அப்பொழுது முனிவர்கள் ஞானத்தையும் விளக்கியருளும்படி வேண்டினார்

◆ சிவபெருமான், "ஞானம் என்பது நாவினால் நவிலற்பாலதன்று" என்று கூறிவிட்டு, வலது கையைச் சின் முத்திரையாகப் பிடித்து மார்பிலே சேர்த்து வைத்துக்கொண்டு ஒரு கணம் ஞான நிட்டையில் அமர்ந்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மோனமென்பது ஞானவரம்பு.
- சித் = ஞானம், சித், சின் ஆகத் திரிந்தது.
முத்திரை = அடையாளம். சித்முத்திரை, சின்முத்திரை ஆனது
- சின் முத்திரை குறிப்பது யாது?
  - பெருவிரல் : இறைவனைக் குறிப்பது - பதி
  - சுட்டுவிரல் : ஆன்மாவைக் குறிப்பது - பசு
  - நடுவிரல் : ஆணவத்தைக் குறிப்பது
  - மோதிரவிரல் : கன்மத்தைக் குறிப்பது
  - சின்னவிரல் : மாயையைக் குறிப்பது

பசு, பாசத்திலிருந்து விடுபட்டுப் பதியை அடைதல் ஞானத்தின் விளைவு. ஞானம் அடையப் பெற்ற ஆன்மாவுக்கே பரமுத்தி கிடைக்கப் றெுகிறது. சரியை, கிரியை, யோகம் - பதமுத்தியை அளிக்கின்றது.

- ஆன்மா மும்மலங்களிலிருந்து விடுபட வேண்டும். மூன்று விரல்களையும் ஒன்றாக நிற்க விட்டு, ஞானம் பெற்ற ஆன்மாவாகிய சுட்டுவிரல் இறைவனைக் குறிக்கும் பெருவிரலுடன் இணைகின்றது.
- சைவநாற்பாதங்கள் - சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகமங்களிலேயே விளக்கப்பட்டுள்ளன.
- வாழ்க்கையின் அதி உயர் இலட்சியம் - வீடு - முத்தி - மோட்சம்.
- அடைவதற்கான மார்க்கம் ஆகமங்களிலே கூறப்பட்டுள்ளது! - சைவ நாற்பாதங்கள்.
- **சரியை** - உடம்பு சார்ந்த புறத்தொழில்களாலே சிவபெருமானுடைய
உருவத்திருமேனியை வழிபடுதல். உடம்பினைச் சிவனுக்கு அர்ப்பணம் செய்தல்.
  - ஆண்டான் - அடிமைத் தொடர்பு: தாசமார்க்கம்
  - திருக்கோயில் வழிபாடு, தொண்டுகள் : திருநாவுக்கரசர்
  - சாலோகமுத்தி (பதமுத்தி) - சரியைத் தொண்டுக்கு மட்டும் கிடைக்கும் முத்தி.
  - திருநாவுக்கரசர் ஞானத்தை அடைந்து பரமுத்தி பெற்றவர்.
- **கிரியை** - அகத்தொழிலாலே சிவபெருமானுடைய **அருவுருவத்திருமேனியை** - சிவலிங்கம் நோக்கிச் செய்யும் வழிபாடு.
  - மெய், வாய், கண், மூக்கு, செவி என்பனவற்றை சிவனுக்கு அர்ப்பிதஞ் செய்கின்றோம்.
  - தந்தை - மகன் தொடர்பு - சற்புத்திர மார்க்கம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சிவபூசை - கோயிற்பூசை.
- சாமீபமுத்தி.

◆ **யோகம்** : - அகத்தொழிலாலே சிவபெருமானுடைய அருவத்திருமேனியை நோக்கிச் செய்யும் வழிபாடு
  - இவ்வழிபாட்டில் அந்தக்கரணங்கள் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் - சிவனுக்கு அர்ப்பிதஞ் செய்யப்படுகின்றன.
  - தோழமைத் தொடர்பு - சகமார்க்கம் - சுந்தரமூர்த்தி.
  - ஆன்மா இறைவனோடு சேர்த்தல் : யோகம்
  - சாரூப முத்தி
  - அட்டாங்கயோகம் - நாம் செய்யும் பயிற்சி
    1. இயமம் - தீய செயல்களைச் செய்யாதிருத்தல்.
    2. நியமம் - நல்லவற்றைச் செய்தல்.
    3. ஆசனம் - தியானம் செய்தற்கு அமரும் முறை
    4. பிராணாயாமம் - தீட்சை பெற்றோர் மூச்சை உள்ளே இழுத்து, நிறுத்தி, வெளியே விடும் முறை.
    5. பிரத்தியாகாரம் - புலனடக்கம், மன அடக்கம்
    6. தாரணை - மனத்தை அடக்கியபின், அதனை கடவுள்பாற் செலுத்துதல்.
    7. தியானம் - இறைவனின் நினைவில் மனத்தை நிறுத்துதல்.
    8. சமாதி - ஆன்மாவும் இறைவனும் தம்முள் வேற்றுமையின்றி ஒன்றாய் இருத்தல்.

◆ **ஞானம்**
  - சிவபெருமானை அருவம், அருவுருவம், உருவம் ஆகிய மூன்று திருமேனிகளிலும் கண்டு தரிசிப்பதற்கு மேலாக, எங்கும் நீக்கமற நிறைந்த சச்சிதானத்தப் பிழம்பாய்க் கண்டு அறிவாலே செய்யும் வழிபாடு.
  - இவ்வழிபாட்டில் ஆன்மா சிவனுக்கு அர்ப்பிதஞ் செய்யப்படுகிறது.
  - தலைவன் - தலைவி உறவு - சம்மார்க்கம்
  - சாயுச்சியம் - பரமுத்தி - மாணிக்கவாசகர்

இந்தவழிபாட்டிலே,

1. கேட்டல் - ஞானநூல்களை ஆராய்தல்
2. சிந்தித்தல் - பல நூற்களிலும் கூறப்படும் பொருட்கள் பற்றிச் சிந்தித்தல்.
3. தெளிதல் - சிவாகமமே எல்லாவற்றிலும் சிறந்தது என்று தெளிதல்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. நிட்டை கூடல் - சிவமயமாகக் கலத்தல்.

இந்நிலையை எய்துதற்குச் சற்குருவின் துணை வேண்டும்.

- ஆன்மா பக்குவநிலையை அடையும் போது கடவுளே சற்குருவாக வந்து தீட்சை கொடுத்து முத்திப்பேற்றை அருளுவார்.

ஆன்மா உலகியலில் மயங்கிக் கிடக்கும்போது அதனைக் கொஞ்சம் கொஞ்சமாக இறைவன் பக்கமாகத் திருப்புகின்ற படிமுறைச் செயற்பாடுகளே சரியை, கிரியை, யோக மார்க்கங்கள்.

- உலகில் உள்ள பொருள்களை மூன்று பகுதிகளுள் அடக்கலாம்.
  1. கடவுள்: அறிவிக்காமல் அறியும் பொருள் (பதி - சத்து)
  2. ஆன்மா: அறிவித்தால் அறிவதும் அறிவிக்காவிட்டால் அறியாததுமான பொருள் (பசு, சதசத்து).
  3. பாசம்: அறிவித்தாலும் அறியமாட்டாப் பொருள் (மலங்கள், அசத்து)

**சத்து** = என்றுமுள்ள பொருள் - உள்பொருள்

**பாசமும்** என்றுமுள்ள பொருளே. ஆயினும் முத்திநிலையில் பதியின் முன் அது வலிமை அடங்கி ஒழிதலால் அசத்து (இல்பொருள்) என்று உபசரித்துச் சொல்லப்பட்டது.

**உயிர்** - மலத்தைச் சார்ந்து, அதனால் மறைப்புண்டு, சத்தி மடங்கிக் கிடத்தலால் அசத்து, முத்திநிலையில் சிவத்தைச் சார்ந்து மறைப்பு நீங்கப் பெறுகின்றது.சத்து ஆகிறது.

**கதை**: பாவை - பிள்ளை - அம்மா

சடம் - உயிர் - அறிவுள்ளது.

- உயிர் சார்ந்ததன் வண்ணம் ஆகுந்தன்மையது.
- உயிர் தான் அறிவுள்ளது என்று அறியும் நிலையில் இறைவனிடம் ஆன்மா ஞானம் பெறுகிறது. உயிர் = அறிவு = அறியப்படும் பொருளாகிய இறைவனும் ஒன்றாகி விடுகின்றன.

## 5. முப்பொருள் உண்மை

- **பதி உண்மை**

- மனிதனின் அறிவு சிற்றறிவே ஆயினும் காட்சி, கருதல், உரை என்னும் அளவைகள் துணை கொண்டு உண்மைகளை நிறுவுவதே சித்தாந்தம்.

- பதி எனப்படுகின்ற கடவுள் உண்டா? என்பது வினா. உண்டு என்று நிறுவுவது பதியுண்மை
- இவ்வுலகம் இயற்கையாகத் தோன்றியதன்று. அது சுட்டியறியப்படுவதாயும், அசத்தாயும் இருப்பதால் தானே தோன்றி, நின்று, அழியும் ஆற்றல் அற்றது. எனவே அது செயற்கையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டது. செயற்கை. செய்யப்பட்டது காரியம்.காரியத்திற்குக் காரணம் இருத்தல் நியதி. உலகத்துக்குக் கருத்தா ஒருவர் உளர் என்பது சந்தேகத்திற்கிடமற்ற கூற்று. (புகை - நெருப்பு)

- உலகத்திற்குக் கருத்தா சிவபெருமான் (பதி) என்பது சைவசித்தாந்த முடிவு.
- சிவமே உயர்ந்த உள்பொருள். கரையற்றது. வரையற்றது. புரையற்றது. உரையற்றது. மனம், வாக்குக் காயத்தினால் அறிதற்கரியது. என்று முள்ளது. எங்கும் நிறைந்தது. எல்லாம் வல்லது
- சத், சித் ஆனந்தமாக உள்ள பரம்பொருள். மெய்ப்பொருள் - சச்சிதானந்தம்.
- சிவன், ஆதியும் அந்தமுமில்லாதவன், என்றும் பாசத்தளைகளிற் சிக்காதவன் - நின்மலன்
- பதி - தலைவன் என்பது பொருள்
- பசுபதி - எல்லா உயிர்களுக்குந் தலைவன்
- குணங்களைக் கடந்தவன் - குணாதீதன் - நிர்க்குணன்
- பேராற்றலுடையவன் - சிவனின் ஆற்றலாக (சக்தியாக) இருப்பது அவனின் திருவருள் (திருவருட்சக்தி) ஆகும்.

  "எத்திறம் நின்றான் ஈசன்
  அத்திறம் அவளும் நிற்பாள்" - (சிவஞானசித்தியார்)
  "சத்திபின்னமிலான் எங்கள் பிரான்" - (திருவருட்பயன்)
  - பேரருள் உடையவன்
- சத் - என்றும் மாற்றமடையாமல் உள்ள பொருள்
  சித் = அறிவு / ஞானம்
  ஆனந்தம் = எல்லையற்ற இன்பமுடைமை (சச்சிதானந்தம்)
- உலகத்துக்கு முழு முதலாகவிளங்குபவன் சிவன்.
- உலகின் முதற்காரணம் : மாயை
  - நிமித்த காரணம் : இறைவன்(சிவன்)
  - துணைக்காரணம் : சிவசக்தி
- பதியானது சக்தியின் துணையுடன் மாயையிலிருந்து உலகம். உடல்கள், நுகர்ச்சிப் பொருள்களைப் படைக்கின்றது.யாருக்காக: ஆன்மாக்களுக்காக, அவற்றின் உய்வின் பொருட்டு.
- பதியாகிய சிவன் அறிவிக்காமலே அறியவன். யாவற்றையும் தாங்குபவன்,மாறா இயல்பினன், ஏனையவற்றின் மாற்றங்களுக்குக் காரணன், முழுமையானவன் (குறைவில் நிறைவு), உண்மையானவன், தூயவன், சுதந்திரன், வரம்பிலாற்றல் உடையவன், இயல்பாகவே மலங்களினால் பீடிக்கப்படாதவன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **கடவுளின் இரு நிலைகள்:**

**1. சொரூபநிலை:**

பதி (சிவம்), அதிசூக்குமப் பொருள், வரையறையற்ற பொருள், குணங்குறிகள் அற்றது, பெயர், வடிவம், உருவத்தின் வழி நிகழ்த்தப்படும் செயல் என்பன இல்லாத பொருள், மலபந்தம் அற்ற பொருள் எவ்வித மாற்றத்திற்கும் உட்படாத பொருள்,உணர்வு மயமானது. மனம், மொழி, மெய் என்பவற்றால் அறியப்பட முடியாத பொருள். அனாதி முத்த சித்தாய் சத்தாய் இருக்கும் நிலையைச். சொரூபநிலை என்கிறது சைவசித்தாந்தம். உணர்வுமயமாய் நிற்கும் நிலை.

- மூவகை வடிவங்களைக் (அருவம், அருவுருவம், உருவம்) கடந்தவர்.
- குறியோ, அடையாளமோ அற்றவர்
- நிர்க்குணர்
- நிர்மலர்
- ஓர் ஆதாரமுமில்லாதவர்
- பிறப்பு, இறப்பு அற்றவர்
- சலிப்பற்றவர்
- சுக (இன்ப) வடிவினர்
- பாசஞானம், பசுஞானம் என்பவற்றால் அறிதற்கரியவர்.
- ஒப்புவமை அற்றவர்
- ஞானமாய் நிறைந்தவர்
- அதி சூக்குமர்
- வேண்டுதல், வேண்டாமை இலாதவர்
- ஆன்மாக்களுக்கு முத்திதானமாயுள்ளவர்.
- முடிவான உள்பொருள்

பதியின் சிறப்பியல்பும் உண்மைநிலையும் சொரூபநிலையாகும்.

- இறைவன் தமது சுய சொரூபத்தில் உள்ள உண்மைநிலையே சொரூபநிலை

  "இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தின் இவன் இறைவன் என்றெழுதிக் காட்டொணதே// என யாவற்றையும் கடந்து நிற்கும் நிலை சொரூபநிலை. - சொரூபநிலையில் சத்தி,சிவத்திடம் ஒடுங்கியிருக்கும்.

**2. தடத்த நிலை**

- கடவுளின் பொது இயல்பு நிலை.
- ஆன்மாக்கள் மீது கொண்ட அளப்பருங்கருணையினால், அருவம், அருவுருவம், உருவம் எனப்படுகின்ற திருமேனிகளைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கி, குணங்குறிகள், அடையாளங்கள் என்பவற்றுடன் சிவன் ஆன்மாக்களுக்கு அருள்பாலிக்கும் நிலை இதுவாகும்.

- இந்நிலையில் சிவன் வழிபாட்டிற்குரிய இறைவனாக எமக்கு விளங்குகிறான் -திருக்கோயில் வழிபாடு.
- தடத்தநிலையில் இறைவன் ஐந்தொழில்களைச் செய்கிறான்.

**படைத்தல்:** தநு, கரண, புவன, போகங்களைப் படைத்தலும் கன்ம பலன்களுக்கேற்ப உயிர்களுக்கு அவற்றைச் சேர்த்தலும்.

**காத்தல்:** உயிர்கள் கன்மவினைகளை (நல்வினை, தீவினை) படைத்து வழங்கப்பட்டவற்றைக் காத்தல்.

**அழித்தல்:** ஆன்மாக்களை மலங்களினின்றும் விடுவித்துத் தன்னுடன் சேர்த்துக் கொள்வதற்காக இறைவனால் அவற்றிற்கு வழங்கப்பட்ட மாயாகாரியங்களை (தனு, கரண, புவன, போகங்கள்) அழித்தல், மாயை அழிக்கப்படுவதில்லை - உள்பொருள், அழிந்தவைகள் வேறொரு நிலையில் மாயையிடல் ஒடுங்குகின்றன.

பிராரப்த அனுபவம் முடிந்ததும் தூல உடம்பு அழிக்கப்பட்டுவிடும். பருவுடம்பிலிருந்து உயிரைப் பிரித்தல், அழித்தல் எனப்படுகிறது.

ஒடுங்கிக் கிடப்பவற்றை முன்போல் காரியங்களாக இறைவன் மீண்டும் தோற்றுவிப்பான்.

அழித்தல் - சங்காரம் - ஒடுக்கம்

**மறைத்தல்:** ஆன்மாக்களைப் போகப் பொருள்களில் மூழ்க வைத்தல். உலகப் பொருள்களின் உண்மை நிலையை மறைத்தல். ஆன்மாக்கள் அறிந்து கொள்ளா வண்ணம் அறிவை மறைத்தல். மறைப்பினை நிகழ்த்தும் இறைவனின் சக்தி, திரோதான சக்தி எனப்படுகிறது.

"ஆன்மாக்கள் சுத்தமடையும் போது, இன்பத்தைத் தருவதாகிய புண்ணியத்திலாவது, துன்பத்தைத் தருவதாகிய பாவத்திலாவது மனஞ் செல்லாது, அவைகளுக்குச் சிவஞானத்திலே மனஞ் செல்லும். இது மலங்களினது வீரியத்தைத் தடுப்பதனால் உண்டாகும். இப்படிச் செய்தல் மறைத்தலாம்". (மறைஞான தேசிகர் சிவஞான


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முனிவர் கருத்து - சைவபோதம்)

**அருளல்:** மேற்குறித்த நான்கு தொழில்களாலும் ஏற்படுவது ஆணவமலம் வலி கெடுதல் ஆகும். அவ்வேளை, சிவபெருமான் ஏனைய மலங்களையும் ஆன்மாவினின்றும் நீக்கியருளி மெய்ஞ்ஞானத்தை ஊட்டிப் பேரின்பத்தை அளித்தல், அருளல் எனப்படுகிறது. அருளல் என்பது வீடு அருளல் (சிற்றின்பங்களை அருளுதல் அன்று)

- ஐந்தொழில்கள் யாவற்றையும் சிவபெருமான் தமது சத்தியைக் கொண்டே செய்வார். சத்தி தம்மிலிருந்து வேறுபடாதது.
- சிவபெருமான் இத் தொழில்களைச் செய்வதால், எவ்வித மாற்றங்களுக்கோ, திரிபுக்கோ, வேறு பாதிப்புக்களுக்கோ உள்ளாவதில்லை. அதனால் அவர் நிர்விகாரி (மாற்றமில்லாதவர்) எனப்படுகிறார்.
- சிவனின் சத்தியானது (வல்லமை), படைத்தல், காத்தல், அழித்தல்,மறைத்தல், அருளல் என்பவற்றை முறையே, பிரமா விஷ்ணு, உருத்திரன், மகேசுரன், சதாசிவன் ஆகிய திருமேனிகளில் நின்று செய்யும். இவர்கள் சிவபேதங்கள் ஆவர்.
- ஐந்தொழில்கள் இடையறாது நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன.
- சிவபெருமான் உயர்களின் மீது கொண்ட அளப்பருங் கருணையே ஐந்தொழில்கள் நிகழ்த்தப்படுவதற்குக் காரணம்.
- நடராச வடிவம் ஐந்தொழில்களை விளக்கிக் காட்டுகின்றது.
- ஐந்தொழில்கள் ஆன்மாக்களுக்கு உபகாரமாக அமைகின்றன.
- ஆன்மா வீடுபேறு அடைந்து மேல்வருங் காலத்திலெல்லாம் பதியின் தொடர்பிலேயே நீங்காது இலயித்துப்பேரின்பத்தில் திளைத்திருக்க உபகாரமாவது ஐந்தொழில்கள்.
- இந்த ஐந்தொழில்களில் மறைத்தலைக் காத்தலோடும் அருளளை அழித்தலோடும் சேர்த்து, முத்தொழிலாகக் கொள்ளப்படுதலும் உண்டு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தடத்தநிலையில் பதியானது, அருவம், அருவுருவம், உருவம் என்னும் மூவகைத் திருமேனிகளுடன் அருள் புரிகின்றது.
- அவை ஐந்து நிலைகளில் உள்ளன: சிவம், சத்தி, சதாசிவம், ஈசுரம், வித்தை - இவை சக்தி பேதங்களால் ஆவனவே.
  - சிவம் : ஞானசத்தி தனித்து உள்ளநிலை
  - சத்தி : கிரியா சத்தி தனித்து உள்ள நிலை.
  - சதாசிவம் : இரண்டும் சமமான நிலை
  - ஈசுரம்: (மகேசுரம்) ஞானம் குறைந்து கிரியை மிகுந்துள்ள நிலை
  - வித்தை: கிரியை குறைந்து ஞானம் மிகுந்துள்ளநிலை
  - அருவம் : சிவம், சக்தி, இரண்டும்
  - அருவுருவம்: சதாசிவம்
  - உருவம் : ஈசுரம் (மகேசுரம்) வித்தை இரண்டும்.
- அருவத் திருமேனி கண்களுக்குப் புலனாகாதது, இது சக்திரூபமாய் இருந்து காரியங்களைச் செய்கிறது.
- அருவுருவம் ஒவ்வொருகால் புலனாகியும் புலனாகாமலும் இருப்பதாகும். இது ஒளி வடிவாக அமைகின்றது. கண்ணிற்குப் புலனாகும் வேளையில் உறுப்புக்கள் (முகம், கை, கால்) இன்றிப் பிழம்பு ஆக இருக்கும் (சிவலிங்கம்)
- உருவத்திருமேனி முகம், கை, கால் முதலிய உறுப்புக்களுடன் கண்களுக்குப் புலனாகும் வகையில் இருப்பதாகும்.
- சிவபெருமானின் திருமேனி அருட்திருமேனி - அதாவது சக்தி சரீரம், செயல்கள், அருட்டொழில் - அதாவது சக்தி செயல்கள்.
- இறைவனின் உருவம் மாயையிலிருந்து உண்டானதல்ல. அருட்திருமேனி / சக்தி சரீரம் என்பதால் நாம் விளங்கிக் கொள்வது, இறைவன் நினைத்த வடிவத்தை நினைத்தபடியே தன் இச்சையால் கொள்வதன்றிப் பிரிதொருவர் படைத்துக் கொடுக்க வேண்டியதில்லை என்பதாகும்.
- வடிவங்கொள்வது ஏனெனில், வடிவமற்ற இறைவனை, உயிர்கள் காணவோ, தரிசிக்கவோ, நினைக்கவோ இயலாது என்பதனாலாகும்.''

எனவே, “இறைவன் தான் நினைந்த தொழிலை உருவங்கொள்ளாமலே செய்யவல்லனாயினும், உயிர்கள் தன்னை அறிந்தும் கண்டும், கருதியும் வாழ்த்தியும் வணங்கியும் உய்தற் பொருட்டே உருவம் கொள்கின்றான்// என்பது விளங்கும்.

- இறைவனின் எண்குணங்கள்:- தடத்தநிலையில்

1. **தன்வயத்தனாதல்**: முழுமையான சுதந்திரம் உடையவன். பிறர் ஆட்சிக்கோ, ஆணைக்கோ உட்படாதவன். பிறர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயப்படாதவன். பதியாக, தலைவனாக விளங்கும் சிவன் எல்லா முதன்மையுமுடைய, முழுமுதற் கடவுளாகப் போற்றப்படுகிறான். "ஒன்று அவன்தானே" என்கிறது திருமந்திரம். ஒப்பு, உவமை இல்லாதவன் -

"தனக்குவமை இல்லாதான்" - வள்ளுவம்

"ஒருவன் என்னும் ஒருவன் காண்க" - திருவாசகம்

"ஏகம் சத்" - உபநிடதம்

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்" - சர்வசுதந்திரம் உடைமை ஒருவனுக்கே பலருக்கன்று.

- இறைவன் ஒருவனே. பதி ஒன்றே - கடவுள் ஒன்றே - முடிந்த முடிவு.
  எனினும் "தெய்வம்", "தேவர்" - என்போர் கடவுளது அருளால் தெய்வநிலைமை அடைந்தவர்கள். அவர்கள் உயர் நிலையை அடைந்த பசுக்களேயன்றி பதியல்லர்.
- கடவுள் ஒன்று. தெய்வங்கள் பல.." செத்துப்பிறக்கின்ற தெய்வங்கள் மணவாள...."
- தெய்வங்களும் பிறந்தும், வாழ்ந்தும், பின்னர் இறந்தும் செல்லும் தன்மையனவாம்.
- தெய்வங்கள், தேவர்கள் என்போர் அதிகாரமூர்த்திகள். அவர்கள் சிவனின் ஆணையைப் பெற்றவர்கள், அவர்கள் பிறவயத்தினர்.
- முழு முதலான சிவபெருமான் ஒருவரே தன் வயத்தினர் - சர்வசுதந்திரர்.

**2. இயற்கையுணர்வினன் ஆதல்:**

- சர்வசுதந்திரமுடைமை, அறிவுச் சுதந்திரத்தையும் உள்ளடக்கியிருத்தல் தெளிவு. பொருள்களை அறிந்து கொள்வதில், பிறர் உதவி தேவைப்படாமை இறைவனுக்கு உள்ளமை குறிப்பிடத்தக்கது.
- இன்னொருவர் அறிவிக்க அல்லது உணர்ந்த, அறியும் அறிவு, செயற்கை அறிவு. அவ்வாறில்லாமல் தானே அறியும் அறிவு, இயற்கை அறிவு ஆகும்.
- இயற்கை அறிவுடைய இறைவன் - சுயம்பிரகாசம் - தானே அறிந்து, பிறருக்கும் அறிவித்து நிற்பவன்.
- "பல் ஆருயிர் உணரும் பான்மையென மேல் ஒருவன். இல்லாதான் எங்கள் இறை" - திருவருட்பயன்.
- இயற்கையுணர்வே "அநாதி போதம்" எனப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **முற்றுமுணர்வினன் ஆதல்:**

- ஒரு குறித்த காலத்தில், ஒரு பொருளையன்றி, அனைத்துப் பொருள்களையும் அறிந்து கொள்ளும் நிலை, "முழுது ஒருங்கணர்தல்" எனப்படும். இவ்வாறு உணரும் அறிவு, "முற்றறிவு" எனப்படும்.
  (முற்றறிவுடைமை - சர்வஞ்ஞத்துவம்)
- ஒரு பொருளை மட்டும் ஒரு குறித்த காலத்தில் அறியும் அறிவு, சுட்டறிவு ஆகும். ஒவ்வொன்றாய்ப் படிப்படையாக அறிய வேண்டியுள்ளது. சுட்டறிவுக்கு வளர்ச்சியுண்டு. உயிர்களின் அறி, சுட்டறிவு வளர்ச்சியுண்டு. உயிர்களின் அறி, சுட்டறிவு ஆகவுள்ளமை நோக்கற்பாலது, சுட்டறிவே சிற்றறிவுமாகும்.
- சிவபெருமானது அறிவு, ஓர் எல்லைக்குட்படாமல் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் அறிந்து நிற்பதான வியாபக அறிவு - பேரறிவு ஆகும்.
- பேரறிவு என்றும் ஒரே தன்மையது.

4. **அளவிலா ஆற்றல் உடையனாதல்:**

- இதனை "முடிவில் ஆற்றல்", "அளவில் ஆற்றல்", "வரம்பில் ஆற்றல;" என்பர். வடமொழியில், "அநந்த சக்தி" எனப்படும்.
- "எல்லாம் வல்லதன்மை" -பேராற்றல்
- ஆற்றல் - வல்லமை - சக்தி, (சக்தி பின்னமிலாதவன்)
- இறைவனுடைய சக்தியே மிகப் பெரிய சக்தி. அதற்கு ஈடு இணையாக வேறு எந்தச் சக்தியும் இல்லை.
- பதியினுடைய பேரறிவு ஆனது, எந்தச் செயலையும், எந்தக் காலத்திலும், எந்தத்தடையுமின்றி ஆற்றவல்ல பேராற்றல் ஆக நிற்கும்.

5. **வரம்பிலா இன்பம் உடையவன் ஆதல்.**

- ஒருவரின் இன்பம், அவரின் அறிவிற்கும் ஆற்றலுக்கும் அமையவே விளங்கும்.
- இறைவன் பேரறிவும் பேராற்றலும் கொண்டவன். அதனால் பேரின்பமும் உடையன்.
- "வரம்பில் இன்பம்", "எல்லையற்ற இன்பம்", பேரின்பம்.
- அதனால், எக்காலத்தும் துன்பமே இல்லாதவன் இறைவன்.
- "குறைவிலா நிறைவே", "கோதிலா அமுதே" "ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே" என்கிறார் மாணிக்கவாசகர்
- இறைவனுக்கு எவ்வித குறையும் இல்லை. அவன் நிறைவானவன். - வேண்டுதல், வேண்டாமை இலாதவன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. **பேரருள் உடையனாதல்:**

- இறைவன் பேரறிவுடையவன். அறிவின் இயல்பு பிறர் துன்பங்கண்ட இரங்குதல், துன்பத்தைத் துடைக்க வேண்டும் என்று உந்துதல்.
- "அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதபின் நோய் தன் நோய்போல் போற்றாக்கடை" திருக்குறள்.
- பேரறிவுடைய இறைவன், பேரரள் உடையவனாகவும் விளங்குதல் இயல்பு. கருணமூர்த்தி. உயிர்கள் அனைத்திலும் கொண்ட அளப்பருங்கருயினாலே, அவற்றின் ஈடேற்றம் பொருட்டு, ஐந்தொழில்களையும் இறைவன் செய்கின்றான். அவை அருட் செயல்களே.
- தலைவன் கருணையுடையனாக இருத்தல் தலை சிறந்த தலைமைத்துவப் பண்பு. கருணையுள்ளவனே உண்மைத் தொண்டனுமாவான். (ஆலகால விடத்தைத் தான் ஏற்றுக்கொண்டு, தேவர்களுக்கு அமுதம் வழங்கிய தலைவன், சிவபெருமான்)

7. **இயல்பாகவே பாசங்களின் நீங்குதல் ஆதல்:**

- 'சத்து' என்பதற்கு 'உள்ளது' என்று பொருள் கொள்வர். எல்லாப்பொருள்களும் உள்ளனவே தான். எனினும், சைவசித்தாந்தம், "சத்தாவது, என்றும் யாதொருமாற்றமும் இன்றி உள்ளது" எனப் பொருள் கொள்ளும்.
- மாற்றம் பிற ஏதுக்களால் நிகழ்த்தப்படுகிறது. மாற்றமின்மை பிற பொருளின் வயமாகாமையை உணர்த்தி நிற்கிறது. இறைவனின் தன்வயமுடைமை
  இங்கு புலனாகின்றது. தான்பிற பொருள்களால் ஆட்சி செய்யப்படாத தன்மை, அதேவேளை தான் பிற பொருள்களை ஆட்சிப்படுத்தித், தன்விருப்பப்படில் பிறபொருள்களைச் செயற்படுத்தும் தன்மை ஆகிய இரண்டும், பதிபாசத்துள் அகப்படாமல் இருந்தலை உணர்த்தி நிற்கின்றன.
- இயல்பாகவே பாசத்துள் அகப்பட்டு நிற்கின்ற உயிர்களின் இயல்பினின்றும் வேறுபடுகின்ற பதியின் சிறப்பியல்பு நோக்கற்பாலது.
- பதி மட்டுமே சத்துப்பொருள். சத்து அசத்தைச் சாராது. பாசம் அசத்துப்பொருள். அதாவது, உள்பொருள் ஆக இருப்பினும், மாற்றங்களுக்கு, உள்ளாகின்றது.
- பதி இயல்பாகவே பாசங்களிளின்றும் நீங்குதல் பெற்றுள்ளனமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. தூய உடம்பினானதல்:

- பாசங்கள் அழுக்குடையன. அவற்றுடன் உறவோ தொடர்போ இல்லாத பதி என்றும் தூண்மையானதே.
- உயிர்கள், பாசத்தைச் சார்ந்து நிற்றலால், அசுத்தமடைகின்றன, அசத்தாகவும் உள்ளன. பதிக்கும் பசுவுக்கும் இடையேயுள்ள வேறுபாட்டையும் இது காட்டுகின்றது.
- "தூய உடம்பினனாதல்" இறைவனுக்கு மட்டுமே உரிய சிறப்புக்குணம் 'உடம்பு' என்பது சொரூப நிலையில் "தன்மை' என்றும் தடத்தநிலையில் 'திருமேனி' என்றும் பொருள்படும்.

தன்வயத்தனாதல், தூய உடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல்,பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை - எட்டுக் குணங்களும் இவ் ஒழுங்கு முறையில் கூறப்படுகின்றன.

தடத்தநிலையில் ஐந்தொழில்களை நிகழ்த்தும் சிவன், எண் குணங்களையுடையவர் எனச் சைவசித்தாந்தம் கூறும். பரமபதியாகிய சிவபெருமானுக்குச் சொரூப நிலை, தடத்தநிலை என இருநிலைகள் உள்ளன. குணங்குறிகள், நமரூபங்கள் உடன் பலபந்தம் அற்று உணர்வுமாயமாய் நிற்கும் நிலை,சொரூபநிலை. இந்நிலையில் சக்தி சிவத்துடன் ஒடுங்கியிருக்கும். இதனை நிர்க்குணநிலை என்றும் கூறுவர்.

அருவம், அருவுருவம், உருவம், என்னும் மூவகைத் திருமேனிகளைத் தாங்கி, குணங்குறி நாமங்களுடன், சிவன். உயிர்கள் மீது கொண்ட கருணையினால், அவ்வுயிர்கள் தம்மை அறிந்து, கண்டு, கருதி வாழ்த்தி, வணங்கி, வழிபட்டு, மலங்களினின்றும் விடுபட்டுத், தம்மை அடைந்து வீடுபேறு பெற்றுப் பேரானந்தப் பெருவாழ்வினை எய்தும் பொருட்டு உயிர்களுக்கு அருள் செய்யும் நிலை தடத்தநிலையாகும். இதனைச் சகுணநிலை எனவும் கூறுவர்.

- இறைவன் உயிர்களை இயக்குகிறான். இயக்கும் பொருள் இயக்கப்படும் பொருளுக்கு வேறாய் நிற்றல் இயல்பு. அந்த வகையில் இறைவன் உயிரிலிருந்து வேறாய் உள்ளான்.
- இறைவன் உயிருடன் ஒன்றாயும் நிற்கிறான். உயிருக்குத் தானாக உணர்தல் (அறிதல்), இச்சித்தல் (விரும்புதல்), தொழில்படல் என்பன இயலாத காரியம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிருடன் இறைவன் ஒன்றாய் நிற்பதானாலேயே, உயிருக்கு இவை இயலக்கூடியதாயுள்ளன.

- இறைவன் உயிருக்கு வேறாய் நின்று. அதற்குத் தேவையான தனு, கரண, புவன, போகங்களைப் மாயையிலிருந்து படைத்துக் கொடுக்கிறான். ஆயினும் உயிர், கன்மபலனுக்கேற்ப இன்ப துன்பங்களை அனுபவிக்கச் செய்தற் பொருட்டு உயிரோடு இறைவன் உடனாய் நிற்கின்றான்.

இவ்வாறு இறைவன் உயிரோடு எந்நிலையில் நிற்பினும் அதனுடன் ஒட்டாமலும் எதுவித மாற்றமும் அடையாமலும் நிற்கும் தன்மை இறைவனின் தனிச்சிறப்பாகும். அதனால் இறைவன், பதி (தலைவன், முழுமுதற்கடவுள்) எனப்படுகிறான்.

- ♦ பதி, பசுவுடனும் பாசத்துடனும் உள்ள தொடர்பு எத்தகையது?
  - பதி உயிர்களோடும், மாயையோடும் கொண்டுள்ள தொடர்பு, அத்தவிதத் தொடர்பு என்று சைவசித்தாந்தம் கூறும்.
  - "கலப்பினால் ஒன்றாயும், பொருள் தன்மையால் வேறாயும், உயிர்க்குயிராம் தன்மையால் உடனாயும் இறைவன் இருப்பான்."

- ♦ **சிவமும் சக்தியும்:**
  - பதி என்னும் பொருள் ஒன்று தான் ஆயினும் சிவம், சத்தி என இரு தன்மைப்பட்டுள்ளது. எவ்வாறெனின் சூரியனும் கதிரும் போன்று. சூரியனும் கதிரும் இருவேறு பொருள்கள் அல்ல. சிவமும் சக்தியும் இருவேறு பொருள்கள் அல்ல. சிவன் தனது சக்தி வழியாக எங்கும் வியாபித்து எண்ணிறந்த செயல்களைச் செய்கிறது.
  - சூரியக் கதிர்கள் அல்லது நெருப்பின் ஆற்றல், பார்க்கும்போது ஒன்றாயிருப்பினும், அவற்றின் செயல்கள் பலவாக உள்ளன.- வெப்பம், வெளிச்சம், பதனிடல், பக்குவப்படுத்தல், ஆக்கல் அழித்தல்- இறைவனின் சத்தியும் ஒன்றேயாயினும், அது செய்யுந் தொழில்கள் பற்றிப் பலவாகச் சொல்லப்படும்.
  - 'மறைத்தற் சத்தி' - திரோதான சத்தி
    'அருட்சத்தி' - திருவருட்சத்தி
  - திரோதான சக்தி உயிர்களின் பெத்த நிலையில் உடன் நின்று உதவும். திருவருட்சக்தி அவற்றின் முத்திநிநிலையில் அவ்வாறு உடன் நின்று உதவுகிறது.
  - உயிர்களைப் பதியுடன் சேர்த்து வைப்பது திருவருட்சத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- **சற்காரியவாதம்:**
  - இது சைவசித்தாந்தக் கோட்பாட்டின் உயிர்நிலையாகும். நாம் காணும் உலகத்திற்கு - காரியத்திற்கு - காரணம் உண்டு என்பதும், காரண காரியங்களாய் வருபவை உள்பொருள்கள் என்பதால் அவை அழிந்து, இலதாக, அற்றுப் போக மாட்டா என்பதும் சற்காரிய வாதக் கொள்கையிலிருந்து பெறப்படும்.

    "உள்ளது இல்லாதகாது, இல்லது உள்ளதாகாது, உள்ளத்திலிருந்தே உள்ளது தோற்றும். இல்லதிலிருந்து உள்ளது தோன்ற மாட்டாது" - சற்காரியவாதம் - பதி உண்டு- உள்பொருள் - என்பது தெளிவாகியுள்ளது.

- **பசு - (ஆன்மா, உயிர்)**
  - பதி ஒன்று, பசுக்கள் பலவாக உள்ளன. பதி போன்றே, பசுவும் உள்பொருள் ஆகும். இரண்டும் வேறு வேறான பொருள்கள், அநாதியானவை. இரண்டுமே உணர்வுப் பொருள்கள்.
  - பசு, அறிவித்தால் அறியும் தன்மையானதும், அறிவிக்காவிட்டால் அறியமாட்டாத தன்மையுடையதுமான பொருள் ஆகும்.
  - பசுக்கள் கடவுளால் படைக்கப்பட்டவையல்ல.
  - பசு அறிவித்தால் அறியும் தன்மையுடையதுமான பொருள் ஆகும்.
  - பசுக்கள் கடவுளால் படைக்கப்பட்டவையல்ல.
  - பசு அநாதி தொட்டு பாசத்தால் கட்டுண்டுள்ளது. அதனாலேயே,பசு என்ற பெயர் வந்தது.
  - பசு சிற்றறிவுப் பொருளாய், அறியாமையால் பற்றப்பட்டதாய் உள்ளது.
  - பசு ஒரு சமயத்தில் ஒரு பொருளையே சுட்டியறியும் தன்மையது.
  - பசு சிற்றறிவுடையதாதலின், தான் சார்கின்ற பொருளின் வண்ணமேயாதல் அதன் இயல்பாக உள்ளது. பசுவின் இயல்பு "சார்ந்ததன் வண்ணமாதல்". அது சதசத்து, சிதசித்து
  - பசுவுடன் ஆணவமலம், செம்பிற்களிம்பு போலக் கலந்திருக்கும் நிலை, கேவலநிலை எனப்படும். கேவல நிலையில் பசு ஒன்றையும் அறியமாட்டாது. சடம் ஆகக்கிடைக்கும்.
  - பதி, பசுவுக்கு உடம்பு மற்றும் கரணங்களைக் கொடுத்த பின்னரே, அவற்றின் உதவியால் அறிவைப் பெறுகினறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பசு அசத்தாகிய உலகினைச் சார்ந்து நிற்கும் போது அசத்தாகவும், சத்தாகிய சிவத்தைச் சாரும் போது சத்தாகியும் நிற்கும். ஆகையினால் பசு, சதசத்து எனப்படும்.
- உயிர் உடம்போடு இணைதல் பிறப்பு, உடம்பை விட்டு நீங்குதல் இறப்பு ஆகும்.
- மலத்தோடு சேர்ந்திருத்தல் வாழ்தல், மலநீக்கம் பெற்றுப் பதியைச் சார்தல் முத்தி அல்லது மோட்சம் ஆகும்.
- "நான் என்பது உயிர், உடம்பு அன்று, எனவே, "நான்" வேறு, உடம்பு வேறு உடம்பு மாயா காரியம். உயிர் அதன் வதிவிடமாகிய உடம்பு முழுவதிலும் வியாபித்திருக்கிறது. உயிரை இயக்குவது உயிர்க்குயிராக விளங்கும் பதி ஆகும்.
- "இந்தச் சரீரம் எமக்குக் கிடைத்தது, கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்"
- ஆணவப் பிணிப்பிலிருந்து விடுவித்து, உயிரைத் தன் பக்கஞ் சாரச் செய்து, முத்தியின்பம் அருளும் பொருட்டே இறைவன் உயிருக்கு உடம்பு முதலியவற்றைக் கொடுக்கிறான்.
- உயிர் ஆனது பசு ஞானம், பாச ஞானம் என்பவற்றைக் கொண்டு சிவத்தை அறியமாட்டாது. பதிஞானத்தினால் மாத்திரமே சிவத்தை அறிய முடியும்.
- உயிர் ஆனது பசு ஞானம், பாசஞானம் என்பவற்றைக் கொண்டு சிவத்தை அறியமாட்டாது. பதிஞானத்தினால் மாத்திரமே சிவத்தை அறிய முடியும்.

ஆன்மாக்கள் நித்தியமாய், வியாபகமாய், சேதனமாய், பாசத்தடையுடைய வைகளாய், சரீரந்தோறும் வெவ்வேறாய், வினைகளைச் செய்து வினைப்பயன்களை அனுபவிப்பவைகளாய், சிற்றறிவும், சிறு தொழிலும் உடையவைகளாய், தங்களுக்கு ஒரு தலைவனை உடையவர்களாய் இருக்கும். (நாவலர் பெருமான்)

- உயிர்கள் மூன்று வகையான உள்ளமைபற்றிச் சைவ சித்தாந்தம் கூறுகிறது. ஆன்ம வளர்ச்சியெ இவ்வாறு வகைப்படுதலுக்கான அடிப்படையாகும்.
  - விஞ்ஞானகலர் : ஆணவ மலம் மட்டும் உடையவர்
  - பிரளயாகலர் : ஆணவம், கன்மம், என்னும் இரு மலங்களை உடையவர்.
  - சகலர் : ஆணவம், கன்மம், மாயை, ஆகிய மும்மலத்தையுடையவர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உயிருக்குக் குறையை ஏற்படுத்துவது மலங்கள்.
- ஆன்மாவானது இறைவனின் திரோதானசத்தியால் பிறப்பு, இறப்புக்களில் உழன்று, இருவினையொப்பு, மலபரிபாகம் வந்த பின்னர், இறைவனது திருவருட் சக்தியால் ஞானம் பெற்றுச் சிவத்தோடு சார்ந்து நின்று பேரின்பத்தில் திளைக்கும்.
- இம்மை, மறுமை, மோட்சம் என உயிர்வாழ்வு மூன்று வகையாக உள்ளது.
- பிராணவாயுவால் உயிர்தல் தன்மையைப் பெறுவதால், "உயில்" வியாபாகமாக இருத்தலால், "ஆன்மா", (வியாபகமுடையது)
  மலங்களினால் கட்டுண்ட நிலையில் உள்ளமையால் பசு எனவும் பெயர்களைப்
  பெறுதல் குறிப்பிடத்தக்கது.
- உயிர் பிறப்புக்கு முன்பும் இருந்தது, இறப்புக்கும் பின்பும் உயிர் அழியாமல் இருக்கும் - அழியாத பொருள்.
- இறைவனின் திரோதான சக்தியினால் உயிர்கள் புரிந்த நல்வினை, தீவினைகளுக்கேற்ப உடம்புகளைப் பெறுகின்றன.
- உடம்புகளைப் பெற்று, அவற்றின் அடிப்படையில் உயர்திணை, அ∴றிணை என்னும் பாகுபாடுகளை உயிர்கள் பெறுகின்றன.
- அவ்வுடம்புகளைக் கொண்டு விளைவுகளுக்கேற்ப இன்பதுன்பங்களை நுகர்வதுடன், நல்விலை, (புண்ணியம்), தீவினை (பாவம்) களை மீண்டும் உயிர்கள் செய்கின்றன.
- இறத்தல், பிறத்தல்களுக்கு வினைகள் காரணம் ஆகின்றன.
- பொருந்தியிருந்த ஆணவமலம், பரிபாகம் அடைந்த போது, சத்திநிபாதம் பெற்று, ஞானத்தினால் ஆணவமலத்தின் வலிமையை ஆன்மா இழந்த நிலையில், இறைவன் திருவடியை அடையும்.
- உயிர்களுக்காகவே உலகம் முதலியன படைக்கப்படுகிறது. இறைவன் உலகத்தைச் சார்ந்து பயன் பெறுவதில்லை. அத்தகைய தேவையும் இல்லை. உலகம் அசத்து என்பதால், அதற்கு அறிவும் நுகர்ச்சியுமில்லை உயிர்கள் பயன்பெறும் பொருட்டு உலகம் படைக்கப்பாட்டது, என்னும் முடிவு செய்யப்பட்டதால், உயிர் உண்மையும் நிலைநாட்டப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாசம்:**

- பதி, பசு போன்று பாசமும் அநாதியானதும், நித்தியமானதுமான பொருள்.
- செம்பிற் களிம்பு போல ஆன்மாவை, அநாதி தொட்டுப் பற்றிக் கொண்டிருப்பது பாசம். அதனால் ஆன்மாவின் சிவசொரூபமாகுந்தன்மையை பாசம் மறைத்துக் கொண்டிருக்கிறது.
- பாசம் என்பதற்குக் 'கட்டுவது' என்று பொருள். பாசம் என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல் கயிறு.
- பாசம் ஆனது தளை எனவும் மலம் எனவும் குறிப்பிடப்படுகிறது. தளை = விலங்கு,; மலம் அழுக்கு.
- உயிர்கள் செயற்படவொட்டாது, பாசம் அவற்றைக் கட்டியும் தடுத்தும் வைத்திருக்கிறது.
- பாசம் மூன்று வகைப்படும், ஆவணம், கன்பம், மாயை, அவை மும்மலங்கள் என்றும் கூறப்படும்.
- இவை ஆன்மாவைச் சிவத்திடம் சேரவிடாது தம்மால் பிணைத்து வைத்துக் கொண்டிருக்கின்றன. அதனால் துன்பத்தில் ஆன்மா துவண்டு கொண்டிருக்கின்றது.
- ஆன்மாவின் பிறப்புக்குப் பாசங்கள் காரணம்.
- பாசக் கட்டியிலிருந்து உயிர்கள் விலகிக்கொள்ள, எமக்குத் தேவைப்படுவது, இறைவனின் திருவருள் ஆகும். இறைவனை மெய்யன்போடு வழிபடுதல், தொண்டுகள் புரிதல், எவ்வுயிர்க்கும் அன்பாயிருத்தல் என்பன திருவருளைப் பெறுவதற்கான வழிகள் ஆகும்.
- உள்ளத்தைத் தூய்மையாக வைத்திருத்தல் மூலம் நல்ல எண்ணங்கள் தோன்றுகின்றன. அவை உண்மை பேசுதலுக்கும், இன்சொல் பகர்வதற்கும் நற்செயல்கள் புரிவதற்கும் ஏதுவாகின்றன.
- நல்லாருடன் கூடிப்பழகி, நல்லுரை கேட்டு, நல்லொழுக்கம் பேணி, நற்காரியங்கள் புரிந்து, அன்பினை உபாசித்து, நீதி வழியில் வாழ்ந்து, பிறர் நலம்பேணி, மனித விழுமியங்களைக் கடைப்பிடித்து வாழ்வாங்கு வாழுதல், இறைவனின் திருவருளைப் பெறுவதற்கான சிறந்த வழியாகும்.

**ஆணவம்:**

- ஆணவம் என்னும் மலம் அநாதியிலிருந்தே உயிருடன் கூடியிருக்கிறது. உயிரைத் தன் வயப்படுத்தி அதனைக் கடவுளுடைய திருவருளை அறியவிடாது தடை செய்கிறது. உயிருக்கு அறியாமையைத் தருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஆன்மா இயல்பாகவே அறிவுப்பொருள். ஆணவத்தின் சேர்க்கையால் அறியாமையில் மூழ்கிக்கிடக்கிறது. ஆணவத்துக்கு இருள் மலம் என்ற பெயருண்டு. அறிவிற்குத் தடையாய் உள்ளது ஆணவம்.
- ஆணவம் மூலமலம் எனப்படுகின்றது. அதுவே முதல் தடையாதலால், அவ்வாறு கூறப்படுகிறது.
- ஆணவம் தனியே நின்றும் ஆன்மாவின் அறிவைத் தடுக்கும். ஏனைய கன்மம், மாயை ஆகிய மலங்களுடன் சேர்ந்து நின்றும் தடுக்கும்.
- பொருளையே முற்றிலாக அறியவிடாது மறைக்கும் நிலை -ஆணவம் தனியே நின்று தடுத்தல்.
- பொருளைத் தவறாகக் காட்டி, அதன் உண்மையான இயல்பைத் தவறாக உணரச் சேர்ந்து நின்று தடுத்தல்.
- அறியாமை, சரியாக உணராமை என்பனவே உயிர்களின் துன்பங்களுக்கெல்லாம் காரணம்.
- ஆன்மாவில் தீய எண்ணங்கள், கொடுமையான சிந்தனைகள் என்பவற்றைத் தோற்றுவித்தல்.

  'நான்' எனும் அகந்தையையும், 'எனது' எனும் மமதையையும் எழச் செய்தல், ஆணவத்தின் முனைப்பினால் ஏற்படுபவை.
- அந்தவகையில் மனிதருக்குச் செருக்கி, கர்வம்,சுயநலம், கோபம், ஆசை,மயக்கம், காமம், பகைமை போன்றவற்றை ஏற்படுத்தி மனிதத்தன்மைகளற்ற மனிதர்கள் ஆக்குவது ஆணவம்.
- ஆணவம், வினைகளைச் செய்யத் தூண்டுகிறது. வினைகளே பிறவிக்குக்காரணம். பிறவி துன்பத்திற்குக் காரணம்.
- ஆணவம் பிறவித்துன்பங்களை மறைத்து, அவற்றை இன்பமாகக் காட்டுகின்றது, கடவுளை வணங்கி முத்தியின்பத்தை அடையவிடாது, ஆன்மாவைத் தடுக்கிறது.
- ஒன்றை அணுவாக்குவது ஆணவம் - அணு என்பது மிக மிகச் சிறியபொருள். ஆன்மாவின் அறிவை அணுவாக்குகிறது, சிறுமைப்படுத்துகிறது.
- ஆணவம் இருளிலும் கொடியது. இருள், மற்றைய பொருள்களை மறைக்கும் அதேவேளை, தன்னை வெளிப்படுத்திக்காட்டும். ஆனால் ஆணவ இருள் தன்னையும் காட்டாது, பிறபொருள்களையும் மறைத்து நிற்கும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உயிரின் அறிவு, இச்சை, செயல் என்பவற்றை விளங்க விடாது ஆணவமே, இருள் போன்று, மறைக்கின்றது.
- செயல்கள் அறிவின் அடிப்படையில்,நோக்குடையதாக நிகழ்த்தப்படுகின்றன. ஆணவம் ஆன்மாவின் அறிவைத் தடுப்பதால் ,செயல்களும் அறியாமையால் உந்தப்படுகின்றன. எனவே, தீய செயல்களாகவே அமையும்.
- மனித விழுமியங்கள் புறக்கணிப்படுவதற்கு அறியாமை காரணம். அறியாமைக்கு ஆணவம் காரணம்.
- உயிருடன் ஆணவம் அநாதியிலிருந்தே, நெல்லுடன் சேர்ந்த உமி போலவும், செம்புடன் இணைந்த களிம்பு போலவும் சேர்ந்தே இருக்கிறது. இதன் காரணமாக, ஆணவம், சகசமலம் எனப்படுகிறது. (சகசம் இயற்கையானது)
- ஆணவம் உள்பொருள் - அழிவற்றது, அநாதியானது.
- ஆணவம் மறைப்பையே தன் குணமாகக் கொண்ட அசித்துப் பொருள்
- அசித்துப் பொருள், அசத்துப் பொருளும் கூட.
- ஆணவ முனைப்புடைய ஒருவர் தான் செய்கின்ற செயல்கள் தீயனவாக இருப்பினும், அவை தனக்கு நன்மை தருவனவாகவே எண்ணச்செய்வது ஆணவம்.
- ஆணவம் பொருள் என்ற வகையில் ஒன்றே. அது உயிருடன் செறிந்திருக்கிறது. உயிரின் மீட்சிக்காலம்வரை, அது உயிரோடு சேர்ந்திருக்கும்.
- நான் - அகப்பற்று' 'எனது'' புறப்பற்று
- ஆணவ மலத்தின் குணங்கள்
  1. கொண்டதுவிடாமை
  2. மோகம் மிகுதல்
  3. கோபம் அடைதல்
  4. அறியாமை விஞ்சுதல்
  5. கொலை முதலிய வன்செயல் நினைவு பெருகுதல்
  6. வருத்தமுறுதல், கவலைப்படுதல்
  7. 'யான்', 'எனது' என்னும் அகந்தை, மமதைகளின் எழுச்சி.
  8. மாற்சரியம் (பொறாமை)

**கன்மம்**

- கன்மம் மும்மலங்களுள் ஒன்றாகும். ஆன்மாவைப் பந்தித்து நிற்பது. அநாதியானது. உள்பொருளாகவும் உள்ளது..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கன்மம் குறித்து நிற்பது செயல் அல்லது வினை.
- வினை இரண்டு வகைப்படும் - நல்வினை, தீவினை
- வினைகள் பிறவிகள் தோறும் ஆன்மாக்களால் செய்யப்படுபவை. மனம், மொழி, மெய் (எண்ணம், பேச்சு, செயல்) என்பவற்றிற்குரியனவாய் வினைகள் விளங்குகின்றன.
- கன்மம் ஒரு பொருளைப் பற்றியே நிற்கும். கன்மம் பற்றி நிற்பது மாயையையே.
- ஒருவர் ஒரு செயலில் ஈடுபடுவதற்கு அவரின் விருப்பு வெறுப்புக்களை ஏற்படுத்துவது ஆணவ மலம் ஆகும். எனவே, உயிர்கள் கன்மம் செய்வதற்கு அடிப்படையாக ஆணவமலம் உள்ளது. மாயை ஆகிய உடல், காரணங்களைக் கருவியாகக் கொண்டே உயிர் கன்மத்தைச் செய்கிறது.
- கன்மமும் மாயையும் வித்தும் மரமும் போல, ஒன்று மற்றதன் காரியமாயும், காரணமாயும் தொடர்கின்றன.
- பிறப்புக்குக் காரணம் வினை - கன்மம்.
- கன்மம், மாயை ஆகிய இரண்டும், ஆணவமலத்தை வலி கெடச் செய்வதற்கும், நீக்கத்திற்கு உதவியாய் உள்ளன.
- உலக சிற்றின்பங்களைக் கெடுக்கும் செயல்கள் யாவும் தீவினைகளில் அடங்கும். தீவினைகள் தீங்குகளையும் துன்பங்களையும் விளைவிப்பன.
- ஆணவ முனைப்பினைத் தன்னாட்சியின் கீழ்க்கொண்டு வந்து, ஆன்ம ஈடேற்றம் நோக்கிய செயல்கள் நல்வினைகள்,கடவுள்,பக்தி, அன்பு, கருணை, கரிசனை, நீதி, உண்மை,பொறுமை, இரக்கம் முதலியவைகள் நல்வினைக் குணங்கள், நல்வினைகள் யாவும் புண்ணியச் செயல்கள் - உயிர்களுக்கு இன்பத்தை வழங்குவன.
- தீவினைக் குணங்கள்: அழுக்காறு, அவா, சினம், இன்னாச்சொல், செருக்கு, கர்வம், அநீதி, அதர்மம் முதலியன. உயிர்களுக்குத் துன்பங்களைக் கொடுப்பன - பாவச் செயல்கள்
- கடவுளுக்கும், சிவனடியார்களுக்கும் செய்யப்படும் தொண்டுகள், வழிபாடுகள், நற்கருமங்கள் என்பன சொல்லப்படும். உயிர்கள் யாவற்றிற்கும் ஆற்றப்படும் நற்செயல்கள், நற்பணிகள், சேவைகள் என்பன பசு நல்வினை அல்லது பசு புண்ணியம் எனப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முற்பிறவிகளிலே நல்வினைகளைச் செய்திருந்த ஒருவர், இப்பிறவியில் இன்பம், மகிழ்ச்சி, அமைதி என்பவற்றை அனுபவிக்கிறார். அதற்காக அவருக்குத் தேவையான பொருட்செல்வம், பதவி, செல்வாக்கு, அந்தஸ்து, நுகர்ச்சிப்பொருள்கள், யோகப்பொருள்கள் என்பனவாய்க்கப் பெறுகின்றன.இப்பிறயிவியல், கிடைத்த செல்வங்களையும் ஏனைய வசதி வாய்ப்புக்களையும், செல்வாக்கையும் பயன்படுத்தி அறப்பணிகள், நற்சேவைகள், திருத்தொண்டுகள், திருக்கோயில் திருப்பணிகள், ஏழைகள், ஊனமுற்றோர், ஆதரவற்றோர் ஆகியோருக்கு உணவு, உடை, இருப்பிடம் என்பவற்றை அளித்தல், ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல், கல்வி வழங்கலுக்கு உதவுதல் என்பவற்றில் ஈடுபடுகின்றார். அவை நூல்வினைகள். மற்றொரு பகுதி செல்வத்தைப் பயன்படுத்தி மது அருந்துதல் போதைப்பொருள் பாவனை, வன்முறைகள், விபச்சாரம், பிறருக்குத் தீங்குகள், கெடுதல் செய்தல், போன்றவற்றைச் செய்கிறார். அவை தீவினைகள்.
- பிராரப்தம், ஆகாமியம், சஞ்சிதம் என வினைகள் மூன்று வகைப்படும்.

**பிராரப்தம்**: இப்பிறவியில் அனுபவிக்கின்ற வினை. ஊழ்வினை என்றும் கூறுவர். இப்பிறவியிலேயே அனுபவித்து தீர்க்கப்பட வேண்டிய வினையுமாகும். இவ்வினை அனுபவித்து முடிக்கப்படும் வரை ஆன்மா உடலைக் கொண்டிருக்கும். (நுகர்வினை)

**ஆகாமியம்**: பிராரத்துவவினையை அனுபவிக்கும் போது, செய்யப்படும் புதுவினைக்கு ஆகாமியம் என்று பெயர். மேல்வினை என்றும் கூறப்படுகிறது.

**சஞ்சிதம்**: (பழவினை) - பழைய வினையிலே அனுபவிக்கப்படாமல் எஞ்சி நிற்கும் வினை சஞ்சிதம் எனப்படும். பழவினையாக இருந்து, இப்பிறப்பில் இன்பதுன்பங்களைத் தருவதற்குரிய பிராரத்துவ கன்மமாகவும் இது உள்ளது. புதிதாக இப்பிறப்பில் செய்யப்பட்ட புதுவினைகளின் பயன்கள் சில இப்பிறப்பிலேயே நுகர முடியாமல் எஞ்சி நிற்கும் வினைகளும் சஞ்சிதமாகத் திரளும்' (கிடைவினை)

- பசுவினை, சிவவினைகளைத் தவிரப் பற்றில்லாத வினை என்று வேறொருவகை உண்டு. எல்லாம் இறைவன் செயல்,என் செயல் என்று எதுவுமில்லை என்னும் பாங்கில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப்படுகின்ற வனை, பற்றில்லா வினை எனப்படும். 'நான் செய்தேன்' என்று உணராமல், திருவருள் செய்தது என்று உணரப்பெற்று, அச் செயலைக் கடவுளுக்கு அர்ப்பிதஞ்செய்த விட்டால், அந்நல்வினை, சிற்றின்பமாகிய பலனைத் தராமல், நிலையான பேரின்பத்தைத் தரும். இது சாதாரண நல்வினையிலும் சிறந்தது.

- வினைகள் ஆற்றும்போது, இறைவன் விசாரித்து, ஒப்புதல் பெற்று, திருவருள் துணையுடன் ஆற்றுவது சிறந்த முறையாகும்.
- வினைகள் ஆணவமுனைப்புடனன்றி, அருள் உணர்வுடன் ஆற்றப்பெற்றால், நல்வினையாகவும், பற்றில்லா வினையாகவும், இருவினையொப்பு, மலபரிபாகம், சத்திநிபாதம் ஏற்படும் வகையிலும:, சிவத்துடன் சார்வதற்கு ஆன்மாவுக்கு அனுசரணையாகவும் அமையும். அவை மனித விழுமியங்கள் ஆகவும் விளங்கும்.
- கன்மம், ஒழுக்கவிழுமியங்கள் சார்ந்த எண்ணக் கருத்தாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.
  - "முற்பகல் செய்யில் பிற்பகல் விளையும்"
  - "தீதும் நன்றும் பிறர்தார வாரா"
  - "தினை விதைத்தவன் தினை அறுப்பான்"
  - வினை விதைத்தவன் வினை அறுப்பான்
  - (அஞ்சவேண்டியவற்றிற்கு அஞ்சுதல் அறிவுடைமை)
- சற்காரியவாதம் கன்மக் கோட்பாட்டிற்கு வழிவகுத்துள்ளது. காரணம் இல்லாமல் காரியமில்லை. காரண காரியத் தொடர்பிருத்தல் இயல்பானதே. இன்பு துன்பங்களுக்குக் காரணம் உண்டு.
- சஞ்சிதம், ஆகாமியம் என்பன சிவனை அண்மித்துப் பக்குவ நிலையை அடைந்த ஆன்மாக்களுக்கு, நீக்கம் பெற முடியும். எனினும் பிராரத்துவ வினை முழுமையாக அனுபவிக்கப்பட்டே தீர்க்கப்படவேண்டும்.
- புதிதாகச் செய்யப்படுகின்ற ஆகாமியம் சஞ்சிதமாகிப் பின் பிராரப்த வினையாக அனுபவிப்பதற்கு வரும்.
- நல்வினையும் தீவினையும் சமமாகக் கொள்ளப்படும் நிலை இருவினையொப்பு எனப்படுகிறது. - சமநோக்கு அடுத்து மலபரிபாகம் நடைபெறுகிறது. ஆணவனம் வலி கெடுகிறது. சத்திநிபாதம் நிகழ்கிறது.
- இறைவனால் விதிக்கப்பட்டவற்றைச் செய்தல் நல்வினை. விலக்கப்பட்டவற்றைச் செய்தல் தீவினை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- "வினையால் பிறப்பு. பிறப்பால் வினை" - வாய்ப்பாடு.
- வினைகள் அறிந்தும், அறியாமலும் செய்யப்படுகின்றன. அறிந்து செய்யும் வினை, 'புத்தி பூர்வம்', அறியாது செய்யும் வினை. 'அபுத்தி பூர்வம்', எனப்படும்.
- வினைகள் (கன்மம்) சடப்பொருள் - அறிவற்ற பொருள், எனவே. அவை தாமே வினைகள் செய்தவரை அறிந்து சென்று. உரிய பயன்களை நல்கி மாட்டா.
- பேரறிவுடைய இறைவனே உரிய உயிர்களிடம் அவற்றைக் கூட்டுவிக்கிறான். இக் கைங்கரியத்தை உயிர்களின் உய்விற்காகச் செய்கின்றான்.
- தீவினையாளருக்குக் கடவுள் துன்பத்தைக் கொடுத்து. மறக்கருணை செய்கின்றார். அதனால் அவர்களுக்குத் தீவினையில் வெறுப்பையும், நல்வினையில் விருப்பையும் ஏற்படச் செய்கின்றார். அதனால் அவர்களுக்குத் தீவினையில் வெறுப்பையும், நல்வினையில் விருப்பையும் ஏற்படச் செய்கின்றார். ஆவண முனைப்பு,மறைப்பு என்பன குறைவடைகின்றன. அருள் உணர்வு, மெய்யறிவு வளர்கின்றன.
- ஆசை எல்லையைக் கடந்து செல்லும்போது எமது செயல்கள் தீவினையாகும்.
- **தீவினைப்பயன்**: துன்பவாழ்க்கை - அங்கவீனர்களாக பிறத்தல், ஊனமுற்றவர்களாதல், வறுமையில் வாடுதல், நோய் பிணிகளால் பீடித்தல், அறிவின்மை, சித்தசுவாதீனம், மந்த புத்தி, கல்விகற்க முடியாமை I.Q விவேக ஈவு குறைவு, விசேட தேவைகள் உடையோராய்ப் பிறத்தல், உழைப்பிணி, இவர்கள் வருந்தும் போது, பார்ப்பவர்கள் தீவினை செய்யப்பயப்படுகின்றனர்.
- ஆசைகள் எல்லையைக் கடக்க விடாதவிதத்தில் நம்மைப் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். இளம்பராயத்திலிருந்தே, சத்தியம், நேர்மை, மன அடக்கம், மன உறுதி, மனத்திருப்தி என்பவற்றை பழகிக் கொள்ள வேண்டும்.

  அறத்தில் பற்றுவைத்தல், பிற உயிர்களில் இரக்கம் கொள்ளுதல், யாவரும் கடவுளின் குழந்தைகள் என்னும் நிலைப்பாட்டில் உறுதியாயிருத்தல்.
  - ஆசைகள் தாமாகவே அடங்க வழி பிறக்கும்.
  - ஆசைகள் அடங்கி நின்றால், தீவினைகள் செய்யப்படமாட்டா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தீவினை. செய்யாது விடுதலுக்குத் துணை நிற்பவை
  - நல்லவர்களின் சரித்திரங்களைப் படித்தல், கேட்டல் நயத்தல்.
  - தாய், தந்தை, ஆசிரியர், பெரியோர்களை மதித்தல், சொற்கேட்டு நடத்தல், அவர்களுக்குப் பணிதல், அவர்களுக்கு அன்பு செய்தல்.
  - இறைபக்தி, கடவுள் வழிபாடு, தொண்டு செய்தல் கடவுள் விதித்தவற்றைச் செய்தல். விலக்கியவற்றைச் செய்வதைத் தவிர்த்தல்.
  - எக்காரியத்தையும் இறைவனை விசாரித்து, ஒப்புதல் பெற்று ஆற்றுதல்.

**நல்வினைகள்** - நாம் கடவுளின் மேல் உள்ள அன்பினாலும், பக்தியினாலும், தீவினையின் மீதுள்ள அச்சத்தினாலும், பிற உயிர்களிடத்துக் கொண்டுள்ள அன்பு, இரக்கம், கருணை பரிவு என்பவற்றிலும் உத்தப்பட்டுச் செய்யப்படும் நற்செயல்கள், நற்காரியங்கள், நற்கருமங்கள்

நல்வினைப்பயன்: சுகமாக வாழ்தல், இன்பம் துய்த்தல், அதனால் நல்வினையின் மேலுள்ள பற்று அதிகரிக்க, ஆணவமறைப்புக்குறையும், மெய்யறிவு ஏறிவரும்.

- அறக்கருணை:

தீவினை செய்வோருக்குக் கடவுள் துன்பத்தைத் தருவார். அதனால் தீவினையில் வெறுப்பும் நல்வினையில் விருப்பும் உண்டாகும். ஆணவ மறைப்பு குறையும், மெய்யறிவு வளரும்

- மறக்கருணை

- **மாயை:**

  "மாயையே உடலுமாகும் மாயையே கரணமாகும்
  மாயையே புவனமாகும் மாயையே போகமாகும்
  மாயையே பொறிகளாகும் மாயையே புலன்களாகும்
  மாயையே யண்டபிண்டம் யாவையும் மாயையாமே"

  - அருணந்தி சிவாச்சாரியார்

- தனு, கரண, புவன, போகங்கள் தோன்றுவதற்கு முதற்காரணம் மாயை. மாயையும் உள்பொருளேயாகும். 'மாயா' - மா = ஒடுங்குதல், யா - வருதல், உலகம் தோன்றுவதற்கும், பின் ஒடுங்குவதற்கும் இடமாயுள்ளதே மாயை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தநு - உடம்பு, கரணம் - மனம் முதலிய உட்கருவிகள்,
புவனம் - உலகம் (இடம்)
போகம் - அனுபவிக்கப்படும் பொருட்கள்

- மாயை இருவகைப்படும். அவையாவன, சுத்தமாயை, அசுத்தமாயை.
- மலகன்மங்களோடு கலப்புறாது சுத்தமாயிருத்தலின் சுத்தமாயை, மலகன்மங்களோடு கலந்து அசுத்தப்படுவதால் அசுத்தமாயை. அசுத்தமாயிலிருந்து பிரகிருதி மாயை தோன்றுகின்றது. மாயையானது ஆன்மா இறைவனை உணர்ந்து அவனை அடைவதற்கு உதவியாகின்றது. உடம்பு, உலகம் முதலியன பிரகிருதி மாயையிலிருந்து உருவாக்கப்பட்டவை.

முதற்காரணம் - மாயை
நிமித்த கரணம் - இறைவன்
துணைக்காரணம் - சதி

- "இந்தச் சரீரம் நமக்குக் கிடைத்தது. கடவுளை வணங்கி முத்தியின்பம் பெறும் பொருட்டேயாம்" (நாவலர் பெருமான்) இந்தச் சரீரம், ஆன்மா ஆணவத்தோடு சேர்ந்து பொல்லாங்கு செய்வதற்கு இறைவனால் எமக்குத் தரப்பட்டதல்ல. கடவுளை வணங்கி, திருவருளின் முயற்சியால் நல்லறிவு பெற்று, நற்கருமங்கள் செய்யவும் இருவினையொப்பு, மலபரிபாகம் ஏற்படுவதற்கு இடமாய் விளங்கவும், கடவுளை அடைந்து முத்தியின்பம் பெறவும் கருவியாகப் பயன்படுத்தவே இந்தச் சரீரம் எமக்குத் தரப்பட்டது.
- பிரபஞ்சத்தின் முதற்காரணாமகிய மாயை, வெளிப்படாத வடிவத்தில், மனம் மற்றும் புலன் பொறிகளுக்கு எட்டாதது, என்றுமுள்ள நித்தியப் பொருள்.
- சுத்தமாயை, மாயையின் முதனிலை - அதினின்று சிவத்துவம், சத்தித்துவம், சதாசிவத்துவம், ஈஸ்வரதத்துவங்கள் உதிக்கின்றன. இத்தூய தத்துவங்களைக் கொண்டே சிவன் தொழில் புரிகின்றான்.
- சுத்த மாயையினின்றும் வேறுபட்டது அசுத்தமாயை. பிரகிருதி மாயை அசுத்தமாயையின்றும் தோன்றுகின்றது. பிரகிருதிமாயையின்று உடல்கள், உறுப்புக்கள், உலகங்கள், நுகர்ச்சிப் பொருள்கள் என்பன தோன்றுகின்றன. இவையனைத்தையும் நிமித்த காரணமாக நின்று சிவனே படைக்கின்றான. படைத்தல் தொழிலின் நோக்கம் ஆன்மாக்களின் விடுதலையேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ மாயையின் இயல்பு:

1. ஒருவருக்கும் தோன்றாதது.
2. அழியாதது
3. உடல், உலகம், நுகர்ச்சிப் பொருள்களின் மூலம் - முதற்காரணம்
4. சடப்பொருள் - அறிவற்ற பொருள்
5. எங்கும் வியாபகமானது.
6. மாயை உலகினைப் படைப்பதில்லை. இறைவனின் கட்டளைப்படியே செயலாற்றுகின்றது. அந்த வகையில் மாயை இறைவனின் சக்தியாகின்றது.
7. ஆன்மாக்களுக்கு மயக்கத்தினைத் தருவது.
8. ஏகப்பொருள்
9. உயிர்களுக்கு அறிவை மறைப்பது ஆணவமே. மாயை அன்று. ஆணவம் இருளை ஏற்படுத்த மாயை ஓரளவிற்கேனும் அறிவைத் தரவல்ல விளக்காக விளங்கும்."விடிவா மளவும் விளக்கனைய மாயை வடிவாதி கன்மத்து வந்து." - திருவருட்பயன்
10. ஆணவமலம் ஆன்மாவின் அறிவை மறைத்து நிற்க,இடையில் வந்து பொருந்தும் மாயை ஆணவ மறைப்பை ஓரளவிற்கேனும் நீக்குவதற்கு ஆன்மாவுக்கு உதவுகின்றது. 'கன்மத்து வந்து" என்றதனால் கன்மமும் மாயையோடு சேர்ந்து ஆன்மாவின் அறிவு விளக்கம் பெற உதவுகின்றது.

உயிர்களின் கன்மவினைகளுக்கேற்ப மாயா காரணங்களான தனு, கரண, புவன, போகங்கள் தோன்றி, விடியும் வரை ஓரளவிற்கேனும் இருளை நீக்க ஒளியைத்தரும் விளக்குப்போல, உயிர்கள் சிவஞானமாகிய பேரொளியைப் பெறும்வரை, ஆணவ இருளை ஓரளவிற்கேனும் நீக்குவதற்கு உதவுகின்றன.

(மாயை வடிவாதி - மாயாகாரியங்களான உடம்பு முதலியன) ஆணவத்திலும் மாயை சிறந்தது. ஆணவம் தன்னையும் மறைத்து தன்னுள் அடங்கும். பொருளையும் மறைந்து நிற்க, மாயாகாரியமான உடல் முதலியன விளக்கொளிபோல நின்று ஆன்மா சுய உணர்வை ஓரளவு உணர வழிவகுக்கின்றது.

11. அசுத்தமாயை ஆணவ, கன்ம மலங்களுடன் கலந்து, காரியப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாய அமைகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. மாயாகாரியங்களால் - தநு, கரணம், புவனம், போகம் விளங்குகின்றது.

13. மாயை அழியாததால், உருவமற்றதாய், அசித்தாய், சடமாய் (அசத்து), சர்வவியாபகமாய் விளங்குகிறது.

"நித்தமாய் அருவமாய் ஏக நிலையதாய் - உலகத்திற்கோர்
வித்துமாய் அரிதாய் எங்கும் வியாபியாம் - விமலனுக்கோர்
சத்தியாய் புவன போக தனு கரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமுஞ் - செய்தமன்றே."
- சிவஞானசித்தியார்.

14. அழுக்கை அழுக்கு நீக்குவது போல (சாணம், உவர்மண்) மாயை வழி மூலம் சிவன் ஆணவமல அழுக்கை நீக்குபவன்

15. உலகம் மாயையில் ஒடுங்கியிருந்து பின் விரிந்து தோன்றுகின்றது. காரியம் காரணத்திலிருந்தே தோன்றியது. பின் உலகு மாயையில் ஒடுங்கும். எனவே, மாயையே உலகின் தோற்ற ஒடுக்கத்திற்கு முதற்காரணம் ஆகின்றது.

16. மாயை வழிய பெறப்பட்ட உடல் மற்றும் கரணங்கள், உயிரின் அறியாமையைச் சிறிது நீக்கி, நல்லது எது கெட்டது எது என்பதைப் பிரித்துணர்வதற்கு அதற்குக் கருவியாய் அமைவது குறிப்பிடத்தக்கது.

17. மாயையின் காரியப் பொருள்களான தநு, கரணம், புவனம், போகங்கள் என்பன ஓரளவு அறியாமை இருளை அகற்றி அறிவொளியைப் பாய்ச்சும் விளக்குப் போல விளங்குகின்றது.

18. ஓரளவேனும் தன்னை உணரச் செய்யும் பான்மையினை, மாயை உயிருக்கு அளிக்கின்றது. அதனால், மாயை ஆன்மாக்களுக்கு முழுமையாக மயக்கத்தை அளிக்கின்றதோ என்றோ, ஆன்மாக்களை அறியாமை வசப்படுத்துகிறதோ என்று சொல்வதற்கில்லை.

19. அந்த வகையில் மாயை 'அருட்சக்தி' யாகவும் உள்ளது.

20. ஆன்மாக்கள் மாயா காரயங்களான உடல், உறுப்புக்கள், உலகு, உலகத்திலுள்ள நுகர்ச்சிப் பொருட்கள் ஆகியவற்றில் கொண்டுள்ள அளவற்ற ஆசையே, மயக்கத்திற்குக் காரணம். இந்த ஆசையை விட்டு நீங்கி, இறைவன் மீது ஆன்மாக்கள் வைக்கும் அன்பே, முத்தியைத் தரும் - விடுதலையை அளிக்கும். எனவேதான், ஆன்மாக்கள் முத்தியடைவதற்கு ஆசையே தடையாயுள்ளது என்பர். இந்த ஆசை மாயாகாரியங்களிற் கொள்ளப்படுவதால், மாயையே மயக்கத்தை உண்டு பண்ணுகிறது என்று கூறுவர்.

21. சங்கார காலத்தில், மாயா காரியங்கள் (தனுகரணபுவன போகங்கள்) அருவமாய் மாயையில் ஒடுங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. மாயை தானாகத் தொழிற்படமாட்டாது. முதல்வனது அருளாகிய திரோதான சக்தியின் மூலமே தொழிற்படும்.

23. உயிரைச் சார்ந்த மும்மலங்கள் ஆணவம், கன்மம், மாயை என்பன. கன்மத்திற்கேற்பவே உடல் தரப்படும்.
அந்த உடலுக்கு முதற்காரணம் எது என்னும் விசாரணை எழுகிறது. மாயையே என்று அறிந்ததும் மாயையின் இலக்கணத்தை அறிந்து கொள்ளும் நிலை ஏற்படலாயிற்று.

24. மாயை எனும் காரணத்திலிருந்து, உலகமாகிய காரியத்தை, கர்த்தாவாகிய கடவுள் தோற்றுவிக்கிறார்.

25. காரணம் ஆனது முதற்காரணம், துணைக்காரணம், நிமித்த காரணம் என மூவகையாகும்.

| | | |
|---|---|---|
| குடம் | : | காரியம் |
| மண் | : | முதற்காரணம் |
| திரிகை | : | துணைக்காரணம் |
| வனைபவன் (குயவன்) | : | நிமித்த காரணம் |

அவ்வாறே,

| | | |
|---|---|---|
| உலகம் | : | காரியம் |
| மாயை | : | முதற்காரணம் |
| சிவசக்தி | : | துணைக்காரணம் |
| இறைவன் | : | நிமித்தகாரணம் |

**முதற்காரணம்:** காரியத்தோடு ஒற்றுமையுடையது.
- உலகம் உள்ளவரை மாயை அதனோடு சம்பந்தப்பட்டிருக்கும்

**துணைக்காரணம்:-** காரியம் உருவாகும் வரை அதனோடு உடன் நிற்பது. (கருவி)

**நிமித்த காரணம-** முதற்காரணம், துணைக்காரணங்களைக் கூட்டி, பொருளை உருவாக்கும் அறிவு, திறன், வகையறிந்து உகந்த முறையில் முகாமை செய்து, தொழிற்படுத்தி, பொருளை உருவாக்கி முடிக்கும் அறிவுடையோன்.

26. மாயை அருவமும் அவிகாரியும் ஆகும். அத்தகைய மாயையில் சக்திரூபமாய் வெளிப்படுகிறது என்பது சைவசித்தாந்தக்கொள்கை. உள்ளதாகிய காரணத்திலிருந்து உள்ளதாகிய காரியம் தோன்றும் என்பது சற்காரியவாதக் கொள்கை.

27. ஒரே மாயையின் பகுதிகள் சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதி மாயை என்பன.

28. "அசுத்தமாயையானது நித்தமாய், அருவாய், ஏகநிலையுள்ளதாய், அகிலத்துக்கும் வித்தாய், சடமாய்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனுக்கு ஒரு வைப்புச் சக்தி எனும் படியாய் உயிர்களுக்கு வேண்டுந் தனு கரணம் புவனம் போகம் என்பவற்றை விழிக்குஞ் சாதனமாய் இருப்பதாகும்.''

29. இம்மாயையின் நோக்கம் உயிர்களில் இயல்பாயுள்ள மலமறைப்பைச் சற்றே விலக்கி விளக்கங்கொடுப்பதாகும். எனினும் தன் படைப்புக்களின் கவர்ச்சித் தோற்றங்களால் மயக்கத்தையும் விறைவிக்கிறது.

மாயை காரண நிலையில் விளக்கமும் காரிய நிலையில் மயக்கமும் தரும் என்பது குறிப்பிடத்தக்கது.

30. மாயையும் மலம் தானே. எனவே. மாயை எம்மால் விலக்கப்பட வேண்டிய பொருளும் ஆகும். மலநீக்கம் பெறுதல் என்பது மாயையிலிருந்தும் நீக்கம் பெறுதல் ஆகும். உடம்பும் மற்றைய நுகர்ச்சிப் பொருள்களும் இந்த உலகமும் மாயையால் ஆக்கப்பட்டவை. மாயையையும் கைவிட்டாலொழிய, உயிர்கள் கடவுளை அடைய முடியும். நாம் ஆசைப்படும் பொருள்கள் அனைத்தும் மாயையிலிருந்து தோன்றியவை. ஆதலால்மாயை நம்மால் விலக்கப்படவேண்டிய பொருள் - மாயாப் பொருட்களில் ஆசைகொள்ளுதல் தவறு. எனவே, மாயைப் பொருள்களுக்கும், பண்டத்திற்கும், பேருக்கும் புகழுக்கும், பொருமைக்கும் கௌரவத்திற்கும், பூணுக்கும் புலாலுக்கும் ஆசைப்பட்டு அடிமையாதல் தகாது. "அறுமின் அறுமின் ஆசை அறுமின்" - திருமூலர்.

31. நல்வினை, தீவினை, செய்தற்குக் கருவியாக உள்ளவை உடலும் உலகும்.

**மலபரிபாகம்**

மலம் - முக்கியமாக ஆணவம் முதிர்ந்து. அதன் முனைப்பு, சத்தி, வலு என்பன நலிந்து குன்றில் போதல் என்பதையே மலபரிபாகம் குறிக்கின்றது.

பரிபாகம் - முதிர்ச்சி

ஆணவமே ஆன்மாவின் அறிவை மறைத்து அறியாமையையை வளர்த்து, இறைவனுடன் இணைந்து நிற்க வேண்டிய ஆன்மாவை, அணுவாக்கி, அடிமையாக்கி, இறைவனுக்கு அந்நியமான நிலையினை ஆன்மா எய்தச் செய்கிறது.

அத்தோடு அகந்தை, மமதைகளையும், செருக்கு கர்வத்தையும் ஆன்மாவுக்கு ஏறபடுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனிலிருந்து விலகித் தூரத் தூரச் செல்வதற்கு சாதனையினால். திருவருட்துணையினால் ஆணவத்தின் முனைப்பு நெகிழ்ந்து இற்றுப் போதல் மலபரிபாகம்.

**இருவினை யொப்பு:**

ஆணவமலத்தின் நெகிழ்வும் இறுக்கமும் நல்வினைகள், தீவினைகள் மூலமே வெளிப்பாடாகின்றன என்று கூறப்படுகின்றது. நல்வினைகளும் சரி தீவினைகளுஞ் சரி அவற்றின் பயன்களை, செய்தவர்கள் அனுபவிக்கவும் மேலும் வினைகளைச் செய்யவும் வழி கோலுகின்ற அதேவேளை, அவர்களைச் சிவனைச் சென்றடையாமல் தடையாயும் உள்ளன. சாதனை மூலம் பக்குவமடைந்த ஆன்மாக்கள், தீவினையை விடுத்து நல்வினையில் விருப்பங் கொள்வதன் மூலம், படிப்படியாக அகவளர்ச்சி ஏற்பட்டு, நல்வினை, தீவினைப் பயன்களை சமப்படுத்தி, பற்றற்ற நிலையில்,யாவும் இறைவன் செயல் என ஒப்படைத்து அவற்றைச் சமநோக்குடன் கொள்ளுதல் இருவினையொப்பு எனப்படுகிறது. மலபரிபாகம், இருவினையொப்பு, ஒன்றையடுத்து மற்றொன்றாக நிகழ்வனவல்ல. அக வளர்ச்சியின் போது இவை எனக் குறிப்பிடுகின்றது.

**சத்திநிபாதம்**

திருவருள் படிதல் என்ற பொருளில் இது வருகிறது. இதனையும் ஓர் அக அனுபவம் என்றே கூறுவர். ஆணவம் படிப்படியாக வலிகெடும்போது திருவருள் சக்தி ஆன்மாவை இயக்கத் தொடங்கும்.

இந்நிலையில் "என் செயலாவது யாதொன்றுமில்லை. எல்லாம் சிவன் செயலே" என்று உணரப்பெற்றவராகி விடுகின்றனர்.

அப்போது அசுத்த மாயாகாரியமாகிய உடலோடு வாழ்ந்தாலும், நம் செயல்கள் சுத்தமாயாகாரியங்களின் செயல்களாகின்றன.

பசு - கரணங்கள், பதி - கரணங்கள் ஆக நிலைமாற்றம் பெற்றுவிடுகின்றன என்பர். அருளுணர்வோடு வாழத் தலைப்படுகின்றனர்.

ஒருவர் ஆணவ முனைப்போடு செயலைச் செய்யுங் காலத்திலும் திருவருள் நினைப்புடன் ஆற்றினால், நல்வினையாக அமையும். நல்வினை செய்யக்காரணம் திருவருள் நினைப்பே யாகும். இவ்வாறு செய்யப்படும் நல்வினை, பசு நல்வினை எனப்படுகின்றது. இதுவும் வேண்டியதே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணவமுனைப்பு நீங்கப் பெற்று முழுமையாகத் திருவருள் உணர்வில் நின்று செய்யப்படும் நல்வினை, பதி புண்ணியம் - பதி நல்வினை எனப்படுகின்றது. தத்துவமொழியில் இந்த அருள் உணர்வையே சத்திநிபாதம் என்பர்.

அருள்

எமது நாளாந்த வாழ்க்கையில் ஆணவம் எம்மை வழி நடத்துவதாகவே பொதுவில் காணப்படுகின்றது. எமது விருப்பு, வெறுப்புக்கள், சிந்தனை, செயல்கள், நடத்தைகள் யாவற்றிலும் ஆணவம் மேலோங்கி நிற்கின்றது. இறைவனை முன்வைத்து இவற்றைச் செய்தல் பின் தள்ளப்பட்டுள்ளமை தெளிவாகத் தெரிகிறது.

இறைவனைப் புறக்கணித்து நடத்தும் இவ்வாழ்க்கையில் அமைதி, சாந்தி, சமாதானம், நிம்மதி,மகிழ்ச்சி, விருத்தி என்பன இருக்க முடியாது. அப்படியானால் இறைவன் தொடர்பு இல்லாமல் போய் விட்டதா? என வினா எழுப்பப்படலாம்.

இறைவன் தொடர்பு ஒருபோதும் இல்லாமற் போவதில்லை என்பர். படைப்பில் தொடங்கி எமது இலட்சியமான முத்தியின்பத்தை அடைதல் ஈறாக - இறைவனின் அருள் தொடர்பு தொடர்ந்து எம்முடன் இருந்துகொண்டே உள்ளது. இறைவனின் அருள் இருநிலைகளில் எம்மோடு தொடர்பு கொள்கிறது என்பர். நாம் ஆணவத்தைச் சார்ந்து இருக்கும் வரை, அருள் மறைத்து நின்று, திரோதான சக்தியாகத் தொடர்பு கொள்கிறது. ஆணவம் வலிகெட்டு நெகிழ்ச்சியடைந்ததும், அருள், சித்சத்தியாக - பராசக்தியாக எம்முடன் செயல்படுகிறது. இவ்வாறு அறிஞர் கூறுவர்.

இறைவனைருள் திரோதானமாக இருந்து சித் சத்தியாக - பராசக்தியாக மாறும் நிலையினைச் 'சத்திநிபாதம்' என்பர்.


'சத்தி பின்னமிலான் எங்கள் பிரான்'. ஏனெனில், சத்தி மூலமே இறைவன் எந்நிலையிலும் உயிர்களுடன் தொடர்பு கொள்கிறான் என்பதாலாகும்.

எவ்வாறாயினும், உயிர்களைத் தம்பக்கம் சாரச் செய்ய வேண்டு மென்பதிற்காகவே, சிவமும் சத்தியும் வேறாகாது, பின்னமிலாது உள்ளமை குறிப்பிடத்தக்கது.

*******


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



## இயல் எட்டு

# திருமுறையியல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 30. பன்னிரு திருமுறைகள்

**செ**ந்தமிழ் மொழியிலுள்ள சைவ நூல்களெல்லாம் மூவகையில் அடங்கு வன. அவை சாத்திரம், தோத்திரம், காப்பியம் என்பன. சைவ சமயத் திலுள்ள பதி, பசு, பாச உண்மைகளை, நியாய சாத்திர முறையில் நிலைநாட்டிக் கூறும் நூல்கள் (மெய்கண்ட சாத்திரங்கள்) **சாத்திரங்களெனப்படும்.** சிவனையும் சிவனடியார்களையும் போற்றித் துதிப்பனவாகிய பாடல்கள் தோத்திரங்களாம். இறைவனின் அருட் செயல்களையும், சிவனடியார் வரலாறுகளையும் கதை வடிவில் எடுத்துக் கூறும் புராணம் முதலான நூல்கள் காப்பியங்களாகும். இம்மூவகையில் திருமுறைகள் தோத்திரங்களாகும். இவற்றுள் பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரியபுராணம் காப்பியமாகவும் விளங்குகிறது.

**திருமுறை என்ற பெயர் :** திருமுறை என்ற தொடரில், "திரு" என்பது தெய்வத் தன்மையைக் குறிப்பது. "முறை" என்ற சொல்லுக்கு நூல், ஒழுங்கு, வரிசை, உறவு, முறையீடு முதலிய பல கருத்துக்கள் உண்டு. எனவே திருமுறை என்பது தெய்வத்தன்மை பொருந்திய நூல், உயிர்களைச் செம்மையான ஒழுங்கு முறையில் இறைவனிடம் சேர்ப்பிக்கும் நூல், தொகுத்து வரிசைப்படுத்தப்பட்ட தெய்வீகப் பாடல்களைக் கொண்ட நூல், இறைவனுக்கும் ஆன்மாக்களுக்குமுள்ள உறவை விளக்கும் நூல், மெய்யடியார்கள் உள்ளம் உருகி இறைவனிடம் செய்துகொண்ட முறையீடுகளைக் கொண்ட நூல் எனப் பல வகையிற் பொருள்கொள்ளக் கூடியதாயுள்ளது.

**திருமுறை கண்டது :** திருநாரையூர்ப் பொள்ளாப்பிள்ளையாரை வழிபட்டு, அவரருளால் சகல சாத்திர ஞானமும், மெய்ஞ்ஞானமும் கைவரப்பெற்று விளங்கியவர் நம்பியாண்டார் நம்பிகள் என்னும் சிவ வேதியர். அக்காலத்தில் சோழ நாட்டை ஆண்ட அபயகுலசேகர சோழ மகாராசா என்பவர் தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களிலே சிற்சிலவற்றைச் சிவனடியார்கள் ஓதக்கேட்டு, அவற்றையெல்லாம் முற்றாகத் தேடித் தொகுத்துச் சைவ மக்கள் பாராயணஞ் செய்யத் தரவேண்டுமென்று நம்பியாண்டார் நம்பிகளை வேண்டிக் கொண்டார். ஒருநாள் அரசன் நம்பியாண்டார் நம்பிகளிடம் வந்து, பொள்ளாப்பிள்ளையாருக்கு விசேட பூசைகள் செய்வித்து, அருட்பாக்களைப் பெறுவதற்குரிய உபாயத்தைப் பிள்ளையாரிடம் வேண்டியறியும் படி இரந்து கூறினார். நம்பியாண்டார் நம்பிகளும் விநாயகப் பெருமானிடம், அரசனின் குறை தீர அருளும்படி வேண்டினார். பிள்ளையாரும், நம்பிகளுக்கு திருமுறைகள் தில்லையில் சிற்றம்பலத்தையடுத்துள்ள மண்டபத்திலுண்டென்று அருளியதோடு, அருட்பாக்களின் பெருமையையும், அவற்றைப் பாடியருளிய மெய்யடியார்களின் வரலாறுகளையும் அருளிச் செய்தார். நம்பிகள் அதனை அரசருக்குக் கூறியருளினார். அரசர் நம்பிகளையும் அழைத்துக் கொண்டு சிதம்பரத்தலத்திற்குச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசர் தில்லையை அடைந்து, தில்லைவாழ் அந்தணர்களைக்கொண்டு நடராசப்பெருமானுக்கு விசேட பூசை செய்வித்து, தேவாரம் அருளிச் செய்த நாயன்மார் மூவரையும் திருவுலா எழுந்தருளச் செய்வித்து, அவர்களது திருக்கர முத்திரை பொறித்த மண்டப வாயிலை அடைந்து, திருக்கதவைத் திறப்பித்துத் திருமுறை ஏடுகளை எடுத்த பொழுது, அவற்றில் பெரும் பகுதி கறையானால் அழிக்கப்பட்டிருப்பது கண்டனர். அதனால் அரசர் பெருங் கவலையுற்றார். அப்போது இறைவனருளால் ஓர் அசரீரி வாக்கு "**இக் காலத்துக்கு வேண்டுவன இருப்ப, ஏனையவைகளை நாமே அழியும் படி செய்தோம்; கவலை ஒழிக; பெற்றவற்றைப் பேணிப் பயனடைக**" என்று கூறியது. பின் மனந்தெளிந்த அரசர், அவ்வேடுகளைச் செம்மை செய்து, அவ்வருட்பாக்களை ஓதும்முறைப்படி தொகுத்தும் வகுத்தும் தருமாறு நம்பியாண்டாரை வேண்டினார்.

**திருமுறை வகுத்தமை** : அரசனது வேண்டுகோளுக்கு இசைந்த நம்பிகளும், திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் அருளிச் செய்த தேவாரங் களில் கிடைத்தவற்றை முதலாம், இரண்டாம், மூன்றாந் திருமுறைகளாக வகுத்தனர். திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியருளிய தேவாரங்களிலே கிடைத்தவற்றை நான்காம், ஐந்தாம், ஆறாந் திருமுறைகளாக வகுத்தார். சுந்தர மூர்த்தி நாயனார் தேவாரங்களை ஏழாந் திருமுறையென வைத்தார். ஆகவே தமிழ் மறையாகிய மூவர் தேவாரங்களும் முதலேழு திருமுறைகளாயின. இவ் வேழையும் **அடங்கன் முறை** என்பர். மாணிக்க வாசக சுவாமிகள் அருளிய திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இரண்டையும் எட்டாந் திருமுறை யென வைத்தனர். திருமாளிகைத்தேவர் முதல், சேதிராயர் வரையுள்ள மெய் யடியார் ஒன்பதின்மர் அருளிச் செய்த திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன ஒன்பதாம் திருமுறைகளாயின. திருமூலநாயனார் அருளிச் செய்த திருமந்திர நூல் பத்தாந் திருமுறையாயிற்று. (இது தலைசிறந்த மந்திர, சாத்திர, தோத்திர நூலாகவும் போற்றப்படுவதாகும்.) திருவாலவாயுடையார் திருமுகப் பாசுரம் முதலாகப் பட்டினத்தடிகள் பாடல் வரை உள்ளவை பதினொராந் திருமுறையாக வகுக்கப்பட்டன. பொள்ளாப்பிள்ளையார் அருளால் நம்பியாண்டார் நம்பிகள் விநாயகப் பெருமானையும், திருஞான சம்பந்தப்பிள்ளையாரையும், திருநாவுக்கரசு சுவாமிகளையும், திருத்தொண்டத் தொகையிலுள்ள அடியார் களையும் போற்றி செய்த பாடல்களையும் பதினொராந் திருமுறையில் சேர்த்து வைக்குமாறு அரசர் வேண்டிக் கொண்டபடி அவ்வருட்பாக்களும் அத் திரு முறையில் அடங்கின. இவ்வாறு நம்பிகள் வகுத்த திருமுறை பதினொன்றாம்.

**பண்ணமைப்பு** : இத்திருமுறைப் பாடல்களின் பண்களையும், ஓதும் வகையையும் அறிவித்தருளுமாறு அரசரும், நம்பிகளும் நடராசப் பெருமானிடம் வேண்டினர். பெருமான் அருளிச்செய்தபடி **திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் மரபில்** வந்த, பண்முறைகளைத் தெரிந்திருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணொருத்தியை அரசர் அழைப்பித்து, ! டராசப் பெருமான் சந்நிதியிலே அவ்வ: பற்றின் பண்முறைகளையும் அமைத்துக்கொண்டார்.

**திருமுறைகளைப் பேணிச் சேமித்தமை** : பின்னர் அரசர் திருமுறைப் பாடல்களையெல்லாம் செப்பேடுகளில் எழுதுவித்துப் பாதுகாப்பாக அழியா திருக்கும்படி செய்தார். அக்காலம் முதல் தமிழகத்துச் சைவக் கோயில்களி லெல்லாம் ஓதுவார்களை நியமித்துத் திருமுறைப் பாடல்களைப் பண்ணோடு பாராயணஞ்செய்துவருமாறு அரசர்கள் நியமனஞ்செய்தனர். இன்றுவரை அது தொடர்ந்து நடந்துவருகிறது.

**பன்னிரண்டாந் திருமுறை** : சில ஆண்டுகளின் பின் அநபாயசோழ அரசரின் வேண்டுகோளின்படி, அவரது முதன் மந்திரியாகிய சேக்கிழார் நாயனார், நடராசப் பெருமானே "உலகெலாம்" என அடியெடுத்துக் கொடுக்கப் பாடியருளிய திருத்தொண்டர் புராணம் ஆகிய பெரியபுராணம், சைவப் பேரறிஞர்கள் சபையில் அரசர் முன்பு தில்லையிலே அரங்கேற்றப்பட்டது. அப்பொழுது அறிஞரும், அரசரும் அந்நூலின் சிறப்பை நோக்கி அதனைப் பன்னிரண்டாந் திருமுறை நூலென ஏற்றுப் போற்றினர். இவ்வாறே சைவத் திருமுறைகள் பன்னிரண்டும் அமைந்தனவாம்.

### திருமுறைகள் அருளியோர் :

| | |
|---|---|
| ❈ முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகள் - தேவாரம். (திருக்கடைக்காப்பு) | } **திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்** |
| ❈ நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகள் - தேவாரம். | } **திருநாவுக்கரசு நாயனார்** |
| ❈ ஏழாந் திருமுறை - தேவாரம் (திருப்பாட்டு) | - **சுந்தரமூர்த்திநாயனார்** |
| ❈ எட்டாந் திருமுறை திருவாசகம் - திருக்கோவையார் | } **மாணிக்கவாசக சுவாமிகள்** |
| ❈ ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா | } **திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்திகாட நம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர்,** |
| திருப்பல்லாண்டு | } **சேந்தனார்** |
| ❈ பத்தாந் திருமுறை திருமந்திரம் | } **திருமூல நாயனார்** |
| ❈ பதினொராந் திருமுறை | அருளியோர் பன்னிருவர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| (1) திருமுகப் பாசுரம் | திருவாலவாயுடையார் (சிவபிரான்) |
| (2) திருவாலங்காட்டு மூத்ததிருப்பதிகம் | |
| மூத்ததிருப்பதிகங்கள் | காரைக்கால் அம்மையார் |
| (3) திருவிரட்டை மணிமாலை | |
| (4) அற்புதத் திருவந்தாதி | |
| (5) க்ஷேத்திரத் திருவெண்பா | ஐயடிகள் காடவர்கோன் |
| (6) பொன்வண்ணத்தந்தாதி | |
| (7) திருவாரூர் மும்மணிக்கோவை | சேரமான் பெருமாள் நாயனார். |
| (8) திருக்கயிலாய ஞான உலா | |
| (9) கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி | |
| (10) திருவெழுங்கோய்மலை எழுபது | |
| (11) திருவலஞ்சுழி மும்மணிக் கோவை | |
| (12) திருவீகடற்றிருக்கை | |
| (13) பெருந்தேவபாணி | |
| (14) கோபப் பிரசாதம் | நக்கீரதேவ நாயனார் |
| (15) காரெட்டு | |
| (16) போற்றித்திருக் கலிவெண்பா | |
| (17) திருமுருகாற்றுப்படை | |
| (18) திருக்கண்ணப்பதேவர் திருமறம் | |
| (19) திருக்கண்ணப்பதேவர் திருமறம் | கல்லாடனார் |
| (20) மூத்தநாயனார் திருவிரட்டை மணிமாலை | |
| (21) சிவபெருமான் திருவிரட்டை மணிமாலை | கபிலதேவர் |
| (22) சிவபெருமான் திருவந்தாதி | |
| (23) சிவபெருமான் திருவந்தாதி | பரணதேவர் |
| (24) சிவபெருமான் திருமும்மணிக்கோவை | இளம்பெருமானடிகள் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(25) மூத்தபிள்ளையார்
திருமும்மணிக்கோவை - அதிராவடிகள்

(26) கோயில் நான்மணிமாலை
(27) திருக்கழுமல மும்மணிக்கோவை
(28) திருவிடை மருதூர்
மும்மணிக்கோவை
(29) திருவேகம்பமுடையார்
திருவந்தாதி
(30) திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது
} பட்டினத்தடிகள்

(31) திருநாரையூர் விநாயகர்
திருவிரட்டை மணிமாலை
(32) கோயில் திருப்பண்ணியர்
திருவிருத்தம்
(33) திருத்தொண்டர் திருவந்தாதி
(34) ஆளுடையபிள்ளையார்
திருவந்தாதி
(35) ஆளுடையபிள்ளையார்
திருச்சண்பை விருத்தம்
(36) ஆளுடையபிள்ளையார்
திருமும்மணிக்கோவை
(37) ஆளுடையபிள்ளையார்
திருவுலாமாலை
(38) ஆளுடையபிள்ளையார்
திருக்கலம்பகம்
(39) ஆளுடையபிள்ளையார்
திருத்தொகை
(40) திருநாவுக்கரசுத் தேவர்
திருஏகாதச மாலை
} நம்பியாண்டார் நம்பி

பன்னிருவர் பாடிய நாற்பது பிரபந்தங்கள் பதினொராந் திருமுறையிலுள்ளன.

❈ பன்னிரண்டாந் திருமுறை
திருத்தொண்டர் புராணம்
(பெரியபுராணம்)
} சேக்கிழார் நாயனார்

**திருமுறைகளின் காலம் :** பத்தாந் திருமுறை அருளிய திருமூல நாயனாரும், பதினொராந் திருமுறைப் பாடல்கள் அருளியவர்களில் காரைக் காலம்மையார், நக்கீரதேவர், கபிலதேவர், பரணதேவர், கல்லாட தேவர் என்பவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களும், எட்டாந் திருமுறை அருளிய மாணிக்கவாசக சுவாமிகளும் காலத்தால் முற்பட்டவர்களென ஆராய்ச்சியாளர் கூறுவர். காலங்களை இன்னும் அறுதியாக முடிவு செய்ய முடியவில்லை. ஆளுடையபிள்ளையாரும், திருநாவுக்கரசு நாயனாரும் சம காலத்தவர்கள். இவர்கள் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டென்பர். சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் ஒருகாலத்தவர்கள். அவர்கள் காலம் எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டென்பர். ஐயடிகள் காடவர்கோன் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு முற்பட்டவர். பட்டினத்தடிகள் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும், நம்பியாண்டார் நம்பிகளுக்கும் இடைபட்ட காலத்தவர். நம்பியாண்டார் நம்பிகள் வாழ்ந்த காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டு. இக்காலமே திருமுறைகள் கண்டெடுத்துத் தொகுத்து வகுக்கப்பட்ட காலம். சேக்கிழார் பாடியருளிய பெரிய புராணம் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் அருளப்பட்டது.

**திருமுறைகளின் பெருமை :** சிவபெருமானது திருவருள் கைவரப் பெற்ற, முனிசிரேட்டர்கள் ஓதியருளிய மந்திரங்களும் தோத்திரங்களும் வட மொழியில் வேதம் எனப்பட்டன. அங்ஙனமே சிவபிரானது அருள் பெற்ற மெய்யடியார்களால் திருவருள் வழிநின்று பாடியருளிய பக்திப் பாடல்களாகிய அருட்பாக்கள் தமிழ் வேதம் என அழைக்கப்படுகின்றன. வேத சாரமே தேவார திருவாசகங்கள் என்பதைச் சைவப்பேரறிஞர் பலரும் அறுதியிட்டுக் கூறி யுள்ளனர். காசிவாசி செந்திநாதையர் இதை நன்கு ஒப்பிட்டுக் காட்டி விளக்கியுள்ளார். இத்தமிழ் வேதமாகிய திருமுறைப் பாடல்கள் பக்தி உணர்ச்சி மேலிட்டுப் பாடியவை. இவற்றைப் பாராயணஞ் செய்பவர்களுக்கும் அப் பண்பை உண்டாக்குவன. நாயன்மார்கள் இப் பாடல்களை இறைவன் திரு வருள் துணை தூண்டவே பாடினர். இப்பாடல்கள் பல அற்புதங்களை நிகழச் செய்தமை நாயன்மார் வரலாறுகளால் அறியலாம். சுருங்கச் சொன்னால், வேத மந்திரங்களைக் கொண்டு பல சாதனைகளை மாந்திரிகர்கள் செய்வது போல, இத்தமிழ் வேதப் பாடல்களைப் பாராயணஞ் செய்து பல சாதனைகள் புரிகி றார்கள். திருமுறைப் பாடல்கள் ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்லன; தெய்வீக சக்தி உடையன; அவற்றை மெய்யன்போடு பொருளுணர்ந்து பண்ணமைய வழுவின்றி ஓதவேண்டும். அங்ஙனமின்றி ஓதுவோர் பூரணமான பயனை அடையார்.

திருமுறைப் பாடல்கள் இறைவனுடைய பெருமைகளைப் பேசும், போற்றும், வாழ்த்தும், ஆன்மாவாகிய நம் குறை தீர்க்கும்படி வேண்டும்; நமக்கு இன்னஇன்ன நற்பேறுகளைத் தருக எனப் பிரார்த்திக்கும். நம்மிடமுள்ள பிழை களைச் சுட்டிக் காட்டிக் கண்டிக்கும்; இப்படிப் பல விதத்தில் இவை அமைந்தி ருக்கின்றன. நாமாக ஒரு புதிய முறையில் இறைவனைப் போற்றி நமது குறை தீர்க்கும்படி வேண்டும்போது, நம்மையறியாமலே நமது சிற்றறிவினால் பல தவறுகளைச் செய்து, நன்மைக்கு மாறாகத் தீமைகளைத் தேடவும் நேரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால், இத்திருமுறைப் பாடல்களில் நமக்கு உகந்தவற்றை நாம் தெரிந்து, அவற்றைப் பாராயணஞ்செய்து வருவது நமக்கு இம்மை, மறுமை, அம்மை யாகிய பேறுகளில் ஒன்றும் குறைவின்றி நன்மையாயமைவதற்கு வழியாகு மென்று ஆன்றோர் கூறுவர். இவற்றைப் பாராயணஞ்செய்து பயனடைந் தோரும் எண்ணிலராவர்.

**திருமுறைகள் கூறும் பொருள்** : பதி பசு பாசங்களின் இயல்பும், தொடர்பும், பிறப்பறுக்கும் உபாயமும் (சரியை, கிரியை, யோக, ஞானவழிகள்) பேரின்ப நிலையமாகச் சைவ சித்தாந்தம் கூறும் விடயங்களேயாம். இவ்விலக் கியங்களில் கண்ட கருத்தையே சைவ சித்தாந்தம் நெறிப்படுத்தி இலக்கணமாகக் கூறியது. பன்னிரு திருமுறை வகுப்பிற்கும், சிவஞானபோதத்துப் பன்னிரு சூத்திரங்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டெனஆன்றோர் ஒப்பிட்டுக் காட்டுவர். சாத்திரங்களைப் படித்து மெய்யுணர்வு பெறுவதிலும் பார்க்க, திரு முறைப் பக்திப் பாடல்களை ஓதி இறைவனருளைப் பெறுவது எளிதென்பர்.

இத்திருமுறைகளின் ஆசிரியர்களிற் பலரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளது ஏழாந் திருமுறையாகிய திருத்தொண்டத்தொகையிலே போற்றப்பட்ட மெய் யடியார்களேயாவர். இம்மெய்யடியார்கள் பெருமையை நம்பியாண்டார் நம்பிகள் பதினொராந் திருமுறையில் திருத்தொண்டர் திருவந்தாதியிலே வகைப்படுத்திப் போற்றியுள்ளார். அவ்விரண்டையும் ஆதாரமாகவைத்து நாயன்மார் வரலாற்றைத் திருத்தொண்டர் புராணத்திலே விரித்துக் கூறிய ருளியவர் சேக்கிழார் சுவாமிகள். இந்த மூன்று தொகை வகை விரி நூல களில், திருமுறைகளின் பெருமையும், அருளியவர் பெருமையும், ஓதுதலின் பயனும் கூறப்பட்டிருக்கின்றன.

சைவ நூல்கள் வேத ஆகம புராணங்கள் என்றமைவது போலவே, முதலிலுள்ள ஒன்பது திருமுறைகளும், வேத மந்திரங்களும், தோத்திரங்களு மாயமைய, பத்தாந் திருமுறையாகிய திருமந்திரம் ஆகம நூற் கருத்துக்களைக் கூறுவதாக அமைய, பன்னிரண்டாந் திருமுறை புராணமாக அமைந்து நிற்கிறது. பதினொராந் திருமுறையில் தோத்திர வகையோடு, பிரபந்த வகை களும் இடம் பெற்றுள்ளன.

**திருமுறை ஓதுவதன் பயன்** : திருஞானசம்பந்தப் பிள்ளையார் இவ்வருட் பாடல்களை "திருநெறிய தமிழ்" எனக் குறிப்பிட்டுள்ளார். திரு என்பது சைவத் திரு. சைவத் திருவாவது பேரின்ப முத்தி. அதைப் பெற ஏற்ற வழியே திருநெறியாம். அத் திருநெறியில் நம்மை இட்டுச் செல்லவல்லதே திருநெறிய தமிழ். எனவே திருநெறிய தமிழ் எனப்படும் இத் திருமுறைகள் பாராயணஞ் செய்பவர்க்கு முடிந்த பேறான மோட்சானந்தத்தைப் பெற வழி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வனவாகும். அன்றியும், திருஞானசம்பந்தப் பிள்ளையாரும், சுந்தர மூர்த்தி சுவாமிகளும் திருக்கடைக்காப்புப் பாடல்களில், ஓதுவாரைத் தீவினை சாரா, நோய், வறுமை, அல்லலுறா, நல்வினை பெருகும், செல்வமும், அரசும், வாழ்வும் சிறக்கும்: நரக துன்பமடையார்: விண்ணவரும் மண்ணவரும் ஏத்த வாழ்வர் என்று கூறியவாறு, இம்மை மறுமை இன்பங்களையும் குறைவின்றிப் பெற்று இனிது வாழ உதவுவனவாகும். திருநீற்றுப் பதிகம், கோளறு பதிகம், நமசிவாயப்பதிகம் முதலியவற்றைப் பாராயணஞ் செய்து நோய் தீர்த்தல், கிரக தோஷங்களினின்று நீங்குதல் முதலிய பயன்களை இன்றும் பெறுவோர் பலருளர். பயனடைய வேண்டுவோர் அன்பும் ஆசாரமும் நியமமும் உடைய வராய், திருமுறைப் புத்தகத்தைப் பூசை செய்து பக்தி சிரத்தையோடு திருமுறை ஓதும் முறைகளைக் கடைப்பிடித்து ஓதற்பாலர்.

**திருமுறை ஓதும் முறை :** பன்னிரு திருமுறைகளையும் முன் பின் முறை மாற்றாது ஓதவேண்டும். தினந்தோறும், குறித்த காலத்தில் ஆசார சீலமுடைய வராய், புத்தகத்தைத் தூப தீபம் மலர் முதலியவற்றால் பூசித்து எடுத்துப் பாரயணம் செய்ய வேண்டும். திருமுறைப் புத்தகம், பட்டுத்துணியினால் மூடிப் புனிதமான இடத்தில் வைத்துப் போற்றப்படல் வேண்டும். திருமுறைகளை ஓது முன்னும் முடிவிலும் "திருச்சிற்றம்பலம்" என்பதைச் சொல்லவேண்டும் என்ற நியதிகளை மீறலாகாது. திருமுறைப்பாடலோடு பிற பாடல்களைக் கலந்தோதுதல் குற்றமாகும்.

**திருமுறைகளின் சிறப்பு :** வேதாகமங்களின் வழி நின்று சைவ நெறியினை உலகம் உய்ய இசைத்தமிழாலும், இயற்றமிழாலும் எடுத்தோதுவன இத் திருமுறைகள். வானவெளியில் பன்னிரு இராசிகள் போலப் பன்னிரு திருமுறைகளும் விளங்குகின்றன. இவற்றை அருளிச் செய்த அநுபூதிமான்கள் இருபத்தேழு நட்சத்திரங்களுக்கு நிகரான இருபத்தெழுவராவர். இவர்களால் சைவ சமயம் அவ்வப்போது சிறப்புப் பெற்று வளர்ந்துள்ளது. வேதாகமங்கள் பிரணவத்தின் விரிவாகும். அங்ஙனமே பன்னிரு திருமுறைகளும் அமைந் துள்ளன எனலாம். இவை ஓங்கார உயிரொலியில் (தோடுடைய என்று) தொடங்கி, மகர ஒன்றில் முடிகின்றன. பன்னிரு திருமுறைகளும் உள்ளங் கசிந்துருகி ஓதுதற்குரியன. திருமந்திரம் சாத்திர நூலாகவும், திருத்தொண்டர் புராணம் காப்பிய நூலாகவும் அமைந்திருந்தாலும், அவற்றுள்ளும் தோத்திரப் பாடல்கள் உண்டு. ஓதுவார் உள்ளத்தையும், கேட்பார் உள்ளத்தையும் உயர்த்தி, பக்குவ வெள்ளம் பெருகச் செய்யும் பான்மை பன்னிரு திருமுறைகளுக்கும் உண்டு.

**நன்றி : சைவசமயம் [விவேகானந்த சபை வெளியீடு]**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31. சமய குரவர் சுருக்க வரலாறு

**சமய குரவர் சந்தான குரவர்**

சமய குரவர், சந்தான குரவர்களை முறையே சமயாசாரியர், சந்தானாச் சாரியர் என அழைப்பர்.

திருஞான சம்பந்தர் (சம்பந்தர்), திருநாவுக்கரசர் (அப்பர்), சுந்தரமூர்த்தி நாயனார் (சுந்தரர்), மாணிக்கவாசகர் (மணிவாசகர்), எனும் நால்வரையும் சமயாசாரியர் என அழைப்பர். தேவாரம் பாடிய சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகிய மூவரையும் தேவார முதலிகள் என அழைப்பர்.

## திருஞானசம்பந்தர்

| | | |
|---|---|---|
| நாடு | : | சோழநாடு |
| ஊர் | : | சீர்காழி |
| குலம் | : | வைதிகப் பிராமணர் |
| தாய் | : | பகவதியார் |
| தந்தை | : | சிவபாதவிருதயர் |
| வேறு பெயர்கள் | : | கவுணியர்கோன், காழிவேந்தர், பரமசமய கோளரி, பாலறாவாயர், ஆளுடைய பிள்ளை. |
| முதலில் பாடிய பதிகம் | : | "தோடுடைய செவியன் ..........." |
| கடைசியில் பாடிய பதிகம் | : | "காதலாகிக் கசிந்து .........." |
| பாடிய பாட்டுக்களின் தொகை | : | 16000 |
| இப்போதுள்ளவை | : | 384 பதிகங்கள் |
| திருமுறை வகுப்பு | : | 1ம், 2ம், 3ம் திருமுறைகள் |
| முதலில் அருள் பெற்ற தலம் | : | திருப்பிரமபுரம் |
| முத்தி பெற்ற தலம் | : | திருப்பெருமண நல்லூர் |
| சமகாலத்து நாயன்மார் | : | திருநாவுக்கரசர், அப்பூதியடிகள், முருகநாயனார், சிறுத்தொண்டர், நெடுமாறன், குலச்சிறையார், மங்கையற்கரசியார், குங்கிலியக்கலயர், திருநீலகண்ட யாழ்ப்பாணர், திருநீலநக்கர் |
| முத்தியடைந்த வயது | : | 16 |
| முக்தியடைந்த தினம் | : | வைகாசி மூலம் |
| வாழ்ந்த காலம் | : | கி.பி. 7ம் நூற்றாண்டு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அற்புதங்கள்

1. 3 வயதிலே உமாதேவியார் கறந்து பொற்கிண்ணத்தில் ஊட்டிய திருமுலைப்பாலை உண்டது.

2. சிவனிடம் பொற்றாளமும், முத்துப்பல்லக்கும், முத்துச் சின்னமும்., முத்துக் குடையும், முத்துப்பந்தரும், உலவாக்கிழியும், படிக்காசும் பெற்றது.

3. வேதாரணியத்திலே வேதங்களினாலே பூட்டப்பட்டு அப்பருடைய திருப்பதிகத்தினாலே திறக்கப்பட்ட திருக்கதவு அடைக்கப் பாடியது.

4. பாலை நிலத்தை நெய்தல் நிலமாக்கியது.

5. பாண்டியனுக்குத் கூனையும் சுரத்தையும் போக்கியது.

6. சமணர்களுக்கெதிரே தேவாரத் திருவேட்டை அக்கினியிலே போட்டு பச்சையாக எடுத்தது.

7. வைகையாற்றிலே திருவேட்டைப் போட்டு எதிரேறும்படி செய்தது.

8. புத்த நந்தியுடைய தலையிலே இடியிடிக்கச் செய்தது.

9. ஆற்றிலே தாமும் அடியார்களும் ஏறிய ஓடத்தைத் திருப்பதிகத்தினாலே கரை சேர்த்தது.

10. ஆண் பனைகளைப் பெண் பனைகளாக்கியது.

11. பாம்பு தீண்டிய விஷத்தினால் இறந்த செட்டியை உயிர்ப்பித்தது.

12. விஷத்தினால் இறந்த பெண்ணினுடைய எலும்பைப் பெண்ணாக்கியது.

13. தமது திருக்கல்யாணத்தைத் தரிசிக்க வந்தவர்கள் எல்லோரையும் தம்மோடு அக்கினியிலே புகுவித்து முத்தியிலே சேர்த்தது.

## திருநாவுக்கரசர்

| | |
|---|---|
| நாடு | : திருமுனைப்பாடி நாடு |
| ஊர் | : திருவாமூர் |
| குலம் | : வேளாளர் |
| தாய் | : மாதினியார் |
| தந்தை | : புகழனார் |
| வேறு பெயர்கள் | : வாகீசர், ஆளுடைய அரசர், தாண்டக வேந்தர், அப்பர், உழவாரப் படையாளி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| முதலில் பாடிய பதிகம் | : | "கூற்றாயினவாறு விலக்ககலீர் ............" |
| கடைசியில் பாடிய பதிகம் | : | "எண்ணுகேன் ..........." |
| பாடிய பாட்டுக்களின் தொகை | : | 49,000 |
| இப்போதுள்ளவை | : | 311 பதிகங்கள் |
| திருமுறை வகுப்பு | : | 4ம், 5ம், 6ம் திருமுறைகள் |
| முதலில் அருள் பெற்ற தலம் | : | திருவதிகை வீரட்டானம் |
| முத்தி பெற்ற தலம் | : | திருப்புகலூர் |
| சமகாலத்து நாயன்மார் | : | சம்பந்தர், அப்பூதியடிகள், முருகநாயனார், சிறுத் தொண்டர், குங்கிலியக் கலயர், திருநீல கண்ட யாழ்ப்பாணர், திருநீலநக்கர். |
| முத்தியடைந்த வயது | : | 81 |
| முக்தியடைந்த தினம் | : | சித்திரைச் சதயம் |
| வாழ்ந்த காலம் | : | கி.பி. 7ம் நூற்றாண்டு |

**அற்புதங்கள்**

1. சமணர்களாலே 7 நாட்கள் சுண்ணாம்பு அறையிலே பூட்டப்பட்டிருந்தும் வேகாது பிழைத்தது.
2. சமணர்கள் கொடுத்த நஞ்சு கலந்த பாற்சோற்றை உண்டும் சாகாது பிழைத்தது.
3. சமணர்கள் விடுத்த யானை இவரைக் கொல்லாமல் வலஞ் செய்து வணங்கியது.
4. சமணர்கள் கல்லிலே சேர்த்துக்கட்டிச் சமுத்திரத்திலே இடவும் அக்கல்லே தோணியாகிக் கரையேறியது.
5. சிவபெருமானிடத்தே படிக்காசு பெற்றது.
6. வேதாரணியத்திலே வேதங்களாலே பூட்டப்பட்ட திருக்கதவு திறக்கப் பாடியது.
7. விஷத்தினால் இறந்த அப்பூதியடிகளின் பிள்ளையை உயிர்ப்பிக்கச் செய்தது.
8. கயிலையில் ஒரு வாவியில் முழுகித் திருவையாற்றிலே உள்ள குளத்தில் கரையேறியது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தரர்

| | | |
|---|---|---|
| நாடு | : | திருமுனைப்பாடி நாடு |
| ஊர் | : | திருநாவலூர் |
| குலம் | : | சிவப்பிராமணர் |
| தாய் | : | இசைஞானியர் |
| தந்தை | : | சடையனார் |
| வேறு பெயர்கள் | : | நம்பியாரூரர், திருநாவலூர், வன்றொண்டர், தம்பிரான் தோழர், சேரமான் தோழர், ஆளுடைய நம்பி. |
| முதலில் பாடிய பதிகம் | : | "பித்தா பிறை சூடி............" |
| கடைசியில் பாடிய பதிகம் | : | "தானெனை முன் ..........." |
| பாடிய தொகை | : | 38,000 |
| இப்போதுள்ளவை | : | 100 பதிகங்கள் |
| திருமுறை வகுப்பு | : | 7ம் திருமுறை |
| முதலில் அருள் பெற்ற தலம் | : | திருவெண்ணை நல்லூர் |
| முத்தி பெற்ற தலம் | : | திருவஞ்சைக்களம் (திருக்கையிலை) |
| சமகாலத்து நாயன்மார் | : | சடையனார் , கலிக்காமர், இசைஞானியார், நரசிங்க முனையரையர், விறன்மிண்டர், சேரமான், மானக்கஞ்சாரர் பெருமிழலைக் குறும்பர். |
| முத்தியடைந்த வயது | : | 18 |
| முக்தியடைந்த தினம் | : | ஆடிச்சோதி |
| வாழ்ந்த காலம் | : | கி.பி. 9ம் நூற்றாண்டு |

## அற்புதங்கள்

1. செங்கற்களைப் பொன்னாகப் பெற்றுக் கொண்டது.
2. சிவன் கொடுத்தருளிய பன்னீராயிரம் பொன்னை விருத்தாசலத்திலே உள்ள ஆற்றிலே போட்டு திருவாரூரில் உள்ள குளத்தில் எடுத்தது.
3. காவேரியாறு பிரிந்து வழிவிடச் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. முதலை விழுங்கிய பிராமணப் பிள்ளையை அம்முதலை வாயினின்று அழைத்துக் கொடுத்தது.
5. வெள்ளை யானையில் ஏறிக் கொண்டு திருக்கைலாயத்திற்கு எழுந்தருளியது.
6. பரவையாரின் பொருட்டு இறைவனைத் தூது விடுத்தது.

## மாணிக்கவாசகர்

| | | |
|---|---|---|
| நாடு | : | பாண்டி நாடு |
| ஊர் | : | திருவாதவூர் |
| குலம் | : | அமாத்தியப் பிராமணர் |
| தாய் | : | சிவஞானிவதியர் |
| தந்தை | : | சம்புப் பாதாசிரியர் |
| வேறு பெயர்கள் | : | திருவாதவூரர், ஆளுடைய அடிகள், மணிவாசகர், கோவை வேந்தர். |
| முதலில் பாடிய பாடல் | : | "நமச்சிவாய வாழ்க ..........." |
| பாடிய பாடல்கள் | : | திருக்கோவையார் 400 பாடல்கள் |
| | : | திருவாசகம் 648 பாடல்கள் |
| திருமுறை வகுப்பு | : | 8ம் திருமுறை |
| முதலில் அருள் பெற்ற தலம் | : | திருப்பெருந்துறை |
| முததி பெற்ற தலம் | : | தில்லைச் சிதம்பரம் |
| சமகாலத்து நாயன்மார் | : | - |
| முத்தியடைந்த வயது | : | 32 |
| முக்தியடைந்த தினம் | : | ஆனிமகம் |
| வாழ்ந்த காலம் | : | கி.பி. 8ம் நூற்றாண்டு எனக் கூறுவார்கள். |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அற்புதங்கள்

1. சிவனே நரியைக் குதிரையாக்கிக் கொண்டு வரும்படியும் மண்சுமந்து அடிபடும் படியும் பெற்றுக் கொண்டது.
2. புத்தர்களைத் தருக்கத்திலே வென்று ஊமைகளாக்கி பின் ஊமை தீர்த்துச் சைவர்களாக்கியது.
3. பிறவி முதல் ஊமையாய் இருந்த ஒரு பெண்ணை ஊமை தீர்த்துப் புத்தர்கள் வினாவிய வினாக்களுக்கு விடை சொல்லும்படி செய்தது.
4. தம்முடைய திருவாசகத்தையும் திருக்கோவையாரையும் சிவபெருமானே எழுந்தருளி வந்து எழுதும்படி பெற்றுக் கொண்டது.
5. எல்லோருங் காணக் கனகசபையினுள்ளே புகுந்து சிவத்தோடு கலந்தது.

## திருமுறை ஓதுதல்

திருக்கோயில்களில் திருமுறைகள் ஓதுப்பெறும் போது, வரிசை முறையாகப் பன்னிரு திருமுறைகளையும் ஓத முடியாவிடத்து **பஞ்ச புராணம்** ஓதினாற் போதுமானது. அதாவது மூவர் தமிழில் ஒன்றும் திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் ஆகியவற்றில் ஒவ்வொறும் ஆகும்.

நிறையருட் பாடலாகி நிரம்பு தேவாரம் பாடும்
அறைதிரு வாசகம் சீர் அமை இசைப்பா பல்லாண்டு
குறைதவிர் புராணம் இன்ன கொண்டுறந் துதித்தல் செய்து
மறைபுகழ் விபூதிமேனி வளைந்திருகையால் ஏற்க.

என்பது 'சிவாலய தரிசன விதி' பற்றிய மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களின் பாடல் ஒன்று. இதிலிருந்து பஞ்சபுராணம் ஓதும் பழமையை உணரலாம். திருவாசகப் பாடல்கள் அனைத்தும் மோகன இராகத்திலும் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் ஆனந்த பைரவி இராகத்திலும், பெரியபுராணம் அனைத்தும் மத்தியமாவதி இராகத்திலும் பாடப்படுவதே முறையாகும்.

- சைவப்புலவர் பண்ணிசைமணி ஞான பண்டிதர்
*ஆய்வரசர் கதிர் தணிகாசலம்*

(அகில இலங்கை இந்துமாமன்றத் தலைமையகக் கட்டிப் பூர்த்தி மலரில் எழுதிய கட்டுரையிலிருந்து)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



Tel: +9421-224-0025

**Representatives in Overseas for MIH**

**U.K**
Sivasri
Soma.Srikara kurukkal
**India**
Sivasri-R.Pathmanathan
**Malaysia**
Sivasri P.P.Esan kurukkal
**Singapore**
Sriman S.Saravanabava sarma
**Australia**
M.Jeyarama Sarma
**Germany**
Sivasri Soma. Thulasikantha kurukkal
**Swiszerland**
sivasri Ram Sivashanmuganathakurukkal
**France**
Sriman Soma.Jeyakumara sarma
**Netharland**
Satha Sivanatha sarma
**Canada**
Srikan Suwani. Panchadchara sarma
**USA** Sivasri. Samy Siva Ragupathy Kurukkal
**South Africa**
Srivasri Bala Suntharak kurukkal

மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை கலாச்சார நிறுவனம்

**MODERN INTERNATIONAL HINDUAGAMICCULTURALARTS ORG**

Extd: 1965- Head office : - Chunnakam Sri Lanka Reg-No:GA2352

-MIH-சர்வதேச நிறுவன ஆலோசகர், சுளிபுரம்-சுருவில்-ஜேர்மனி "ஸஹஸ்ர சந்த்ர தர்சனி"

ஸ்ரீமான் ந.இராமகிருஷ்ண சர்மா ஸ்ரீமதி ஜெகதீஸ்வரி

தம்பதிகளுக்கு MIH சர்வதேச ஸ்தாபனம் வழங்கும்

## முத்துவிழா விழா வாழ்த்து மடல்





சர்வஜன வசீகர சற்குண சீலராக உலகநாடுகளிலும் தாயகத்திலுமுள்ள நம்மவர்கள் அனைவரது மனதிலும் உன்னதமான தனியிடம் கொண்டு திகழுபவரும் முன்னாள் "யாழ்-நொதேர்ண் இன்டஸ்றீஸ்" நிர்வாக உத்தியோகஸ்தரும், அனைவராலும் "எங்கள் ராசு ஐயா" என அன்புடன் அழைக்கப்படுபவருமாகிய சுருவில் நடராஜ-இராமகிருஷ்ண சர்மா ஸ்ரீமதி ஜெகதீஸ்வரி தம்பதிகள் கடந்தகாலங்களில் தமது வெள்ளி விழா, பொன்விழா, மணிவிழா பவளவிழா ஆகியவற்றைக் கண்டுகளித்ததுபோல் தற்போது தமது அகவை 80-ல் முத்துவிழாவையும், சுவிஸ்லாந்து நாட்டில் தமது குடும்ப உறவுகளுடன் 12-10-2014-ல் பக்திபூர்வமாக நிகழ்த்தி மகிழும் இவ்வேளையில், இருவரும் தீர்க்காயுள், ஆரோக்கியம் அனைத்தையும் பெற்று இருவரும் கனகாபிஷேகம் வரையில் கண்டுகளித்திட சுன்னாகம் ஸ்ரீ சுவர்ணாம்பிகை சமேத ஸ்ரீ பொன்னம்பலவாணசுவாமியின் பாதகமலங்களை வணங்கி, " மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலைகலாச்சார நிறுவன பிரதிநிதிகள் அனைவரின் நமஸ்காரங்களையும் மனப்பூர்வமாக சமர்ப்பிக்கிறோம்.

MIH தலைமையகம் ச.ஸ்ரீகாந்தக் குருக்கள் சோம உமாரமண குருக்கள்
MIH லண்டன் சோம ஸ்ரீகரக் குருக்கள் ச. லம்போதர குருக்கள் நா.குகனேஸ்வரக் குருக்கள் ச. ஸ்ரீபத்மன் இ.ஸ்ரீதரக் குருக்கள் ராம்.கெங்காதரக் குருக்கள், ந.யோகமோகன் குருக்கள், பாலகோபால சர்மா இ.கமலநாதக்குருக்கள் MIH கனடா சுவாமி பஞ்சாட்சர சர்மா கந்த. ஸ்ரீநிவாச சர்மா மகேச சுகப்பிரதசர்மா MIH சுவிஸ் சிவ சண்முகநாதக் குருக்கள் வி.எஸ். ஸ்ரீதரக் குருக்கள் MIH அவுஸ்திரேலியா ம.ஜெயராம சர்மா இ.பிரேமகாந்தக் குருக்கள் MIH தென்ஆபிரிக்கா பால சுந்தரக் குருக்கள் MIH பிரான்ஸ் சோம ஜெயக்குமாரசர்மா இ.பகவதீஸ்வர சர்மா சி.சிவஞானசுப்பிரமணிய சர்மா கணேச சிவசுதக்குருக்கள் MIH நோர்வே ந.ராதாக் குருக்கள் சிவ.பரதசர்மா MIH இந்தியா இ.பத்மநாத சர்மா ச.சத்தியரூபன் குருக்கள் MIH மொரீஷியஸ் ந.பாலசுப்பிரமணியக் குருக்கள் MIH நெதர்லாந்து சதா. சிவநாத சர்மா MIH டென்மார்க் சிவ. சிவசேகரசர்மா
MIH ஜேர்மனி சோமதுளசிகாந்தக் குருக்கள் இராம.மகேசக் குருக்கள்
ஆகியோருடன் சிவஸ்ரீ நா. சோமாஸ்கந்தக் குருக்கள் சிவஸ்ரீ நா. சர்வேஸ்வரக் குருக்கள்

**வாழ்க பல்லாண்டு ! வளர்க அவர்தம் சமய சமூகப்பணி**

web:www.modernhinduculture.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நன்றி! நன்றி!! நன்றி!!!

எங்களது சதாபிஷேக விழாவில் (முத்துவிழாவில்)
கலந்துகொண்டு சிறப்பித்தவர்களுக்கும், எல்லாவகையிலும்
உதவிசெய்தவர்களுக்கும் நேரிலும், ஏனைய வகையிலும்
வாழ்த்துக்களைத் தெரிவித்து ஆசியைப் பெற்றவர்களுக்கும்
எங்கள் இதயம் நிறைந்த நல்லாசிகளையும்
நல் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றோம்.

வாழ்க வளமுடன்

நன்றி!

பிரம்மஸ்ரீ ந. இராமகிருஷ்ணசர்மா,
ஸ்ரீமதி ஜெகதீஸ்வரி தம்பதிகள்
மற்றும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO-13. TEL: 011 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org